# வேதாந்தம்

## (வேதத்தின் இறுதிப்பகுதி)




## ப்ரக்ஞன்

# வேதாந்தம்



ஆக்கம்

ப்ரக்ருன்

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வேதாந்தம் |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞுன் |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2020 |
| நூலின் அளவு | : | டெம்மி |
| பக்கங்கள் | : | 306 |
| தாள் | : | A5 (5.83" X 8.27") |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | பராபரம் |
| கட்டமைப்பு | : | சாதா பைண்டு அட்டை |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |
| விலை | : | அக விழிப்பு |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அநுபந்த சதுஷ்டயம் | 18 |
| 2. | மனிதனின் இலட்சியம் | 25 |
| 3. | இலட்சியத்தின் அவசியம் | 33 |
| 4. | இலட்சியத்திற்குத் தடைகள் | 43 |
| 5. | அதிகாரியின் தகுதிகள் | 49 |
| 6. | சமாதி சட்க சம்பத்தி | 68 |
| 7. | கர்ம பலன்கள் | 81 |
| 8. | செயல் இரகசியம் | 84 |
| 9. | மூன்று செயல் பிரிவுகள் | 91 |
| 10. | செயல்பலன்களும், ஈஸ்வரனும் | 96 |
| 11. | விசாரத்தின் சிறப்பு | 109 |
| 12. | ஆத்மா, அனாத்மா | 113 |
| 13. | மூன்று உடல்கள் | 116 |
| 14. | ஞானேந்திரியங்களும், தேவதைகளும் | 138 |
| 15. | கர்மேந்திரியங்களும், தேவதைகளும் | 160 |
| 16. | பஞ்ச கோஷங்கள் | 164 |
| 17. | மூன்று அவஸ்தைகள் | 176 |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 18. | ஆத்மா | 180 |
| 19. | மனிதனின் மனம் | 185 |
| 20. | எல்லாம் பரமாத்மா | 210 |
| 21. | ஞானத்தின் சிறப்பு | 213 |
| 22. | அறியாமையும், ஆனந்தமும் | 219 |
| 23. | நான் யார்? | 222 |
| 24. | தன்னை அறியும் அறிவு | 227 |
| 25. | மோக்ஷம் வெளியே இல்லை | 248 |
| 26. | ஆத்மாவின் நிலை | 259 |
| 27. | மோகம் என்ற முடிச்சுக்கள் | 269 |
| 28. | ஞானமே எல்லை | 273 |
| 29. | அவனே ஜீவன் முக்தன் | 281 |
| 30. | உள்ளுணர்வும், பேருணர்வும் | 291 |

*****

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

# வேதாந்தம்

## முகவுரை

உலகிலுள்ள எல்லா விதமான பிரச்சனைகளுக்கும் மூலக்காரணம் என்னவெனில், நம்மால் ஏற்றி வைத்துக்கொண்ட பல்வேறு தவறான எண்ணங்களுடன் கூடிய அறியாமைகள் என்ற மூட நம்பிக்கைகள்தான் ஆகும்.

இதை நாம் ஒவ்வொருவரும் அறிந்துக் கொள்ள வேண்டியதின் அவசியம் கருதியே, நம் முன்னோர்கள் நமக்கு **கல்வி** என்ற ஒன்றை கற்றுக் கொடுத்தார்கள்.

அவ்வாறு, கற்கின்ற கல்வியின் வாயிலாகத்தான் மனிதன் மகத்தானவனாகவும், புனிதனாகவும் மாற முடியும் என்பதை எல்லா ஞானிகளும் எடுத்துக் கூறினார்கள்.

அத்தகைய தலையாயக் கல்வி முறையாக நம்முடைய அன்றைய வாழ்விலே வளம் வந்த ஒரு உயரிய கல்விமுறை என்னவெனில், வேதங்களைப் பயின்று, அதன் வாயிலாக பரம[தன்]னை அறிந்து, **பரமானந்தம்** அடைவது ஆகும்.

ஆனால், கால, தேச மாற்றத்தினாலும், முகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் படையெடுப்புகளினாலும், நமது பண்பாட்டுக்கல்வி பறிக்கப்பட்டு, பணம் சம்பாதிக்கும்கல்வி பரப்பப்பட்டது. இந்தக் கல்வியின் வாயிலாக, தற்போது எதிலுமே பணம் பறிக்கும் புதுமை புகுத்தப்பட்டுள்ளது.

சரி!, அது ஒரு பக்கம் இருக்கட்டும். இன்று நம் நடைமுறை வாழ்வில், ஒரு மருத்துவரிடம் சென்று நமது நோயைப் பற்றி நாம் கூறினால், முதலில் அந்த மருத்துவர், 'இந்த நோய் எதனால் வந்தது. இந்த பிரச்சனைக்கும், துயரத்திற்கும் காரணம் என்னென்ன?' என்றுதான் முதலில் கவனிக்க ஆரம்பிப்பார். அதன் பிறகுதான் சிகிச்சையை தொடங்குவார்.

அப்படித்தான் நம் அனைத்து பிரச்சனைகளுக்கும், துயரத்திற்கும் காரணம் என்னென்ன? அது எதனால் வந்தது? என ஆராய்ந்து அறிந்துக்கொள்ள வேண்டும். அதன்பிறகுதான் இவைகளுக்குத் தீர்வு உண்டாகும்.

இதை அறிவதற்கான கல்விமுறை ஒன்று நம்மிடையே உண்டென்றால், அது, ஆன்மவியல் கல்விமுறை ஒன்றே ஆகும். அதுவே, பரம[தன்]னை அறியும் வேதாந்தக் கல்விமுறை என்று கூறலாம்.

'நாம் இருக்கின்றோம்' அல்லது 'நான் இருக்கின்றேன்' என்பதில் யாருக்கும் சிறிதும் சந்தேகமில்லை.

ஆனால், 'நான் எப்படி இருக்கின்றேன்?' என்பதில்தான் பெரும்பாலும் குழப்பமே உள்ளது.

நான் மனமா?, அல்லது புத்தியா? இந்த உடலா?, அல்லது 'நான்', 'நான்', என்ற அஹங்காரமா? அல்லது ஆத்மாவா? என்பதில்தான் எல்லோருக்கும் குழப்பங்கள் உள்ளது.

இதிலே அனைவருமே, நான் 'இந்த உடல்' என்று மட்டுமே நம்மை நாம் அபிமானிக்கிறோம். யாராவது நம்மை திட்டினால், நம்மால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. அதுவே, நம்மை யாராவது புகழ்ந்து பேசினால், நம் மனம் மிகவும் சந்தோஷம் அடைகின்றது. உடனே, நாம் கர்வத்தோடு புகழ்பவரைப் பார்க்கின்றோம்.

இவ்வுலகில் அனேக விஷய, சுகங்கள் இருக்கின்றன. அவைகளில், நிறைய பொருள்கள் இருக்கின்றன என நாம் நினைக்கும்போது, ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பிக்கின்றோம்.

இதைத்தான் 'தாரதம்யம்' என்று கூறப்படுகின்றது.

இப்படி, ஒன்றுடன் மற்றொன்றை 'ஒப்பீடு' செய்து பார்ப்பதால்தான் மனதில் ஆசைகள் உண்டாகின்றது. அதனால், ஆசை வந்துவிட்டால், அதன்படியே செயல்பட ஆரம்பித்து விடுகின்றோம். அந்த செயல்களினால் வருகின்ற செயல் விளைவுகளின் பிரச்சனைகளே நம் அனைத்து துயரத்திற்கும் காரணமாகின்றன.

அதெப்படி. ஒப்பீடு செய்வதற்கும், ஆசைக்கும் சம்பந்தம் உள்ளது? என்ற சிலருக்கு சந்தேகம் வரலாம்.

உதாரணமாக, ஒரு கணவனும், மனைவியும் மிகப் பெரிய வணிக வளாகத்திற்கு செல்ல வேண்டும் என்று

எண்ணுகின்றார்கள். அங்கே சென்று 'பல்பொருள் அங்காடி' - என்ற பல்வேறு விதமான சரக்குகளில், என்னென்ன விதமான பொருள்கள் இருக்கின்றது என்று, பார்க்கும் எண்ணத்தோடு அதன் உள்ளே நுழைகின்றார்கள்.

அங்கே ஒரு ஆள் உயர பொம்மைக்கு அழகான சேலைக்கட்டி, சிங்காரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை அவனது மனைவி பார்க்கின்றாள். மெல்ல அவளுக்குள் ஒரு ஆசை எட்டிப் பார்க்கின்றது. அது, அந்த ஆள் உயர பொம்மை கட்டியிருக்கின்ற சேலையை, நான் கட்டியிருந்தால் எப்படி இருக்கும்? என்ற மனதின் ஒப்பீட்டின் காரணமாக, அவளுக்குள் ஆசை வந்து விட்டது.

அதைக் கவனித்த கணவர், தன் மனைவியை மெல்ல அந்த இடத்தை விட்டு அழைத்துச் சென்று, அவளது மனதின் போக்கை மாற்றுகின்றார். சிறிது நேரம் கழித்து, மற்ற கடைகளைச் சுற்றிப் பார்த்து விட்டு, அதே வழியாக மீண்டும் திரும்புகின்றார்கள். ஆனால், அவனது மனைவி அந்த பொம்மைக்கு உடுத்தியிருந்த சேலையை மட்டும் விடுவதாக இல்லை.

அவளுக்கு முதலில் தோன்றிய எண்ணம் என்பது அந்த சேலை மீது ஆசை. இரண்டாவது எண்ணம், அந்த சேலையை தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை. மூன்றாவது எண்ணம் அந்த சேலையைத் தான் கட்டிக் கொண்டால் எப்படி இருக்கும்? என்பது. இப்படித்தான், எண்ணங்கள் ஆசைகளாக மாறி, நமக்குள் செயல்களைச் செய்யத் தூண்டுகின்றன.

அவ்வாறு, வணிக வளாகத்தில் இருந்து வெளியே வந்த அவள் கணவரோ?, தன் காரை எடுத்துக் கொண்டு, இருவரும் இல்லம் திரும்பலாம் என தீர்மானித்து, கார் நிறுத்துமிடம்

செல்கின்றார். அங்கே, தனது கார் நிறுத்தியிருந்த இடத்திற்கு அருகே, இவரது காரைவிட விலையில் மிக அதிகமான, அழகில் இன்னும் சிறப்பான, அனைத்து நவீன வசதிகள் உள்ளடக்கிய உயர்வான கார் ஒன்று நிறுத்தப்பட்டிருப்பதைக் காண்கின்றார்.

உடனே, இவரது மனம் தன்னுடைய காரையும், அந்த அதி நவீன காரையும் ஒப்பிட்டு பார்க்கின்றது. அந்தக் காரைப் போன்று, தன்னுடைய கார் இல்லையே?! என்று இவரது மனம் துடிக்கின்றது. அதனால், தானும் அதுப்போன்று ஒரு நவீன வசதிகள் கொண்ட காரை வாங்க வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் எழுகின்றது. அதுவே, அவரது ஆசையாக மாறி, அதன்பிறகு செயலாக மாறப் போகின்றது.

இவ்வாறு, ஒன்றை மற்றொன்றின் மீது ஒப்பீடு செய்து, மனம் ஆசை வயப்பட்டு, அந்த ஆசைகளினால் செயல்கள் உண்டாகி, அந்த செயல்களினால் நன்மை – தீமை. அதன் காரணமாக, பாவ – புண்ணியங்கள். இதன் விளைவாக பிறப்பு – இறப்பு ஏற்படுகின்றது என்பதை ஏற்க முடிகின்றதா?

அதாவது, ஒரு எண்ணம் ஒராயிரம் எண்ணங்களுக்கு விதையாக மாறி, அதன்வாயிலாக, ஒருவனது பிறப்புக்கு காரணமான காரண சரீரம் அழிக்க முடியாமல் இருப்பதை அறிய முடிகின்றதா?

ஒருவன் தான் எண்ணுகின்ற எண்ணங்களை எல்லாம் தன் மனதில் தானே விசாரித்து ஆராயாமல், அந்த மனம் போன போகிலேயே போய்க் கொண்டிருந்தான் எனில், அவனது, எண்ணங்களினால் விளைந்த செயல் விளைவுகள்

எல்லாமே, அவனது வாழ்க்கையை துயரம் நிறைந்த வாழ்க்கையாக மாற்றி விடுகின்றது.

இவ்வாறு, ஏற்றிவைக்கப்பட்ட ஏராளமான எண்ணங்கள் மூலம் எழுந்த, அவனது ஆசைகளினால் மனம் அலைக் கழிக்கப்பட்டு, விருப்பு – வெறுப்பு, இன்பம் – துன்பம் போன்ற இருமைகளில் அவனை சிக்க வைத்து சீரழித்து விடுகின்றது.

அதுவே, அவ்வாறு ஆர்ப்பரிக்கும் அந்த மனதின் உண்மைத் தன்மையை தன்னுள் மனதை விசாரித்து அறிய முற்பட்டால், அவனது மனம் தன்னிடம் ஏற்றி வைக்கப்பட்ட அனைத்து அறியாமைகளையும் அப்புறப்படுத்தி, அந்த ஏக அறிவை (ஆத்மாவை) அறிந்துக்கொண்டு, அதனுடன் தன்னை பூரணமாக ஒப்படைத்து விடுகின்றது.

இவ்வாறு, அறிவுடன் (ஆத்மாவுடன்) ஒன்றாகி விட்ட மனதின் உயரிய பரிமாணம் என்பது, எல்லையில்லாத அந்த ஏக அறிவின் இருப்பாக இருந்துக் கொண்டு, தன்னைத்தான் அறிந்துக் கொண்ட தனித்துவமான புரிதலினால், 'நான்' என்கின்ற தன்னுடைய ஜீவ அஹங்காரத்தை வீட்டு, எல்லாம் ஒன்றே என்ற ஈஸ்வர அஹங்காரத்தில், "நான்" எல்லாமாக இருக்கிறேன் என்று அறிகிறது.

இனி!, அங்கு மனம் என்ற மற்றொன்று கிடையாது. இருப்பது அது ஒன்றே, அதுவே, அறிவு (ஆத்மா). அதை அறியும் மனமே அறிவுப் பரிமாணத்தின் படி நிலைகளில், மிக உயரிய நிலைக்கு வந்து விடுகின்றது.

அத்தகைய மனதின் உயர் பரிமாண நிலையில், ஆறாம் அறிவு எனும் **பகுத்தறிவு** கொண்ட, புத்தி சக்தி பெற்ற மனிதன்

மட்டுமே, நன்மை - தீமைகளை பகுத்தறிந்து, அதிலே பரம[தன்]னை அறிகின்ற தலையாய **கல்வி அறிவை** பெற்ற பொழுதுதான் இது சாத்தியமாகின்றது.

ஆகவே, நாம் கற்கின்ற உயரிய கல்வியாகிய வேதாந்தக் கல்வி, நம் மனதில் உள்ள இருமைகளாகிய உடல், மனம் என்ற அபிமானத்தை அகற்றி, ஒன்றேயான அந்த அந்தர்யாமியுடன் இரண்டறக் கலந்துவிட வைத்து விடுகின்றது.

அதாவது, இது எப்படி சாத்தியமாகும்? என்றால், இடையறாத மனதின் விசாரம் மூலமாக மட்டுமே, மனதின் அறியாமைகளை அகற்றிக் கொள்ள முடியும். அதாவது, ஏற்றி வைக்கப்பட்ட மனதின் ஏராளமான அறியாமைகளும் நீங்கி, ஒன்றேயான ஆத்ம பிரகாசம் வெளிப்படத் தொடங்கும்.

பொதுவாக, மனதில் ஆசைகள் இல்லையேல், அங்கு மனம் என்பதே இல்லை. மனம் இல்லையேல், அங்கு இந்த பூத உடல் இல்லை. பூத உடல் இல்லையேல், அதற்குண்டான பிறப்பு – இறப்பு என்ற இருமைகள் இல்லவே இல்லை.

ஆக, பிறப்பு – இறப்பு என்ற இருமைகள் இல்லையேல், ‘மரணமற்ற பெருவாழ்வு வாழலாம் கண்டீர்’ என்ற வள்ளல் பெருமானாரின் உயரிய வாசகம் உணர்த்தும் உண்மைத் தன்மை நமக்கு மெய்பிக்கப்படுகிறது.

ஆகவே, முதன் முதலில் மனதில் இருந்து அகற்றப்பட வேண்டியது ‘ஆசை என்ற அறியாமை’ ஆகும். இந்த அறியாமை நம்மை விட்டு முழுவதுமாக அகன்றால்தான், நமக்கு 'மோட்சம்' என்பது கிடைக்கும்.

மோட்சம் என்றால் 'விடுதலை' (அல்லது) 'நிலையான ஆனந்தம்' என்று பொருள்.

எதிலிருந்து விடுதலை?

பிறப்பு – இறப்பு என்ற சம்சார பந்தத்திலிருந்து விடுதலை.

ஆகவே, அறியாமைகள் அகன்று, ஆத்ம ஞானம் உண்டாக வேண்டுமானால், மனதைத்தான் முதலில் நாம் விசாரணை செய்ய வேண்டும். அதாவது, நம்மிடமுள்ள அறியாமைகளைப் புரிந்துக் கொண்டு, அதை மனதிலிருந்து விலக்கி விட்டால், நம்மிடம் உடனே வெளிப்படுவது 'அறிவுப் பிரகாசம்' என்ற "ஆன்ம ஞானம்" மட்டும்தான்.

அந்த உயரிய ஆன்ம ஞானத்தை உபதேசிக்க வந்த வேதங்கள், இரு பெரும் பகுதிகளாக உள்ளன. அவைகளில், ஒன்று கர்ம காண்டம், மற்றொன்று ஞான காண்டம் எனப்படும்.

கர்ம காண்டத்திற்கு 'ஜைமினி மகரிஷி'யும், ஞான காண்டத்திற்கு 'வியாஸ மகரிஷி'யும் ஆகிய இவர்கள் இருவரும் வேதங்களை தொகுத்து மக்களுக்கு நல்கியுள்ளனர்.

இந்த கர்ம காண்டத்தில் சடங்குகள், மந்திரங்கள் முதலானவைகள் உள்ளன. ஆனால், ஞான காண்டத்தில் தத்துவத் தேடல்கள் மட்டுமே உள்ளது.

கர்ம காண்டத்தில் கூறப்பட்ட உபாசனைகள், மந்திர ஜெபங்கள், பூசைகள், வேள்விகள் போன்ற அனைத்தும் சித்த சுத்தியை நோக்கி நம்மைக் கொண்டு செல்கின்றன.

அதுவே, வேதத்தின் இறுதிப்பகுதியில் (அந்தம்) உள்ள பரம[தன்]னை அறியும் இந்தத் தத்துவத் தேடல்கள் ஆத்ம ஞானத்திற்காக அமைந்திருக்கின்றன.

எனவே, பொதுவாக, வேதங்களின் இறுதிபகுதியை **வேத + அந்தம் = '*வேதாந்தம்*'** என்று குறிப்பிடுவதுண்டு.

ரிக், யஜூர், சாம, அதர்வண வேதங்கள் நான்கிலும் வேதாந்தப்பகுதிகள் உள்ளன. இவைகள் **உபநிஷதங்கள்** என்று கூறப்படுகின்றன.

மொத்தமாக, 108 உபநிஷதங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதில், 14 உபநிஷதங்களுக்கு ஸ்ரீஆதிசங்கரர் அவர்களால் சமஸ்கிருத மொழியில் (பாஸ்யம்) விளக்கஉரை எழுதப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வேதத்திலும் அமைந்துள்ள முக்கியமான உபநிஷதங்கள் பின்வருமாறு:

**ரிக் வேதம்:** ஐதரேயா, கௌசீதகி

**யஜூர் வேதம்:** ஈச, கட, தைத்திரீய, பிருஹதாரண்யக, சுவேதாஸ்வதர, மைத்ரேய, மகாநாராயண.

**சாம வேதம்:** கேன, சாந்தோக்ய

**அதர்வண வேதம்:** ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய.

உலகாயதமான (பொருள் சார்ந்த) நடைமுறை வாழ்வுக்கு அப்பாற்பட்ட விஷயங்களைத் தத்துவ நோக்கில் அலசுபவை இந்த உபநிஷதங்கள். பரம்பொருள், ஆத்மா, சிருஷ்டி முதலான விஷயங்களை இவைகள் கையாள்கின்றன.

இது குறிப்பிட்ட ஒரு தத்துவம் மட்டும் அல்ல. பல விதமான தத்துவங்களின் தொகுப்பு இந்த உபநிஷதங்கள் எனலாம். வாழ்க்கை நிலையாமை பற்றிப் பேசுவது "**வேதாந்தம்**" என்று பலரால் தவறாகக் கருதப்படுகிறது.

உண்மையில் வேதாந்தத் தத்துவங்கள் இந்த மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசி, தன்னை அறியும் அறிவை, மகாவாக்கியங்களாக அவனுக்கு சுட்டிக் காட்டுகின்றது.

மகாவாக்கியங்கள் என்பது, நான்கு வேதங்களின் சாரமான உபநிஷதங்களில் கூறப்பட்டுள்ள உயருண்மை கொண்ட முக்கிய சொற்றொடர்களைக் (வாக்கியங்களைக்) குறிப்பது ஆகும்.

அவைகள், 'பிரக்ஞானம் பிரம்ம' "பிரக்ஞையே (அறிவுணர்வே) பிரம்மன்" (ரிக்வேதத்தின் ஐதரேய உபநிடதம்).

'அயம் ஆத்மா பிரம்ம', "இந்த ஆத்மா பிரம்மன்" (அதர்வண வேதத்தின் மாண்டூக்ய உபநிடதம்).

'தத் த்வம் அஸி', "அது (பிரம்மம்) நீ" (சாம வேதத்தின் சாந்தோக்கிய உபநிடதம்). 'அஹம் பிரம்மாஸ்மி', "நான் பிரம்மன்" (யஜுர் வேதத்தின் பிரஹதாரண்யக உபநிடதம்).

இவ்வாறு, ஒவ்வொரு மகாவாக்கியமும், அந்த நான்கு வேதங்கள் ஒவ்வொன்றையும் சார்ந்த வேதத்தின் சாரமாக கருதப்படுகிறது. அதாவது, இந்த நான்கு மகாவாக்கியங்களும் முறையே, நான்கு வேதங்களில் இருந்து பெறப்பட்டவைகள்.

இத்தகைய வேதங்களின் இறுதிப்பகுதியான பல்வேறு உபநிஷதங்களை தொகுத்து, நம் தாய் மொழியான, தமிழ் மொழியில் அனைவரும் கற்று "கைவல்யம்" பெற வேண்டும் என்ற நல்நோக்கில், 'வேதாந்தத்தே வேரற விளங்கும் வேதப்பொருள் அருள் அருணாசலா' என்ற பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் பாதார விந்தங்களை பணிந்து, இந்நூல் எல்லையற்ற அந்த ஒன்றேயான ஏகாந்தப் பரவெளிக்கு பணிவுடன் சமர்பிக்கப்படுகின்றது.

**ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே |**
**பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே ||**

ஓம். அதுவும் முழுமை (பூர்ணம்). இதுவும் முழுமை. அந்த முழுமையிருந்து முழுமை தோன்றியுள்ளது. அந்த முழுமையிலிருந்து முழுமையை எடுத்தும், அந்த முழுமையே எஞ்சி நிற்கின்றது.

**நன்றி!**



என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

# வேதாந்தம்

## பாயிரம்

**பரதத்வ பரமநித்யம் பரசிவம் பரமபவித்ரம் பரமானந்தம்**
**பராபரம் பரதுரியம் பரமகைவல்யம் பரமார்த்த பரிபூரணம்**
**பசுபாச பாவனம் பரமமோக்ஷம் பரமாணு பராமுத பாஸ்கரம்**
**பரமசாத்திய பரமபோத பரகேவல தன்மயம் சத்சிதானந்தம்.**

– ப்ரக்ஞன்.



# 1. அனுபந்த சதுஷ்டயம்

அனுபந்த சதுஷ்டயம் என்பது ஒரு புத்தகத்தைப் படிப்பதற்கான நான்கு வகை தொடர்புகளை குறிப்பிடுகின்றது.

அவைகள்,

1. புத்தகத்தை படிக்கத்தகுதியானவர் யார்?
2. புத்தகத்தில் உள்ள விசயம் என்ன?
3. புத்தகம் எதன் சம்பந்தமாக இருக்கின்றது?
4. புத்தகத்தைப் படிப்பதினால் உண்டாகும் பயன் என்ன?

இவ்வாறு, ஒரு புத்தகத்தைப் படிக்கின்றவர்கள் இந்த நான்கு தொடர்புகளைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியம்.

அந்த வகையில்,

1. அதிகாரி, 2. விசயம், 3. சம்பந்தம், 4. பயன் என்ற இந்த நான்கு தொடர்புகளையும் **“அநுபந்த சதுஷ்டயம்”** என்று கூறப்படுகின்றது.

## 1. அதிகாரி:–

*இந்த புத்தகத்தைப் படிக்க விரும்புகின்ற தகுதியான அதிகாரி (சாதகன்) யார்?*

நான்கு வகையான தகுதிகளை உடையவன்தான் இந்த புத்தகத்தைப் படிப்பதற்கு முழு தகுதியுடையவன் ஆகின்றான்.

நம் புத்தியானது, யுக்தி பூர்வமாக சிந்திக்கும் திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும். எந்த ஒரு இலக்கை நாம் அடைய வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அதற்கு, நான்கு விசயத்தில் தெளிவாக இருக்க வேண்டும்.

**அவைகள்:**

1. அடைய நினைக்கும் இலக்கில் உறுதியாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும்.
2. அதை அடைய உதவும் வழி முறைகளுக்கும், இலக்கிற்கும் இடையே உள்ள உறவை நன்கு புரிந்து வைத்திருக்க வேண்டும்.
3. இலக்கை அடையும் வழிமுறைகள் தெரிய வேண்டும்.
4. அந்த இலக்கை அடைவதற்குத் தேவையான தகுதிகள் தன்னிடம் இருக்கின்றதா என்றும் தெரிந்து இருக்க வேண்டும்.

இத்தகைய அதிகாரிகளில் இரண்டு விதமானவர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் முறையே, மேதாவி மற்றும் வித்வான் எனப்படுகின்றனர்.

## மேதாவி

கூறப்படுகின்ற விசயங்களை சரியாக கிரகிக்கும் திறனுடையவர், கூர்ந்து கவனிக்கும் ஆற்றலுடையவர், கேட்டதை நடைமுறையில் பயன்படுத்தும் ஆற்றலுடையவர். இவரை மேதாவி என்று அழைக்கின்றோம்.

## வித்வான்

நடைமுறை மார்க்கங்களான கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகியவற்றில் ஈடுபாட்டுடன் கூடிய அறிவுடையவர், யுக்திபூர்வமாக சிந்திக்கும் திறனுடையவர்.

இப்படிப்பட்டவரே, இந்த புத்தகத்தில் கூறப்படுகின்ற உபதேசங்களை மிகத்தெளிவாகவும், விரைவாகவும் புரிந்துக் கொண்டு, அதைத்தன் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த தகுதியானவர். இது, எல்லோராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## 2. விசயம் :–

*இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ள விசயம் என்ன?*

இந்த புத்தகத்தின் வாயிலாக ஜீவ பிரம்ம ஐக்கியம் உபதேசிக்கப்படுகின்றது. இங்கு ஐக்கியம் என்பது **'ஒன்று சேர்தல்'**, அல்லது **'இணைதல்'** என்று பொருள்.

ஜீவனும், பிரம்மமும் ஒன்று என்பதை எதன் அடிப்படையில் கூறப்படுகின்றது எனில், **"தத் துவம் அஸி"** என்ற மகாவாக்கியத்தின் படி, **'நீ அதுவாகவே இருக்கின்றாய்'** என்பதை வேதத்தின் மகா வாக்கியத்தின் வாயிலாக யுக்திக்கு பொருந்தக் கூடிய அறிவுப் பூர்வமாகவும், சாஸ்திர உவமானங்களின் வாயிலாகவும் விளக்கப்படுகின்றது.

மேலும், ஜீவனும், பிரம்மமும் ஒன்று என்று அறிந்துக் கொள்வதினால் எனக்கு என்ன வரப்போகின்றது? எனில், தன்னைப் பற்றிய உண்மையான புரிதல் உண்டாகி, **நான் யார்?** என்ற விசாரத்தின் வாயிலாக கிடைத்த **"ஞானம்"** தன்னை ஜீவன் முக்தனாக மாற்றி நிலையான ஆனந்தத்தில் நிலைத்திருக்கச் செய்கின்றது.

அதாவது, இவ்வாறு **நான் யார்?** என்று விசாரித்து அறியும் போது, மனதின் அறியாமைகள் அகன்று, தன்னுடைய **உண்மை சொரூபம்** வெளிப்படுகின்றது.

ஆத்மானுபவம் உண்டாவதற்கு கண்கள், காதுகள், மூக்கு போன்ற, எந்தவித புறப் புலன்களின் உதவியோ, அல்லது அந்தக் கரணங்களான மனம், புத்தி, சித்தம் போன்றவைகளின் உதவியோ இன்றி, இயல்பிலேயே, 'அதுவாகவே நான் இருக்கின்றேன்' என்று, தன் உண்மை சொரூபத்தில் இருக்கின்றதை, அறிந்து, அதை அனுபவமாக நடைமுறையில் கொண்டு வருவதற்குத் தேவையான, நடைமுறை சாதனங்களையும், விளக்கங்களையும், ஒரு நேரடி அனுபவமாக இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

## 3. சம்பந்தம்:–

ஜீவனும், பிரம்மமும் ஒன்று என்று அறிவது மட்டும்தான் என்னுடைய முடிவான குறிக்கோள் எனில், அதனால் நான் அடைகின்ற நிலையான ஆனந்தமே **"மோக்ஷம்"** என்ற சுகத்தைக் கொடுக்கும் பொழுது, அதை அடைவதற்கு நான் ஏன் இந்த புத்தகத்தைப் படிக்கவேண்டும்? என்ற கேள்வி எழுந்தால், இந்த புத்தகத்தின் வாயிலாக கொடுக்கப்பட்டுள்ள வேதத்தின் இறுதிப் பகுதியான "வேதாந்தம்" ஒன்று மட்டும்தான், இத்தகைய அரிய உண்மையை அறிய வைப்பதற்கான ஒரே ஒரு **'பிரமாணம்'** எனலாம்.

அதாவது, கண்ணாடியில் தெரியும் நம் பிம்பம் சரியாகத் தெரிய வேண்டும் என்றால், கண்ணாடியில் உள்ள அழுக்கை நன்கு துடைத்து நீக்க வேண்டும். அல்லது அழுக்கு இல்லாத

சுத்தமான கண்ணாடியில், காண்கின்ற பிம்பம் மிகச் சரியாகத் தெரியவில்லை என்றால், நம் கண்களைத்தான் சரி செய்ய வேண்டுமே தவிர, அந்த பிம்பத்தை ஒன்றும் செய்யத் தேவை இல்லை.

அதுப்போல, என்னை அறிவதற்கு, எனக்கு வேறாக இருக்கின்ற விசய, சுகங்களை விரும்பாமல், திரும்பத் திரும்ப வேதாந்தத்தை உபதேசிக்கும் இதுப் போன்ற புத்தகங்களை படிப்பதினாலும், வெளியே அலைகின்ற மனதை உள்ளே திருப்பி, விசாரம் மேற்கொள்வதினாலும் மட்டுமே, தன்னை அறிய முடியும். இதைத் தவிர, வேறு எந்த வழியும் இல்லை.

படிப்பவனுக்கும், படிக்கப்படும் விசயத்திற்கும் **நேரடி சம்பந்தம்** இருக்கின்றது. அறிவு (ஞானம்) அடையும் வரையும், விசாரத்தை மேற்கொண்டவாறு, இதுப்போன்ற வேதாந்த புத்தகங்களை தொடர்ந்து படித்துக் கொண்டிருக்க வேண்டும்.

## 4. பயன்

எந்த ஒரு படிப்பும் அதற்கேற்ற அறிவைக் கொடுக்கும். அதுப்போல, இந்தப் புத்தகத்தைப் படிப்பதினால், நிலையான ஆனந்தத்தைக் கொடுக்கின்ற **"ஆத்ம ஞானம்"** என்ற அறிவை அடைவோம்.

இந்த அறிவினால் என்ன கிடைக்கும் என்றால், பிறப்பு – இறப்பு என்ற சம்சார பந்தத்திலிருந்து நம்மை விடுவித்து, நிலையான ஆனந்தத்தைத் தருகின்ற '**ஜீவன் முக்தி**' நிலை உண்டாகும்.

ஜீவன் முக்தி நிலை என்பது, அஹங்கார "**நான்**" என்ற உடல் பற்றிலிருந்து, "**நான்**" என்பது "**ஈஸ்வரன்**" என்ற பிரம்ம நிலைக்குத் தன்னை உயர்த்தும்.

இந்தப் புத்தகத்தைப் படிப்பதினால், அனேக பிறவிகளின் வாயிலாக உண்டான, (அஞ்ஞானம்) அறியாமை என்னும் இருள் நீங்கி, இந்த **உலகம், ஜீவன், ஈஸ்வரன்** என்பதின் உண்மைத் தன்மையையும், இந்த உடலோடு இருந்துக் கொண்டு, வாழும் காலம் வரையிலும், உன்னதமான ஆன்ம ஞானத்துடன் ஆனந்தமாக வாழவும் முடியும்.

**நான் யார்?** என்பதை எந்தவித சந்தேகமும் இல்லாமல் புரிந்துக் கொண்டு விடுவோம். அந்த ஞான நிஷ்டையிலே, (தன் சொரூபத்திலேயே) எப்பொழுதும் நிலைத்து நிற்போம்.

அதன் பிறகு, இந்த பரு உடலை விட்டவுடன், பரந்த இந்த மகா ஆகாசத்துடன், இதுவரை உடலின் உள்ளே இருந்து வந்த சிதாகாசம் கலந்து, இரண்டும் ஒன்றான '**விதேக முக்தி**' என்ற பிறவாப் பெரு நிலையை அடைவோம். இனி, மீண்டும் ஸ்தூல உடல் கொண்டு பிறக்க மாட்டோம். இதுவே, இந்த புத்தகத்தைப் படிப்பதினால் உண்டாகின்ற மிகப்பெரிய பயன் எனலாம்.

# 2. மனிதனின் இலட்சியம்

இதுப் போன்ற வேதாந்த புத்தகத்தைப் படிக்க வருகின்றவர்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டிய, முதல் வார்த்தை **'புருஷார்த்தம்'** (புருஷன் + அர்த்தம்) என்பது ஆகும்.

அதாவது **'புருஷன்'** என்றால் **"மனிதன்"** என்றும், **'அர்த்தம்'** என்றால் **"இலட்சியம்"** என்றும் பொருள் கொண்டு, இதனை **"மனிதனின் இலட்சியம்"** என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, **வேதாந்த சாஸ்திரம்** என்ன கூறு வருகின்றது என்றால், படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதனால் மட்டுமே, ஒரு இலட்சியத்தை உருவாக்கிக் கொண்டு அந்த இலக்கை நோக்கி சாதனத்தை அடைந்து, சாத்தியத்தை பெற முடியும் என்கின்றது.

இங்கு சாதனம் என்பது, **'சாஸ்திரம், குரு, இந்த உலகம்'** போன்றவைகளும், சாத்தியம் என்பது **'மோக்ஷம்'** என்பதும் ஆகும்.

இலட்சியம் இல்லாத மனிதனை இறந்த மனிதனுடன் ஒப்பிடலாம் என்கின்றது சாஸ்திரம். அதாவது, இறந்தவனது சடமான உடலை (சடலத்தை) எதற்கும் பயன்படுத்த முடியாதது

போன்று, இலட்சியம் இல்லாத மனிதன் எதற்கும் பயனற்றவன் ஆகின்றான்.

அதுவே, மற்ற ஜடப்பொருட்களான கல், மண், மரம் போன்றவைகள் கூட வீடு கட்ட, விவசாயம் செய்ய என்று மற்ற பயன்பாடுகளுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது. ஆனால், மனிதன் என்பவன் வாழும் பொழுது ஜடமாக இருந்தாலும், இறந்த பிறகு ஜடமாக (சடலமாக) ஆனாலும் அவனால் ஒரு பயனும் இல்லை என்கின்றது சாஸ்திரம்.

மனிதன் என்றால் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதற்கு ஒரு **இலட்சியம்** இருக்க வேண்டும். சாதாரணமாக ஒரு உடற்பயிற்சி செய்தாலும் கூட, அங்கு ஆரோக்கியம் என்ற ஒரு இலக்கு (இலட்சியம்) இருக்கும். அதாவது, நிச்சயமாக இருக்க வேண்டும்.

இதில் மனிதன் ஒருவன் மட்டுமே, மிகச் சரியான இலட்சியத்தை தேர்ந்தெடுத்துக்கொள்கின்ற வாய்ப்புகளை, அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஆறாவது அறிவின் வாயிலாக மிக எளிதில் சாத்தியம் ஆக்கிக் கொள்ள முடியும்.

ஆறு அறிவுக்கு கீழே உள்ள ஜீவர்களுக்கு இது போன்ற இலட்சியமோ, வாய்ப்புகளோ கிடையவே கிடையாது.

எங்கு இலட்சியத்தை தேர்ந்தெடுக்கின்ற வாய்ப்பு உள்ளதோ, அங்கு **‘புருஷார்த்தம்’** தானாகவே வந்து விடும்.

இதன் மூலம், தர்ம, அதர்ம ஞானம் (அறிவு) மனிதனுக்கு இயற்கையாகவே உண்டாகி விடுகின்றது.

அது எப்படி எனில், எது எனக்கு நல்லதோ, அதுவே மற்றவர்களுக்கும் நல்லது செய்யும் என்ற அறிவு இயல்பாகவே நம் ஒவ்வொருவரிடத்திலும் காணப்படுகின்ற இயல்பு ஆகும். அதனால்தான் மனிதன் மட்டுமே நல்லது எது? கெட்டது எது? என்ற இருமைகளை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

நம்மையே ஒரு அளவுகோளாக வைத்து நன்மை, தீமைகளை அறிவது போன்று, நமக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேகமான ஆறாவது அறிவின் வாயிலாக, உண்மை எது? பொய் எது? என்று அறிந்து கொள்ளவும் முடியும்.

மனிதனுக்கு மட்டுமே **'தன்னை அறியும் அறிவு'** இருக்கின்றது. மற்ற ஜீவராசிகளுக்கு இந்த அறிவு கிடையாது. ஒரு நாயோ, பூனையோ தன்னை நாய் என்றோ, அல்லது பூனை என்றோ ஒரு நாளும் அறிந்து கொள்ளாது. ஆனால், மனிதன் மட்டுமே தன்னை **"மனிதன்"** என்று அறிகின்றான். அத்துடன், **'நான் இருக்கின்றேன்'** என்று உள்ளுணர்வுடனும் இருக்கின்றான்.

அதுவே, மற்ற ஜீவர்களுக்கு இது போன்று, தன்னை அறியும் ஆற்றல் இல்லை. ஒரு யானை தன்னுடைய முழு பலத்தையும் அறிந்து கொள்ள முடியாத காரணத்தினால்தான், ஒரு சாதாரண சங்கிலியினால் சர்வ சாதாரணமாக, கட்டுண்டு கிடக்கின்றது.

ஆனால், மனிதனுக்கு அப்படியில்லை, அவன் தன் முழு பலத்தையும் அறிந்ததினால்தான், அவன் தன்னை சரியாகவும், முறையாகவும் மாற்றி அமைத்துக் கொள்ள முடிகின்றது.

இவ்வாறு, தன்னை மனிதன் என்றும், தான் இருக்கின்றேன் என்றும், தனக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேக அறிவான பகுத்தறிவினால் ஆராய்ந்து அறிந்த ஒருவன், மற்ற ஜீவர்களிடத்திலிருந்து தான் மட்டும் வேறுபட்டு, மகத்தான மனிதனாக உருவாக, அவனது '**புருஷார்த்தம்**' (இலட்சியம்) மிக முக்கிய பங்கு வகுக்கின்றது என்றால் அது மிகையாகாது.

இந்த பூமியையே மனிதர்களாகிய நாம்தான் ஆளுமை செய்கின்றோம். மற்ற எந்த ஜீவராசிகளுக்கும், இதுப் போன்ற வாய்ப்பு கிடையாது. எனவே, நாம் நம்முடைய இலட்சியத்தை பொருத்தே, நம்முடைய வாழ்க்கையை மிகவும் ஆனந்தமாக வாழவும், மிகத் துயரமாக வாழவும் முடிகின்றது.

இவ்வாறு, **"தீதும், நன்றும் பிறர் தர வாரா!"** என்பது போல, நாமே நம்முடைய இன்ப, துன்பத்திற்கு காரணமாக இருக்கின்றோம்.

இதில் எது இன்பத்தை கொடுக்கும், எது துன்பத்தை கொடுக்கும் என்ற தடுமாற்றம் நம்மிடையே உண்டாகும் சூழ் நிலையில் நமக்கு ***"சாஸ்திரம்"*** மட்டுமே சரியான அறிவுரையை வழங்கி நம்மைச் சரியான இலட்சியப் பாதையில் அழைத்துச் செல்கின்றது.

இதில், வேதசாஸ்திரத்தின் இறுதிப்பகுதியான **"வேதாந்தம்"** மட்டுமே, அரிதான பிறவியாகிய மனிதப் பிறவி கிடைத்துள்ள நமக்கு, எது சரியான இலட்சியம் என்பதை வகைப்படுத்திக் கொடுக்கின்றது.

நம்முடைய இலட்சியத்தை முறைப்படுத்தி, சரியான இலட்சியத்தைக் காட்டிக் கொடுத்து, எது உயர்ந்த இலட்சியம், எது தாழ்ந்த இலட்சியம் என்பதை நமக்கு வேதாந்தத்தின் வாயிலாக அறிவுரை வழங்கி, நம்மைச் சரியான இலட்சியப் பாதையில் பயணிக்க வைக்கின்றது.

இவ்வாறு, சரியான அறிவுரையை வழங்குகின்ற இந்த வேதாந்த சாஸ்திரத்தை நம்முடைய இளம் வயதிலேயே கற்பதினால், இனி வாழுகின்ற இந்த இளமைப் பருவம் முதற்கொண்டு, முதுமைப் பருவம் வரை தன்னுடைய வாழ் நாட்களை துயரமில்லாத ஆனந்த வாழ்க்கையாக மாற்றிக் கொண்டு, என்றும் நிலையான ஆனந்தத்துடன் நிம்மதியாக வாழ முடியும் என்பதை சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

ஆனால், அறியாமையில் உள்ள மக்களோ இது வயதான காலத்தில் படிக்கும் சாஸ்திரம் என்று இளமையில் இதனை ஒதுக்கித் தள்ளி விட்டு, வயதான பிறகு முதிர்ச்சியின் காரணமாக, இவர்களது ஐந்து புலன்களும், உடம்பும் ஒத்துழைக்காமல் போனபிறகு, இந்த சாஸ்திர உண்மைகளை படித்து அறிய முடியாமல் போகின்றது. தன்னைப் பற்றிய உண்மை அறிவை அறிய முடியாமலேயே போகின்றது.

அப்படியே கண் கண்ணாடிப் போட்டுக் கொண்டு கஷ்டப்பட்டு படித்தாலும், சாஸ்திரத்தில் கூறப்பட்ட அரிய விசயங்களை நடைமுறையில் அனுபவப்படுவதற்கு முடியாமல், ஏற்கனவே பல காலங்களாக, பல தேவையற்ற விசய சுகங்களை, இதுநாள் வரையிலும் மனதின் உள்ளே ஆழமான சம்ஸ்காரங்களாகப் பதித்துக் கொண்டதினால், இதுப்போன்ற அரிய **ஆன்மவியல்** பாடங்களை மனம் ஏற்காது. அதனால்தான் அன்றைய பெரியவர்கள் **"இளமையில் கல்"** என்று கூறி வைத்தனர்.

பொதுவாக, ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான அறியாமைகளின் காரணமாக, மனிதன் மனம் போன போக்கில்தான் போய்க் கொண்டும், மூட நம்பிக்கையினால் அதிகம் ஆட்பட்டும், அதிக துயரத்துடன் கூடிய இத்தகைய பல்வேறு வாசனைப் பதிவுகளின் காரணமாக, எப்பொழுதும் துயரத்திலேயே வாழ்ந்து, மடிந்து போகின்றான்.

எனவே, முடிந்தவரை மிகச் சிறிய வயதினிலேயே இதுப்போன்ற ஆன்மஞான புத்தகங்களை சாதனமாகக் கொண்டு, அதனை தக்க சத்குருவின் வாயிலாக ஆழமாகப் படிக்கின்றோமோ?, அவ்வளவுக்கு அவ்வளவு, நம்முடைய வாழ்க்கையின் சரியான இலட்சியப் பாதையை நாம் அறிந்து, அதன்படி மனதின் அறியாமைகளைக் களைகின்ற விசாரங்களை மேற்கொண்டு, நம்முடைய இறுதி இலக்கான இலட்சியத்தை (மோக்ஷத்தை) எளிதில் அடைய முடியும்.

**சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை**
**ஆதலால் இந்த நான்கும் அடைந்தவர்க்கு அறிவு உண்டாகும்**
**நூதன விவேகி உள்ளம் நுழையாது நுழையுமாகில்**
**பூதசென்மங்கள் கோடி புனிதனாம் புருடனாமே.** – (கைவல்ய நவநீதம்).

வழிமுறைகள் தெரியாமல் யாரும், எந்த ஒன்றையும் இந்த உலகத்தில் சாதிக்க முடியாது. ஆதலால், என்ன செய்ய வேண்டும் என்ற சாதனைகளாக இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ள நான்கு வழிமுறைகளை அறிந்து, அதற்கான தகுதிகளையும் வளர்த்திக் கொண்டு, அதனால் உண்டான ஞானத்தில் **'ஜீவன் முக்தன்'** என்ற உயர் நிலைக்கு ஒருவனை அழைத்துச் செல்வதே இந்த புத்தகத்தின் உன்னதமான நோக்கம் ஆகும்.


ஜீவன் முக்தன் என்பது, இந்த பரு உடல் கொண்டு வாழும் பொழுதே, எப்பொழுதும் ஆனந்தமாக வாழ்ந்துக் கொண்டு, மற்றவர்களையும் ஆனந்தப்படுத்துவது என்பதாகும்.

இது போன்ற வேதாந்த சாஸ்திரங்களை தன்னுடைய தாய் மொழியிலேயே எளிதாக கற்க விரும்புகின்ற சாதகனுக்கு, இந்த பாடங்களை கற்பதில், தக்க வழி காட்டியான சத்குரு (ஆச்சாரியர்) இல்லையெனில், அவ்வளவு எளிதில் இவைகளை ஆழமாகப் புரிந்துக் கொள்ள முடியாது.

காரணம், அவனிடம் ஏற்கனவே பல கோடி சென்மங்களாக உண்டான வாசனைகளின் அடர்த்தியின்

காரணமாக, சம்ஸ்காரப் பதிவுகள் அவ்வளவு எளிதில் இவைகளைப் புரிந்துக் கொள்ளவும் விடாது.

அப்படி ஒருவேளை, இவைகள் அனைத்தும் புரிந்து, விசயங்கள் அவன் உள்ளத்தின் உள்ளே நுழைந்து, தன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள முடிந்ததானால், அவன் பல கோடி ஜென்மங்களிலே செய்த புண்ணியத்தின் பலனாக, இந்த உயரிய வேதாந்த சாஸ்திர புத்தகம் அவனது கைக்கு கிடைத்துள்ளது என்பதை அறிய வேண்டும்.



## 3. இலட்சியத்தின் அவசியம்

இதில் இலட்சியம் என்பது ஒவ்வொருவரின் அனுபவத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்றவாறு, மாறுபட்டுக் காணப்படும்.

பள்ளியில் படிக்கின்ற மாணவனுக்கு முதல் மதிப்பெண் பெற வேண்டும் என்ற இலட்சியமும், விளையாட்டு வீரனுக்கு தான் விளையாடும் விளையாட்டில் முதல் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற இலட்சியமும், தொழில் செய்கின்ற சிலருக்கு நான் மிகப்பெரிய பணக்காரன் ஆக வேண்டும் என்ற இலட்சியமும் இருக்கும்.

இந்த இலட்சியங்கள் மனிதனுக்கு மனிதன், காலத்திற்கு காலம், இடத்திற்கு இடம் என்று மாறுதலுக்கு உட்பட்டது ஆகும்.

ஒருவருடைய இலட்சியம் மற்றொருவர் அடைந்த இலட்சியத்தின் தொடக்க நிலையாகக்கூட இருக்கலாம். இதுப்போல எத்தனையோ இலட்சியம் இன்னும் நிறைய இருக்கின்றது.

இந்த இலட்சியங்கள் அனைத்தையும் சாஸ்திரம் முறைப்படுத்தி ஒருவன் இதில் எதைக் குறிக்கோளாகக் கொண்டு அதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாலும், அதனை

**“அறம், பொருள், இன்பம், வீடு”** என்ற நான்கு தலைப்புகளின் கீழ் கொண்டுவந்து அமைத்து விடுகின்றது.

இந்த நான்கு விஷயங்களை **“புருஷார்த்தம்”** என்று சாஸ்திரம் முறைப்படுத்தி அவைகளை, சமஸ்கிருதத்தில் தர்ம:, அர்த்த:, காம:, மோட்ச: என்று அழைக்கின்றது.

இதனை சாஸ்திரம் தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உன்னத இலட்சியங்களாக வகைப்படுத்திக் கொள்கின்றது.

இதில் மனிதன் முதலில் தன்னுடைய வாழ்வாதாரத்திற்கு தேவையான பொருள்களை அடைவதற்காக பெரும்பாடு படுகின்றான். அவைகளில் உண்ண உணவு, உடுக்க உடை மற்றும் வசிக்கும் இடம் என அத்தியாவசியத் தேவைகளை ஒவ்வொருவரும் நிச்சயம் அடைந்தாக வேண்டும் என்று ஓடுகின்றான். இவைகள் அனைத்தும் அவனுக்கு அடிப்படையான பொருள்கள் என்பதினால், இதனை சாஸ்திரம் **“அர்த்த:”** அல்லது தமிழில் **“பொருள்”** என்று அழைக்கின்றது.

பொருளை முதலில் நாடுவதற்குக் காரணம், ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் தன்னுடைய உடலைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் இருப்பதினால், அவைகள் முதலில் உணவையே நாடுகின்றன. இதில் மிகச் சிறிய எறும்பு முதற்கொண்டு, மிகப் பெரிய யானை வரை அதன்

வயிறு நிறைந்த திருப்திக்குப் பிறகுதான் மற்ற விஷயங்களில் நாட்டம் கொள்கின்றது.

இது மனிதனுக்கு மட்டும் விதி விலக்கல்ல. எனவே மனிதன் பொருள் சம்பாதித்தல் என்பது முதலில் அவன் வயிறு நிறைந்து திருப்தி அடைவதற்காகவே ஆகும்.

மனிதனது வயிறு நிறைந்து விட்டது, திருப்தி முழுமையடைந்ததா? எனில், இல்லை, அடுத்து உடுக்க உடை, இருக்க இடம் என்று, மேலும் அவன் ஆவல் அதிகமாகின்றது.

உணவு கிடைத்து விட்டது என்பதினால், அவன் முழுமையான திருப்தி அடைந்து விடுவதில்லை. அப்படி முழுமையான திருப்தியை உண்ட உணவில் அவன் அடைந்து இருந்தால், அடுத்த சில மணி நேரங்களில், அடுத்த உணவின் ருசியை நாடி, இன்னும் சில போகப் பொருட்களை விரும்ப மாட்டான்.

ஆனால், அவன் வயிறு நிறைந்தவுடன், ருசிக்காக மேலும், சில திண்பண்டங்களை சாப்பிடுகின்றான், தன் மானத்தைக் காக்கும் உடைகள் அவனுக்கு கிடைத்து விட்டாலும், பகட்டிற்காக சில பட்டாடைகளை அவன் உடுத்துகின்றான். தனக்கு வசிக்க ஒரு இடம் கிடைத்து விட்டாலும், மேலும் சில கட்டிடங்களைக் கட்டி அதிக வாடகைக்கு விட்டு, வசதியாக வாழ ஆசைப்படுகின்றான்.

இவனால், **பொன், நிலம், மாதர்** என்ற மூன்று ஆசைகளை முற்றிலுமாக விட முடிவதில்லை.

ஏன் இப்படிச் செய்கின்றான்? என்றால், மனிதனது மனம் பல்வேறு பிறவிகளாகச் சேகரித்து வைத்துக் கொண்டுள்ள வாசனைகளின் பதிவுகளே, அவனை இதுபோன்ற அளவிட முடியாத ஆசைகளில் அழுத்துகின்றது.

இதிலிருந்து அத்தியாவசியப் பொருளீட்டுவது மட்டும் அவனது நோக்கம் என்றில்லாமல், அதையும் கடந்து தன்னுடைய சந்தோஷத்திற்காகவே மேலும், மேலும் அதிக ஆசை வயப்பட்டு இன்பத்தை நாடுகின்றான். அதற்காக, அதிக முயற்சிகளை மேலும், மேலும் மேற்கொள்கின்றான். ஆகவே, மனிதனது **அர்த்த:, காம:** (பொருள், இன்பம்) என்ற இரண்டு இலட்சியங்கள் அவனது வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றது.

ஒரு மனிதன் இது போன்ற அடிப்படைத் தேவைகளில் அதிகமான நாட்டம் கொண்டு, அதனுடைய சுகத்தை நாளடைவில் பழகிவிட்ட பிறகு, அவனால் அதிலிருந்து கீழ் நிலை வாழ்க்கையை சிந்திக்கக் கூட முடிவதில்லை. சில பொருள்களும், இன்பங்களும் அவனை அடிமைப்படுத்தி வைத்துக் கொள்வதினால், அதிலிருந்து முழுமையாக அவனால் விடுபட முடியாமல் போகின்றது.

இந்த இன்பம் எங்கு நம்மிடமிருந்து விலகி விடுமோ என்ற பயத்தினால், அவன் தன்னுடைய எதிர்காலத்திற்காக திட்டமிடவும் செய்கிறான். அதனால், இப்பொழுது நிகழ் காலத்தில் வாழ்கின்ற வாழ்க்கையை இரசிக்க முடியாமல், இனி வர இருக்கின்ற எதிர்காலத்திற்கு இப்பொழுதே திட்டமிட்டு சொத்து, சுகம் சேர்க்க ஆசைப்படுகின்றான்.

மேலும், இந்த இன்பம் இவனுடன் முடிந்து விடாமல், இனி வர இருக்கின்ற தன் சந்ததியருக்கும் இன்பம் கிடைக்க வேண்டும் என்று, இன்னும் வேகமாக ஓடுகின்றான்.

இந்த ஓட்டத்தின் முடிவில், ஓடியதின் விளைவாக, ஓய்ந்து உட்கார்ந்து, தான் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கின்றான். அந்தோ பரிதாபம்! அவன் இனி தன் பயணத்தினை முடித்துக் கொண்டு, இதுவரை வந்த பாதை மட்டும் அல்ல, இனி தொடங்கப்பட வேண்டிய, அல்லது திரும்பப்பட வேண்டிய பாதையைக் கூட பயணிக்க முடியாத சூழல் இருப்பதை உணர்கின்றான். உணர்ந்தவனுக்கு இனி உடல் ஒத்துழையாமல் போனதினால், உடலை விட்டு ஓட்டத்தை நிறுத்துகின்றான்.

இன்னும் சிலரோ, இந்த வாழ்க்கையை மட்டும் தான் இன்பமாக வாழாமல், இனி மீண்டும் தான் பிறக்கப் போகின்ற பிறவிகளில் கூட, துயரத்திற்கு வந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன், தன் வாழ்க்கையை மிகவும் ஜாக்கிரதையாக வாழ வேண்டும் என ஆசைப்படுகின்றனர்.

அத்தகைய சிந்தனையாளர்கள் சிலர், தன்னுடைய தீவிர தேடுதல்களில் உண்டான அனுபவங்கள் அவர்களுக்கு கற்றுக்கொடுத்த பாடங்களினால், தன்னைச் சார்ந்த தன் உறவுகள் மட்டுமின்றி, மற்ற சில மனிதர்களின் வாழ்க்கை முறைகளில் காணப்படுகின்ற **உயர்வு – தாழ்வு** என்ற இருமைகளுக்கு காரணம் அறிய ஆவல் கொள்கின்றது.

இதனை, “அவரவர் வினை வழி அவரவர் அனுபவம்” என்ற பழமொழிக்கு ஏற்ப அவனவன் செய்த பாவ, புண்ணியத்திற்கேற்ப அவனவன் வாழ்கின்றான் என்பதை அவர்களுக்கு அறிய முடிகின்றது.

இதனை அறிந்து, பாவம் – புண்ணியம் என்ற இருமை நியதிக்குள் இவனைக் கொண்டு வந்து, இவன் செய்கின்ற நன்மையின் காரணமாக புண்ணியமும், தீமையின் காரணமாக பாவமும் உண்டாவதை அவனுக்கு புரிய வைக்கின்றது.

இந்த பாவ, புண்ணியத்தினால் பிறவி உண்டாவதை அறிந்து, இனி வாழும் வாழ்க்கையைப் பயனுடையதாக வாழ முற்படுகின்றான். பிறவாமை என்ற பெருவழிக்கு விருப்பம் கொள்கின்றான். இவனையே **‘முமுக்ஷு’** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

இன்னும் சிலருக்கு இதுபோன்ற சாஸ்திர அறிவு இல்லை என்றாலும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நடைப் பெறுகின்ற நன்மைகளுக்கு காரணம் அதிர்ஷ்டம் என்றும், தீமைகளுக்கு காரணம் துரதிர்ஷ்டம் என்றும் தங்களைத் தாங்களே சமாதானம் செய்துக் கொண்டும் வாழ்ந்து வருவதை நாம் இன்றும் கண்கூடாகக் காண முடிகின்றது.

இந்த சாஸ்திர அறிவு ஒருவனுக்கு வந்தவுடன் அவன் ஏற்கனவே பொருளையும், இன்பத்தையும் இலட்சியமாக கொண்டு, அதனை அடைய ஆவலுடன் ஓடியவனுக்கு,

சரியான முறையில் வாழும் இந்த வாழ்க்கையுடன், தனது முந்தைய இலக்கான **“அறம்”** என்ற தர்மத்தின் மீது ஆவல் அதிகமாகின்றது.

தர்மப்படி வாழ்தல் என்பது பிற உயிர்களுக்கு தீங்கிழைக்காமல், தான, தர்மங்கள் போன்ற நற்காரியங்களைச் செய்து வாழ்தல் என்பதினால், அறம் என்ற பண்பைக் கொண்டு, தன்னால் இயன்ற அளவிற்கு மற்ற உயிர்களுக்கு உதவுதல், பிற உயிர்களை கொல்லாமை, துன்புறுத்தாமை போன்ற பண்புகளும் இதில் அடங்குகின்றது என்பதை இவனால் அறிந்து கொள்ள முடிகின்றது.

இந்த முதல் தகுதியாகிய அறச்செயல்கள் செய்வதை எப்பொழுதும் நிறுத்தக் கூடாது. மேலும், பொருளாதார ரீதியாக உதவுவது மட்டும் அறம் என்று பொருள் படுத்திக் கொள்ளக் கூடாது. தன் உடலின் வாயிலாக சேவைகள் பல செய்வதும் அறச் செயல்களில் வருகின்றது. ஒருவர் மேல் நிலைக்கு உயர விரும்பும் பொழுது, முதலில் தொடங்க வேண்டியது, சேவை செய்வதில்தான் தொடங்கப்பட வேண்டும்.

அந்த சேவைகள் என்பது, சாதுக்களுக்கு சாதம் அளித்தல், தர்ம சத்திரங்கள் அமைத்தல், ஏழைகளுக்கு உண்ண உணவு, உடுக்க உடை தந்து மகிழ்தல், உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவுதல் போன்ற நற்செயல்களைச் செய்து, முதலில் அவனுடைய பாவ கர்மங்களை தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

இது அறச்செயல் செய்வதின் வாயிலாக மட்டுமே சாத்தியம் ஆகின்றது. இதையே **'அறம்'** என்று சாஸ்திரம் வலியுறுத்துகின்றது.

இதையே அருட்பிரகாச வள்ளல் பெருமானாரும் "ஜீவகாருண்யமே மோக்ஷத்தின் திறவுகோல்" என்று அனைவருக்கும் அறிவுறுத்துகின்றார்.

இதில் தர்ம வழியில் வாழும் வாழ்க்கை என்பது அவனை நல்ல செயல்களை செய்ய வைத்து, அந்த நற்செயல்களின் பலனாக அவனுக்கு உண்டான பாவ கர்மங்கள் குறைந்து, புண்ணியம் என்ற நற்பலன்கள் உண்டாகி, அவனது இயல்பு வாழ்க்கையில் அன்றாடம் தேவைப்படுகின்ற, அத்தியாவசியத் தேவைகளில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்ற பொன், பொருளையும், இன்பத்தையும் தானாகவே அள்ளிக் கொடுத்து விடுகின்றது என்பதில் எந்த வித சந்தேகங்களுக்கும் இடமில்லை.

ஏன் எனில், இந்த மனித வாழ்க்கையில் ஒருவன் அனைத்து வசதிகளுடன் ஆடம்பரமாக பொன், பொருள், பெண் என்ற மூவாசைகளின் கூடிய, இன்பத்துடனும் வாழ்வதையும், மற்றொருவன் இந்த மூன்று ஆசைகளும் இல்லாமல் வாழ்வதையும் வைத்துக் காணும் பொழுது, 'அவனவன் வினைவழி அவனவன் அனுபவம்' என்பதற்கு ஏற்ப, அவனவன் செய்த செயல் விளைவுகளின் பாவ, புண்ணியத்தின் பலன்கள் இதுபோன்ற வாழ்க்கை என்பதை, சாஸ்திரம் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றது.

இதுப்போன்ற போகமும், யோகமும் கூடிய இருவேறு மனிதர்களை நாம் நடைமுறையில் இன்றும் கண்கூடாகக் காண முடிகின்றது.

இவ்வாறு பாவ, புண்ணியங்களை அறிந்துக் கொண்டு, தான் வாழும் வாழ்க்கையை இருமைகள் இல்லாத நல்ல முறையில் ஒருவன் வாழ முறப்பட்டால், அவனது வாழ்வில் அறம், பொருள், இன்பம் மற்றும் வீடுபேறு என்ற இந்த நான்கும் அத்யாவசியமாகின்றது.

இவ்வாறு கிடைத்தவைகளில் முதல் மூன்றினாலும் உண்டான இன்பம் என்றுமே அழியாமல் நிலையாக நிலைத்து நிற்குமா? என்று, அடுத்த கட்டத்தை நோக்கி அவன் ஆழமாக அறிய முற்படும் பொழுது, அவனுக்கு இந்த உலகில் வாழும் பொழுதே, என்றும் அழியாத, நிலையான ஆனந்தத்தை தரக்கூடிய வீடு என்ற 'வீடுபேறு' அல்லது "மோட்சம்" என்ற நான்காவது நிலைக்கு அவனை அழைத்துச் செல்கின்றது.

எந்த இன்பம் குறைகள் இல்லாத, நிறைவாக என்றும் இருக்கின்றது? எந்த நிறைவான, நிலையான இன்பத்தை அடைந்தால், வேறு எந்த ஒன்றும் அடையத் தேவை இல்லையோ, அத்தகைய ஒரு இன்பம் மட்டும்தான் இந்த **"மோட்சம்"** அல்லது **"வீடுபேறு"** என்பதை அறிந்து, எவனுக்கு அதன்மீது ஆர்வம் உண்டாகின்றதோ?, அவனே **'முமுக்ஷு'** என்று அழைக்கப்படுகின்றான்.

இத்தகைய முமுக்ஷு என்ற நிலைக்கு முழு முயற்சி செய்யாதவர்கள், முற்றிலும் ஈஸ்வர அனுக்கிரஹம் இன்றி, உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கு, உதவி இன்றி போகின்றது.

பொதுவாக நம்முடைய முயற்சியும், ஈஸ்வனின் அனுக்கிரஹம் என்ற இந்த இரண்டும், ஒரு பறவை பறக்கப் பயன்படும் இரண்டு இறக்கைகள் போன்றது.

ஒரு இறக்கையை மட்டும் வைத்துக் கொண்டு, பறவை எவ்வாறு வானில் உயர பறக்க இயலாதோ, அதுப்போன்று, நம்முடைய முயற்சியை மட்டும் வைத்துக்கொண்டு நாம் உயர்ந்த நிலைக்குப் போக முடியாது. ஆகவே, முயற்சிக்கு பக்க பலமாக ஈஸ்வர அனுக்கிரஹமும் அவசியமாகின்றது.

இந்த ஈஸ்வர அனுக்கிரஹம் எப்படி உண்டாகும் எனில், பரமா(ஆ)ன்மா என்ற அந்தர்யாமியை அன்பு செய்து, அவனை அறிந்து, சரணடைவதில் மட்டுமே சாத்தியம் ஆகின்றது.

இவ்வாறு, ஈஸ்வர சரணாகதியினால் ஈடுபாடுகள் அனைத்திலும் குறைந்து, ஆசைகள் மறைந்து, 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்ற அறிவு ஒருவனுக்கு வந்து விட்டால், அதன்பிறகு அவனது உயர் வாழ்க்கைக்கு தடைகள் ஒன்றும் கிடையாது.

# 4. இலட்சியத்திற்கு தடைகள்

அதுவே, சரணடையாத சாதகனுக்கு, சாஸ்திரம் மூன்று விதமான தடைகளை, அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றது. அவைகள் முறையே,

**ஆதி தெய்வீகம் –** இயற்கையிலிருந்து வருகின்ற தடை

**ஆதி பௌதீகம் –** சூழ்நிலைகளினால் வருகின்ற தடை

**ஆத்யாத்மீகம் –** நம்மால் ஏற்படுகின்ற தடை

***<u>இயற்கையிலிருந்து வருகின்ற தடை.</u>***

இது பூகம்பம், மழை வெள்ளம், இடி, மின்னல் மற்றும் விபத்துக்கள் போன்றவைகளினால் வருகின்ற தடை.

***<u>சூழ்நிலைகளினால் வருகின்ற தடை.</u>***

இது நம்மைச் சார்ந்த உற்றார், உறவினர்கள் தன்னுடைய நண்பர்கள் அல்லது நம்முடைய குடும்பத்தினர்கள் போன்றவர்களினால், சூழ் நிலையின் காரணமாக உண்டாகின்ற தடை.

***நம்மால் ஏற்படுகின்ற தடை.***

இது நாமே நம்முடைய அறியாமையினாலும், அக்கறை இன்மையினாலும், உடல் உபாதைகளினாலும் உண்டாக்கிக் கொள்கின்ற தடை.

இது போன்ற தடைகள் நம் முயற்சிக்கு முற்றிலும் இடையூறு உண்டாக்காதவாறு தடுக்க வேண்டுமெனில், ஆத்மா என்ற அந்தர்யாமியை அறிந்து, அவனை சரணடைதல் மட்டுமே சாத்தியமாகின்றது.

பொதுவாக நாம் எந்த ஒரு காரியத்தை தொடங்கும் முன்பும் மூன்று விதமான காரணங்கள் தேவைப்படுகின்றது. அதில் முதலாவது **பிரயத்தனம்,** இரண்டாவது **காலம்,** மூன்றாவது தெய்வத்தின் அனுக்கிரஹம் என்பதாகும்.

இதில் பிரயத்தனம் என்பது முயற்சி என்பதாகும். இந்த முயற்சி சரியான முயற்சியாக இருக்க வேண்டும். பிறகு அந்த முயற்சியை கைவிடாமல் சரியான காலம் வரை தொடர வேண்டும்.

அடுத்து, தெய்வத்தின் அனுக்கிரஹம் ஒன்று இல்லை என்றால், என்ன முயற்சியை சரியாகச் செய்தாலும், அது வெற்றி பெறாமல் போகலாம் என்ற அறிவு, அவசியம் உண்டாக வேண்டும்.

நம்முடைய முயற்சிக்கு தெய்வ அனுக்கிரஹம் ஏன் தேவை என்றால், தெய்வத்தினால் மட்டுமே நம்முடைய முயற்சியில் ஏற்படுகின்ற தடைகளை நீக்க முடியும்.

***சரி! தெய்வம் என்பது எது?***

தெய்வம் என்பது ஒவ்வொருவருக்கும் ஒரு தெய்வம் என்று தவறாக நமக்கு புகட்டப்பட்டுள்ளது. ஆனால், ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற உயர் வாசகம் ஒருவருக்கும் பயன் அற்று போய்விட்டது.

இதனாலேயே, இத்தனை மதங்கள், மதத்தின் பெயரால் பல்வேறு கடவுள்கள் என, கர்வம் தலைக்கு ஏறி, கடவுளின் பெயரால், கருணையற்ற காரியங்களை கண்கூடாக இன்றும் நடைமுறையில் காணப்படுகின்றது. எங்குப் பார்த்தாலும் சண்டை, சச்சரவுகள், பிரச்சனைகள், துயரங்கள் என ஓயாமல் ஒருவருக்கு ஒருவர் அறியாமையினால் ஆர்ப்பாட்டம் செய்துக் கொண்டுள்ளனர்.

இவர்களுக்கு ஏசு, புத்தன், நபிகள், மற்றும் சங்கரர் என எத்தனை ஆச்சாரியர்கள் வந்து ஆணித்தரமாக ஆன்ம ஞானத்தை எடுத்துரைத்தாலும் இவர்கள் மனம் அதை ஏற்கப் போவதில்லை. இருப்பதெல்லாம் இறைவனே என்ற உன்னத நிலைக்கு இவர்கள் உயரப் போவதில்லை.

இதற்குக் காரணம், இவர்களது அறியாமையின் காரணமாக, அந்த ஒன்றேயான பரம்பொருளை அறிய முடியாமல் போகின்றது.

அறியாமை நீங்கி **'அறிவு'** பிரகாசிக்க வேண்டுமானால், ஒவ்வொருவரும் தன் மனதில் **"நான்யார்?"** என்று தன்னைத் தானே விசாரித்து, தேவையற்ற எண்ணங்களை தவிர்த்து, விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இதைத் தவிர வீணான கர்மங்களினால் (செயல்களினால்) விவேகம் உண்டாகாது. விவேகம் உண்டாக வேண்டுமானால், விசாரம் செய்யப்பட வேண்டும். இதைத் தவிர வேறு வழியே கிடையாது.

ஒன்றேயான பரப்பிரம்மத்தை இரண்டு விதங்களில் பிரார்த்தனை செய்து சரணடையப்படுகின்றது. அவைகள், **'சகுண பிரம்ம வழிபாடு'**, மற்றொன்று **'நிர்குண பிரம்ம வழிபாடு'** எனப்படுகின்றது.

இதில், **சகுண பிரம்ம வழிபாடு** என்பது, பிரம்மத்தை அவரவர்களுக்கு பிடித்தமான உருவத்தில் கொண்டுவந்து விநாயகர், முருகன் சிவன், விஷ்ணு, சூரியன், சக்தி, என ஆறு விதமான சமயங்களின் வாயிலாக வழிபடுகின்றனர்.

இது, சாதாரணமான பாமர மக்களுக்கு இறைவனை இவ்வாறு உருவத்தில் கொண்டு வருவதினால், அவர்களது குறைகளை கோவில்களுக்குச் சென்று கல்லிலே இறைவனைக் கண்டு, அதனிடம் கொட்டித் தீர்க்கின்றார்கள்.

இவர்கள் இதுப்போன்ற கடவுள் உருவங்களை உண்மையாகக் கருதுவதினால், இவர்களது மனக்கவலைகள் தற்காலிகமாக அந்த கல்லில் உள்ள கடவுளிடம் இறக்கி வைக்கப்படுகின்றது. ஆதலால், இவர்களின் மனக்குமுறல்கள் தீர்க்கக்கூடிய ஒரு தீர்வாக, அந்த இறைவனின் உருவ வழிபாடும், ஆலய வழிபாடும் அவசியமாகின்றது.

அதுவே, தத்துவ விசாரம் செய்து, பரப்பிரம்மத்தின் உண்மையான சொரூபத்தை அறிந்து கொண்டவர்கள் **நிர்குண பிரம்ம வழிபாடு** என்று உருவமற்ற இறைவனை தன்னுள்ளே அந்தர்யாமியாக ( ஆத்மாவாக) வழிபடுகின்றனர்.

இதுவே பக்தியில் உயர் பக்தியாகும். இதனைத்தான் "**நாரத பக்தி சூத்திரம்**" பகுதியில் மிக உயரிய நிலையான **'அனன்ய பக்தி'** என்று கூறுகின்றது. அதாவது, **அநந்யம்** என்றால், தனக்கு அந்நியமாகப் பார்க்காமல், தன்னில் **ஒன்றாகவே பார்ப்பது** எனலாம். இதில் தன் மனம், உடல், பொருள், என அனைத்தையும் பரமா(ஆ)ன்மாவிடம் அர்ப்பணித்து, இருமைகள் அற்ற அவனுடன் இரண்டறக் கலந்து விடுவதைத்தான் **"ஆன்மநிவேதனம்"** என்று இங்கு அழைக்கப்படுகின்றது.

இதுவே, இறைவனை எல்லா உயிர்களிலும் காணுகின்ற மிக **உயர்ந்த பக்தி** எனலாம். இந்த பக்தியை **'பராபக்தி'** அல்லது **'சாத்திய பக்தி'** என்றும் சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

இந்த பக்தியில் வாயிலாக அனைத்து உயிர்களிலும் இறைவனை காண்பவன், இருமைகளைக் கலைந்து, ஜாதி, மத, பேதமைகள் நீங்கி, **“இருப்பதெல்லாம் இறைவனே”** என, அருவத்திலும், உருவத்திலும், அருஉருவத்திலும் அவனை வழிபட முடியும்.

இவ்வாறு, பக்குவப்பட்டவன் இனம், மொழி, மதங்களை கடந்து, மகத்தான அந்த பரம்பொருளில் தன்னையும், தன்னைப் போன்றே அனைத்து உயிர்களையும் ஒன்றாகக் காண்கின்றான். தன் உள்ளத்தின் உள்ளேயே அந்த ஏக இறைவனை ஏகாந்தமாக அனுபவித்து ஆனந்தப்படுகின்றான். அவனே **‘ஜீவன்முக்தன்’** எனப்படுகின்றான்.

# 5. அதிகாரியின் தகுதிகள்

இந்த ஜீவன் முக்தனைப் போன்று, பிரம்மானந்தத்தை நடைமுறை அனுபவத்தில் முழுமையாக அனுபவிக்கவும், மோக்ஷம் என்ற நிலையான ஆனந்தத்தை அடையவும் விரும்பி, விசாரம் செய்வதற்கு தகுதியை உடையவர்கள் யார்? என்றால், **"சாதன சதுஷ்டய சம்பத்தி"** என்ற நான்கு பண்புகளை உடையவர்கள் மட்டுமே இந்த மோக்ஷத்திற்கு தகுதியானவர்கள் என்று சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

அதாவது, விசாரத்திற்கு தகுதி உடையவர்களால் மட்டுமே, இதுபோன்ற சாஸ்திரத்தை சிரவணம் செய்து புரிந்து கொள்ளவும் முடியும். அந்தத் தகுதியை அடையவும் முடியும்.

அந்த நான்கு பண்புகளை உடையவர்கள், மனத் தூய்மையுடன் எப்பொழுதும் இருப்பவர்கள் **'சத் புருஷர்கள்'** எனப்படுவார்கள். இவர்களே சாதன சதுஷ்டய தகுதிகளை அடைந்திருப்பவர்கள் எனலாம்.

இத்தகைய தகுதியைக் கொண்ட இவர்களைப் போன்றவர்கள், ஆத்மாவை நேரிடையாக அனுபவிக்கும் ஆனந்த வழியாக, இந்த நூலை இறுதிவரைப் படித்து நிலையான மோட்சத்தை அடைவதற்கு முழு முயற்சியுடன் ஈடுபட வேண்டும்.

முழு முயற்சி என்பது, தக்க சத்குருவின் வாயிலாக தீவிரமாக விசாரித்து அறியப்பட வேண்டும். இந்த நூலைப் படித்து சரியாகப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இந்த நூலை ஒரு முறை மட்டும் படித்தால் போதுமா? என்றால், அது முடியாது. மீண்டும், மீண்டும் இது போன்ற வேதாந்த நூல்களை அடிக்கடி படிக்க வேண்டும். படித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அவ்வாறு ஒருமுறை மட்டும் படிப்பது என்பது ஆன்ம ஞான நூல்களுக்கு பொருந்தாது என்றும், இதுப்போன்ற ஆத்மாவை அனுபவமாக அறியக்கூடிய நூலை மீண்டும், மீண்டும் இடைவிடாமல் படித்து விசாரம் செய்யபட வேண்டும்.

வேதத்தின் கர்ம காண்டமும், வேதத்தின் இறுதிப் பகுதியான உபநிஷதங்களும் கூட **“சாதன சதுஷ்டய சம்பத்தி”** என்ற தகுதியைக் கொடுப்பதற்காகவே உபதேசிக்கப் படுகின்றது.

இந்த தகுதியை அடைந்தவர்களால் மட்டுமே, மனதை விசாரித்து, **“நான் யார்?”** விசாரத்தின் வாயிலாக ஆன்ம ஞானத்தை அடைய முடியும்.

இந்த சாதனைகளை அறிந்துக் கொள்வதையே **‘யோகம்’** என்று சாஸ்திரம் அழைக்கின்றது. கீதையில் கூட பகவான் கிருஷ்ணரும் இந்த சாதனைகளை வளர்த்துக்

கொள்ளும் வழிமுறைகளை பல யோகங்களாகப் பிரித்து போதிக்கின்றார்.

***அந்த சம்பத்திகளை அடைவது எப்படி?***

இறைவனை திருப்திப்படுத்துவதின் வாயிலாக, மனிதன் ஞானயோகத் தகுதியை அடைந்து விடுகின்றான். இங்கு இறைவன் எனப்படுவது, ஏக இறைவனாக எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்துள்ள **பரமா(ஆ)ன்மா** ஆகும். அவரே அந்தர்யாமியாக நம் இருதயக் குகையில் வீற்றிருப்பதையும் அறிந்து அவரிடம் நம் மனதை இருத்தி இன்புற வேண்டும்.

***இறைவனைத் திருப்திப்படுத்துவது எவ்வாறு?***

அந்தர்யாமியான இறைவனைத் திருப்திப் படுத்துவது என்பது, ஒருவன் தர்மப்படி வாழ்வதாலும், தவத்தினாலும் மட்டுமே இறைவ(தன்)னை திருப்திப் படுத்த முடியும் என்கின்றார்.

***தவம் என்றால் என்ன?***

‘தர்மப்படி வாழ்தலும், உலகில் வரும் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம்’ என்கின்றார் திருவள்ளுவர்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. (திருக்குறள்).

தனக்கு நேரிட்ட துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுதலும், பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமையும் ஆகிய உயர்ந்த பண்பே **‘தவம்’** என்பது இந்தக் குறளின் கருத்து.

இதுப்போன்று, மனதை உள்முகமாக விசாரித்து, எண்ணங்களை இறைவன் மீது இருத்தி, ஈடுபாடுடன் தவம் செய்வதினாலேயே இறைவ(தன்)னைத் திருப்திப்படுத்த இயலும்.

இந்த அடிப்படை பண்புகள் அத்தியாவசியமாக இன்றி, அந்தர்யாமியான இறைவனின் அனுக்கிரஹம் பெற முடியாது. அவன் அருள் இன்றி, இங்கு கூறப்படுகின்ற இந்த நான்கு உயர் பண்புகள் ஒருவனுக்கு உண்டாவது மிகவும் கடினம் எனப்படுகின்றது.

பொதுவாக, உலகியல் வாழ்க்கையில் ஒருவரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்றால், அவரது சொற்களைக் கேட்டு, அவருக்கு கீழ்படிந்து நாம் நடக்க வேண்டும் என்பதை நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் அன்றாடம் காண்கின்றோம். அப்பொழுதுதான், அவர் நம்முடைய அணுகு முறையில் ஆனந்தம் கொண்டு, திருப்தியடைந்து நமக்குத் தேவையானவற்றை செய்துக் கொடுப்பார்.
உதாரணமாக,

நாம் படிக்கச் செல்லும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியரின் சொற்படி கேட்டு நடந்து, அவர் கொடுக்கும் வீட்டுப் பாடங்களை ஒழுங்காகச் செய்து, அவரைத் திருப்திப் படுத்துவதும்,

வேலைக்கு செல்லும் அலுவலகத்தில், நமக்கு மேல் உள்ள அதிகாரிகளின் சொற்படி நடந்து, அவரால் கொடுக்கப்படுகின்ற வேலைகளைச் சரியாகச் செய்து, அவரைத் திருப்தி செய்வதுமாக, பலரை நாம் அனுசரித்து வாழ்கின்றோம் அல்லவா?

அதுப்போலவே, இறைவன் கொடுத்த வேதத்தின் வாயிலாக, வாழ்வியல் தர்மத்தை அவர் ஆச்சாரியர்களின் வாயிலாக அனைவருக்கும் உபதேசிக்கின்றார். அந்த வேத வாக்கை மீறாமல், அவர் கூறும் தர்மப்படி ஒருவன் வாழ்ந்தான் என்றால், அவன் நிச்சயமாக இறைவ(தன்)னைத் திருப்திப் படுத்துகின்றான். அவ்வாறு, இறைவன் உபதேசித்த தர்மப்படி வாழ்வதே **'தவம்'** என்று இங்கு உபதேசிக்கப்படுகின்றது.

அடுத்து, ***எது தர்மம்?***

அவரவர்கள் வர்ணாசிரம வாழ்க்கை நெறிகளின் படி வாழ்வதே **"தர்மம்"** என்று சாஸ்திரம் கூறுகின்றது.

வர்ணம் என்பது அவரவர் செய்யும் வேலையிலுள்ள பொறுப்புக்களைக் குறிக்கின்றது. ஆசிரமம் என்பது வாழ்க்கை முறையைக் கூறுகின்றது.

அதாவது, பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் என்ற ஆசிரம முறைகளில், அவரவர்கள் எந்த ஆசிரம நிலையில் தற்பொழுது இருக்கின்றார்களோ, அப்படியே அந்தந்த நிலையில், அவரவர்கள் சரியாக இருந்துகொண்டு,

வாழ்க்கையை வாழ்வதை மட்டுமே **“தர்மம்”** என்று சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

அடுத்து, **வர்ணம்** என்பதை அவரவர்கள் செய்கின்ற தொழிலின் அடிப்படையில் கடமைகளை சரியாகச் செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

ஆகவே, சாஸ்திரம் கூறுகின்ற தர்மப்படி சரியாக வாழ்பவன் இறைவ(தன்)னைத் திருப்திப்படுத்தி **“சாதன சதுஷ்டய சம்பத்தி”** என்ற சாதனைகளை அடைகின்றான்.

அவைகள், **வைராக்கியம், விவேகம், சமாதி ஷட்க சம்பத்தி, முமூக்ஷூத்வம்** ஆகிய நான்கு வகையான சாதனங்கள் ஆகும்.

இதுவே, ஒருவன் அவசியம் அடைய வேண்டிய ஞான யோகத்திற்கான மிகவும் **அடிப்படைத் தகுதிகளாக** இதுவரை கூறப்பட்டது.

இங்கு சாதகனுக்கு முதல் தகுதியாக வைராக்கியத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. காரணம், வைராக்கியம் இல்லாமல் எதையும் அடைய முடியாது என்பதினால் வைராக்கியம் முதலில் கூறப்படுகின்றது.

### ***வைராக்கியம் என்றால் என்ன?***

இந்த வைராக்கியம் இரண்டு வகைப்படும். ஒன்று **‘ஜிக்ஞாஸா வைராக்கியம்’**. மற்றொன்று, **‘ஜிகாஸா வைராக்கியம்’** எனப்படும்.

ஜிக்ஞாஸா வைராக்கியம் என்பது, விசாரத்தினால் உண்டான விவேகத்தினால் வருகின்ற வைராக்கியம். இது நிலையானதாக, திடமாக இருக்கும். இந்த வைராக்கியத்தை மாற்ற முடியாது. இதையே **“ஜிக்ஞாஸா வைராக்கியம்”** எனப்படுகின்றது.

அடுத்து, **ஜிகாஸா வைராக்கியம்** என்றால் வெறுப்பு, அல்லது விரக்தி மூலமாக வருவது என்று கூறப்படுகின்றது.

அதாவது, ஒருவர் தன்னைத் தரக்குறைவாகத் திட்டி விட்டால், அவரிடம் இனி பேசக்கூடாது என்ற எண்ணம் வைராக்கியமாக மாறி, சில காலங்கள் பேசாமலேயே இருந்துவிட்டு, பிறகு மீண்டும் அவரிடம் இயல்பாக பேசுவது.

அடுத்து, தன்னிடம் மிகுந்த பாசமாக இருந்தவர்களின் மரணம், இந்த உலகையே வெறுக்கச் செய்து, விரக்தியடையச் செய்யும். இது கொஞ்ச காலம் இருந்து விட்டு, பிறகு அவரை மறந்து, எப்பொழுதும் போல இந்த உலகத்தை மீண்டும் அனுபவிப்பது. இது போன்ற நிலையற்ற வைராக்கியத்தை **“ஜிகாஸா வைராக்கியம்”** எனப்படுகின்றது.

அதாவது, வைராக்கியம் என்பதை இங்கு “**பற்றின்மை**” எனப் புரிந்துக் கொள்ள வேண்டும். ஆனால், சிலர் வைராக்கியம் என்பதை **குறிக்கோள்** என்று தவறாகக் கருதிக் கொள்கின்றனர்.

ஒருவன் மிகுந்த களைப்பினால், சோர்ந்து ஒரு மரத்தின் அடியில் அமரும் போது, மரத்தின் மீது தங்கி இருந்த காகம் ஒன்று அவன் மீது, எச்சம் போட்டு விடுகின்றது எனில், அந்த எச்சத்தை வெறுப்பின் மிகுதியால், உடனடியாக நீர் விட்டுக் கழுவியோ, அல்லது ஒரு துணியினால் துடைத்துக் கொள்ளவோ அவன் முயற்சிக்கின்றான் அல்லவா?

அதுப்போன்று, இந்த உலகப் பொருட்களின் மீது உடனடியாக வெறுப்பு உண்டாகிவிட வேண்டும் என்கின்றது சாஸ்திரம்.

அதுவும் அந்த வெறுப்பு அரைகுறையாக இல்லாமல், முழுமையாக உண்டாவதையே “**வைராக்கியம்**” என்று இங்கு குறிப்பிடப்படுகின்றது.

ஒருவனுக்கு வந்து, போகின்ற, அழியக்கூடிய இந்த உலகப் பொருட்களின் மீது பற்று இருக்கின்றவரை, என்றும் அழியாத, சாஸ்வதமான இறைவனைப் பற்றிய புரிதல் இருக்காது. அவைகளின் மீதுள்ள ஆசையினால், அவன் மனம் புறப் பொருட்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு இருக்கும் என்றும், அதற்காக முதலில் அவன் ஆசைப்படும் உலகப் பொருட்களின் மீது பற்றற்ற தன்மை வந்து, அதுவே, அவனுக்கு

வைராக்கியமாக மாற வேண்டும், எனக் கருதியே குருமார்கள் அல்லது ஆச்சாரியர்கள் வைராக்கியத்தை அதிக வலியுறுத்த வேண்டி உள்ளதால், இந்த புத்தகத்தில் **'வைராக்கியம்'** என்பதை முதன் முதலில் கூறப்படுகின்றது.

அதாவது, நாம் பார்க்கும் விஷயங்களிலும், கேட்கும் விஷயங்களிலும் வைராக்கியம் முதலில் உண்டாக வேண்டும்.

வைராக்கியம் என்பது மனதில் இருக்க வேண்டிய விழிப்புற்ற புத்தியினால் உண்டான, புரிதலுடன் கூடிய **பற்றற்ற பக்குவ நிலையாகும்.**

இவ்வாறு பற்றற்ற வைராக்கியம் மட்டும்தான் முழுமையானது ஆகும்.

பொதுவாக, விவேகத்தின் மூலமாக அல்லவா வைராக்கியம் வரும்? பெரும்பாலான வேதாந்த புத்தகங்களில் விவேகம் அல்லவா முதலில் கூறப்பட்டிருக்கின்றது என சிலருக்கு சந்தேகம் உண்டாகலாம்.

ஆனால், பெரும்பாலானவர்களுக்கு விவேகம் இருந்தும் வைராக்கியம் வருவதில்லை என்பதையும் அறிய வேண்டும்.

உதாரணமாக, **"அநித்யம் அசுகம் லோகம்"** (நிலையற்ற, சுகமற்ற உலகம்) என்று சாஸ்திரம் கூறும் இந்த வார்த்தையை நன்றாகப்படித்து அறிந்துக் கொண்ட வேத விற்பன்னர்களும்,

பண்டிதர்களும், அவைகளைப் படித்து புரிந்துக்கொண்ட விவேகத்தினால் (அறிவு), இந்த உலகத்தை **'மித்யா'** என்று ஏற்றுக் கொண்டனரா எனில், இல்லவே இல்லை.

இவர்கள் வைராக்கியத்தை அடையாமல், மேலும், மேலும் இந்த உலகத்தை நிலையானது என்று கருதி, அதில் சுகம் உண்டு என்று விரும்பி, அந்த சுகமும் பணத்தினால் உண்டாகின்றது என்றவாறு, பணத்திற்கும், புகழுக்கும் பின்னால் ஓடிக் கொண்டு, பல கர்மங்களைச் செய்துக் கொண்டு, அதன் பலனை எதிர்ப்பார்த்து பலவாறாக இவர்கள் அலைந்துக் கொண்டுள்ளதை இன்று வரை நடைமுறையில் நம்மால் பார்க்க முடிகின்றது.

இவர்களுக்கு விவேகம் இல்லாமல் இல்லை, ஆனால், **'வைராக்கியம்'** மட்டும் வரவில்லை என்பதே உண்மை.

அதுப்போலவே, **'கற்க கசடற'** என்ற குறளின் மூலமாக அடைந்த விவேகத்தைக் கொண்டு **'நிற்க அதற்குத் தக'.** என்று எத்தனைப் பேர் கற்றதன் படி நிற்கின்றார்கள் என்றால், அதுவும் ஒரு சிலரே எனலாம்.

இவர்களுக்கு கற்றதினால் அடைந்த **விவேகம்** எங்கு போனது? ஆகவேதான், இந்த புத்தகத்தில் முதலாவதாக வைராக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வைராக்கியம் என்பது இன்பத்தைக் கொடுக்கும் எந்த விதமான விசய, சுகங்களின் மீதும்,

புரிதலுடன் கூடிய விருப்பமில்லாத தன்மை (பற்றின்மை) எனப்படுகின்றது.

அதாவது, அதீத இன்பத்தைக் கொடுக்கின்ற பிரம்மலோகம், சொர்க்க லோகம் போன்றவற்றிலிருந்தும், தற்பொழுது, உண்மை என்று கருதிக்கொண்டு, நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த உலகத்தில் இருந்தும், இன்பத்தை கொடுக்கின்ற போகப் பொருள்கள் மீதும், அவைகள் உண்மையற்றவை, நிலையற்றவை என்பதை அறிந்து, அவைகளின் மீது, ஆசை உண்டாகாமல் இருக்கும் நிலை **“வைராக்கியம்”** என்று இங்கு கூறப்படுகின்றது.

அடுத்து, **விவேகம்** பற்றி கூறப்படுகின்றது. விவேகம் என்றால், **புத்தி** அல்லது **அறிவு** என்று பொருள்.

***அறிவு என்றால், எதைப்பற்றிய அறிவு?***

சாஸ்திரம் இந்த இடத்தில் **‘அறிவு’** என்று எதைக் கூறுகின்றது என்றால், எது நிலையானது? எது நிலையற்றது? என்பதைப் பற்றிய புரிதலையே இங்கு **“விவேகம்”** அல்லது **“அறிவு”** என்கின்றது.

அதாவது, **“நித்ய அநித்ய வஸ்து விவேகம்”** என்கின்றது.

அதாவது, எது நிலையானது?, எது நிலையற்றது? என்பதில் அறிவு உண்டாக வேண்டும். இதனைப் பிரித்து அறிவதே **“விவேகம்”** எனப்படும்.

இங்கு, நிலையானது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்ற இந்த உலகமும், உலகப் பொருள்களும், நம்முடைய பரு உடலும் உண்மையில் அப்படியே மாறாமல், நிலையாக இருக்கின்றதா? என்பதை கவனிக்கச் சொல்கின்றது.

அடுத்து, மாறுகின்ற இந்த உலகத்தையும், உலகப் பொருள்களையும், இந்த பரு உடலையும் அறிகின்ற ஒன்று, இதே உடலுக்குள்ளே கண்ணிற்குத் தெரியாத சைதன்யமாக, அறிவாக ( ஆத்மா) இருப்பதையும் கவனிக்கச் சொல்கின்றது.

அதாவது, எது நித்தியம்?, எது அநித்தியம்? என்று, ஒரு தெளிவான முடிவை அடைவதே **"விவேகம்"** என்று சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

ஆனால், நம்மிடம் நடைமுறை எப்படி இருக்கின்றது? என்றால், ஒருவன் அழியக்கூடிய இந்த உடலை **"நான்"**, **"நான்"** என்று எப்பொழுதும் அபிமானித்துக்கொண்டு, இந்த பரு உடலையே உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கின்றான். அவன் தன்னுள்ளே அந்தர்யாமியாக இருக்கின்ற அழியாத ஆத்மாவை அறிந்துக் கொள்ளாமல் இருக்கின்றான்.

அதைத்தான், **"அறியாமை"** என்றும் சாஸ்திரம் சுட்டிக் காட்டுகின்றது.

எவன் ஒருவன் இந்த உலகமும், உடலும் அழிவிற்கு உட்பட்டது என்றும், அழியாத வஸ்து ஒன்று எப்பொழுதும்

இருப்பு கொண்டுள்ளது என்ற உண்மையை உறுதியாக உணர்கின்றானோ?, அவனே **‘விவேகி’** என்று அறியப்பட வேண்டும்.

இதில் அனுபவத்திற்கு உடல் மட்டுமே நம் கண் முன்னே நேரடி அனுபவமாக இருக்கின்றது. ஆனால், கண்ணிற்குப் புலனாகாத, அனுபவிக்க முடியாத ஆத்மாவை எப்படி நித்யம் என்று நாம் நம்புவது?

***இந்த சந்தேகத்தை எப்படித் தீர்ப்பது?***

உதாரணமாக, நாம் உணவை வாய் வழியாக உட்கொள்கின்றோம். அந்த உணவானது உடலின் உள்ளே சென்றதும், அதில் இருந்து கிடைக்க வேண்டிய சத்துக்கள் உடலில் இரத்தமாகவும், மஜ்ஜையாகவும், சதையாகவும், எலும்பாகவும் மாறி, எஞ்சிய கழிவுகள் மலமாகவும், சிறுநீராகவும் மாறி, உடலில் இருந்து வெளித்தள்ளும் செயல்களை இந்த உடலின் உள்ளே இருந்துக் கொண்டு யார் செய்கின்றார்கள் என்று தீர விசாரித்துப் பார்த்தோமானால், உண்மை விளங்கும்.

அதுவே, சடமான சடலத்தில் ஐந்து புலன்களான கண் இருந்தும் காணாமல் இருப்பதும், காது இருந்தும் கேட்காது இருப்பதும், மூக்கு இருந்தும் முகராமல் இருப்பதும், தோல் இருந்தும் உணராமல் இருப்பதும், வாய் இருந்தும் வாதாடாமல் இருப்பதும் ஏன்?

இதிலிருந்து, சடமான இந்த உடலை இயக்கும் இயக்குனராக ஏதோ ஒன்று உள்ளே இருக்கின்றவரை இந்த உடல் செயல்படுகின்றது. அது வெளியேறி விட்டால் இந்த உடல் சடலம் ஆகின்றது என்ற உண்மை புரியும்.

இதிலிருந்து அறிய வேண்டிய உண்மை என்னவெனில், நித்யமான வஸ்து ஒன்று உள்ளே உள்ளது. அதுவே, அனைத்திற்கும் ஆதாரமாகவும் உள்ளது என்பதாகும்.

இதையே சாஸ்திரம் **ஆத்மா, உயிர், அந்தர்யாமி, சித் (அறிவு)** என்று பல பெயர்களில் அழைக்கின்றது.

இதுவே **'நான்'** என்று கூறத் தகுதியுடையது. இது இல்லாத உயிரற்ற சடம் **'நான்'** என்று கூற முடியாது.

ஆகவே, **"நான்"** என்ற சொல்லின் உண்மையான பொருளாக, ஸ்வரூபமாக **" ஆத்மா"** மட்டும்தான் இருக்கின்றது.

அதுவே, நித்யமானது, நிலையானது. அதைவிடுத்து, நிலையற்ற உடலைப் பார்த்துக்கொண்டு, அதை நிலையானது என்ற தவறான புரிதலில் **"நான்"** என்று, அதை அழைத்துக் கொண்டு, அன்றாடம் மாற்றத்திற்கு உட்படுகின்ற இந்த உலகத்தையும், உண்மை என்று நம்பிக்கொண்டு இருக்கின்ற வரை **'விவேகம்'** உண்டாகாது. இது ஆத்மாவுக்கு எதிரானது ஆகும்.

இவ்விதமாக ஆத்மா, உலகம், நான் ஆகிய இந்த அறியாமைகள் என்ற இருமைகளில், எந்த '**ஒன்று**' நிலையானது? எது சரியானது? என்று உறுதி செய்யப் படுகின்றதோ?, அதுதான் **"விவேகம்"** என்றும், அந்த அறிவை அறிவதுதான் **"ஞானம்"** என்றும் இங்கு போதிக்கப்படுகிறது.

இந்த விவேகத்தை சாத்வீகமான மனதால் மட்டுமே எளிதில் அடைய முடியும்.

***சாத்வீகமான மனதை எப்படி அடைவது?***

இதற்கு முதலில் உணவுப் பழக்கங்கள் மாற்றப்பட வேண்டும். உணவுப்பழக்கம் என்றவுடன் சைவம், அசைவம் என்ற இருமைகளை கற்பித்துக் கொள்ளக்கூடாது.

ஏனெனில், தாவரங்களுக்கும் உயிர் இருக்கின்றது. மிருகங்களுக்கும் உயிர் இருக்கின்றது. அனைத்து ஜீவர்களுக்கும் **ஜீவிதம்** என்பது இருக்கின்றது. இவைகள் அனைத்தும் உயிர்களே. அப்படி இருக்க சைவம், அசைவம் இதில் எங்கு வந்தது?

இதில், பழங்கள், கீரைகள், காய்கறிகள், தானியங்கள் போன்ற ஒரே இடத்தில் வளர்கின்ற, தாவர உயிர்களை உணவாக உட்கொள்வதினால், அந்த உணவினாலேயே உண்டாகின்ற உடலும், மனமும் அங்கும், இங்கும் ஓடாமல், ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து தவம் செய்கின்ற **"சத்துவ குணம்"** என்ற பண்பை அடைகின்றது.

இந்த சத்துவ குணத்தை அடைந்தவனே விவேகத்தை அடைய தகுதியுடையவன் ஆகின்றான்.

அதுவே, ஆடு, மாடு, கோழி போன்ற இங்கும், அங்கும் எப்பொழுதும் அலைந்து திரிந்துக் கொண்டுள்ள உயிர்களை உணவாக உட்கொள்ளும் போது, உடலும், மனமும் ஒரே இடத்தில் அமைதியாக இருக்காமல், அவைகளைப் போன்றே அடங்காமல், அங்கும், இங்கும் அலைப்பாய்ந்து, அவனை எதையாவது செய்யத் தூண்டி, இங்கும், அங்கும் உடலால் ஓட வைத்து, எப்பொழுதும் செயல் செய்துக் கொண்டே இருக்கக் கூடிய **"ரஜோ குணம்"** என்ற பண்பை அடைகின்றது.

அடுத்து, மந்தமாக காணப்படும் மிருகங்களை உண்பவர்களுக்கும், எருமையின் பாலை விரும்பி அருந்து பவர்களுக்கும், மனமும், உடலும் அவைகளைப் போன்றே மந்தத் தன்மைக்கு மாறி, சோம்பேறித் தனத்துடன் எதிலும் அக்கரையும், ஆர்வமும் இன்றி உறங்கிக் கொண்டும், பொறாமை, கோபம், சந்தேகம் போன்ற துர் குணங்களுடன் அடிக்கடி மற்றவர்களுடன் சண்டையிடுவதும், சச்சரவு செய்வதுமாக, மந்த மதி படைத்த **"தமோ குணம்"** என்ற பண்பை அடைகின்றது.

இவ்வாறு, இந்த மூன்று குணபேதங்களும் உணவின் மூலமாகவே மனதிற்கு உண்டாகின்றது. ஆகவே, உணவை தேர்ந்தெடுத்து நல்லதாகவும், சுத்தமானதாகவும் உண்ண வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

மேலும், உண்ணும் உணவை, ஏற்கனவே உண்ட உணவு செரித்தபின்பு, பசி எடுத்தவுடன் மட்டும்தான் உண்ண வேண்டும். அதாவது, குறைந்தது பதினைந்து மணி நேரம் தினமும் உண்ணா நோன்பை கடைப்பிடிப்பதினால், உடல் நோய்கள் ஏதுமற்று, ஆரோக்கியமாக இருக்கும். இதன் காரணமாக, உடல் ஆரோக்கியமே, மன ஆரோக்கியத்திற்கும் துணை நிற்கும்..

அதாவது, பதினைந்து மணி நேரம் உண்ணா விரதம் என்பது, தினந்தோறும் மாலை 6 மணிக்கு இரவு உணவு எடுத்து முடித்தவுடன், மறுநாள் காலை 9 மணி வரை எதையும் உண்ணக்கூடாது.

இந்த இடைப்பட்ட நேரங்களில் அவசியமெனில் வெறும் நீர் மட்டும் அருந்துவதை பழக்கமாக வைத்துக் கொண்டு, டீ, காபி, பழரசம் போன்றவைகளைக்கூட காலை 9 மணிவரை குடிக்காமல் தவிர்க்க வேண்டும். அதன்பிறகு, அவைகளை உண்ணலாம். பிறகு, மதியம் 12 மணியிலிருந்து, 1 மணிக்குள் எப்பொழுதும் போல, மதிய உணவு உண்ண வேண்டும்.

அதன்பிறகு, மதிய உணவு உண்ட பின்பும், தேவையெனில், மாலை 6 மணி வரை இடையில் பழரசம், பசும்பால், காய்கறி, கீரை சூப் போன்றவைகளை அருந்திக் கொள்ளலாம். பிறகு, மாலை 6 மணியோடு, திட உணவு உண்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அனுதினமும் செய்வதினால், இந்த உடலும், மனமும் உற்சாகமுடன் கூடிய முழுமையான ஆரோக்கியம் அடையும்.

இது ஆத்ம ஞானத்தை அறிய விரும்பும் ஆரம்ப சாதகர்களுக்கு மிக, மிக அவசியம் ஆகும்.

இவர்களாலேயே ஆன்மிக சிந்தனை, சத்சங்கம், ஆன்ம விசாரம், அன்பு, கருணை என சாந்தமாகவும், பிரியமாகவும் இருந்துக் கொண்டு, நற்சிந்தனா சக்தியுடனும், கிரியா சக்தியுடனும், எப்பொழுதும் **சத்வ குணத்தில்** இருக்க முடியும்.

**"குண த்ரய விபாக யோகம்"** என்றே கீதையில் ஒரு அத்தியாயம் உள்ளது. அதிலே **சத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம்** ஒவ்வொன்றின் இயல்பும் எப்படிப்பட்டது? என்று கூறுப்பட்டுள்ளது.

இதில் **சத்வகுணம்** அதிகம் கொண்டவர்களே இந்த மூன்று குணபேதங்களைக் கடந்து **"குணாதீதன்"** என்ற உயர் நிலைக்குப் போகவும் முடியும்.

தமது பகவத்கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் மூன்று குணங்களைப்பற்றி விரிவாகக்கூறி, அர்ஜுனனிடம் **"நிஸ்த்ரைகுண்யோ பவ" –** என்று, "மூன்று குணங்களும் இல்லாதவனாக, அவற்றுக்கும் மேலே போ" என்கின்றார்.

எனவே, உணவுதானே! எதையாவது உண்ணலாம், எப்படி வேண்டுமானாலும் உண்ணலாம் என்று சர்வ சாதாரணமாக எண்ணாமல், உணவில் எப்பொழுதும் கவனத்துடன் உண்ண வேண்டும். தவறான உணவு பழக்கங்களினால் உண்டாகும் குண பேதங்களினால் மனிதன் மகத்தானவனாக மாற முடியாமல், மிருகம் போன்ற கீழான நிலைக்கு தள்ளப்படுவதை மனதின் துணைக் கொண்டு, அந்த மனதை விசாரித்து அறிவதே, இங்கு அறியாமைகள் நீங்கிய **"விவேகம்"** எனப்படுகின்றது.

இதுவரை, **"சாதன சதுஷ்டய சம்பத்தி"** என்ற நான்கு சாதனங்களில் முதலில் வைராக்கியத்தையும், இரண்டாவதாக விவேகத்தையும் பற்றி கூறப்பட்டது.

இனி, மூன்றாவதாக உள்ள **"சமாதி சட்க சம்பத்தி"** என்ற சாதனத்திலுள்ள, அதன் உட்பிரிவுகளாக வருகின்ற ஆறு விதமான நற்பண்புகளைப் பற்றியும் விரிவாகக் காணலாம்.

சமஸ்கிருத மொழியில் **'சதுஷ்டயம்'** என்றால், **"நான்கு"** என்றும், **'சட்க'** என்றால் **"ஆறு"** என்றும் பொருள்.

அதிலே, **'சம்பத்தி'** என்றால் **"செல்வம்"** என்று பொருள். இந்த செல்வத்தைத்தான் நாம் ஒவ்வொருவரும் அடைய வேண்டும். இதுவே, அழியாத செல்வம். அதாவது, நாம் அடைய வேண்டிய உண்மையான செல்வங்கள் இந்த நற்பண்புகள் என்பதை அறிய வேண்டும்.

## 6. சமாதி சட்க சம்பத்தி

அவைகள், சமஹ, தமஹ, உபரதி, திதிக்ஷா, சிரத்தை, சமாதானம் என்கின்ற ஆறு பண்புகளும் சேர்ந்து **"சமாதி சட்க சம்பத்தி"** எனப்படும். இதை தமிழில் கூறுவதாக இருந்தால்,

**சமஹ** என்றால் மன அடக்கம்.
**தமஹ** என்றால் புலன் அடக்கம்.
**உபரதி** என்றால் விடல் அல்லது தியாகம்.
**திதிக்ஷா** என்றால் சகித்தல் அல்லது பொறுத்துக் கொள்ளுதல்.
**சிரத்தை** என்றால் நம்பிக்கை.
**சமாதானம்** என்றால் ஒருமுகப்படுதல்.

இந்த ஆறும் சேர்ந்து, ''சமாதி சட்க சம்பத்தி'' என்று அழைக்கப்படுகின்றது.

நான்காவதாக, முக்தியை விரும்பும் சாதகனுக்கு பந்தத் திலிருந்து விடுபட்டு, மோக்ஷத்தை அடைய வேண்டும் என்கின்ற ஆசையே, **"முமுக்ஷுத்துவம்"** எனப்படும்.

அதாவது, வைராக்கியம், விவேகம், சமாதி சட்க சம்பத்தி மற்றும் முமுக்ஷுத்வம் என்ற இந்த நான்கும் சேர்ந்து, ''சாதன சதுஷ்டய சம்பத்தி'' என்று அழைக்கப்படுகிற சாதனங்களாகும்.

இந்த ஸ்லோகத்தில் '**சமஹ**' என்ற மனவடக்கம் மற்றும் '**தமஹ**' என்ற புலனடக்கம் என்ற இரண்டு பண்புகளைப் பற்றிக் காணலாம்.

மனவடக்கம் என்பது சாஸ்திரம் விதித்த, விலக்கப்பட வேண்டிய விசயங்களை மனதால் நினைக்காமல் இருத்தல் என்பதாகும்.

ஒரு செயலைச் செய்யும் முன்னரே, அதன் அவசியம் கருதி, அவைகளை மனதிலிருந்து நீக்கி விடுதல் வேண்டும். பயனற்ற விஷயங்களை சிந்திக்காமல் இருக்க மனதைப் பழக்கப்படுத்தி வைத்திருக்கவேண்டும். எல்லா காலங்களிலும் மனதில் உதிக்கும் எண்ணப் பதிவுகளை விசாரித்துத் துறக்க வேண்டும்.

ஏற்கனவே அனுபவித்த விசயங்கள், கேட்டவைகள் நம்முடைய மனதில் எந்த முயற்சியும் இன்றி எண்ணங்களாக பதிந்திருக்கும். அத்தகைய எண்ணங்களே எந்த நேரத்திலும் மனதில் எழுந்து, ஆசையைத்தூண்டி நம்மை செயலில் ஈடுபடுத்தும்.

அடுத்து, **தமஹ** என்பது **புலனடக்கம்**. சாஸ்திரம் உபதேசித்த செய்யக்கூடாதவைகளை நம்மிடம் உள்ள ஐம்புலன்களினால் செய்யாதிருக்க வேண்டும். அதாவது தீய, பயனற்ற விசயங்களில், நம்மிடம் உள்ள இந்த புலன்களை பயன் படுத்தக்கூடாது.

அதாவது, நம்மிடமுள்ள ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள் என்ற பத்து புலன்களையும் நெறிப்படுத்துதல் **தமஹ** அல்லது **மனவடக்கம்** என்று கூறப்படுகிறது.

அடுத்து, **உபரதி** என்பது **'கர்ம தியாகம்'** எனக்கூறலாம்.

அதாவது, என்னால் மட்டுமே அனைத்தையும் சிறப்பாகச் செய்ய முடியும், என்னைப் போன்று மற்றவர்களால் சரியாகச் செய்ய முடியாது என்ற எண்ணத்தை விட்டு, நம்முடைய பொறுப்புக்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து விடுதல் **'உபரதி'** எனப்படுகின்றது.

இதனால், வாழ்நாளில் கூடுதலான காலத்தை நாம் எடுத்துக் கொண்டு, காலன் வரும் முன்பு, நமக்கு மிகவும் பயனுள்ளதான சாஸ்திரத்தை கேட்பது, கேட்டவற்றை சிந்திப்பது, சிந்தித்தவற்றை நடைமுறையில் கொண்டு வருவது போன்ற நற் காரியங்களில் ஈடுபட்டு, அதன் மூலமாக ஞானயோகத்திற்கு வர முடியும்.

அதாவது, மனவடக்கம், மற்றும் புலனடக்கம் என்ற பண்புகளால் மன அமைதியும், இந்திரியக் கட்டுப்பாடும் உண்டாவது போன்று, இந்த உபரதி என்ற நற்பண்பின் மூலம் தேவையற்ற பொறுப்புக்களை நம்முடைய தலையில் சுமப்பதை மற்றவர்களிடம் இறக்கிக் வைத்துவிட்டு, அதை தியாகம் செய்வதின் வாயிலாக, கிடைத்த கூடுதலான நேரத்தில் சாஸ்திரங்களை கேட்பதையும், படிப்பதையும்

தினசரி பழக்க வழக்கமாக மாற்றிக் கொண்டு விட்டால், அதில் கூறப்பட்ட நற்பண்புகள் நம் நடைமுறை சுபாவமாகவே மாறி விடும். இதுவே **"உபரதி"** எனப்படுகின்றது.

அடுத்து, **திதிக்ஷா** என்ற சகிப்புத்தன்மை.

***எதை சகித்துக்கொள்ள வேண்டும்?***

அனைத்து வகையான துன்பங்களையும், நமக்கு வருகின்ற கஷ்டங்களையும் மனம் கோணாமல் சகித்துக் கொள்ளுதல் அல்லது பொறுத்துக் கொள்ளுதல். இதுவே நன்மையை தரக்கூடிய **"திதிக்ஷா"** என்று கூறப்படுகிறது.

இது மங்கலத்தை தரக்கூடியது. இதையே பெரியவர்கள் **"பொறுமை கடலிலும் பெரிது"** என்று கூறுவார்கள்.

அதாவது, நாம் விரும்பாமல், நமக்கு வருகின்ற துன்பங்களை பதட்டமின்றி, வெறுப்பின்றி, அமைதியாக ஏற்று, சகித்துக் கொள்வதையே **"திதிக்ஷா"** என்று அறிய வேண்டும்.

அதேசமயம் வருகின்ற துன்பங்களை நீக்கக் கூடிய முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து, எனக்கு வருகின்ற துன்பத்தை சாஸ்திரம் பொறுத்துக் கொள்ளச் சொல்கின்றது. ஆதலால், நான் துன்பத்தை தாங்கிக் கொள்கின்றேன் என்று சும்மா இருப்பது விவேகம் ஆகாது.

துன்பங்களை நீக்கிக் கொள்ள, மேற்கொண்ட முயற்சி வெற்றி பெற்றால், அதனால் சந்தோசம் அடையலாம். அதுவே

செய்த முயற்சி தோல்வி அடைந்தால், அதை பொருட் படுத்தாது, சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வேதாந்த சாஸ்திரத்தின் மீதும், அதை உபதேசிக்கின்ற குருவின் வார்த்தைகளின் மீதும், முழுமையான நம்பிக்கை வைப்பதையே **"சிரத்தை"** அல்லது **"சிரத்தா"** என்று அழைக்கப்படுகிறது.

சாஸ்திர பிரமாணத்தின் மீது நம்பிக்கை வருவதை சிரத்தா என்று கூறப்படுகின்றது. இதில் வேதாந்த சாஸ்திரம் முமுக்ஷுக்களுக்கு பிரமாணம் என்பதினால், வேதாந்த உபதேசங்களின் மீதும், அதை உபதேசிக்கின்ற குருவின் மீதும் நம்பிக்கை வருவதையே இங்கு **"சிரத்தா"** என்று அழைக்கப் படுகின்றது.

***நம்பிக்கை ஏன் தேவை?***

ஒருவனுக்கு தெரிந்த விசயத்தில் நம்பிக்கை இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. காரணம், அதைப்பற்றி அவன் ஏற்கனவே நன்கு அறிவான்.

அதுவே, அவனுக்கு தெரியாத ஒரு விசயத்தைப்பற்றி, தெரிந்துக் கொண்ட ஒருவர் மூலமாக கூறக் கேட்டான் என்றால், அவர் உண்மையைத்தான் கூறுவார் என்பதிலும், அவ்வாறு அவர் கூறும் விசயத்தின் மீதும் நம்பிக்கை வர வேண்டும். அப்பொழுதுதான் அதை அவனால் ஏற்க முடியும்.

அதுப்போலவே, ஒருவன் தன்னை மிகவும் அல்பமாக நினைத்துக் கொண்டிருக்கையில், அவனிடம் சென்று, **‘நீ பிரம்மாகவே இருக்கின்றாய்’** என்று கூறும்போது, அந்த வார்த்தை அவனுடைய நேரடி அனுபவத்திற்கு முற்றிலும் விரோதமாகக் கூறப்படுவதால், அவனுக்கு அதன்மீது நம்பிக்கை உண்டாகாமல் போய்விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

அதுவே, அவன் சாஸ்திர விசாரணை செய்துப்பார்த்து, இந்த உயரிய வேதாந்த சாஸ்திரம் உண்மையில் எதை உபதேசிக்கின்றது? என்பதை, கற்றலின் முதற்படியான **‘சிரவணம்’** என்ற கேட்டல் சக்தி மூலம், காதுகள் கொடுத்து அவைகள் உபதேசிக்கும் உட்கருத்துக்களை தன்னுடைய மனதில் ஆழமாக உள் வாங்கிக் கொண்டால் மட்டுமே, அவனுக்கு **சாஸ்திரத்தின்மீதும்,** அந்த சாஸ்திரத்தை உபதேசிக்க வந்த **குருவின்மீதும்,** நம்பிக்கை வரும். அதன்பிறகுதான், அவைகள் கூற வருகின்ற உண்மையும் அவனுக்கு புரிய ஆரம்பிக்கும்.

சாஸ்திரம் கூறும் மிக உயர்ந்த உண்மை என்னவெனில், பரப்பிரம்மத்தின் பிரதிபிம்பம், **சத்வகுண** மாயையில் பிரதிபிம்பித்து தோன்றுவதால் **“ஈஸ்வரன்”** உண்டாகியும், **ரஜோகுண** மாயையில் பிரதிபிம்பித்து தோன்றுவதால் **“ஜீவர்கள்”** என்றும் உண்டாகிறது என்கின்றது

அதாவது, **ஒரே பிரம்மம்** இந்த இரண்டு வேறுபட்ட குணங்களில் பிரதி பிம்பிக்கின்ற பொழுது, வேறு, வேறாகத் தோன்றி, அதில் பேதமைகள் காணப்படுகின்றதே தவிர, உண்மையில், ஒன்றேயான அந்த பரப்பிரம்ம சொரூபத்தில் எந்தவித பேதமுமில்லை.

இந்த உயர்வு, தாழ்வு என்ற **இருமைகள்** எல்லாம் பரப்பிரம்மம் பிரதிபிம்பிக்கின்ற உபாதியைப் பொருத்து, அந்த பிம்பங்கள் **அது ஈஸ்வரன், இது ஜீவர்கள்** என்று மாறு படுகின்றதே தவிர, பரப்பிரம்மத்தின் ஆன்ம **(சித்)** சொரூபத்தில் எந்த மாறுபாடுகளும் உண்மையில் கிடையாது.

எனவே, ஈஸ்வரனுக்கும், ஜீவனுக்கும் ஆன்ம சொரூபம் (அறிவு) ஒன்றாக இருந்தாலும், அது வெளிப்படுவதில் உள்ள வித்தியாசம், உபாதியான **உடல்களைப் பொருத்தே** மாறுபட்டு இருக்கின்றது.

ஈஸ்வரனின் உடல் மிகப்பெரிய இந்த முழு பிரபஞ்சம் ஆகும். அதுவே, ஜீவர்களில் மனித உடல் மிகச் சிறிய 6 அடி அளவில் உள்ளது. மேலும், மற்ற ஜீவர்களுக்கு பலவகையாகக் காணப்படுகின்றது.

அதுப்போன்றே, ஜீவர்களின் அறிவும் ( ஆத்மாவும்) உடல்களின் உபாதியைப் பொருத்தே, ஓர் அறிவு ஜீவர்கள் முதற்கொண்டு, ஆறு அறிவு ஜீவர்களான மனிதன் வரை மாறுபடுவது போன்று காணப்படுகின்றது.

இதுப்போன்ற **ஜீவ – ஈஸ்வர** வேறுபாடுகள் எல்லாம் இந்த உடல்கள் என்ற உபாதியினால் மட்டுமே மாறு படுகின்றதே தவிர, உடலுக்குள்ளே உள்ள சேதனத்தில் ( ஆத்மாவில்) எந்த மாற்றமும் இல்லை என்பதை எடுத்துக் கூறும் பொழுது, அவனுக்கு வேதாந்த சாஸ்திரத்தின் மீதும், அதை உபதேசிக்கும் ஆச்சாரியரிடத்திலும் ஆழமான நம்பிக்கை உண்டாகி விடுகின்றது.

அப்பொழுது மட்டுமே இந்த உபநிஷதங்கள் கூறும் உண்மையையும், அதற்குக் காரணமான சாஸ்திரத்தையும், குருவையும் அவனால் நம்பிக்கையுடன் ஏற்க முடிகின்றது. இதனையே **“சிரத்தா”** என்று கூறப்படுகின்றது.

சிரத்தை உண்டாவது என்பது புண்ணியத்தின் பலன் என்று சாஸ்திரம் கூறுகின்றது. எனவே, சிரத்தையை வளர்த்துக் கொள்ள வேண்டுமானால், சாஸ்திரம் அறிவுறுத்துகின்ற தர்மப்படி வாழ வேண்டும். அப்படி தர்மப்படி வாழும் பொழுது, அந்த தர்மத்தின் பலனாக அது நமக்கு சரியான இடத்தில் நம்பிக்கையைக் கொடுக்கும்.

இந்த நம்பிக்கை அனைவருக்கும் உடனடியாக வந்து விடாது. ஏன் எனில், அவரவர்களின் பல கோடி சென்மங்களின் வாயிலாக உண்டான சம்ஸ்காரங்களுக்கு ஏற்ப, அவர்களின் வாசனைகள் இதுப் போன்ற கருத்துக்களை அவ்வளவு எளிதில் ஏற்க விடாது.

அதிக பாவம் செய்தவர்கள் தங்களது ஊழ்வினைகளின் காரணமாக, யார் தன்னை முழுவதுமாக ஏமாற்று கின்றார்களோ அவர்களையே முழுமையாக நம்பி, அவர்களிடம் மோசம் போவதைக் கண்கூடாகக் காணலாம். நல்லவர்கள் அவனை நம்பாதே என்று எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும், இவனது மனமும், புத்தியும் அதை ஏற்கவே ஏற்காது. காரணம், இவனது பாவ சம்ஸ்காரங்கள் அதை ஏற்க விடாது.

**'சிரத்தாவான் லபதே ஞானம்'** என்பது கீதையில் உள்ளது. சிரத்தை உள்ளவருக்குத் தான் ஞானம் சித்திக்கும் என்பது இதன் பொருள்.

குருவின் மீதும், சாஸ்திர உண்மைகளின் மீதும், ஒருவன் முழு நம்பிக்கை வைத்து, முழு அக்கரையும், கவனமும் கொண்டு, சிரத்தை உடையவனாகித் திரும்பத் திரும்பச் சிந்திப்பதன் மூலம் தான் ஞானம் அவனுக்கு நிலைப்பெறும்..

### *சிரத்தையை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?*

இதற்கு முதலில், சந்தேக புத்தி நீக்கப்பட வேண்டும். எதற்கெடுத்தாலும் சந்தேகம் வருவதை ஒரு நோய் என்றே சாஸ்திரம் கூறுகின்றது.

ஒருவரது தவறான நட்பில் கிடைத்த அனுபவத்தை வைத்து, அனைவருமே அவரைப் போன்று இருப்பார் என்று

சந்தேகம் வருவது, அவனுக்கு முழுமையான விவேகம் இல்லாத காரணத்தினால் உண்டாகின்றது.

எதையும் தீர விசாரித்து அறியாமல் எடுக்கின்ற தவறான முடிவுகள், துயரமான அனுபவத்தைக் கொடுத்து விடும்.

எனவே, எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து, நேர்மறை எண்ணங்களினால், நம்மை நாமே சுய விசாரணை செய்துக் கொண்டு, தவறு எங்கே? என்பதைக் கண்டு பிடித்து, நாம் ஒருவரை நம்புவது போன்று, ஒருவர் நம் மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்றுவதும் மிகவும் முக்கியம் ஆகும்.

அழியாத பரப்பிரம்மத்தை அறிதல், உணர்தல் போன்ற இந்த முயற்சியிலேயே மனதை எப்பொழுதும் ஒருமுகப்படுத்தி வைத்திருத்தலே **“சமாதானம்”** என்று அழைக்கப்படுகின்றது.

அதாவது, **சமாதானம்** என்றால், எடுத்துக் கொண்ட இலட்சியத்தில் மனதை **ஒரு நிலைப்படுத்தி இருத்தல்** என்று பொருள்.

வேதாந்த சாஸ்திரங்களை காதுகளால் கேட்டு, அதன் உட்பொருளை உள்ளம் சிந்திக்குமாறு, அதில் கூறப்பட்ட சத்தியத்தை உணர்ந்துக் கொண்டு, அதில் ஒருமுகப்பட்டு இருப்பதையே **‘சமாதானம்’** என்கின்றனர் மேலோர்.

அதாவது, பரப்பிரம்மத்தை அறிகின்ற முயற்சியில் மனதை எப்பொழுதும் ஒருமுகப்படுத்தி வைத்துக்கொண்டு, அதிலேயே மனம் எப்பொழுதும் ஈடுபட்டு இருப்பதையே **சமாதானம்** என்கின்றனர்.

இத்துடன் நான்கு சாதனைகளில் மூன்றாவது சாதனையான **"சமாதி சட்க சம்பத்தி"** என்பதில் உள்ள ஆறு பண்புகளை இதுவரை அறிந்துக் கொண்டோம்.

மேலும், **"சாதன சதுஷ்டய சம்பத்தி"** என்ற நான்கு சாதனைகளில் விவேகம், வைராக்கியம், சமாதி சட்க சம்பத்தி என்ற மூன்று சாதனைகளை பார்த்து முடித்துள்ளோம்.

அடுத்து, நான்காவது சாதனையான **"முமுக்ஷுத்வம்"** என்பதைப் பற்றி விரிவாகக் காணலாம்.

அனைத்து சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு, என்றும் நிலையான ஆனந்தத்தை தரக்கூடிய மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற ஆசையே **"முமுக்ஷுத்வம்"** எனலாம்.

எந்த ஒரு ஆசை முதலிடத்தில் இருக்கின்றதோ, அந்த ஒரு ஆசையை அடைய வேண்டிய ஒரே இலட்சியத்திற்காக மட்டுமே, மனமும், அதன் செயல்களும், அந்த ஒரு ஆசையை மையமாக வைத்தே நடைமுறையில் இருக்கும்.

இதுப்போன்றே, மோக்ஷத்தை மையமாக வைத்து, அதை அடைய வேண்டும் என்ற இலட்சியத்தினால், மனமும்,

உடலும் ஒருங்கிணைந்து உண்டாகின்ற ஓர் ஆசையையே இங்கு '**முமுக்ஷுத்வம்**' எனப்படுகின்றது.

அதாவது, ஒருவனுடைய தலையில் நெருப்பு பிடித்துக் கொண்டவுடன், அவன் அதை அணைக்க, எப்படி அருகே இருக்கும் நீர் நிலையை நோக்கி வேகமாக ஓடுவானோ, அதுப்போல, பிறப்பு, இறப்பு என்ற சம்ஸார நெருப்பினால் கொதிப்படைந்தவன், அந்த நெருப்பை அணைக்க பிரம்ம நிஷ்டனாக விளங்கும் குருவை நோக்கி மிகவும் வேகமாக ஓடுகின்றான். அவரை அடைந்து அவரிடம் பூரணமாகச் சரணடைகின்றான்.

அந்த குருவிற்கு கொடுப்பதற்கு தன்னிடம் ஒன்றுமே இல்லாவிட்டாலும், காணிக்கையாக அவருக்கு ஏதாவது ஒன்றை நிச்சயம் கொடுக்க வேண்டும் என்ற சாஸ்திர நியதி இருப்பதினால், அன்றைய உபநிஷத்து காலத்தில் வாழ்ந்த ரிஷிகள் அனைவருமே குடும்பத்துடன் வாழ்ந்து வந்ததினால், அக்னி காரியங்களில் அன்றாடம் ஈடுபட்டு வந்தனர்.

அதனால், சீடர்கள் அவர்களது கர்ம காரியங்களான யாகத்திற்குத் தேவையான '**சமித்து**' என்ற சுள்ளிக் குச்சிகளை பொருக்கி எடுத்துக் கொண்டு சென்று, அவைகளைக் காணிக்கையாகக் கொடுத்து, இந்த வேதாந்த சாஸ்திரத்தை அன்று ஆர்வமுடன் அறிந்துக் கொண்டனர்.

இப்படி குருவைத்தேடி சாஸ்திரத்தை அறிந்து, அதன் வாயிலாக மோக்ஷத்தை விரும்புகின்றவனே "**முமுக்ஷு**"

அல்லது **“ஜிக்ஞாஸு”** என்று அழைக்கப்படுகின்ற **‘அதிகாரி’** ஆவான்.

இவ்விதம், **“சாதன சதுஷ்டய சம்பத்தி”** என்ற **வைராக்கியம், விவேகம், சமாதி சட்க சம்பத்தி,** மற்றும் **முமுக்ஷுத்வம்** என்ற நான்கு தகுதிகளை அடைந்தவர்கள் இந்த நூலைக் கற்பதற்கு தகுதியான அதிகாரிகள் ஆகின்றார்கள்.

இனி, இந்த நூலில் கூற இருக்கின்ற சாதனங்களுக்கு, சாத்தியமான செயல்களை ஒருவன் செய்வதினால், அவனுக்கு உண்டாகின்ற பலன்களையும் காணலாம்.

# 7. கர்ம பலன்கள்

ஒருவன் செய்கின்ற செயல்களினால், அவனுக்கு உண்டாகின்ற கர்ம பலன்கள் பலவாறாக பலன் கொடுக்க உள்ளன. இதில், மனத் தூய்மைக்காக (சித்த சுத்திக்காக) செய்யப்படுகின்ற கர்மங்களையும், அதன் பலன்களையும் பலவாறாக சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

அவைகள்,

1. காம்ய கர்மம்
2. நிஷித்த கர்மம்
3. நித்ய கர்மம்
4. நைமித்திக கர்மம்
5. பிராயசித்த கர்மம் என்பனவாகும்.

## *1. காம்ய கர்மம்*

இது ஆசையினால் உண்டாகின்ற கர்மங்கள் எனலாம். அவைகள், செல்வம், குழந்தைகள், பதவி, பட்டம், புகழ், இன்பம், மழை, சொர்க்கம், மற்றும் விரும்பிய சில வேண்டுதல்கள் நிறைவேறுவதற்கு என செய்யும் வேள்விகள், யக்ஞங்கள், பூசைகள், மற்றும் விரதங்களை **'காம்ய கர்மம்'** என்று அழைக்கப்படுகிறது.

இது கர்ம யோகத்தின் ஆரம்பக் கால கட்டத்தில் இருப்பதினால் தவறில்லை, ஆனால், இவைகளை ஈஸ்வர பிரசாத புத்தியுடன் ஏற்றுக் கொண்டு செய்யப்பட வேண்டும்.

## *2. நிஷித்த கர்மம்*

இவைகளை செய்யக்கூடாத கர்மங்களாக சாஸ்திரம் கூறுகின்றது. அவைகள், குடித்தல், விபச்சாரம் செய்தல், பொய் கூறுதல், திருடுதல் போன்ற செயல்களை தவிற்க வேண்டும் என்று கூறுகின்றது. இதனையே **‘நிஷித்த கர்மம்’** எனப்படுகின்றது.

## *3. நித்ய கர்மம்*

இவைகளை நாள்தோறும் செய்ய வேண்டிய செயல்களாக சாஸ்திரம் வலியுறுத்துகின்றது. அவைகள், சந்தியா வந்தனம், அக்னி ஹோத்திரம், பஞ்சமஹாயக்யம் போன்றவைகளை **'நித்ய கர்மம்’** எனப்படுகின்றது.

இவைகளை ஆன்ம ஞானம் அடைவதற்கு முன்பாக அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இதனால், சித்த சுத்தி உண்டாகும் என்றும், மனம் சத்வ குணத்திற்கு திரும்பும் என்றும் கூறப்படுகின்றது.

### *4. நைமித்திக கர்மம்*

ஏதாவது ஒரு தனிப்பட்ட நோக்கம் காரணமாக செய்யத்தக்க கர்மம் நைமித்திக கர்மம் எனப்படுகின்றது. அதாவது, குழந்தை பிறந்தவுடன் செய்வது, திருமணத்தின் போது செய்வது போன்ற கர்ம காரியங்களை **'நைமித்திக கர்மம்'** என்று அழைக்கப்படுகின்றது.

### *5. பிராயசித்த கர்மம்*

முற்பிறவியில் செய்த தீய செயல்களின் பலனாக உண்டான பாவங்களினால், துர்மரணம், துயரம், வறுமை, நோய் போன்றவைகளை தவிற்பதற்கு அகமர்ஷணம், பர்ண கூர்ச, சாந்த்ராயணம் போன்ற கர்மங்களை செய்வதினால் அவனது இந்தப் பிறவியில் உண்டாகின்ற துன்பம் குறையும். இதில் **'பிராய'** என்றால் தவம் என்றும், **'சித்த'** என்றால் நிச்சயம் என்றும் பொருள் கொண்டு, தவத்தின் நிச்சயத்தால் பாவங்கள் விலகுவதை **'பிராயசித்த கர்மம்'** என்று சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

# 8. செயல் இரகசியம்

சனாதன தர்மத்தின் அடிப்படை போதனைகளுள் ஒன்று கர்ம நியதி. கர்மா என்றால் வினை என பொருள்படும். வினை என்றால் செயலாகும். ஆகவே, கர்மா என்றால் செயல். கர்ம நியதி என்பது ஒரு பிரபஞ்ச நியதி (universal law).

இதுதான் நல்ல கர்மா, இதுதான் தீய கர்மா என்று நிலையாக கூறிவிட இயலாது. செயல் என்பது இடம், சூழ்நிலை ஆகியவற்றை பொறுத்து வேறுபடும். ஒருவன் தன்னுடைய செயலின் காரணம் நன்மையானதா, தீமையானதா என்று ஆராய்ந்து அறியும் பக்குவத்தை சனாதன தர்மம் புகட்டுகின்றது.

அதற்காகத் தான் பல புராணங்களும் இதிகாசங்களும் இந்து தர்மத்தில் உள்ளன. மற்றவர்களின் செயல்களால் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் அளப்பரியது. கர்ணனை பலர் மத்தியில் கேலி செய்து அவமானப்படுத்தினாள் திரௌபதி, அந்த கர்மவினையின் விளைவால் அவள் பலர் மத்தியில் அவமானப்பட நேரிட்டது.

ஒரு தீங்கும் இளைக்காதவனை சுட்டுக் கொல்வது தீய கர்மா, ஆனால் நாட்டையே அழிக்கும் நோக்கத்தில் செயல்படும் தீவிரவாதியை ஒரு ராணுவவீரன் கொல்வது தீயகர்மா ஆகாது.

ஏனென்றால், ஒரு ராணுவவீரனின் கடமை என்ன? நாட்டுமக்களைத் தீவிரவாதிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதே. அவனின் கடமையிலிருந்து அவன் பின்வாங்கினால், அதுதான் அவனுக்கு தீயகர்மா.

இதனால் தான் திருவள்ளுவர், கொல்லாமை எனும் அதிகாரத்தில் ஒரு உயிரையும் கொல்லக் கூடாது என்றும், செங்கோன்மை எனும் அதிகாரத்தில் “கொடியவர்களைக் கொலை செய்ய கடுமையான தண்டனை அழிப்பது என்பது, பயிர்களைக் காக்க களைகளைப் பிடுங்குவது போல” எனக் கூறுகின்றார்.

அதாவது, கொல்லாமை எனும் அதிகாரத்தை சன்னியாசிகளுக்கும், செங்கோன்மை எனும் அதிகாரத்தை அரசர்களுக்கும் இயற்றியுள்ளார்.

எந்த ஒரு உயிரையும் கொல்லக் கூடாது என்பது சன்னியாசிகளின் தர்மம். நல்லவர்களைக் காப்பதற்காக தீயவர்களை அழிக்கவேண்டும் என்பது அரசனின் தர்மம். ஆகவே, ஒரு செயலை விட அந்த செயலின் பின்னால் இருக்கும் காரணம்தான் மிக முக்கியமாகும்.

ஒரு செயலை எந்த காரணத்திற்காக செய்கிறோம் என்பதை ஆராயவேண்டும். அந்த செயல் சுயநலமற்றதாக இருக்கவேண்டும்.

எந்த உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்காததாக செயல்கள் இருக்க வேண்டும். தர்ம நியதிகளையும், இயற்கை நியதிகளையும் மீறாதபடி செயல்கள் இருக்க வேண்டும் என்று சாஸ்திரம் வலியுறுத்துகின்றது.

அவரவர் வினைவழி, அவரவர் அனுபவம் என்பது முன்னோர்களின் கருத்து. இதில், இதுவரை நாம்பெற்ற அனுபவங்கள் நம்மை இன்றைய சூழ்நிலையில் எப்படி வைத்திருக்கின்றது என்பதிலிருந்தே, நாம் இப்பொழுது வாழும் வாழ்க்கை முறை தெரியும்.

வினை என்பது செய்யும் செயல் ஆகும். நாம் செய்யும் செயலை வைத்தே நம்மை மதிப்பீடு செய்வார்கள். இன்று செய்கின்ற செயலை வைத்தே நாளைய பலனை எதிர்ப்பார்க்க முடியும்.

> "தினை விதைத்தவன் தினை அறுப்பான்
> வினை விதைத்தவன் வினை அறுப்பான்,"

என்பது முதுமொழி.

அதாவது, 'நாம்' எதை விதைக்கின்றோமோ? அதையே அறுவடை செய்யப்போகின்றோம்.

மேலும், இந்த இயற்கையின் நியதிப்படி, நாம் எதை விதைத்தாலும், அதனைப் பலமடங்கு பலனாக இயற்கை (இறைவன்) நமக்கு திருப்பிக் கொடுக்கும்.

உதாரணமாக, ஒரே ஒரு மாங்காய் அல்லது தேங்காய் விதையை மண்ணில் விதைத்து, சில காலங்கள் கழித்துப் பார்த்தால், அது பெரிய மரமாகி, அதில் பலநூற்றுக்கணக்கான மாங்காய்களும், தேங்காய்களும் காய்த்திருப்பதைப் பலனாகக் காண்கின்றோம்.

ஒன்றுக்கு பலமடங்கு பலன்கள் கிடைக்கின்றது. இதுதான் இயற்கை நமக்கு கொடுக்கும் கொடை.

அதுப்போல, நாம் செய்கின்ற ஒரே ஒரு செயல் நல்லதாக இருப்பின் சிலகாலங்களிலேயே நமக்கு அதன் பலனாக பலநல்ல செயல்கள் நம் வாழ்க்கையில் நடைபெறுவதையும், ஒரே ஒரு செயல் தீயதாக இருப்பின் அதன் பலனாக பல தீயசெயல்கள் நம் வாழ்க்கையில் நடைபெறுவதையும் நாம் கண் கூடாகக் காணலாம்.

இதில் ஒரே ஒரு செயலுக்கே இப்படி என்றால், பல நல்ல செயல்களை அல்லது பல தீய செயல்களை செய்யும் பொழுது அதன் பலன்களாக நல்லதும், கெட்டதும் பலமடங்கு நமக்குத் திரும்பக் கிடைக்கும்.

இதுவே இயற்கையின் நியதி ஆகும். இதில், செய்கின்ற செயல் நல்லதா, அல்லது கெட்டதா என்பதை, அந்த செயலினால் கிடைத்த பலன்களை வைத்தே முடிவு செய்யப்படுகின்றது.

ஆக, ஒருவன் ஒரு செயலை ச்செய்வதற்கு முன்பு அதன் பின் விளைவுகளையும், பலன்களையும் கருத்தில் கொண்டு

செயல்பட்டால், அந்த செயல் நல்ல வகையில் பயன் கிடைத்து அவன் பெருமிதம் கொள்ளமுடியும்.

அதுவே, அவன் செயல்படும் பொழுது, எதைப் பற்றியும் கவலைப்படாமல் அந்தச் செயலைச் செய்தான் என்றால், அதன் விளைவாக கிடைக்கின்ற துயரங்களையும் அவன் அனுபவிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

இதையே, நம் முன்னோர்கள், "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்று கூறியுள்ளனர்.

மனிதனைத்தவிர மற்ற உயிரினங்களின் செயல்களில் அதன் நன்மை, தீமைகளை தீர்மானிக்கும் உரிமை அவைகளுக்கு கிடையாது. அது ஈஸ்வரனுக்கே உரித்தானது என்பதினால், அவனை "கர்மபல தாதா" என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

மேலும், மிருகம், பறவை, புழு, பூச்சிகள் போன்ற ஜீவராசிகளினால் செய்யப்படும் செயல்களினால் ஏற்படும் செயல் விளைவுகளாகக் கிடைக்கும் நன்மை, தீமைக்கு உண்டான பலன்களை இந்தப் பிறவியில் அவைகள் அடைவது கிடையாது.

காரணம், ஏற்கனவே செய்த பாவ, புண்ணியங்களை அனுபவித்து தீர்க்க மட்டுமே இந்த உடலில் அவைகள் இங்கு வந்து பிறந்துள்ளன.

ஏனெனில், மனிதனைப் போன்று நல்லது, கெட்டதை பிரித்து அறியும் பிரத்யேக மனமாகிய ஆறாம் அறிவு என்கின்ற ''பகுத்தறிவு'' அவைகளுக்கு கிடையாது.

ஆனால், மனிதன் மட்டுமே, தான் செய்கின்ற செயல்களினால் விளையும், செயல் விளவுகளின் நன்மை, தீமைகளுக்கு அவனே முழு பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம், நல்லது, கெட்டதை பகுத்தறியும் பகுத்தறிவை மனிதன் கொண்டதினால், அவனது ஒவ்வொரு செயல்களின் பலன்களை அவனே அனுபவிக்க வேண்டும் என்பதுதான் இயற்கையின் நியதி.

ஆக, இதிலிருந்து மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும், கிடைக்கின்ற செயல் விளைவுகளின் பலன்களை அவனே அனுபவிக்க உரிமை உள்ளதால், அவன் செய்கின்ற செயல்கள் நல்லதாக இருந்தால், அதன் பலனாக அவன் நன்மைகளையும், கெட்டதாக இருந்தால், அதன் பலனாக அவன் தீமைகளையும் அனுபவிக்க வேண்டும்.

மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலும், இயற்கை வகுத்துள்ள ஒழுங்கு நியதிக்குள் வருகின்ற செயல்களை **“புண்ணியச்செயல்”** என்றும், ஒழுங்கற்ற செயல்களை **“பாவச்செயல்”** என்றும் இரண்டாகப் பிரித்துக் கொண்டு, அதற்கேற்றபடி பலன்களை மூன்று நிலைகளில் சாஸ்திரம் பிரித்துக் கொடுக்கின்றது.

ஜீவர்களின் ஒவ்வொரு செயலுக்கும் உண்டான பலன்களை அது நல்லதா, கெட்டதா என்பதற்கு ஏற்ப அதை அனுபவித்து தீர்க்கத் தேவையான உடல் கொடுக்கப் படுகின்றது.

அது, அந்தந்த ஜீவர்களின் பாவ, புண்ணியத்திற்கு ஏற்ப பல்வேறு உடல்களை இந்த புவியினில் காண முடிகின்றது.

இயற்கையின் படைப்பில் இந்த ஏற்றத் தாழ்வுகளை காணும் பொழுது, ஓரறிவு படைத்த உயிரினம் முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை, அவைகள் அனுபவிக்கும் பலன்களும் மாறுபடுகின்றது.

அனைத்து வகைகளிலும் சிறப்பாகச் செயல்படும் மனிதனை படைத்த அதே இயற்கை, அவனை விட கீழான மற்ற உயிரினங்களைப் படைக்கவேண்டிய அவசியமும் உண்டாகின்றது.

மேலும், மனிதனிலேயே மிகவும் சந்தோசமான சூழலில், எப்பொழுதும் வாழுகின்ற ஒருவனையும், மிகுந்த துயரத்துடன் வாழுகின்ற மற்றொருவனையும், இத்துடன், மற்ற கீழான மிருகங்கள், பறவைகள் போன்ற உடல்களிலும், உடல் ஊனமுற்ற உயிரினங்களையும் படைக்க வேண்டிய அவசியமும், இந்த பாவ, புண்ணியத்தின் அடிப்படையில் உண்டாவதை அறிய முடிகின்றது.

# 9. மூன்று செயல் பிரிவுகள்

ஆசைகளின் உந்துதலினால், மனம் போன படி செயல் படுகின்ற மனிதன், அந்த செயலின் நன்மை, தீமைகளை ஆராயாமல் செய்யும், ஒவ்வொரு செயலுக்கும், பலன் அளிப்பதற்காக, இந்த இயற்கை நியதி அந்த செயல்களை மூன்று பிரிவுகளாகக் கொண்டுள்ளது.

அத்தகைய செயல்களை (1) **சஞ்சித கர்மா** என்ற சேமித்த செயல்பலன்கள், (2) **பிராரப்த கர்மா** என்ற செயல்படுகின்ற செயல்பலன்கள், மற்றும் (3) **ஆகாமிய கர்மா** என்ற இனிவர இருக்கின்ற செயல்பலன்கள் என மூன்று வகைகளில் பலன்களை பிரித்துக் கொடுக்கின்றது.

அவனவன் செய்த செயல்களின் பலன்களை காலம் வரும் பொழுது, பலன்களுக்குத் தக்கபடி, அவனுக்குத் தேவையான உடலைத் தேர்ந் தெடுத்துக் கொடுத்து, அந்த பலன்களை அதை (அல்லது) அவனை அனுபவிக்க வைக்கின்றது.

இதில் இந்த மூன்று செயல் பிரிவுகளும் மனிதர்களுக்கு எப்படி பலன் அளிக்கின்றது என்பதை இனிக்காணலாம்.

## *(1) <u>சஞ்சித கர்மா</u>*

### (சேமித்த செயல் பலன்கள்)

ஒருவன் தன்னுடைய பல்வேறு முற்பிறவிகளில் பல உடல்களை எடுத்து, அந்த உடல் என்ற உபாதியைக் கொண்டு, மனம், வாக்கு, சரீரம் என இவைகளைக் கொண்டு செய்த பல கர்மங்களின் (செயல்களின்) அடிப்படையில், உண்டான பாவ, புண்ணியங்களின் ஒட்டுமொத்த பலன்களை ஒன்றாக சேகரித்து வைத்துக் கொண்டுள்ள காரண சரீரத்தின் மொத்த பாவ, புண்ணிய பலன்கள் அடங்கிய மிகப் பெரிய மூட்டையை **"சஞ்சித கர்மா" (சேமித்த செயல் பலன்கள்**) என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

## *(2) <u>பிராரப்த கர்மா</u>*

### (செயல்படுகின்ற செயல் பலன்கள்)

ஒருவன் தன்னுடைய பல்வேறு முற்பிறவிகளில் சேகரித்த பாவ, புன்ணிய பலன்களிலிருந்து, அவைகளை முழுவதுமாக எடுத்து அனுபவித்து தீர்க்க முடியாத காரணத்தினால், இந்தப் பிறவியில் எத்தகைய பாவ, புண்ணியங்களை எடுத்துக் கொண்டு வருகின்றானோ, அதற்கேற்ற மனித உடலோ, அல்லது மிருகம், பறவை, புழு, பூச்சிகள், மரம், செடி, கொடிகள் என்று பிறக்கின்றான்.

அவ்வாறு, இப்பொழுது பிறந்துள்ள இந்தப் பிறவியில் அவைகளில் சிலவற்றை அனுபவித்து தீர்ப்பதற்காக, கொண்டு வருகின்ற அந்த செயல்பலன்களை **“பிராரப்த கர்மா" (செயல்படுகின்ற செயல் பலன்கள்)** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

இந்த செயல்படுகின்ற செயல்பலனை அனுபவிக்க எத்தகைய பாவ, புண்ணிய பலன்களை அனைத்து உயிரினங்களும், மனிதனும் இந்தப் பிறவியில் அனுபவித்து தீர்க்க கொண்டு வருகின்றதோ, அதற்கேற்பவே அவைகளின் வாழ்க்கை முறை இருக்கும்.

உதாரணமாக, அதிகமான பாவப் பலன்களையும், குறைவான புண்ணியப் பலன்களையும், பலன்களாக இந்தப் பிறவியில் கொண்டு வந்தால், அவனது வாழ்க்கை, மிகுந்த துயரத்துடனும், அதிகமான போராட்டத்துடனும் காணப்படும்.

அவன் இந்தப் பிறவியில் என்ன நல்லது செய்தாலும், அவைகள், இனிவர இருக்கின்ற செயல்பலன்களில் சேர்ந்துக்கொண்டு, அவன் கொண்டுவந்த **செயல்படுகின்ற செயல் பலன்கள்** படியே நடை முறைப்படுத்தும். அதனால்தான் அவன் இந்தப்பிறவியில் நல்லவனாக இருந்தும் துயரப் படுகின்றான்.

இதுப்போன்று, அதிகப் புண்ணியப் பலன்களையும், குறைவான பாவப் பலன்களையும், பலன்களாக ஒருவன் இந்தப் பிறவியில் கொண்டுவந்தால், அவனது வாழ்க்கை,

மிகுந்த சந்தோஷத்துடனும், அதிகமான உற்சாகத்துடனும் காணப்படும்.

அவன் இந்தப் பிறவியில் என்ன கெட்டது செய்தாலும், அவைகள், இனிவர இருக்கின்ற செயல் பலன்களில் சேர்ந்துக் கொண்டு, அவன் கொண்டு வந்த **செயல்படுகின்ற செயல் பலன்கள்** படியே நடை முறைபடுத்தும். அதனால்தான் அவன் இந்தப் பிறவியில் கெட்டவனாக இருந்தும் சந்தோஷமாக இருக்கிறான்.

இதில், மனிதனைத் தவிர மற்ற உடல்களில் வந்த புழு, பூச்சிகள், மிருகங்கள், பறவைகள் போன்ற மற்ற ஜீவர்களுக்கு தாங்கள் கொண்டு வந்த இந்த செயல்படுகின்ற செயல்பலன்களான **‘பிராரப்த கர்மா’** அனுபவித்து மட்டும் தீர்க்க வேண்டியது இருக்கும். புதிய பாவ, புண்ணியங்கள் இவைகளுக்கு உண்டாகாது.

## *(3) ஆகாமிய கர்மா*

### (வரஇருக்கின்ற செயல்பலன்கள்)

இவ்வாறு, இந்தப்பிறவியில், ஒருவன் இந்த பூமிக்கு செயல்படுகின்ற செயல்பலன்களான (பிராரப்த கர்மா) கொண்டு வந்து, அதில் உள்ள பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப சுக, துக்கங்களை அனுபவித்துக் கழித்துக் கொண்டிருக்கும் போதே, இனியும், இந்தப் பிறவியில் புதியதாக அவன் செய்யும்

செயல்களுக்கு உண்டான பாவ, புண்ணியங்கள் உண்டாவதை **“ஆகாமியகர்மா” (வர இருக்கின்ற செயல் பலன்கள்)** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

இந்த ஆகாமிய கர்மா பகுத்தறிவு அற்ற உயிரினங்களுக்கு கிடையாது. அவைகள், பூமிக்கு வருவதே தன்வசம் மீதம் உள்ள பாவ, புண்ணியப் பலன்களை கழிப்பதற்காக மட்டுமே. மீண்டும் அவைகள் சேமித்த செயல்பலன்களிலிருந்து மீதியையும் கழிக்க இன்னொரு உடல் எடுக்க வேண்டியது வரும்.

இவ்வாறு, ஏற்கனவே எடுத்த மனித உடல்களின் வாயிலாக, சேகரிக்கப்பட்ட அனேக பாவ, புண்ணியங்களைக் கொண்ட மூட்டையான சஞ்சித கர்மாவுடன், புதியதாக இந்தப் பிறவியில் சேகரித்த பாவ, புண்ணியங்களான ஆகாமிய கர்மாவையும் சேர்த்துக் கொண்டு, இனி வரஇருக்கின்ற பிறவியில் கொண்டு வர இருக்கின்ற பிராரப்த கர்மாவையும் சேர்த்து, மொத்த பாவ, புண்ணிய சஞ்சித கர்மா மூட்டையின் அளவு கூடிக்கொண்டே போகும்.

## 10. செயல் பலன்களும், ஈஸ்வரனும்

ஆக, எப்படித்தான் இந்த செயல் பலன்களை கழிப்பது, எத்தனைப் பிறவி, எத்தனை வகையான உடல் எடுத்தாலும் தீராது போல உள்ளதே என்றால், ஆம், நிச்சயமாக இந்தப் பிறவிப் பெருங்கடலைக் கடப்பது என்பது அவ்வளவு எளிதல்ல.

சரி! இதற்கு என்னதான் வழி என்று கேட்டால், இந்தப் பிறவியை கடக்க விரும்புபவன், மற்ற உயிரினங்களுக்கு கொடுக்கப்படாத, மனிதனாகப் பிறப்பெடுத்த தனக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட பகுத்தறிவின் வாயிலாக தன்னைப் பற்றி விசாரித்து அறிய முற்படவேண்டும்.

அவ்வாறு, மனிதனுக்கு கொடுக்கப்பட்ட பகுத்தறிவின் முக்கியப் பலனே எது நன்மை?, எது தீமை? என்று பிரித்து அறிவதும், எது நித்தியம்? எது அநித்யம்? என்று பகுத்து அறிவதும் ஆகும்.

இந்த நிலையானது, நிலையற்றது பற்றிய புரிதல் ஒருவனுக்கு வந்து விட்டால், அவன் இந்தப் பிறவியிலேயே பிறவாப் பெருநிலையை அடைய முடியும். இதுவே, மனிதனாகப் பிறந்ததின் மகத்தான பயன் ஆகும்.

சடமாகிய இந்த உடலுடன் ஆத்மாவின் பிரகாசம் வெளிப்படுகின்ற பொழுது, **நான், எனது** என்ற எண்ணங்கள் உண்டாகின்றது.

இந்த எண்ணங்களை நினைப்பதை **‘மனம்’** என்றும், நினைப்பதைச் சேமிப்பதற்கு **‘சித்தம்’** என்றும், சேமித்த விசயங்களை செயல்படுத்துவது **‘புத்தி’** என்றும், அந்த செயல்களைச் செய்பவன் **“நான்”** என்று அபிமானிப்பதை **‘அஹங்காரம்’** என்றும் நான்கு விதமாகக் கொள்ளலாம்.

இந்த **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்** என்ற நான்கும் இணைந்ததை **“அந்தக்கரணம்”** என்று அழைக்கப்படுகின்றது.

மனம் தான் உண்டாக்குகின்ற கற்பனா சக்தியினால், அவைகளை அனுபவிக்க ஏதுவாக மெய், வாய், கண், காது, மூக்கு என்ற ஞானேந்திரியங்களை கொண்டே விசயங்களை தொடர்பு கொள்கின்றது.

அதன்பிறகு, **உணர்ச்சி, சுவை, ஒளி, ஓசை, நாற்றம்** போன்ற அனுபவங்களை மனம் அனுபவிக்கின்றது. இவ்வாறு புலன்களின் வழியாக அனுபவித்து பெற்ற விசய சுகங்களில் சிலவற்றை வாசனைகளாக மனம் சித்தத்தில் பதிய வைத்துக் கொள்கின்றது.

பின்னர் அவைகளை நினைவூட்டி, நினைவூட்டி அந்தச் சுகங்களை மீண்டும், மீண்டும் விரும்புகின்றது. எவ்வளவுதான் அனுபவித்தாலும் அதன் ஆசைகள் நிறைவடையாமல், விசய

சுகங்களைத் தேடி அலைந்து, ஆசைகளைப் பூர்த்தி செய்ய இயலாமல் மனம் வெறுப்பிலும், கோபத்திலும் கொந்தளிக்கின்றது.

இதனால், மனம் துக்கத்திற்கு ஆளாகி, புத்தியை பாதிக்கின்றது. மனதினிடமிருந்து பெறப்பட்ட **சத்துவம், ரஜஸ், தமஸ்** போன்ற மூன்று குணபேதங்களினால், புத்தியும் தன்னுடைய சத்துவகுணத்தை இழந்து, எப்பொழுதும் துக்கத்தில் ஆழ்கின்றது.

ஜீவன் எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆதாரமாக இருந்தாலும், புத்தியுடைய நட்பினால், அதன் சுபாவமான குணபேதங்கள் ஜீவனுக்கு வந்தடைகின்றன. ஜீவன் இன்றி, புத்தி இல்லை. ஆனால், புத்தி இன்றி, ஜீவன் இருக்க இயலும்.

இதில் புத்தியின் அழுக்குகள் ஜீவனை மாசு படுத்துவது போன்று தோன்றக் காரணம், ஜீவனின் அறியாமையே ஆகும். ஜீவன் தன் ஆதி இருப்பான ஆத்மாவின் சுத்த இருப்பை அறிந்துக் கொண்டால், இந்த அந்தக் கரணங்களையும், புறக் கரணங்களையும் பொருட்படுத்தாது ஆத்மாவுடன் ஒன்றாகவே ஒன்ற முடியும்.

தன் உடலை **“நான்”** என்றும், தனக்கு வேறாக இந்த உலகத்தையும், இந்த உலகத்தாரையும் கருதுகின்றவரை ஜீவன் **“ஜீவான்மா”** என்று மட்டுமே அழைக்கப்படும்.

பிம்பங்கள் எப்படி கண்ணாடிக்கு அந்நியமல்லவோ, அதுப்போலத் தோற்றங்கள் அனைத்தும் ஆத்மாவின் பிரதி பலிப்பே என்ற ஞானம் உண்டாகி விட்டால், அதற்குப்பிறகு ஜீவனுக்கு துக்கம் என்பதே கிடையாது.

புத்தியின் சேர்க்கையினால், ஜீவன் சுக, துக்கத்தில் இருப்பது போன்று தோன்றினாலும், சுத்த இருப்பான ஆத்மாவின் பிரதிபலிப்பே அது என்பதினால், பரமான்மாவைத் தவிர வேறு ஒன்று இல்லை என்பது புரிந்து, ஜீவான்மா, பரமான்மா என்ற இருமைகள் மறையும்.

இவ்வாறு, வெகுகாலம் அவதிப்பட்ட புத்தியானது, விசாரத்தின் பலனாக விவேகம் அடைந்து, வைராக்கியமான மனதைப் பெற்று, ஆசைகளை அடக்கி, மோகங்களைக் கடந்து, எண்ணங்களற்ற நிலையில் ஜீவனில் கலந்து ஆத்மாவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட புத்தி பரம ஆனந்தத்தை அனுபவிக்கின்றது.

எனவே, பந்தம், துக்கம், மகிழ்ச்சி, முக்தி போன்ற அனைத்தும் மனம், புத்தியின் அறியாமையே ஆகும்.

உண்மையில் ஆத்மாவின் பிரதிபலிப்பே சிதான்மா என்று அழைக்கப்படுகின்ற ஜீவான்மா ஆகும். அதற்கு பிறப்பு இல்லை, இறப்பு இல்லை. மகிழ்ச்சி இல்லை, துக்கம் இல்லை. எந்த இருமைகளும் அதற்கு இல்லை. இந்த அத்தனை இருமைகளும் மனம், புத்தியின் அறியாமை ஆகும்.

மனமானது குரங்குச் சுபாவம் உடையது. அதனால், எப்பொழுதும், எதையாவது நினைத்துக் கொண்டு இங்கும், அங்கும் தாவித்தாவி, சலனத்துடன் நிலையில்லாமல் அலையும் தன்மை கொண்டது. மனதின் சலனத்தினால் மனிதர்கள் அனேக துக்கங்களை அடைகின்றார்கள். சலனமடையும் மனமே எல்லா துயரங்களுக்கும் காரணம்.

எதனை அடைவதினால் ஒருவனுக்கு துயரம் உண்டாகாதோ, அதுவே அவனுக்கு மேன்மை தரக்கூடிய சாதனம் என்பதை அறியவேண்டும்.

நுண்ணிய அறிவினால் ஆராய்ந்து பார்த்தால் எங்கும், எதிலும் துக்கம் கலந்து இருப்பதை அறிய முடியும்.

உதாரணமாக, தனம், மனைவி, மக்கள், இராஜ்ஜியம், செல்வம், தேகசுகம், வித்தை முதலியவைகளெல்லாம் கால, தேசத்திற்கு உட்பட்டு, நிலையற்ற தன்மை உடையதால், இவைகளை துயரங்களுக்குண்டான **விதை** எனலாம்.

ஆதலால், பரமமான மேன்மை இவைகளிடத்திலிருந்து இல்லை என்பதையும், வெளிப்பொருட்களில் இருந்து சுகம் கிடைக்கின்றது என்ற தவறான போக்கையும் விட்டு, உன்னதமான ஆனந்தத்தை அடைய, இவைகள் சாதனமாகாது என்பதையறிந்து, இந்த மதி மயக்கத்திற்கு காரணம் அந்த **மாயை** என்பதையும் புரிந்துக்கொண்டு, மோகத்தை விட வேண்டும்.

ஆகவே, இரண்டற்ற ஏகனை அறியும் ஆன்ம வித்தையை கற்றவனே அந்த மகா மாயையை அறிந்து, தன்னுடைய உண்மை சொரூபத்தை தெரிந்து மோகத்திலிருந்து விடுபட்டு நித்திய சுகத்தை அடைய முடியும்

இந்த உலகம் காரிய மயமானது என்பதை கண்கூடாகக் காண முடிகின்றது. இந்த ஜகத் காரியத்தின் ஆரம்பம் தெரியாவிட்டாலும், பஞ்சபூதங்களின் செயல் தன்மையால் இந்த உலகம் இயக்கப்படுவதை காண முடிகின்றது.

இந்த உலகை உருவாக்கிய கர்த்தா மற்ற செயல் செய்பவர்களிடமிருந்து மாறுபட்டவர். காரணம், இவரது காரியத்தில் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு சக்தி பொருந்தியதும், அனைத்தும் அறிவுப்பூர்வமாக ஒரு நியதிக்குள் இயங்குவதும் காணும்பொழுது இதைப் படைத்தவன் பேரறிவாளன் என்பதுவும் உறுதி செய்யப்படுகின்றது.

சில சூன்யவாதிகள் இந்த உலகம் தானாகவே தோன்றியது என்றும், அதுவே **சத்** என்றும், மண்பானை செய்வதற்கு ஒரு குயவன் இருப்பதினால், அந்த பானை உருவாகின்றது. பானைக்கு மண் எப்படி மூலப்பொருளாக இருந்ததோ, அதுப்போல, இந்த உலகத்தைப் படைத்த படைப்பாளிக்கு மூலப்பொருள் எங்கு இருந்து கிடைத்தது? அதை யார் படைத்தார்கள்? என்ற சந்தேகத்தை எழுப்பி படைத்தவன் ஒருவன் இல்லை என்பார்கள்.

இதிலிருந்து படைத்தவன் ஒருவன் இருக்க வாய்ப்பு இல்லை, இந்த உலகம் தானாகவே தோன்றியது என்று குதர்க்கமான கேள்விகளையும், சந்தேகங்களையும் கேட்டுக் கொண்டு, புத்தியில்லாமல் நாசத்திற்கு வழியைக் காண்பிக்கும் நாத்திகவாதிகளான இதுபோன்ற சூன்யவாதிகளிடமிருந்து நிச்சயம் விலகி இருக்க வேண்டும்.

இந்த உலகத்தில் படைக்கப்பட்ட படைப்புகளைக் காணும்போது, இதைப்படைத்தவன் சாதாரண அறிவைப் படைத்தவன் செய்யக்கூடிய காரியம் இல்லை என்பதையும், படைக்கப்பட்ட உயிரினங்களில் மிகக்குறைவான அறிவு கொண்ட ஒரு சிலந்திப் பூச்சியே தன்னுடைய தேவைக்கு ஒரு வலையைப் பின்னக்கூடிய மூலப்பொருளை வெளியிலிருந்து பெறாமல், தன்னுடைய உமிழ் நீரினாலேயே படைத்து, தானும் அதில் இருந்துக்கொண்டு, தனக்குத் தேவையான காரியங்களை சாதித்துக்கொண்டு இருக்கின்ற பொழுது, இதுப்போன்ற அற்ப ஜீவராசிகளைப் படைத்த படைப்பாளியான அந்த இறைவன் தன்னுடைய படைப்புக்கும், இருப்புக்கும் மூலப்பொருட்களை வெளியில் இருந்து பெறவேண்டிய அவசியம்தான் என்ன வந்தது?

ஆகவே, படைத்தவன் இல்லை என்று கூறுகின்ற அபத்தமான ஆராய்ச்சிகளை அவசியம் தள்ளிவிட வேண்டும். புத்தியில்லாதவர்களே இதனை ஏற்பர். புத்தியில்லாமல் இந்த உலகத்தில் எதையும் அறிய முடியாது.

புத்தியில்லாமல் எந்தச் செயலும் உருவாவதில்லை. இந்த உலகையும் புத்தி உள்ளவனே உருவாக்கினான் என சாஸ்திரங்கள் ஆதாரத்துடன் அறிவிக்கின்றன. சத்தான தர்க்க விசாரங்களினாலும், தக்க ஆதாரங்களினாலும் இந்த உலகத்தை உருவாக்கியவன் ஒருவன் இருக்கின்றான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகில் அளவிட முடியாத செயற்கரிய காரியங்கள் நடைப்பெறுவதை காணும்போது, அவனது ஆற்றல் மிக அபரி மிதமானது என்பதை அறிய முடிகின்றது. அப்படிப் பட்டவனை பராபக்தி செய்து சரணடைந்தால், சரணடைந்த வர்களை சாதனயாளர்களாக மாற்ற வைப்பதும் அவன் செயலாகவே இருக்கும். அவனை ஆசைகளற்ற நிஷ்காமிய பக்தியினால் அணுகின்றவர்களை அவன் என்றும் கை விடுவதில்லை.

தேவையற்ற பொருள் ஆசைகளினாலும், பொருந்தாத மார்க்கங்களினாலும் அவனை அறிய முடியாது. அவரவர்களது கர்ம நியதிப்படியே அவர்களுக்கு உண்டான பலனைக் கொடுக்கின்றான். அதுவே, ஆசைகளற்று அன்னியபாவமின்றி, தன் இதய வெளிக்குள் (சிதாகாசத்தில்) உபாசிப்பவனை, அவனது தேவைகளைத் தனதாக்கிக் கொண்டு, அவனது தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்கின்றான்.

அவனை அறிய முயற்சிக்கின்ற உண்மை முமுக்ஷுவுக்கு முழு பயனையும் கொடுக்கின்றான். முயற்சி அற்ற மூடர்களுக்கு மட்டுமே பிராரப்த கர்மாவும், கர்ம நியதிகளும் அடங்கும்.

அதுவே, அவனை சரணடைந்த மார்க்கண்டேய மகரிஷிக்கு மரணமற்ற பெருவாழ்வாக, அவரது பிராரப்தக் கர்மாவையே மாற்றிக் கொடுத்தவன் அந்த மகேசுவரன் என்பதிலிருந்து அவனது மகத்துவத்தை அறியலாம்.

இது ஈஸ்வரனின் பரிபூரண சுதந்திரம் ஆகும். ஈஸ்வரனோ சத்திய சங்கற்பம் உடையவன். அதனால், அவனது நியதியை யாராலும் தடுக்க முடியாது. அதுவே, அவனைப் பராபக்தி என்ற **'சாத்திய பக்தி'** செய்பவர்களின் விசயத்தில் அந்த நியதியானது வலிமையற்றதாகி விடுகிறது.

மோக்ஷமென்ற நிலையான சுகத்தை தரக்கூடிய மேல் மாடிக்கு செல்லும் முதன்மையான ஏணி இதைவிட வேறு ஒன்று கிடையாது.

இந்த உலகத்தின் உற்பத்திக்கும், முடிவுக்கும் கர்தாவானவன் ஈஸ்வரன். அவனே விஷ்ணு, அவனே சிவன், அவனே பிரம்மா, அவனே சூரியன் என எல்லாவிதத்திலும், எல்லாவற்றிலும் இருக்கின்றான். பொதுவாக, அவன் உருவத்துக்குள் மட்டும் அடங்கக்கூடியவன் அல்லன்.

சைவர்கள் உலகைப்படைத்த பரம்பொருளை ஐந்து முகங்களும், மூன்று கண்களும் உடைய சிவன் என்கின்றார்கள். வைணவர்கள் விஷ்ணு என்கின்றார்கள். சாக்தர்கள் சக்தி என்கின்றார்கள். அப்படி இவர்கள் அபிமானிக்கின்ற தேவதைகளை உருவத்துக்குள் கொண்டு வந்து அடக்குகின்றார்கள்.

இவ்விதமாக இந்த பிரபஞ்ச கர்த்தாவை மண்குடம் செய்கின்ற குயவனைப்போல அறிவுடையவனாக, கண்ணிற்குத் தெரிகின்ற உடல் உடையவனைப்போல பாவித்துக் கொள்கின்றார்கள்.

இவர்கள் உடலைக்கொண்ட உருவத்தில் பாவனை செய்து வழிபாடு மட்டுமே செய்கின்றார்கள். ஆனால், பல உடல்களில் காணப்படுகின்ற உயிருள்ள சேதனத்தைக் கவனியாமல், அந்த ஜீவர்களை அழித்துக் கொன்று, உணவாக உட்கொள்கின்றார்கள். மேலும், அவைகளை அடித்து சிலர் துன்புறுத்துகின்றார்கள்.

உண்மையில் உடலற்ற, சேதனமற்ற ஜடப் பொருட்களான கல், மண் போன்றவைகள் எதையும் புதியதாக படைப்பது இல்லை. அவைகள் மற்றவைகளை அழிப்பதும் இல்லை.

அதுவே, உயிருள்ளவைகளாக உடலைப் பெற்று, அந்த சேதனத்தை அந்தர்யாமியாக தன்னுள்ளே கொண்ட ஜீவர்கள் படைப்பதையும், காப்பதையும், அழிப்பதையும் அன்றாடம் செய்கின்றன. இதிலிருந்து, சேதனத்தை (சைதன்யம்) தன்னுள் கொண்ட உயிர்கள் மட்டுமே செயலாற்றுவதைக் காண முடிகின்றது.

இவ்விரண்டின் மத்தியில் உயிருள்ள ஜீவர்கள் தன் உள்ளே உள்ள சேதனத்தைக் கொண்டுதான் அவைகளின்

கர்த்துருத்துவம் (செயல்) உள்ளது என்பதை அறிய முடிகின்றது.

எப்படியெனில், ஒருவன் இந்த கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடலை மறந்து விட்டு, உறங்கி கனவு காணும் பொழுது, கனவில் சைதன்யத்தின் சக்தியினால் தனக்கு விருப்பமான சிருஷ்டிகளை அவனே படைத்து அனுபவிக்கின்றான்.

ஆகையினால், கர்த்தாவான சிதான்மாவிற்கு (ஜீவனுக்கு) காரியம் செய்ய உடம்பு காரணமாக மட்டுமே அமைகின்றது. இத்தகைய ஜீவர்கள் பூரணமானவர்கள் அல்ல. மேலும் ஈஸ்வரனைப் போன்று சுதந்திரமானவர்களும் அல்ல.

அதனால், இவர்களுக்கு கண்ணிற்குத் தெரிகின்ற புறக்கரணங்களைக் கொண்ட உடலும், கண்ணிற்குத் தெரியாத அகக் கரணங்களைக் கொண்ட மனமும் அவசியம் ஆகின்றது.

அதுவே, ஜகத்கர்த்தாவான ஈஸ்வன் பூரணமானவன், முழுச்சுதந்திரம் உடையவன் என்பதினால் அவனுக்கு உடலும், மனமும் இல்லாமலேயே இந்த உலகத்தைப் படைக்க முடியும்.

அதுவே, அவர் இந்த ஜீவர்களைப் போன்று **ஸ்தூல சரீரம்** கொண்டு இருந்தால், இந்த உடலுக்கு உண்டான அத்தனை பிரச்சனைகளையும், மனதிற்கு உண்டான

தடுமாற்றத்தையும் அவர் அனுதினமும் சந்திக்க வேண்டியது வரும்.

அதுமட்டுமல்ல, ஜகத் சிருஷ்டிக்கு முன்னரே கரணங்களைக் கொண்ட உடல் அவருக்கு இருக்குமானால், அவரை பூரணமானவன் என்று கூறவும் முடியாது.

காரணம் புறக்கரணங்களான கை, கால், கண், வாய், முக்கு, காது போன்றவைகள் காலத்தால் மாறுதலுக்கு உட்பட்டு அழியக்கூடியவைகள். ஆதலால், கண்ணிற்குத் தெரிகின்ற உருவத்தில் அவர் இல்லாமல், இந்த உலகத்தை படைத்து, காத்து, அழிக்கின்றார் என்பதை அறிய வேண்டும்.

உடல் இல்லாத ஈஸ்வரனை, உடல் கொண்ட மனிதர்கள் மோகத்தினால், தேகத்தினைப் படைத்து ஈஸ்வரனை பலவாறாக கற்பனை செய்துக் கொள்கின்றனர்.

அவரவர்களின் அறிவுக்கு ஏற்றபடி ஈஸ்வரனை எப்படி உபாசிக்கின்றனரோ, அப்படி அவர்களது பக்திக்குத் தக்கவாறு, அவர்களுக்கு விருப்பமான உருவங்களினால் அவனை வடிவமைத்து வழிபடுகின்றனர்.

எல்லா உருவங்களும் அவனுக்குள் அடங்குமே தவிர, அவனுக்கு என்று ஒரு உருவமும் உண்மையில் கிடையாது. அவன் பிளவுபடாத சுத்த அறிவாக (பரமான்மாவாக) மட்டுமே இருக்கின்றான்.

பார்ப்பதற்கு பிளவுபட்ட இந்த உலகத்தில் பிளவுபடாத சித்து (அறிவு) எங்கு இருக்கின்றது? என்ற சந்தேகம் உண்டானால், உண்மையில் இந்த உலகம் என்பது கண்ணாடியில் பிரதிபலிக்கின்ற பிரதிபிம்பம் போன்று, சுத்த அறிவிலிருந்து நம் மனதில் பிரதிபலிக்கின்றது.

அதாவது, "கண்ணாடியில் தன் முகத்தை காணும் ஒருவன் அவனது பிரதிபிம்பத்தை மட்டும் கவனித்துக் கொண்டு, கண்ணாடியை கவனிக்காமல் தவற விடுகின்றானோ?, அதுப்போல, மூடர்கள் இந்த உலகத்தை மட்டும் கவனித்துக் கொண்டு, பரம[தன்]னை அறியாமல் தவற விடுகின்றார்கள்".

இறைவன் உருவமற்ற ஏகனாக இருப்பதினால், அவனை, சிவன், விஷ்ணு என்று உருவ பேதத்தில் கொண்டு வந்து, சிவன் சிறந்தவன், விஷ்ணு தாழ்ந்தவன் என்றோ, விஷ்ணு உயர்ந்தவன், சிவன் தாழ்ந்தவன் என்றோ பேதபுத்தி கொள்வது என்பது அறிவற்றவன் செய்கின்ற செயல்கள் ஆகும்.

ஒருவனுக்கு எதுவரை மனதிடம் விசாரமானது உண்டாக வில்லையோ, அதுவரையில், ஆயிரம், ஆயிரம் பூசைகளையும், அக்னி ஹோத்ரங்கள் போன்ற வேள்விகளால் ஆன கர்மங்களையும், எத்தகைய ஆடம்பரமாக செய்தாலும், ஓயாமல் கோயில் கோயிலாக பல புண்ணிய ஸ்தலங்களுக்கு ஓடிக் கொண்டிருந்தாலும், ஒருபொழுதும் மேன்மை என்பது உண்டாகாது.

## 11. விசாரத்தின் சிறப்பு

ஒருவன் உலகத்தில் செயல்கள் பல செய்து, உலகப் பொருள்களை அடைவது போன்று, அந்த பரமா(ஆ)ன்மாவை அடையலாம் என்பதை 'அறியாமை' என்கின்றது சாஸ்திரம்.

எந்த விதமான கர்மத்தினாலோ, யோகத்தினாலோ ஆத்மாவை அறிய முடியாது. இருளிலுள்ள ஒருப் பொருளைப் பார்ப்பதற்கு, வெளிச்சத்தை தவிர வேறு எதுவும் எவ்வாறு பயன்படாதோ அதுப்போல, விசாரத்தைத் தவிர வேறு எந்த சாதனைகளினாலும் ஆன்ம ஞானத்தை அடைய முடியாது.

உபநிஷதங்களும், குருவும், ஆன்ம ஞானத்தை அடைய உதவுகின்ற பிரமாணங்கள் என்பதினால், தக்க சத்குருவையும் சாஸ்திரத்தையும் பிடித்துக் கொண்டு "நான் யார்?", "இந்த உலகம் எப்படிப்பட்டது?", இதில், "இறைவன் என்பவன் யார்?" என்று ஜீவ[தன்]னைப் பற்றியும், நாம் பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஜகத் என்ற இந்த உலகத்தைப் பற்றியும், இவைகளைப் படைத்த ஈஸ்வரன் பற்றியும் ஆராய்ந்து, முடிவில் **ஜீவன், ஜகத், ஈஸ்வரன்** என்ற மூன்றிற்கும் ஆதாரமாக இருப்பது எது? என்ற கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டுக் கொண்டு, அதற்கான பதிலைத் தேடி விடையைக் காணுவதே ஆன்ம விசாரம் செய்ய வேண்டிய வழி முறையாகும்.

நான் இந்த ஸ்தூல உடல் அல்ல. இந்த உடலானது பஞ்சபூதங்களினால் ஆனது. இவைகளை **“நான்”** என்று சொல்வதற்கில்லை.

அதனால், அவைகளின் சேர்க்கையினால் ஆன இந்த ஸ்தூல உடலும் உண்மையில் நானல்ல. அவ்விதமே ஐம்புலன்களும் நானல்ல. அந்தக்கரணமும் நானல்ல என்று விசாரித்து இவைகளுக்கு வேறாக ஏதோ ஒன்று இருக்க வேண்டும், அது எது? என்று விசாரணை செய்வதே இதற்கான சரியான வழிமுறையும் ஆகும்.

நாம் பார்த்து அனுபவிக்கின்ற இந்த உலகமானது மாயையிலிருந்து தோன்றியுள்ளது. அதாவது, ஈஸ்வரனது கனவு இந்த உலகம். இதுவே, பிரபஞ்ச மனம் ஆகும். ஆகவே, இந்த உலகம் நம்முடைய அறியாமையிலிருந்து தோன்றியுள்ளது.

இந்த அறியாமையையும், மாயையையும் ஆன்ம ஞானத்தினால் மட்டுமே நீக்க முடியும். மேற்கூறிய அறியாமை, மாயையினால் ஏற்பட்டிருப்பதால் மாயையை அறிந்து, அதனை நீக்கினால், அறியாமையும் அகன்று விடும்.

அறியாமைக்கும், இந்த உலகம் உண்மை போன்று தெரிவதற்கும் எது ஆதாரமாக இருக்கின்றதோ? அந்த ஒன்றுதான், எப்பொழுதும் மிகவும் சூட்சுமமாக இருக்கின்றது.

அது பார்க்கக்கூடிய ஸ்தூலமானதாக இல்லை. அதுவே, இருத்தல் என்ற ஸ்வரூபமுடையது. மாறாமல் அப்படியே இருக்கின்றது, மாற்றமடையாமல் இருப்பது.

எவ்விதம் களிமண் பானைக்கு ஆதாரமாக இருக்கின்றதோ அதுப்போன்று, அது அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கின்றது. இவ்விதம் விசாரம் செய்யப்பட வேண்டும்.

நான் ஒருவன்தான் அதிசூட்சுமமாகவும், அறிவு ஸ்வரூபமாகவும், அனைத்தையும் அறிபவனாகவும், அனைத்தையும் சாட்சியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப் பவனாகவும், பரமான்ம ஸ்வரூபமாகவும், இருக்கின்றேன்.

ஆகவே நான் என்றும் அழியாத பிரம்மமாக இருக்கிறேன். இந்த விஷயத்தில் சிறிதும் சந்தேகமே இல்லை என்ற முறையில் விசாரம் செய்யப்பட வேண்டும்.

நிஜமும் – நிழலும், கயிறும் – பாம்பும், போல உண்மையில் இருப்பது ஒன்றுதான்.

ஆனால், அதை நாம் வேறொன்று இருப்பதாக தவறாக புரிந்து கொள்வதுப் போல, (இது பொய் அல்ல, ஆனால் மித்யா எனலாம்) இருக்கின்ற சத்திய வஸ்து ஒன்றைத் தவிர, வேறு ஒன்று இல்லவே இல்லை! என்பதை பிரித்து, பகுத்துப் புரிந்து கொள்வதே விவேகம் ஆகும்.

**"ஆத்மா ஸத்யம் ததன்யத் ஸர்வம் மித்யேதி"**

ஆத்மா சத்தியம், ஆத்மாவிற்கு வேறாக உள்ள அனைத்தும் மித்யா.

இந்த முழு பிரபஞ்சமும் ஒன்றேயான அந்த சத்திய வஸ்துவின் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. ஆக அந்த சத்திய வஸ்து என்ற பரமான்மா – வைத் தவிர வேறு ஒன்றும் இல்லவே இல்லை என்பதே உண்மை.

அந்த சத்தியத்திற்கு ( ஆத்மாவிற்கு) வேறாக இருப்பது அனைத்துமே **'அனாத்மா'** அல்லது **"மித்யா"** ஆகும்.

## 12. ஆத்மா, அனாத்மா

ஆத்மா என்றால் என்ன?

**“நான்”, “நான்”** என்று சொல்கின்ற வார்த்தையையே **“ஆத்மா”** என்று சாஸ்திரம் அறிவிக்கின்றது.

ஆக, **“நான்”** என்பது இந்த உடல் என்பதாக நாம் பொதுவாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த **“நான்”** என்பதை நாம் பயன்படுத்துகின்ற இடத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றது.

அதாவது, இந்த **“நான்”** என்பது சில நேரங்களில் உடலைக் குறித்தும், சில நேரங்களில் மனதைக் குறித்தும், சில நேரங்களில் புத்தியைக் குறித்தும், இன்னும் சில நேரங்களில் அறிவைக் குறித்தும் பல அர்த்தங்களுடன் கையாளப் படுகின்றது.

ஆனால், இங்கு **“நான்”** என்பதை நாம் எந்த அர்த்தத்தில் உண்மையில் புரிந்து கொண்டுள்ளோம் என்று பார்த்தால், தவறாகவே அதை நாம் புரிந்து வைத்துக் கொண்டு, கையாண்டு வருகின்றோம்.

இந்த **“நான்”** என்பது உண்மையிலேயே அந்த சத்திய வஸ்துவான **“ஆத்மா”** என்பதை வேதாந்தம் மட்டுமே நமக்கு

சாஸ்திரத்தின் வாயிலாக விளக்கமாக எடுத்துக்கூறி புரிய வைக்க முயற்சிக்கின்றது.

வேதாந்த சாஸ்திரம் உண்மையில் எங்கு தொடங்கு கின்றது என்பதை அறிய முற்பட்டால், இந்த **“நான்”** என்பதற்கு உண்மையான வஸ்து ஒன்று உள்ளது.

ஆனால், **“நான்”** என்ற சொல்லுக்கு உண்மையல்லாத ஒன்றையும், நாம் கலந்து புரிந்துக் கொண்டு உள்ளோம் என்பதை, நமக்கு ஆரம்பத்திலேயே அறிவுறுத்துகின்றது.

அதாவது, நித்ய, அநித்ய வஸ்து விவேகம் வேண்டும் என்கின்றது.

இதை எப்படி அறிவது?

அதாவது, எது என்னுடையது என கூறுகின்றோமோ?, அது நிச்சயமாக **“நான்”** ஆக இருக்க முடியாது.

எதை **“நான்”** என்று கூறுகின்றோமோ?, நிச்சயமாக அது என்னுடையதாக இருக்க முடியாது.

அப்பொழுது, **“நான்”** என நினைத்துக் கொண்டு இருப்பதற்கு வேறாக, ஒன்று என்னிடம் உள்ளதால்தான் நாம் அதை, இது என்னுடைய பொருள் என்று கூறுகின்றோம்.

இந்த உடலை சில நேரங்களில் **"நான்"** என்று அழைக் கின்றோம். சில நேரங்களில் **'என்னுடையது'** என்றும் அழைக் கின்றோம். இதிலிருந்து **"நான்"** என்ற சொல்லில் நாம் புரிந்து கொண்டுள்ளதில் குழப்பம் உள்ளது.

இப்பொழுது விசாரம் செய்து பார்த்தால் எது உண்மையான **"நான்"** என்று அறிய முற்பட்டால், **"ஆத்மா"** என்ற ஒன்று மட்டுமே **"நான்"** என்பதற்கு உண்மையான அர்த்தம்.

ஆத்மா = **நான்.** நித்யமானது.

அனாத்மா = **நான் அல்லாதது**. அநித்யமானது.

ஆக, நான் அல்லாதவற்றை **"நான்"** என்று தவறாக கலந்து புரிந்துக் கொண்டு உள்ளோம். அதாவது, ஆத்மா என்ற தத்துவத்தில் அனாத்மாவை நாம் கலந்து வைத்துக் கொண்டு குழப்பத்தில் உள்ளதால், தவறானவற்றை நீக்கி சரியானவற்றை சுட்டிக் காட்ட வேண்டும் என்று சாஸ்திரம் விரும்புகின்றது.

இதற்காக சத்குருவின் வாயிலாக சாஸ்திரமானது ஆத்மாவுடன் கலந்து உள்ள சிலவற்றை நமக்கு சுட்டிக் காட்டி, இது ஆத்மாவிலிருந்து வேறுபட்டது என்பதை புரிய வைக்க முயற்சிக்கின்றது. அனான்மாவில் நம்மிடையே **"நான்"** என்ற புத்தி உள்ளதை இங்கு சுட்டிக்காட்டி, அவைகள் என்னென்ன? என்பதை இனி விளக்கப்பட உள்ளது.

## 13. மூன்று உடல்கள்

எந்தெந்த அனாத்மாக்களை **"நான்"** என்று தவறாக நாம் புரிந்து கொண்டுள்ளோம் என்பதை இனி ஒவ்வொன்றாக புரிய வைத்து, அதில் முதலில் **"நான்"** என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்ற இந்த உடல்களை (சரீரங்களை) மூன்று வகைகளில் பிரித்து, அவைகளை பின்வருமாறு சாஸ்திரம் அழைகின்றது.

அவைகள் முறையே,

ஸ்தூல உடல்
சூக்ஷும உடல்
காரண உடல் என்று இந்த மூன்று விதமான உடல்களை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

நாம் கண்களால் பார்த்து அனுபவிக்கும் இந்த பரு உடல் **'ஸ்தூல உடல்'** ஆகும். கண்ணிற்குத் தெரியாத மனம் என்பது **'சூக்ஷும உடல்'** ஆகும். இந்த ஸ்தூல உடலும், சூக்ஷும உடலும் (மனம்) இரண்டும் தோன்ற காரணமாக எது இருந்ததோ அதுவே **'காரண உடல்'** ஆகும்.

# ***<u>ஸ்தூல உடல்</u>***

### *ஸ்தூல சரீரம் என்றால் என்ன?*

சுக, துக்கங்கள், மான, அவமானங்கள் மற்றும் குளிர், வெப்பம் முதலான அனுபவங்களை அனுபவிக்கக் கூடிய இடமாக இந்த ஸ்தூல உடல் உள்ளது.

இந்த உலகம் பஞ்ச பூதங்களால் ஆனதுப் போல, இந்த ஸ்தூல உடலும் நிலம், நீர், காற்று, நெருப்பு, மற்றும் ஆகாயம் முதலான ஐந்துபூதங்களால் உண்டாக்கப்பட்டுள்ளது.

சாஸ்திரம் இந்த சிருஷ்டி எவ்வாறு தோன்றியது என்பதைப் பற்றி விளக்கமாகக் கூறி வரும் பொழுது இறுதியில் இந்த **"பஞ்சபூதங்கள்"** தோன்றின என்று கூறுகின்றது.

ஆனால், இந்த ஐந்து பூதங்களும் முதலில் சூக்ஷ்ம நிலையில் (கண்ணிற்குத் தெரியாமல்) இருந்து, பிறகுதான் ஸ்தூல நிலைக்கு (கண்ணிற்குத் தெரிகின்ற) வந்ததாகக் கூறுகின்றது.

எந்த தோற்றமும் முதலில் காரண நிலை, சூக்ஷ்ம நிலை, பிறகு இறுதியில் ஸ்தூல நிலை என்ற வரிசைக் கிரமமாக உருவாகும்.

அதன் அடிப்படையில் இந்த பஞ்சபூதங்கள் சூக்ஷும நிலையிலிருந்து ஸ்தூல நிலைக்கு வந்ததை **“பஞ்சீகிரதம்”** அல்லது **“பஞ்சீகரணம்”** என்று அழைக்கப்படுகின்றது.

அதாவது, நம்முடைய இந்த ஸ்தூல உடல், ஸ்தூலமாக இருக்கின்ற பஞ்ச பூதங்களால் ஆனது.

ஒருவர் ஒரு கட்டிடத்தை கட்டுவதற்கு முன்பு அவரது மனக்கண்ணால் அந்த கட்டிடத்தை எப்படி கட்ட வேண்டும் என்பதை கற்பனை செய்து பார்க்கும் நிலைக்கு **“சூக்ஷும நிலை”** என்கின்றோம். அதுவே, அவர் கற்பனை செய்து வைத்திருந்த அந்த கட்டிடத்தை அழகான ஒரு வீடாக கட்டி முடித்த நிலையை **“ஸ்தூல நிலை”** என்கின்றோம்.

இதுப் போன்றே, இந்த மனித உடல் (ஸ்தூல உடல்) ஸ்தூல பஞ்ச பூதங்களால் படைக்கப்படுவதற்கு முன்பு, சூக்ஷும பஞ்ச பூதங்களால் கற்பனையாக சூக்ஷும உடல் முதலிலேயே வடிவமைக்கப்பட்டு விடும்.

அதுப்போன்றே, பஞ்ச பூதங்களால் ஆன இந்த ஸ்தூல உடல்கள் பலவிதமாக தோற்றுவிக்கப்படுகின்றது.

உதாரணமாக, மனிதன், பறவைகள், மிருகங்கள், புழு, பூச்சிகள், மரங்கள், செடி, கொடிகள் என இந்த ஸ்தூல சரீரங்கள் கொசு முதல் மனிதன் வரை எண்ணிக்கையில் அடங்காத பல வகைப்பட்ட ஸ்தூல உடல்களாக இந்த பூமியில் உள்ளன.

இதில் சில குறைபாடுகளுடன் கூடிய ஊனமுற்ற உடல்களாகவும் காணப்படுகின்றன.

***இதற்கு காரணம் என்ன?***

ஒவ்வொரு ஜீவராசிகளும் அதனதன் செயல் விளைவுகளுக்கான கர்மவினைகளுக்கு ஏற்ப உடல் கிடைத்து, அந்த உடலின் வாயிலாக அவைகள் செய்த முன்வினைகளுக்கு ஏற்ப, **சுகம் – துக்கம், குளிர் – வெப்பம், நல்லது – கெட்டது**, என இருமைகளை அனுபவிக்கின்றது.

கர்மம் என்பது அவரவர்கள் செய்த தர்ம, அதர்ம காரியங்களினால் உண்டான விளைவுகள் என்பதாகும்.

உதாரணமாக, ஒருவர் நன்றாக செயல் செய்து, தன்னுடைய சுய உழைப்பினால் பொருள் ஈட்டி வீட்டைக் கட்டுகின்றார் என்றால், அது அவரது சுய சம்பாத்தியத்தினால் உண்டான வீடு என்கின்றோம்.

அதுப்போன்றே, இந்த ஸ்தூல உடலுக்குள் வசிக்கின்ற ஜீவன் எந்த உடலுடன் பிறந்து இருக்கின்றதோ, அந்த வகையில் அது நல்ல ஆரோக்கியமான உடல், அல்லது ஊனமுற்ற உடலாக இருக்கலாம், மேலும் அது மனித உடல் அல்லது மிருக உடலாக இருக்கலாம்.

அது எதுவாக இருந்தாலும், அந்த ஜீவன் தன்னுடைய சுய சம்பாத்தியத்தினால் வாங்கிய வீடு, இந்த பரு உடல் என்பதை சாஸ்திரம் நமக்கு அறிவுறுத்துகின்றது.

ஒரு ஜீவனுக்கு, ஸ்தூல உடல் கிடைப்பது என்பது, அதன் செயல் வினைகளுக்கு ஏற்ப உண்டான பாவ, புண்ணியங்கள்தான் காரணம் என்றும், அதுவே, காரண உடலில் ஒட்டுமொத்த சம்ஸ்காரங்களுடன் கூடிய மனமாக இருக்கின்றது. என்றும் சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

இதில் பாவமும், புண்ணியமும் ஓரளவுக்கு சரி சமமாக இருந்தால் மனித உடலும், பாதிக்குமேல் பாவமும், குறைவான புண்ணியமும் இருந்தால் அந்த ஜீவனுக்கு மிருக உடலும், பாதிக்கு மேல் புண்ணியமும், குறைவான பாவமும் இருந்தால் அந்த ஜீவனுக்கு தேவர்கள் போன்ற ஜென்மமும் கிடைக்கும் என்று சாஸ்திரம் கூறுகின்றது.

ஆகவே, **“தீதும் நன்றும் பிறர் தர வாரா”** என்பதை அறிந்து, மற்றவர்கள் மீது தேவையில்லாமல், குற்றம், குறைக் கூறுவதை விட்டு விட்டு, அனைத்திற்கும் நாம் மட்டுமே பொறுப்பு என்பதை, சாஸ்திரம் கர்ம தத்துவமாக அனைத்து ஜீவர்களுக்கும் வகுத்திருக்கின்றது.

**“அவரவர் வினை வழி அவரவர் அனுபவம்”** என்பதை அறிந்து, அவரவர்கள் செய்யும் செயலை ஒழுங்கு படுத்திக் கொள்வதற்காகவே, **‘கர்மா’** (செயல் விளைவு) என்பதைப் பற்றி சாஸ்திரம் அதிகம் பேசுகின்றது.

பஞ்ச பூதங்களின் வாயிலாக எத்தகைய உடல் வடிவமைக்கப்பட்டாலும், அத்தகைய வித, விதமான உடலைப் பெறுவதற்கு அந்த, அந்த ஜீவன், பல்வேறு பிறவிகளில் இதுவரை செய்த செயல்களினால் உண்டான கர்ம பலன்களாக தனக்கு இந்த, இந்த உடல் கிடைத்துள்ளது என்பதை தெள்ளத் தெளிவாக, அறியக்கூடிய அறிவைக் கொண்ட ஒரே உடல் இந்த மனித உடல் மட்டுமே எனலாம்.

காரணம், மற்ற எந்த உடல் எடுத்த ஜீவராசிகளினாலும் தன்னைப் பற்றி அறிய முடியாத நிலையில் அவைகளுக்கு அறிவு குறைவாக உள்ளது. ஆனால், மனித உடலுக்கு மட்டுமே **"பகுத்தறிவு"** இருப்பதால், தனக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேகமான ஆறாவது அறிவின் மூலமாக சாஸ்திரத்தைக் கற்றறிந்து, அதன் வாயிலாக தன்னுடைய அறியாமையை முழுவதுமாக அகற்றிக் கொள்ள முடியும்.

பகுத்தறிவு என்பது கடவுள் இல்லை என்றோ, அல்லது கடவுள் இருக்கின்றார் என்றோ சண்டையிட்டுக் கொள்வதற்காக கொடுக்கப்படவில்லை.

கடவுள் இல்லை என்று கூற எந்த நிரூபணமும் தேவையில்லை. ஆனால் கடவுள் இருக்கின்றார் என்று கூறவதற்கு நிருபிக்கப்பட்ட உண்மை (ஆதாரம்) தேவை.

ஆகவே, மனிதன் ஒருவனால் மட்டுமே தன்னிடம் உள்ள அறிவைப் பயன்படுத்தி இருப்பது போல காணப்படுகின்ற இந்த உலகம் உண்மையில் இல்லை

என்பதையும், இல்லாதது போல காணப்படுகின்ற இறைவன் உண்மையில் இருக்கின்றார் என்பதையும் அறியும் அறிவாக **"பகுத்தறிவு"** கொடுக்கப் பட்டிருக்கின்றது.

அதாவது, "இருப்பதெல்லாம் இறைவனே" என்று அறியும் அறிவே **'பேரறிவு'** அல்லது **'பகுத்தறிவு'** ஆகும்.

இந்த ஸ்தூல உடல் எத்தகைய தன்மை கொண்டது, இதனுடைய நிலையாமை அல்லது நிலைத்தன்மை என்ன?, என்பதை ஆராய்ந்து அறிய முற்பட்டால், இந்த உடலில் ஏற்படும் ஆறு விதமான மாற்றத்தினை மனிதர்களாகிய நாம் அனைவரும் கண்கூடாக கண்டதே ஆகும். அவைகள்,

**அஸ்தி** – தாயின் வயிற்றில் இருத்தல்
**ஜாயதே** – பிறத்தல்
**வர்த்ததே** – வளர்தல்
**விபரிணமதே** – மாற்றமடைதல்
**அபக்ஷீயதே** – தேய்தல்
**வினஷ்யதி** – அழிதல் என்ற ஆறு மாற்றங்களுக்கு உட்பட்டது இந்த **ஸ்தூல உடல்** ஆகும்.

அதாவது, இந்த ஸ்தூல உடல் முதன் முதலில் கர்ப வாஸம் (தாயின் வயிற்றில் இருக்கின்ற நிலை), இரண்டாவது பிறத்தல், மூன்றாவது வளர்தல், நான்காவதாக வளர்ச்சி நின்று, தோற்றத்தில் மாறுதல் (வயதான தோற்றம்) உண்டாதல், ஐந்தாவது வயதான காரணத்தினால் உறுப்புகள் தேய்ந்துக் கொண்டு வருதல், ஆறாவது மரணம் என மாற்றத்திற்கு

உட்படுகின்றது. இந்த ஆறு மாற்றங்களுக்கு உட்பட்டதுதான் இந்த பரு உடலாகிய **“ஸ்தூல உடல்”** ஆகும்.

எந்தவிதமான காயகல்ப மருந்துகளோ, உடற் பயிற்சிகளோ, பிராணாயாம் போன்ற வாசியோகம் எனும் மூச்சுப் பயிற்சிகளோ? எதுவும் இந்த ஸ்தூல உடலைக் காப்பாற்றாது. இந்த பரு உடலானது மாற்றத்திற்கு உட்பட்டுக் கொண்டே வந்து, என்றாவது ஒரு நாள் முதுமையடைந்து, நிச்சயம் மரணத்தை தழுவியாக வேண்டும். இது நடைமுறையில் நிரூபிக்கப்பட்ட நிதர்சனமான உண்மை.

எப்படியெனில், இதுவரை காயகல்ப மருந்துகளையோ, வாசியோகம், பிராணாயாமம் மற்றும் யோகா போன்ற உடலை மேம்படுத்தும் பயிற்சிகள் என, எதை செய்து வந்தவர்களும், இன்று நம்மிடையே ஸ்தூல உடலுடன், உயிருடன் இல்லை என்பதே நிரூபிக்கப்பட்ட சான்றாகும்.

அதாவது, ஸ்தூல உடல் என்பது ஸ்துல பஞ்ச பூதங்களால் உண்டாகி, அவரவர்களின் கர்ம வினைக்கு ஏற்ப உடல் கிடைத்து, அதன் மூலமாக, இன்ப, துன்பங்களை அனுபவித்து, கிடைத்த உடலில் ஆறு விதமான மாற்றத்தினை அடைந்து, முடிவில் அழிந்து போகக் கூடியது இந்த **“ஸ்தூல உடல்”** என்பதை அறிய வேண்டும்.

## ***<u>சூக்ஷும உடல்</u>***

### *சூக்ஷும உடல் என்றால் என்ன?*

ஒவ்வொரு ஜீவனுக்கும், ஸ்தூல உடல் இருப்பது போன்றே, சூக்ஷ்ம உடலும் இருக்கின்றது. சூக்ஷும உடல் என்பது கண்ணிற்குத் தெரியாத மனம். இதுவே, சுகம், துக்கம் போன்ற அனுபவத்திற்கான சாதனம் அல்லது கருவி.

அதாவது சுக, துக்கங்களை உடலின் வாயிலாக நமது மனம்தான் அனுபவிக்கின்றது. உண்மையில் உடல் சுக, துக்கங்களை அனுபவிப்பதில்லை.

உதாரணம், விழிப்பு நிலையில் காயம் பட்ட புண்ணினால் மிகவும் வேதனை உண்டாகின்றது. அதுவே, ஆழ்ந்த உறக்க நிலையில் எந்த வலியும், வேதனையும் அந்த புண்ணினால் உண்டாவதில்லை. இதிலிருந்து மனம் இன்றி எதையும் அறிய முடியாது எனலாம்.

இந்த சூக்ஷும உடல் ஆனது சூக்ஷும (கண்ணிற்குத் தெரியாத) பஞ்ச பூதங்களால் ஆனது.

**ஸ்தூல உடல்** – (இருப்பிடம்) ஸ்தூல பஞ்ச பூதங்கள் (பஞ்சீகரணம்).

**சூக்ஷும உடல்** – (அனுபவம்) சூக்ஷும பஞ்சபூதங்கள் (அபஞ்சீகரணம்).

இந்த ஸ்தூல உடல் புழு, பூச்சி, பறவை, மிருகம், மற்றும் மனிதனுக்கு, மனிதன் எவ்வாரு மாறுபடுகின்றதோ, அதுப்போலவே, சூக்ஷும உடலும் (மனமும்) இவ்வாறு, ஒவ்வொரு ஜீவனுக்கும் மாற்றத்துடன் இருக்கும்.

அதற்குக்காரணம், அந்தந்த ஜீவர்கள் சேகரித்து வைத்துள்ள கர்ம பதிவுகளினால் உண்டான மனதிற்கு ஏற்ப உடல் உண்டாகின்றது. அதாவது மனமானது (சூக்ஷும உடல்) அவரவர்களது கர்மவினைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றது.

இந்த சூக்ஷும உடல் **17 தத்துவங்களால்** ஆனது. அவைகள் முறையே,

ஐந்து ஞானேந்திரியங்கள்
ஐந்து கர்மேந்திரியங்கள்
ஐந்து பிராணன்கள் மற்றும் மனம், புத்தி என 17 அவையவங்களாகிய தத்துவங்களால் ஆனது.

ஆத்மா என்ற ஒன்றை அறிந்து கொள்ள வேண்டுமானால், இத்தனை விசயங்களையும் அறிந்து கொண்டால்தான், ஆத்மா எப்படிப்பட்ட தன்மை கொண்டது என்று புரிய வைக்க முடியும் என்பதினால், சாஸ்திரம் இவ்வளவு விரிவான விளக்கத்துடன் போதிக்கின்றது.

## ***காரண உடல்***

ஸ்தூல மற்றும் சூக்ஷும உடல்கள் இரண்டுக்கும் எது காரணமாக இருக்கின்றதோ, அதுவே **'காரண உடல்'** ஆகும்.

ஸ்தூல பஞ்ச பூதங்களான ஸ்தூலமான உடல், சூக்ஷும பஞ்ச பூதங்களில் இருந்து வந்தது. சூக்ஷும பஞ்ச பூதங்களின் மூலமாக நமக்கு மனம் கிடைத்து, அந்த மனமே தன் தேவைகளை அனுபவித்து தீர்த்துக் கொள்ள ஆசைப்பட்டு ஸ்தூல உடலை எடுக்கின்றது.

அதுப்போலவே, இந்த சூக்ஷும பஞ்ச பூதங்கள் எதிலிருந்து வந்தது என்ற சந்தேகம் வரும் பொழுது, சாஸ்திரம் இது காரண சரீரத்திலிருந்து வந்தது என்று கூறினாலும், அந்த காரண சரீரம் எதிலிருந்து வந்தது என்ற கேள்வி உருவாகின்றது.

இதற்கு அதனை **"அநிர்வசனீயம்"** என அழைகின்றது. அதாவது, **அநிர்வசனீயம்** என்றால், சரியாக நிருபிக்க முடியாது என்று பொருள். அதனால், அதை **அநாதி** என்கின்றது சாஸ்திரம்.

இவ்வாறு கூறுவதினால், தர்க்க வாதிகள் இதை ஏற்க முடியாது என்றும், இதற்கான காரணத்தை சரியாகக் கூறினால் மட்டுமே அதை நாம் ஏற்போம் என்றும் வாதிட்டால்,

சாஸ்திரம் அப்படி, கேள்வி கேட்டு வாதிடுபவர்களுக்கு கீழ்கண்ட விளக்கத்தைக் கொடுக்கின்றது.

அதாவது, ஒரு ஆலமரத்தின் விதையினுள், அதன் இலைகள், கிளைகள், பூக்கள், மற்றும் காய்கள் என அனைத்தும் நிர்விகல்பமாக வேற்றுமையின்றி சூக்ஷூமமாக (கண்ணிற்குத் தெரியாமல்) மறைந்து இருக்கின்றதே, அதன் இருப்புத் தன்மையை விதையினுள் காட்ட முடியுமா?

ஆகவே, அந்த ஆலமரத்தின் விதை விதைக்கப்பட்டு, ஸ்தூல பஞ்ச பூதங்களின் சேர்க்கை உண்டாகி, அது வளர்ந்து மரமான பிறகுதான், கண்களுக்குத் தெரிகின்ற ஸ்தூலமான மரமாக அந்த விதையை பார்க்க முடிகின்றது அல்லவா?

அதாவது, ஒரு தாவரத்தின் இந்த ஸ்தூல, சூக்ஷூம உடல்கள் தோன்றுவதற்குமுன்பு, அதன் இருப்புத்தன்மையான ஒரு பெரிய ஆலமரமே, கடுகு அளவு உள்ள அதன் சிறிய விதையில் ஒளிந்துக் கொண்டு இருப்பதை நாம் பார்க்க முடிகின்றது.

அதுப்போன்று, மனித உடலாகிய இந்த பரு உடலாகிய ஸ்தூல உடலும், மனமாகிய சூக்ஷூம உடலும், நிர்விகல்பமாக வேற்றுமையின்றி கண்ணிற்குத் தெரியாத காரண உடலில் விதைப் போன்று மறைந்து இருப்பதால், இந்த காரண உடல் கால தேசத்திற்கு அப்பாற்பட்டது என்கின்றது சாஸ்திரம்.

காலமும், தேசமும் ஸ்தூல உடலின் அனுபவத்திற்கு உட்பட்டது. பொதுவாக, இரண்டு அனுபவங்களுக்கு இடையில் உண்டாகும் இடை வெளியைக் **‘காலம்’** என்றும், இவ்வளவு நேரம் இந்த அனுபவம் உண்டானது என்பதை அறியும் இடமாக, மனம் என்ற **‘தேசம்’** காணப்படுகின்றது.

இங்கு காரண உடலில் மனம் வெளிப்படாமல் ஒடுங்கி இருக்கின்றது. அதனால், மனம் இல்லாவிடில் அனுபவத்தைப் பற்றி பேசவே முடியாது என்பதினால், **“காரண உடல்”** எப்பொழுது தோன்றியது என்பதை விளக்கவே முடியாது.

ஆகவே, அது **“அநாதி”** என்றும் அழைக்கப்படுகின்றது.

உதாரணமாக, நம்முடைய ஆழ்ந்த உறக்கத்தில் இவ்வளவு நேரம் நான் தூங்கினேன் என்ற காலம் எவ்வாறு தெரிவதில்லையோ, அவ்வாறே, காரண உடலின் காலமும் நமக்குத் தெரிவதில்லை.

ஆழ்ந்த உறக்கத்தில் நமக்கு எப்படி எந்தவித அனுபவங்களும் இல்லையோ, அதுபோலவே, காரண உடலிற்கும் எந்தவித அனுபவம் இல்லாததனால், நம்முடைய மனம் அங்கு வெளிப்படுவதில்லை.

எனவே, அனுபவம், மனம், மற்றும் காலம் இல்லாததினால் இதை அறிந்து கொள்ள முடியாது.

ஆகவே, இது **‘அநாதி’** ஆகும்.

ஐந்து கோசங்களில் முதலில் கூறப்பட்ட அன்னமய கோசமாக விளங்கும் பருவுடலே **ஸ்தூல உடல்**. அடுத்து உள்ள பிராணமய கோசம், மனோமய கோசம், மற்றும் விஞ்ஞானமய கோசங்களின் தொகுப்பே **சூக்ஷும உடல்**. இந்த இரண்டிற்கும் காரணமாக விளங்குவதே **'காரண உடல்'** எனப்படும்.

உறங்கும் போது, உடலுக்கும், மனதுக்கும் இருப்பு இல்லாதபோது, நாம் சார்ந்திருப்பது, நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்வது, தொடர்பு படுத்திக்கொள்வது என அனைத்தும் காரண உடலுடனேயே ஆகும். இதுவே அறியாமைகளின் ஒட்டு மொத்த தொகுப்பு எனலாம்.

காரண உடல் இந்தத் தன்மையுடையது அல்லது அந்தத் தன்மையுடையது என்று வார்த்தைகளால் விளக்க முடியாது. அது நிலையானதாகவும் இல்லாமல், நிலையற்றதாகவும் இல்லாமல் இருப்பதினால், அதை **"அநிர்வசனீயம்"** என்று சாஸ்திரம் அழைக்கின்றது. அதாவது, சரியாக நிரூபிக்க முடியாதது.

அதனால், காரண உடலே **'மாயை'** எனப்படும்.

**'மா'** என்றால் ஒடுங்குதல் என்றும், **'யா'** என்றால் விரிதல் என்றும் பொருள். இந்த மனம் விரிந்து இந்த உலகம் தோன்றுவதற்கும், ஒடுங்கி உலகம் மறைவதற்கும் இந்த காரண உடல் என்ற மாயையே காரணம் ஆகும்.

**மாயை** எனும் சொல்லே உலகம் தன்னிலிருந்து தோன்றுவதற்கும், தன்னில் வந்து ஒடுங்குவதற்கும் அடிப்படைத் தத்துவம் ஆகும்.

அப்படிப்பட்ட, இந்த காரண உடலை நிலையானதா, நிலையற்றதா என அறிய முடியாததாக இருப்பதினாலும், அதில் புதைந்துள்ள அறியாமைகள் வெளிப்படாத நிலையில் அது விதை (பீஜம்) வடிவாக, ஒடுங்கி இருக்கும் நிலையை **'அவ்யக்தம்'** என்று சாஸ்திரம் கூறுகின்றது. அதாவது, காரண உடல் வெளிப்படாத நிலையில் அவ்யக்தமாக இருக்கின்றது.

***நாம் உறங்கும் போது என்ன நிகழ்கின்றது?***

இதுவரை விழிப்பு நிலையில், இந்த ஸ்தூல உடலினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதையாக, அதாவது, வெளிப்படாமல் அவ்யக்தமாக காரண உடலில் சென்று ஒடுங்குகின்றன.

அதுப்போன்றே, கனவு நிலையில் சூக்ஷ்ம உடலினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதைப் போன்று அவ்யக்தமாக அதே காரண உடலில் சென்று ஒடுங்குகின்றன.

இந்த விழிப்பு, மற்றும் கனவு நிலை அனுபவங்கள் யாவும், ஆழ்ந்த உறக்க நிலையில் தோன்றாமல் இருக்கின்றன.

ஸ்தூல தேகத்துக்கும், சூக்ஷம தேகத்துக்கும் இருக்கும் எல்லா உணர்வுகளும் ஒடுங்கிய நிலை, இந்த ஆழ்ந்த உறக்க நிலை எனலாம்.

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய எல்லாமே விதை வடிவில், (பீஜமாக) ஒடுங்கிய நிலை ஆழ்ந்த உறக்கம் ஆகும்.

நாம் உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும் போது, நாம் காரண உடலை விடுத்து, ஸ்தூல உடலை அபிமானிக்கின்றோம். உடனே, அதுவரை, விதைகளாக ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வெளிப்பட்டு, வளர்ந்து விரிவடைகின்றன.

நாம் உறக்கத்திலிருந்து கனவு நிலையை அடையும் போது, காரண உடலை விடுத்து, சூக்ஷம உடலை அபிமானிக்கின்றோம். அப்போதும், அதுவரை விதைகளாக நம்மில் ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து வியக்தமாகின்றன. அதாவது, விரிவடைகின்றன.

இதனாலேயே, உறக்கத்திலிருந்து விழித்தவுடன், உறங்குவதற்கு முன் நின்ற நினைவுகள் யாவும், மீண்டும் விட்ட இடத்திலிருந்தே தொடர்கின்றன. பல நேரங்களில், கனவு அனுபவங்கள் விழித்த பின்னும், நினைவில் இருக்கின்றன.

நாம், எப்பொழுதெல்லாம், காரண உடலுடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம், எவ்வித அனுபவமும் இன்றி, ஏதும் அறியாத நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல) இருக்கின்றோம். இந்த நிலை **'அறியாமை நிலை'** அல்லது **'அவித்யை நிலை'** எனப்படும்.

பொதுவாக, எண்ணங்களினால் உண்டாகின்ற மனோ விகாரங்கள் காலம் மற்றும் இடத்தை ஆதாரமாகக் கொண்டே உண்டாகின்றது.

உறக்கத்தில், நாம் காலம், இடம் ஆகியனவற்றை உணராமலேயே இருக்கின்றோம். காரண உடல், இடம், காலம் ஆகியவைகளை அறியாத நிலையில் மட்டுமே நம்மோடு சம்பந்தப்படுகின்றது. அதனால், காரண உடல், மாறுதலுக்கு உட்படாததாக உள்ளது.

நாம் உறங்கும்போது ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருக்கின்றோம் என்று உணர்வதில்லையே தவிர, விழித்தவுடன், நாம் அதுவரை ஆனந்தமாக உறங்கினோம் என்று உணரவே செய்கிறோம்.

சரி, நாம் உறங்கும் போது ஆனந்தமாக இருந்தோம். அதாவது, எப்போதெல்லாம், **ஸ்தூல, சூக்ஷும** உடல்களை விடுத்து, **காரண உடலை மட்டும்** அபிமானிக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் **ஆனந்தமாக** இருக்கின்றோம்.

உறங்கும்போது ஸ்தூல உடலும், சூக்ஷம உடலும், செயல்படாது ஓய்ந்து விடுகின்றன. உடனே நாம் ஆனந்த மயமாகின்றோம்.

உறக்கத்தில் எல்லா இந்திரியங்களும் ஒடுங்கி விடுகின்றன. புத்தியின் விருத்தியும் ஒடுங்கி விடுகின்றது. நாம் முழு அறியாமையில் இருக்கின்றோம்.

ஆக, உறக்கத்தில் காரண உடலை முழு அறியாமையில் அபிமானித்துக் கொண்டு இருக்கிறோம் என்று பொருள்.

உறக்கம் என்பது ஆனந்தம் தருவது என்பதினால், அதுவே ஆனந்தம் என்று தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நம், நித்திய அனுபவங்களில், உறக்கம் ஒன்றே, ஆனந்தத்திற்கு வெகு அருகில் அனுபவமாகின்றது.

உறங்கும்போது வருகின்ற ஆனந்தம் எதன் ஆதாரத்தில் விளைகின்றது என்று தெரிந்து கொண்டால், அதை மீண்டும், மீண்டும் அடையலாமே, அல்லது முடிந்தால் அதிலேயே நிரந்தரமாக, லயித்திருக்கலாமே என்பது நம் விருப்பம்.

உறக்கத்தில், அறியாமையில் இருக்கும் பொழுது, காரண உடலுடன் நமக்கு ஏற்படும் தொடர்பு, விழித்த பின் சில நொடிகளுக்கே நிலைக்கின்றது.

ஆகவே, உறக்கத்தால் விளைந்த ஆனந்தத்தின் இருப்பும் நேரமாக, ஆக, நீர்த்து விடுகின்றது.

சில நேரங்களில் விழிப்பு நிலையில் இருக்கும் போதுகூட, நாம் **காரண உடலை** அபிமானிக்கின்றோம். அந்த நிலைகளை, **ப்ரியம், மோதம், ப்ரமோதம்** என மூன்று நிலைகளாக சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

இதில், நமக்குப் பிடித்த, நாம் ஆசைப்படும் பொருளைக் காண்பதால் ஏற்படும் சந்தோசத்திற்கு **'ப்ரியம்'** என்றும், ஆசைப்பட்ட அந்தப் பொருள் நம் கைக்கு கிடைத்து, அது நம்முடையது என்ற உரிமை ஆவதால், உண்டாகும் மகிழ்ச்சிக்கு, **'மோதம்'** என்றும், அவ்வாறு அடைந்த அந்தப் பொருளை நாம் அனுபவிப்பதால் ஏற்படும் ஆனந்தத்திற்கு **'ப்ரமோதம்'** என்றும் சாஸ்திரம் கூறுகின்றது.

இந்த மூன்று நிலைகளிலும், மனம் அடங்கி ஆனந்தம் உண்டாகின்றது என்பதை நாம் நன்கு அறிவோம்.

அதாவது, விழிப்பு நிலையிலும் நாம் காரண உடலை அபிமானிப்பதாலேயே இந்த ஆனந்தம் உண்டானது என்பது தற்பொழுது, நமக்கு நன்கு விளங்கும். அத்தகைய இந்த காரண உடலே **“ஆனந்தமய கோசம்”** எனப்படுகின்றது.

ஆனாலும், இந்த ஆனந்தமும், அறியாமையில் விளைந்த ஆனந்தமே என்பதினால், அந்தச் சில கணங்கள், நாம்

நம்முடைய புத்தியானது, நிலை கொண்டுள்ள சூக்ஷும உடலின் (மனதின்) தொடர்பில்லாமல்தான் இருந்தோம்.

அப்பொழுது, காரண உடலை மட்டுமே முழுவதுமாக அபிமானித்து இருந்ததினால், நாம் அறியாமையிலேயே இருக்கின்றோம். ஆதலால்தான், இந்த நிலையில் உண்டான ஆனந்தமும் நிலைப்பதில்லை.

எண்ணங்களற்று, உணர்வுடன் பொருந்தி இருக்கின்ற நிலையே, உண்மையான ஆனந்தம் எனப்படுகின்றது.

எதையாவது அடைய விரும்பும் எண்ணம் நம் மனதில் உண்டாகி, அந்த எண்ணம் செயலாகி, அந்த செயல் நிறைவடைந்தவுடன், உண்டாகின்ற திருப்தி என்பது, நாம் நம் உணர்வுடன் தற்காலிகமாக இணைந்து விடுவதினால் உண்டா கின்றது என்பதை அறிய வேண்டும்.

அதாவது, எண்ணங்களற்று, உணர்வு மயமாக நாம் மாறியதும் ஆனந்தத்தில் திளைக்கின்றோம். அப்பொழுதே முழுமையான ஆனந்த மயமாகின்றோம்.

மீண்டும் எண்ணம் எழ, மனம் பிரவிருத்தியாகி, ஆனந்தத்தை மறக்கின்றோம்.

இந்த காரண உடல் ஆத்மாவின் மீது ஏற்றி வைக்கப் பட்டுள்ளது. காரண உடல் ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டது.

இதை எப்படி சாஸ்திரம் கையாளுகின்றது என்று கவனித்தோமானால், கயிற்றின் மீது ஏற்றிப் பார்த்த பாம்பைப் போல எனலாம்.

அதாவது, காரண உடல் பாம்பு போலவும், ஆத்மா கயிறு போலவும் இருப்பதால் அந்த ஆத்மா என்ற கயிற்றின் மீது, காரணஉடல் என்ற பாம்பை கொண்டுவந்து ஏற்றிப் பார்க்கப் படுகின்றது என்பதை எளிதாக அறியலாம்.

காரணத்தின் குணம், காரியத்தில் இருக்க வேண்டும் என்பது நியதி. அதாவது களிமண் என்ற காரணத்தை வைத்து பானைகள் செய்தால், அந்த பானையிலும் களிமண் நிச்சயமாக இருக்கும். தங்கத்தை வைத்து நகைகள் செய்தால், அந்த நகைகளிலும் தங்கம் இருக்கும்.

இதுப்போல, நாம் காணும் இந்த சூக்ஷ்ம உடலின் காரியத்தை, அதற்கு காரணமான காரண உடலிடம் காணலாம். அதுபோல, நம்முடைய மனதிடம் என்ன என்ன குணங்கள் இருக்கின்றதோ, அது நிச்சயமாக காரண உடலிடமும் இருக்கும்.

எனவே, இந்த ஸ்தூல உடலில் **சத், ரஜஸ், தமஸ்** என்ற முக்குணங்களும் உள்ளதோ, அதே போல, காரண உடலிடமும் இந்த மூன்று குணங்களும் இருக்கும்.

ஆக, ஆத்மாவைப் பற்றிய அறியாமை எவ்வாறு இந்த ஸ்தூல உடலுக்கு இருக்கின்றதோ, அதுபோலவே, காரண உடலுக்கும் ஆத்மாவைப் பற்றிய அறியாமை இருக்கின்றது.

இயற்கையாகவே இந்த **ஆன்ம அஞ்ஞானம்** அனைத்து ஜீவராசிகளிடமும் இருக்கின்றது.

இதனால், இந்த ஸ்தூல உடலைக் கொண்டு, மனதின் வாயிலாக நாம் அனுபவிக்கும் சுக, துக்கங்களுக்கு காரணமான பாவ, புண்ணியங்கள் அனைத்தும் இந்த காரண உடலில்தான் அடங்கியுள்ளது.

காரண உடலை அறிந்து கொள்ள முடியாத நிலையை **“அநிர்வாச்சியம்”** அல்லது **“அநிர்வசனீயம்”** என்று சாஸ்திரம் கூறுகின்றது.

## 14. ஞானேந்திரியங்களும், தேவதைகளும்

அடுத்து, ஒவ்வொரு இந்திரியங்களின் செயல் திறன்களைப் பற்றியும், அதன் அதிர்ஷ்டான தேவதைகளைப் பற்றியும் சாஸ்திரம் குறிப்பிடுகின்றது.

நமக்குத் தேவையான புற அறிவை அடைய ஐந்து கருவிகள் தேவை. அவைகள், **கண், காது, மூக்கு, நாக்கு, தோல்** (தொடு உணர்ச்சி) என்பனவாகும்.

காட்சிகளைக் **கண்**(கள்) வழியாகவும், சப்தத்தை **காது**(கள்) வழியாகவும், நறுமணத்தை **மூக்கு** வழியாகவும், ரசத்தை **நாக்கு** வழியாகவும், ஸ்பரிசத்தை மேல் **தோல்** வழியாகவும் நாம் உள் வாங்குகின்றோம்.

**கண், காது, மூக்கு, நாக்கு,** மற்றும் **தோல்** ஆகியன, நம் உடலின் உறுப்புகள் என்று அறிவோம். நம் உடலுக்கு வெளியே இருக்கும் விசயங்களை உள்வாங்க உதவும் இந்தக் கருவிகள், மற்றும் விசயங்களை உள்வாங்கும் அவற்றின் திறன் ஆகியன ஒருங்கே ஒன்றிணைந்து **இந்திரியங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

இவைகள், விசயங்கள் குறித்த ஞானத்தை உள்வாங்கும் கருவிகளாதலால், ஞான இந்திரியங்கள் அல்லது **ஞானேந்திரியங்கள்** என்றும் அழைக்கப்படுகின்றன.

உண்மையில் **கண், காது, மூக்கு, நாக்கு,** மற்றும் **தோல்** ஆகியன, வெறும் உடல் உறுப்புக்களே. அவைகள் கோளகங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

கோளகங்கள், இந்திரியங்களின் கருவிகளேயன்றி, அவைகளை இந்திரியங்கள் எனக் கூறுதல் ஆகாது. நாம் இந்திரியங்கள் எனக் குறிப்பிடுவது, அந்தக் கோளகங்கள் மற்றும், அவற்றின் இயல்பான, விசயங்களை உள்வாங்கிப் பகுத்தறியும் திறனும் சேர்ந்த ஒரு தொகுப்பையே ஆகும்.

இதில் கண் என்பது, **பார்வை** அதன் காரியம். அடுத்து காது என்பது, **கேட்டல்** அதன் காரியம். அடுத்து, மூக்கு என்னும் உறுப்புக்கு **நுகர்தல்** அதன் காரியம். அடுத்து, நாக்கு என்னும் உறுப்புக்கு **சுவைத்தல்** என்பது அதன் காரியம். அடுத்து தோல் என்பது தொடு உணர்ச்சியின் வாயிலாக **உணர்தல்** என்பது அதன் காரியம்.

இவ்வாறு, இந்திரியங்களில் உள்வாங்கப்படுவதும், விசயங்களில் வெளிப்படுதலும், குணங்களின் தொழில் எனலாம். இதையே, 'குணங்களே குணங்களில் பிரவிருத்திக்கின்றன' என பகவத்கீதை கூறியது.

சப்தம் என்ற விஷயத்தில் வெளிப்படுவதும், காது என்ற இந்திரியத்தால் உள் வாங்கப்படுவதும் ஒரே குணமே.

ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய விஷயங்களில் வெளிப்படுவனவும், முறையே தோல், கண், நாக்கு, மூக்கு ஆகிய இந்திரியங்களில் உள்வாங்கப்படுவனவும் அவ்வாறே.

ஒலி வாங்கியில் சப்தம் மின் அதிர்வாக மாற்றப் படுவதையும், ஒலி பெருக்கியில் மின் அதிர்வுகள் சப்தமாக மாற்றப்படுவதையும் நமக்கு பௌதிகம் விளக்குகின்றது.

அது செயல் சார்ந்த விளக்கம். நாம் அறிய முயல்வது '**குணம்**' சார்ந்த விளக்கம்.

சப்தம் என்ற விஷயத்திற்கு எந்த ஒரு ஆதார குணம் அடிப்படையாக இருக்கின்றதோ, அந்த ஆதார குணமே காது என்ற கருவிக்கும் அடிப்படையாக இருக்கின்றது. மற்ற விசயங்களுக்கும், கருவிகளுக்குமான தொடர்பும் அவ்வாறே உள்ளன.

இந்த குணங்களைக் கொண்ட உயிருள்ள, உயிரற்ற சகல வஸ்துக்களும் என்ன வேதிப்பொருள்களால் ஆனவை என்றும், அவற்றின் ஆதார மூலக்கூறான அணுவையும், அணுவின் உட்கூறுகளையும் ஆராய்கின்ற பௌதிகமும், வேதியியலும் வகைப்படுத்தி வைத்திருப்பதை நவீன அறிவியல் வாயிலாக நாம் அறிவோம்.

சாஸ்திரங்கள் இவற்றை, ஐந்து தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டே பகுக்கின்றன. பிரபஞ்சம்

முழுவதையும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர் மற்றும் நிலம் ஆகிய ஐந்து தத்துவங்களால் வகைப்படுத்தலாம்.

இந்த ஐந்தும், ஐந்து ஆதாரத் தத்துவங்கள் என்னும் பொருளில், **'பஞ்ச பூதங்கள்'** என்று அழைக்கப்படுகின்றன.

**ஆகாசம்**, ஆகாயம் அல்லது **வெளி** எனப்படுவது முதற்கூறு. (இதில் நாம் காணும் ஆகாயமும் அடங்கும் எனினும்), பிரபஞ்சம் முழுதும் பரவியிருக்கும் வெளியையே நாம் இங்கு ஆகாசத் தத்துவமாகக் குறிப்பிடுகின்றோம்.

இரண்டாம் கூறு வாயு தத்துவம் ஆகும். **காற்று**, வளி அல்லது வாயு தத்துவமாக குறிப்பிடப்படுவது நில்லாது இயங்கும் வாயு நிலையையே ஆகும்.

**நெருப்பு**, அக்னி அல்லது **தீ** என்று குறிப்பிடப்படுவது வெப்ப சக்தியான மூன்றாம் கூறு.

திரவத் தன்மையை நாம் **நீர்** என்று குறிப்பிடுகின்றோம். இவை தவிர்த்த தாதுக்கள் எல்லாவற்றின் திடத்தன்மையை ஒருங்கே **நிலம்**, மண் அல்லது **ப்ருத்வி** என்னும் ஐந்தாம் கூறாக அறிகிறோம்.

இவை ஐந்தையும் ஒருங்கே '**பஞ்ச மஹாபூதங்கள்**' அல்லது **"பஞ்ச பூதங்கள்"** என்று அழைக்கின்றோம்.

இவற்றில் நிலத்திற்கு நறுமணம் அல்லது **கந்தம்** என்ற குணமும், நீருக்கு **ரஸம்** என்ற குணமும், நெருப்புக்கு **ரூபம்** என்ற குணமும், காற்றுக்கு **ஸ்பரிசம்** என்ற குணமும், ஆகாசத்திற்கு **சப்தம்** என்ற குணமும் ப்ரதான குணங்களாகின்றன.

**வெளி** என்னும் ஆகாசம், சப்தம் உருவாக ஆதாரமாக மட்டுமின்றி சப்தத்தை கடத்தும், அல்லது தாங்கும் குணம் கொண்டதாக அறியப்படுகின்றது. ஆகாசத்தின் ஆதார குணத்தினின்றே சப்தம் என்ற விசயம் விளைகின்றது. சப்தத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **சப்த தன்மாத்திரை** என்று அழைக்கப்படுகின்றது.

இன்னும் எளிமையாகப் புரிந்துக்கொள்ள, ஆகாசத்துக்கு சப்தம் என்ற ஒரு குணம் இருப்பதாகக் கருதலாம்.

(சப்தமானது, அணுக்களின், மூலக்கூறுகளின் அதிர்வு களினால் உருவாகும், சக்திப்பரிணாம மாற்றமே. அதிர்வுகளே சப்தமாக வெளிப்படுகின்றன. அதிர்வுகள் காற்றிலும், நீரிலும், நிலத்திலும் உள்ள மூலக்கூறுகளிலேயே நிகழ்கின்றன. சப்தம் ஓரிடம் விட்டு மற்றோரிடம், அதிர்வலைகளாகவே கடத்தப் படுகின்றது. இதுவும் காற்றையோ, நீரையோ, நிலத்தையோ ஊடகமாகக் கொண்டே நிகழ முடியும். வெளி அல்லது ஆகாசம், இவை யாவற்றிற்கும் இடமளித்து சப்தம் விளைவதற்கும், கடத்தப்படுதற்கும் ஆதாரமாகின்றது.)

காற்று நம் மேல் வீசும் போது, நம்மால் காற்றை ஸ்பரிசிக்கும் படி, காற்றுக்கு பருத்தன்மை உள்ளது. இந்த ஆதார குணத்திலிருந்தே ஸ்பரிசம் அல்லது '**தொடு உணர்ச்சி**' என்ற விசயம் விளைகின்றது.

ஸ்பரிசத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **ஸ்பரிச தன்மாத்திரை** என்று அழைக்கப் படுகின்றது.

காற்று சப்தத்தை விளைவிக்கவும், தாங்கவும், கடத்தவும் செய்கின்றதே? அதனால், அதனுள் சப்த தன்மாத்திரையும் இருக்க வேண்டுமே என்றால், ஆம், காற்றுக்கு ஸ்பரிசம் மற்றும் சப்தம் ஆகிய இரண்டு குணங்கள் இருப்பதாகக் கருதலாம்.

ஆகாசத்துக்கும் வாயுவிற்கும் நாம் கண்டு உணரும் படியாக உருவம் இல்லை. ஆனால், நெருப்பை நாம் காணும் வகையில், நெருப்பிற்கு ஒளி மற்றும் வடிவம் அடங்கிய உருவம் இருக்கின்றது.

நம் கண்ணுக்குப் புலப்படும் வண்ணம் நெருப்பில் விளங்கும் இந்த ஆதார குணத்திலிருந்தே ரூபம் என்ற விஷயம் விளைகின்றது. ரூபத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **ரூப தன்மாத்திரை** என்று அழைக்கப் படுகின்றது.

நெருப்பை ஸ்பரிசிக்க முடிவதால், நெருப்பில் ஸ்பரிச தன் மாத்திரையும், அது சப்தத்தை விளைத்துத் தாங்கிக் கடத்துவதால், நெருப்பில் சப்த தன்மாத்திரையும் உள்ளன. ஆக நெருப்பிற்கு **ரூபம், ஸ்பரிசம்** மற்றும் **சப்தம்** ஆகிய **மூன்று குணங்கள்** இருப்பதாகக் கருதலாம்.

(நெருப்பு, தீயின் ரூபமாய், ஜுவாலைகளாய் வெளிப்படும் அக்னி மட்டுமல்ல. தீயின் உஷ்ணத் தன்மையையும் சேர்த்தே நாம் நெருப்பு என்கின்றோம்).

ஆகாசம், வாயு மற்றும் நெருப்பு ஆகியனவற்றிற்கு ருசி உணரும் வகையான திட அல்லது திரவத்தன்மைகள் இல்லை.

ஆனால் திரவ நிலையில் உள்ள நீருக்கு நமக்கு ருசி அறிவிக்கும் வகையிலான பருத்தன்மை உள்ளது.

நீர் எல்லாச் சுவைகளுக்கும் ஆதாரமாக உள்ளது. சுவைகளைத் தாங்குகின்றது. சுவைகளைக் கடத்துகின்றது. நீரின் இந்த ஆதார குணத்திலிருந்தே சுவை அல்லது ருசி அல்லது ரஸம் என்னும் விசயம் விளைகின்றது.

ரஸத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **ரஸ தன்மாத்திரை** என்று அழைக்கப்படுகின்றது.

நீரானது, நிறம் மற்றும் வடிவம் (மாறிக் கொண்டே இருந்தாலும்) தாங்குவதுடன், ஒளியையும் தாங்கி, கடத்தி,

பிரதிபலிப்பதால், நம் கண்களால் காணத் தக்கதாக இருக்கின்றது. ஸ்பரிசிக்கத் தக்க பருத் தன்மையுடன் விளங்குகின்றது. சப்தத்தை விளைவிக்கின்றது, தாங்குகின்றது கடத்துகின்றது.

ஆகவே நீரில் ரூப, ஸ்பரிச, சப்த தன்மாத்திரைகள் உள்ளன. ஆக நீருக்கு **ரஸம், ரூபம், ஸ்பரிசம்** மற்றும் **சப்தம்** ஆகிய **நான்கு குணங்கள்** இருப்பதாகக் கருதலாம்.

**பிருத்வி** அல்லது **நிலம்** என்பது திடமான எல்லாத் தாதுக்களின் தொகுப்பேயாகும். நிலத்தின் தனித்தன்மையாக நாம் அறியும் குணம், மணம் அல்லது நாற்றம் எனப்படும் கந்தம் ஆகும்.

நிலமானது, நாம் முகர்ந்து மணமறியும் வகையில் கந்தம் என்னும் ஆதார குணத்தை உடையது. நிலத்தின் இந்த ஆதார குணத்திலிருந்தே **கந்தம்** (மணம் – வாசனை) என்ற விஷயம் விளைகின்றது.

கந்தத்திற்கு மூலமாக விளங்கும் இந்த ஆதார குணத்தை **கந்த தன்மாத்திரை** என்று அழைக்கலாம்.

நிலம், ரஸமுடையதாகவும், ரூபமுடையதாகவும், உள்ளது. ஸ்பரிசிக்க முடிவதாகவும் உள்ளது. சப்தத்துக்கும் ஆதாரமாக விளங்குகின்றது.

எனவே நிலத்தில் ரஸ, ரூப, ஸ்பரிச, சப்த தன்மாத்திரைகள் உள்ளன. ஆக நிலத்திற்கு **கந்தம், ரஸம், ரூபம், ஸ்பரிசம்** மற்றும் **சப்தம்** ஆகிய ஐந்து குணங்கள் இருக்கின்றன.

ஔவையார் தம் குறளில் இதையே தொகுத்து,

'நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்றே
யுலவை யிரண்டொன்று விண்' என்றார்.

நிலத்துக்கு ஐந்து குணங்களும், நீருக்கு கந்தம் தவிர்த்து நான்கு குணங்களும், நெருப்புக்கு கந்தம், ரஸம் தவிர்த்து மூன்று குணங்களும், காற்றுக்கு ஸ்பரிசம், சப்தம் ஆகிய இரண்டு குணங்களும், விண்ணுக்கு சப்தம் என்ற ஒரே குணமும் தர்மங்கள் என்பது இதன் பொருள்.

இதையே, மணிவாசகப் பெருமானார், தம் போற்றித் திருவகவல் எனும் நூலில்,

'பாரிடை யைந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி'

என்ற இரண்டையும் கருத்தில் கொள்வது நல்லது.

இதுவரை அறிந்தவைகளைக் கொண்டு, இந்திரியங்களையும், அதன் குணங்களையும் தொகுப்போம்.

**செவி, மெய், கண், நா, நாசி** ஆகியன ஐந்தும் ஞானேந்திரியங்கள்.

**சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம்** ஆகியன ஐந்தும் அனுபவத்திற்கான விசயங்கள்.

செவிக்கும், சப்தத்திற்கும் பொதுவான ஆதார குணம் **சப்த தன்மாத்திரை** ஆகும். சப்த தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு **ஆகாசம்** ஆகும்.

மெய்யிற்கும் ஸ்பரிசத்திற்கும் பொதுவான ஆதார குணம் **ஸ்பரிச தன்மாத்திரை** ஆகும். ஸ்பரிச தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு **வாயு** என்ற காற்று.

கண்ணிற்கும் ரூபத்திற்கும் பொதுவான ஆதார குணம் **ரூப தன்மாத்திரை** ஆகும். ரூப தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு **அக்னி** என்ற நெருப்பு..

நாவிற்கும் ரஸத்திற்கும் பொதுவான ஆதார குணம் **ரஸ தன்மாத்திரை** ஆகும். ரஸ தன்மாத்திரையைத் தன் பிரதான

குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு **ஜலம்** என்ற நீர்.

நாசிக்கும் கந்தத்திற்கும் பொதுவான ஆதார குணம் **கந்த தன்மாத்திரை** ஆகும். கந்த தன்மாத்திரையைத் தன் பிரதான குணமாகக் கொண்டுள்ள (பிரபஞ்சத்தின்) கூறு **பிருத்வி** என்ற நிலம்.

**ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், ப்ருத்வி** ஆகியன பஞ்ச பூதங்கள் ஆகும்.

பஞ்ச பூதங்களின் ஆதார குணங்களாகிய இந்த தன்மாத்திரைகள், தனித்தனியே, சுத்தமான, கலப்பற்ற தெளிந்த நிலையிலும் விளங்குகின்றன. ஒன்றோடு ஒன்று கலந்துபட்ட நிலையிலும் விளங்குகின்றன.

அந்தக் கலப்பு ஒரு ரிதத்துடன் நிகழ்கின்றது. '**ரிதம்**' என்றால் ஒருவகையான இயற்கை ஒழுங்கு.

நான்கு பங்கு ஆகாசத்தில், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர், ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு காற்றில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு நெருப்பு, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு நெருப்பில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நீர் மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு நீரில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நிலம் ஆகியனவே சேர்கின்றன.

நான்கு பங்கு நிலத்தில், ஒரு பங்கு ஆகாசம், ஒரு பங்கு காற்று, ஒரு பங்கு நெருப்பு மற்றும் ஒரு பங்கு நீர் ஆகியனவே சேர்கின்றன.

இவ்வாறு எந்த ஒரு பூதத்தின் நான்கு நிரைகளுடன், மற்ற நான்கு பூதங்களின் ஓரோர் நிரை சேர்வதை **பஞ்சீகரணம்** அல்லது **பஞ்சீகிருதம்** என்று அழைக்கலாம்.

பஞ்சீகரணம் என்றால் **ஐந்து பொருட்களின் சேர்க்கை** என்பதை நினைவில் வைக்கவும்.

சுத்தமான நிலையில் உள்ள பூதங்கள் நுண்ணிய, புலப்படாத சூக்ஷும நிலையில் விளங்குகின்றன.

பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதங்கள் புலன்களால் அறியப்படுகின்ற வகையில், ஸ்தூலமாக விளங்குகின்றன.

இதை சரியாகப் புரிந்துக் கொள்ள பிருத்வி ஆகிய நிலம் என்னும் பூதத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

நிலம் பல்வேறு தாதுக்களால் ஆனது. அதை நாம் தொட்டுணர முடிகின்றது. அதன் மணத்தை முகர முடிகின்றது. அதன் உருவத்தை, நிறத்தைக் காண முடிகின்றது. அதன் சுவையை ருசிக்க முடிகின்றது. அது கடத்தும் சப்தத்தை கேட்கவும் முடிகின்றது. இது அந்த பூதத்தின் ஸ்தூல நிலை.

ஸ்தூலமாக நாம் அறியும் நிலத்துக்கு இருக்கும் நுண்ணிய இயல்புகள் அதன் சூக்ஷ்ம நிலை. கேட்கும் போது சப்தமாக, தொடும் போது ஸ்பரிசமாக, காணும் போது ரூபமாக, ருசிக்கும் போது ரஸமாக, முகரும் போது கந்தமாக விளையும் அதன் பண்புகள் அதன் சூக்ஷ்ம நிலை.

இந்தப் பண்புகள், பகுத்துப் பார்க்க முடியாத, பிரித்து உணர முடியாத நுண்ணிய குணங்கள்.

பஞ்சீகரணம் செய்யப்படாத சுத்தமான நிலையில் இருக்கும் பிருத்வி ஆகிய பூதத்தால் ஆனது இந்த **சூக்ஷ்ம நிலை.**

பஞ்சீகரணத்தால் கலந்துபட்ட நிலையில் உள்ள பிருத்வி ஆகிய பூதத்தால் ஆனதே நாம் உணரும் நிலம். நிலத்தின் பௌதீக நிலையே **ஸ்தூல நிலை**.

நிலத்தின் இயல்புகளின் ஆதார குணத்தொகுப்பே அதன் சூக்ஷ்ம நிலை.

தெளிந்த, கலப்பற்ற, சுத்தமான நிலையில் குணங்களுக்கு ஒரு இருப்பு இருக்கின்றது. அதை சூக்ஷும நிலை என்று அழைக்கிறோம்.

அந்த குணங்கள் பஞ்சீகரணப்பட்டதும், அவை பௌதீகமாக பருநிலை அடைந்து, ஸ்தூல பூதங்களாக வடிவெடுக்கின்றன. அந்த ஸ்தூல பூதங்களால் ஆனவையே நாம் பிரபஞ்சமாகக் காணும் அனைத்தும் ஆகும்.

பஞ்ச பூதங்களின் இந்த தத்துவங்கள் உருவான விதம் பற்றி வேதாந்த நூல்கள் என்ன கூறுகின்றன?

நிலத்தை விட நீர் நுண்ணியது. நீரை விட நெருப்பும், நெருப்பை விட காற்றும், காற்றை விட ஆகாசமும் நுண்ணியன. நுண்ணிய தத்துவங்களினின்றே, அவற்றினும் பருவான தத்துவங்கள் உருவாகின்றன.

(பரமா(ஆ)ன்மாவிலிருந்து ஆகாசம் உண்டாயிற்று).

ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாகின என்கின்றது சாஸ்திரம்.

நாம் அறிந்த எந்தப் பொருள்களை எடுத்துக் கொண்டாலும், அவற்றை, இந்த பஞ்சபூதங்களின் தொகுப்பாகவே வகைப்படுத்த முடியும்.

**நாமும் இந்த பஞ்ச பூதங்களின் சேர்க்கையா?**

பஞ்சபூதங்களின் நுண்ணிய குணங்களாகிய தன்மாத்திரைகள், பஞ்சீகரணம் ஆன நிலையில், பருவான, ஸ்தூல நிலையில் விளங்குகின்றன. அவை, நம் உடலுக்கும் ஆதாரமாக, அடிப்படையாக, மூலப்பொருட்களாக ஆகின்றன.

அதாவது, பஞ்ச பூதங்கள், ஸ்தூலமாக நிலையடைந்து, நம் உடலுக்கு, ஸ்தூல தேகத்திற்கு ஆதாரமாகின்றன என்பது விளக்கம்.

பொதுவாக, நம் உடல், பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்ச பூதங்களால் ஆனதே. நமக்கு, நாம் காணும் இந்த பௌதீக உடல் மட்டுமன்றி, இதனோடு இயைந்து கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணிய உடலும் இருக்கின்றது. அந்த நுண்ணிய அல்லது சூக்ஷுமமான உடல், பஞ்சீகரணம் செய்யப்படாத நிலையில் உள்ள பஞ்ச பூதங்களால் ஆனது.

**நம் உடலில் பஞ்ச பூதங்களின் இருப்பு எங்கு உள்ளது?**

நம் உடல் ஆக்ரமித்துள்ள இடம் '**வெளி**' யாகும். சுவாசமும் பிராணனும், '**காற்று**'. உடலின் தணியாத வெப்பம், '**நெருப்பு**'. திரவப்பகுதி, '**நீர்**'. திடப்பகுதி, '**நிலம்**' ஆகின்றன.

**பிருத்வி** (நிலம்), **அப்பு** (நீர்), **தேயு** (நெருப்பு), **வாயு** (காற்று), **ஆகாசம்** (வெளி) ஆகியவையே **பஞ்சபூதங்கள்** எனப்படுகின்றது.

நம் உடலில் எது நிலம்? எது நீர், எது நெருப்பு, எது காற்று? எந்தப் பகுதி ஆகாயம்?

எது கடினப் பகுதியோ, அது **பிருத்வி** எனப்படும் நிலம் சார்ந்த தாதுக்களால் ஆனது. எது திரவப் பகுதியோ, அது **நீர்** எனப்படும். எது தணியாத வெப்பமோ, அது **நெருப்பு** ஆகும். எது உள்ளும் வெளியும், போக்கும் வரத்துமாகச் சலிக்கின்றதோ, அது **காற்று** எனப்ப்டும். எது இந்த உடல் இருக்க இடமளித்ததோ, அது **வெளி** என்ற ஆகாசம் ஆகும்.

நம் உடலின் உறுப்புக்களாய், செயல்களாய், இயல்புகளாய் நாம் அறிந்த தத்துவங்களை, ஐந்து தத்துவங்கள் கொண்ட ஐந்து தொகுப்புகளாகத் தொகுத்து, அவற்றில் ஒவ்வொரு தத்துவத்திலும் ஆதாரமான பூதச் சேர்க்கைகளை விவரிக்கின்றது **சிவப்பிரகாசக் கட்டளை**.

## பிருத்வி என்ற மண் தத்துவம்:–

இந்த பஞ்ச பூதங்களில் மண்ணில் 'மண்ணாய்' இருப்பது எலும்பாகவும், மண்ணில் 'நீர்' சேர்வது மாமிசமாகவும், மண்ணில் 'தீ' சேர்வது தோலாகவும், மண்ணில் 'காற்று' சேர்வது நரம்பு மண்டலமாகவும், மண்ணில் 'ஆகாயத்தின்' சேர்க்கை முடியாகவும் விளைகின்றன.

எலும்பில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், மண்ணின் சூக்ஷும தத்துவங்களும் மட்டுமே இருப்பதாகக் கொள்ளலாம். மாமிசத்தில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், நீரின் சூக்ஷும குணங்களும் உள்ளன. தோலில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், நெருப்பின் சூக்ஷும குணங்களும் உள்ளன. நரம்பு மண்டலத்தில் மண்ணின் ஸ்தூல தத்துவமும், காற்றின் சூக்ஷும குணங்களும் உள்ளன. முடியில் மண்ணின் ஸ்தூல குணங்களும், ஆகாசத்தின் சூக்ஷும குணங்களும் உள்ளன என்று பொருள் கொள்ளலாம்.

**<u>அப்பு என்ற நீர் தத்துவம்:–</u>**

நீரில் நீரின் இருப்பு, சிறுநீராகவும், நீரில் மண்ணின் சேர்க்கை, உமிழ்நீராகவும், நீரில் தீ சேர்வது, வியர்வையாகவும், நீரில் காற்றின் சேர்க்கை, இரத்தமாகவும், நீரில் ஆகாசத்தின் சேர்க்கை, சுக்கிலம்/சுரோணிதம் ஆகிய விந்துவாகவும் விளைகின்றன.

**<u>தேயு என்ற நெருப்பு தத்துவம்:–</u>**

நெருப்பில் நெருப்பாக இருப்பது, தூக்கமாகவும், நெருப்பில் மண்ணின் சேர்க்கை, பசியாகவும், நெருப்பில் நீரின் சேர்க்கை, தாகமாகவும், நெருப்பில் காற்றின் சேர்க்கை, அசதியாகவும், நெருப்பில் ஆகாயத்தின் சேர்க்கை, உடலுறவாகவும் விளைகின்றன.

**<u>வாயு என்ற காற்று தத்துவம்:–</u>**

காற்றில் காற்றாக இருப்பது, ஓட்டம் என்னும் தொழிலாகவும், காற்றில் மண் சேர்வது, படுத்தல் என்னும் தொழிலாகவும், காற்றில் நீர் சேர்வது, நடத்தல் என்னும் தொழிலாகவும், காற்றில் நெருப்பு சேர்வது, இருத்தல் என்னும் தொழிலாகவும், காற்றில் ஆகாசம் சேர்வது, குதித்தல் அல்லது தாண்டுதல் என்னும் தொழிலாகவும் விளைகின்றன.

**<u>வெளி என்ற ஆகாச தத்துவம்:–</u>**

ஆகாசத்தில் ஆகாசம், 'மோகம்' என்னும் குணமாகவும், ஆகாசத்தில் மண், 'இராகம்' என்னும் குணமாகவும், ஆகாயத்தில் நீர், 'துவேஷம்' என்னும் குணமாகவும் ஆகாசத்தில் நெருப்பு, 'பயம்' என்னும் குணமாகவும், ஆகாயத்தில் காற்று, 'நாணம்' என்னும் குணமாகவும் விளைகின்றன.

இவ்வாறு பஞ்ச பூதங்களினால் உண்டான ஐந்து கருவிகளுக்கு ஒவ்வொரு **ஆதார தேவதைகளை** சாஸ்திரம் வரிசைப்படுத்துகின்றது.

சூரியன் நம்முடைய சாதாரண கண்களால் காணத்தக்க பிரம்மாண்டமான நெருப்பு கோளம் என்ற பந்தாகின்றது. இந்த கண்ணிற்கு **'சூரியன்'** ஆதார தேவதையாக அறிவிக்கப் படுகின்றது.

செவியாகிய காது, எல்லா திசைகளினின்றும் சப்தத்தை உள்வாங்குவதாலும், செவிப்புலனுக்கு ஆதாரமான ஆகாசம், திசைகளால் அறியப் படுதலாலும், செவிக்கு **'திசைகள்'** ஆதார தேவதைகளாக அறிவிக்கப்படுகின்றன.

மூக்கு, நிலத்தின், தாதுக்களின் அம்சமான கந்தத்தை உள்வாங்குதலால், மூக்குக்கு **'அஸ்வினி தேவர்கள்'** ஆதார தேவதைகளாக அறிவிக்கப்பட்டனர்.

(தாதுக்களின் மருத்துவ குணம் அறிந்து, பிரயோகிக்கும் தேவலோக மருத்துவர்களே அஸ்வினி தேவர்கள்).

நாக்கு நீரின் அம்சமான ரஸத்தை உள் வாங்குவதால், நாக்குக்கு **'வருணன்'** ஆதார தேவதையாக அறிவிக்கப் படுகின்றது.

(வருணன் மழைக் கடவுளாக, நீருக்கு ஆதாரமாக அறியப்படுகின்றார்).

தோலாகிய **த்வக்** என்பது, காற்றின் குணமாகிய ஸ்பரிசத்தை உள்வாங்குவதால், காற்றை புருஷ வடிவில் உருவகப்படுத்தி, தோலுக்கு **'வாயு'** என்ற ஆதார தேவதையாக அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு, புலன்களால் உள்வாங்கி உணரப்படும் **சுவை** (ரஸம்), **ஒளி** (ரூபம்), **ஊறு** (ஸ்பரிசம்), **ஓசை** (சப்தம்) மற்றும் **நாற்றம்** (கந்தம்) ஆகிய ஐந்து இந்திரிய விருத்திகளை

ஆராய்ந்து, அவற்றின் உண்மைப் பண்புகளை அறிந்து கொள்பவர்களே, உலகின் இயல்பு நிலை அறிந்தவராவார் என்றார் திருவள்ளுவப் பெருமகனார்.

'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு' – இது திருக்குறள் மூலம்.

இதுவரை நாம் கண்டனவற்றை, ஆழ்ந்து கவனித்தால் புலப்படும் உண்மை என்ன?

இந்திரியங்களின் ஆதாரமும் குணங்களே ஆகும். விஷயங்களின் ஆதாரமும் குணங்களே ஆகும். அதாவது, விஷயங்களின் குணங்களே இந்திரியங்களில் பிரவர்த்திக்கின்றன அல்லது விருத்தியாகின்றன.

இதையே, பகவான் ஸ்ரீகிருஷ்ணர், தமது பகவத் கீதையில், 'குணங்கள், குணங்களில் பிரவர்த்திக்கின்றன' என்ற வாக்கியமாக, 'குணா குணேஷு வர்தந்தே' என்று கூறினார்.

காது என்ற கருவியில் உள்ள செவிப்பறையிலிருந்து நரம்புகளே அதிர்வுகளை மூளைக்கு எடுத்துச் செல்கின்றன?

சருமத்தின் உணர்வுகள், நரம்புகள் வழியே மூளைக்கு உணர்த்தப்படுகின்றனவே?

கண்ணின் விழித்திரையிலிருந்தும், நாவின் சுவை அரும்புகளினின்றும், மூக்கின் நுகர்ச்சி முனைகளினின்றும்

நரம்புகளே அனைத்து விஷயங்களையும், மூளைக்குக் கடத்தி அறிவிக்கின்றன?

இந்திரியங்களாய் நாம் இதுவரை கண்டன யாவும், கருவிகள் மட்டுமன்று, அந்தக் கருவிகளின் விஷயமறிந்து உரைக்கும் முழுத்திறனுமே ஆகும்.

காது, செவிப்பறை, நரம்பு மண்டலங்கள் மற்றும் மூளையின் (சப்தம் அறியும், சப்தத்தை பகுக்கும், சப்தங்களை விளங்கிக்கொள்ளும்) அம்சங்களையும் சேர்த்தே நாம் காது என்னும் இந்திரியமாகக் குறிப்பிடுகின்றோம். மற்ற இந்திரியங்களுக்கும் அவ்வாறே உள்ளது.

அதாவது, விசயங்களை உள்வாங்கும் திறன் சார்ந்து உலகில் உள்ள உயிரினங்களை நாம் ஓரறிவு, ஈரறிவு என ஆறறிவு படைத்த உயிர்களாய் பகுக்கின்றோம்.

ஸ்பரிசிக்கும் திறன் மட்டுமே உள்ள தாவரங்கள் ஓரறிவு உயிர்களாகவும், ஸ்பரிசம் மற்றும் சுவை ஆகிய திறன்கள் மட்டுமே உள்ள புழு, மீன், சங்கு போன்றவை ஈரறிவு கொண்ட உயிர்களாகவும் அறியப்படுகின்றன. ஸ்பரிசம், சுவை, கந்தம் ஆகிய மூன்று திறன்கள் கொண்ட எறும்பு, கரையான் போன்றவை மூன்றறிவு உயிர்களாகவும், இத்திறன்களுடன் கண்டறியும் திறனும் கொண்ட பாம்பு, வண்டு வகைகள் நான்கறிவு உயிர்களாகவும் அறியப்படுகின்றன.

ஏனைய பறவை, மிருக இனங்களுக்கு, ஐந்து திறன்களும் உள்ளன; அவை ஐந்தறிவு உயிர்களாய் அறியப்படுகின்றன.

ஆறறிவு உயிர்களாக அழைக்கப்படும் மனிதர்களாகிய நமக்கு, இவை தவிர்த்து, ஆறாவது அறிவாக ஏதேனும் இருக்கின்றதா?

ஆம்!, இருக்கின்றது. அதுவே **பகுத்தறிவு.**

**எது நித்யம்?, எது அநித்யம்?** என்பதை பகுத்து அறியும் அறிவு.

இது எத்தனைப் பேருக்கு இருக்கின்றது என்பது சிந்திக்க வேண்டிய விசயம்.

## 15. கர்மேந்திரியங்களும், தேவதைகளும்

நாம், நம் உடலால் ஆற்றும் காரியங்களை வேதாந்தம் ஐந்து வேறுபட்ட தொகுப்புகளுக்குள் அடக்குகின்றது. எண்ணங்களை வார்த்தைகளாய் வெளிப்படுத்தும் **பேசுதல்** அல்லது பேச்சு ஒரு காரியம் அல்லது செயல்.

ஓரிடம் விட்டு மற்றோரிடம் செல்லும் ஓட்டம், நடை, தாண்டுதல் ஆகியன **இயக்கம்** என்னும் செயல்.

பொருள்களை எடுத்தல், கையாளுதல், வைத்தல் ஆகியன **கையாளுதல்** ஆகிய செயல்.

குறியால் இன்பம் அனுபவித்தல், **துய்த்தல்** ஆகிய செயல்.

உடலினுள் சேரும் கழிவுகளை வெளியேற்றுதல், **கழித்தல்** என்னும் செயல்.

எந்த உறுப்புகளின் துணைக்கொண்டு நாம் இந்தக் காரியங்களை ஆற்றுகின்றோம்?

வாய்க்குத் தொழில் **பேச்சு.** கைகளுக்குத் தொழில் **கையாளுதல்**. கால்களுக்குத் தொழில் **இயக்கம்**. குறி அல்லது கருவாய்க்குத் தொழில் இன்பம் **துய்த்தல்.** மலத்துவாரம் அல்லது

எருவாய்க்குத் தொழில் கழிவுகளை **கழித்தல்** அல்லது வெளியேற்றுதல்.

கர்மேந்திரியங்களான **வாக்கு, கால்கள், கைகள், எருவாய், கருவாய்** ஆகியவைகள் முறையே **பேசுதல்** (வசனம்), **நடத்தல்** (கமனம்), **கையாளுதல்** (தானம்), **கழித்தல்** (விசர்க்கம்), **மகிழ்தல்** (ஆனந்தம்) ஆகியன அவற்றின் தொழில்கள் என்பது பொருள்.

**வாய், கைகள், கால்கள், கருவாய்** (ஆண்/பெண் குறிகள்) மற்றும் **எருவாய்** (மல/ஜலத் துவாரங்கள்) ஆகிய ஐந்தும் செயலாற்றுவதால் **செயற்கருவிகள்** என்று அழைக்கப் படுகின்றன.

இவையே கர்மம் புரியும் இந்திரியங்களாதலால் **கர்மேந்திரியங்கள்** ஆகின்றன.

தமிழ் வேதாந்த நூலான சிவஞான சித்தியார் – **சுபக்கம்** என்னும் நூலில், அருணந்தி சிவாச்சாரியார் இதே கருத்தை உரைக்கின்றார்.

'வாக்கோடு பாதம் பாணி பாயுவோடு உபத்தம் ஐந்தும்
நீக்கினர் முன்னே கன்மேந்திரியங்கள் என நினைத்தே
ஆக்கிய வசன கமன தானமும் விசர்க்க ஆனந்தம்
ஊக்கமார் ஐந்தும் ஐந்தின் தொழிலென ஓதினாரே' என்பது மூலம்.

வாக்கு, கால்கள், கைகள், எருவாய், கருவாய் ஆகிய ஐந்தும் கர்ம இந்திரியங்கள்; முறையே பேசுதல் (வசனம்), நடத்தல் (கமனம்), கையாளுதல் (தானம்), கழித்தல் (விசர்க்கம்), மகிழ்தல் (ஆனந்தம்) ஆகியன அவற்றின் தொழில்கள் என்பது இதன் பொருள்.

அடுத்து, கர்மங்களைச் (செயல்களை) செய்யக் கூடிய, கர்மேந்திரியங்களுக்கு அதன் தேவதைகளைக் காணலாம்.

'வாக்கு' அல்லது வாய்க்கு அக்னியும், 'கைகளுக்கு' இந்திரனும், 'கால்களுக்கு' விஷ்ணுவும், 'எருவாய்க்கு' யமனும், 'கருவாய்க்கு' பிரம்மனும் **ஆதார தேவதைகள்** என்கின்றது சாஸ்திரம்.

பஞ்ச பூதங்களையும், ஐந்து ஞானங்களையும், ஐந்து ஞான இந்திரியங்களையும், ஐந்து கர்மங்களையும், ஐந்து கர்மேந்திரியங்களையும் அவைகளுக்கான தேவதைகளையும் கண்டோம்.

வேதாந்தம், நம் உடலைப் பற்றி நமக்கு ஒரு தனிப் பார்வையை உருவாக்க முற்படுகின்றது. அறிவியல் ஆய்வைப் போல எல்லாவற்றையும் விளக்கவோ, எல்லா பௌதீக வேதியியல் பண்புகளை விரித்துரைக்கவோ முற்படாது, சில அடிப்படைகளிலேயே உடலைக் குறித்து ஒரு தனிப்பார்வையை உருவாக்க விரும்புகின்றது.

நாமோ இதனினும் பகுக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட அறிவியல் ஆய்வுகளை அறிந்தவர்கள். வேதாந்த ஆய்வுக்கான கட்டமைப்பும், அறிவியல் ஆய்வுக்கான கட்டமைப்பும் வேறு வேறானவை.

அறிவியல் பார்வையில் வேதாந்தத்தை அணுகுதல் சரியான வழிமுறையாகத் தெரியவில்லை எனினும், அறிவியலால் நாம் அறிந்தனவற்றிற்கு முரண்படாத வரை, இந்தக் கருத்துகளை ஏற்று மேற்செல்வது நம் நோக்கமாக இருக்கட்டும்.

## 16. பஞ்ச கோஷங்கள்

கோஷங்கள் என்றால் **மறைப்பது** என்று பொருள். அதாவது ஒரு பொருளை மூடி மறைக்கின்ற **உறை** என்றும் அழைக்கலாம். இப்படி ஆத்மாவை மூடி மறைக்கின்ற இந்த ஐந்து கோஷங்களும் (உறைகளும்) மூன்று சரீரங்களினால் உண்டானவைகள் ஆகும்.

இந்த ஆத்மாவை மூடி மறைக்கின்ற கோஷங்களை, நாம் சாதாரணமாக நம் கையில் கட்டுகின்ற கைக்கடிகாரத்தை மூடி மறைக்கின்ற மேல் பெட்டியுடன் ஒப்பிடக்கூடாது. ஏனெனில், அந்த கடிகாரத்தை மேலே மூடி மறைக்கப்பட்ட பெட்டி அந்த கைக்கடிகாரத்தை விட நிச்சயமாக பெரிதாக இருக்கும். அப்பொழுதுதான் அதனை மூடி மறைக்க முடியும்.

ஆனால், ஆத்மாவை மூடி மறைக்கின்ற மூன்று உடல்களினால் உண்டான இந்த ஐந்து கோஷங்களும் நிச்சயமாக ஆத்மாவை விட, பெரிதாக இருக்காது. அப்படி இருக்கவும் முடியாது.

காரணம், இந்த இடத்தில் மறைத்தல் என்றால், இவைகள் ஆத்மாவை விட பெரிதாக இருந்து ஆத்மாவை மறைக்கவில்லை. ஆத்மாவிடமிருந்து நம் கவனத்தை இந்த மூன்று உடல்களும் ஈர்த்து விட்டதினால், உண்மையில் ஆத்மா மறைக்கப்பட்டது போல, நமக்குத் தெரிகின்றது.

உதாரணமாக, நாம் ஒரு திரையரங்கினுள் படம் பார்க்க சென்றவுடன் அங்கு மிகப் பெரிய ஒரு திரையைக் காண்கின்றோம். அதே திரையில் படம் ஓட ஆரம்பித்து விட்டவுடனேயே, நம் கவனம் முழுவதும், அந்த திரையை விட்டு விலகி, அங்கு அசைந்துக் கொண்டிருக்கின்ற திரைப்படத்தின் மீது ஈர்க்கப்பட்டு, அதில் வருகின்ற காட்சிகளை கண்டு உண்மை என்று இரசிக்கின்றோம்.

திரையை மறந்து, அந்த திரைப்படக் காட்சிகள், காண்பதற்கு எப்படி நமக்கு உண்மையாகத் தெரிகின்றனவோ, அதுப்போல, இந்த மூன்று உடல்களையும் உண்மை என்று கவனிக்கத் தொடங்கிய உடனேயே, ஆத்மாவை மறந்து விடுகின்றோம்.

இதையே விசாரித்து அறிய வேண்டும்.

அந்த திரையை ஆதாரமாகக் கொண்டு, திரைப்படம் திரையில் காணப்படுகின்றது. அதைப்போன்று, ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டுதான், இந்த மூன்று உடல்களும் உண்டாகி உள்ளன.

இந்த மூன்று உடல்களினால் உண்டான, ஐந்து கோஷங்களும் நம்முடைய கவனத்தை ஆத்மாவிடமிருந்து திருப்பி, இந்த ஸ்தூல உடல், மற்றும் சூக்ஷும மனம் ஆகிய இவைகளின் மீது ஈர்த்து விடுவதால், நமக்கு ஆத்மாவை இவைகள் மறைப்பது போல உள்ளது.

அடுத்து இந்த மூன்று உடல்களின் வாயிலாக **“ஐந்து கோஷங்கள்”** உள்ளன என்றும், அவைகள் முறையே,

**அன்னமய கோஷம்**
**பிராணமய கோஷம்**
**மனோமய கோஷம்**
**விஞ்ஞானமய கோஷம்**
**ஆனந்தமய கோஷம்** என்பனவாகும்.

கோஷம் என்பது **‘உறை’** என்று அழைக்கலாம்.

பஞ்ச கோஷங்கள் என்றால் ஐந்து உறைகள் என்று பொருள். மேற்கண்ட இந்த மூன்று உடல்களும் சேர்ந்ததே ஐந்து கோஷங்கள் ஆகின்றன.

### ***அன்னமய கோஷம் என்றால் என்ன?***

நம் உடலைப் பல்வேறு தத்துவங்கள் சார்ந்து, வேதாந்தம் வகைப்படுத்துவதைக் காணலாம்.

நம் உடல், ஆறுவிதமான ரஸங்களால் உருவாகும் ஏழு வேறுபட்ட தாதுக்கள் அடங்கியது எனலாம்.

கரு வளர்ந்து உருவாகும் காலத்தில், நம் உடலில் திரவ வடிவில் இருக்கும் பஞ்சீகரணமான பஞ்சபூதங்கள், ஆறு வேறுபட்ட பரிமாண மாற்றங்களை அடைகின்றன.

நம் உடலின் மூலமாக எந்த தாதுக்கள் உள்ளனவோ, அதே தாதுக்கள்தாம் நாம் புசிக்கும் உணவுக்கும் ஆதாரமாகவும் உள்ளன. நாம் இறந்தபின், நம்மை உண்ணப் போகும் நிலத்திற்கும், அதே தாதுக்கள் ஆதாரமாகின்றன. நாமும் அந்தத் தாதுக்களாகவே சிதைவோம். அன்னமே படைப்புக்கு ஆதாரமாக இருக்கின்றது. அன்னத்திலிருந்தே உயிர்களிடத்து விந்து உருவாகின்றது. அதிலிருந்தே எல்லா உயிரினங்களும் உண்டாகின்றன.

ஆணுக்கு சுக்கிலமும், பெண்ணுக்கு சோணிதமும் அன்னத்தினாலேயே உண்டாகின்றன. கருத்தரித்த பின், தாய் உண்ணும் அன்னத்தின் ரஸத்தால் சிசு வளர்கின்றது. பிறந்த பின் அன்னத்தினாலேயே விருத்தியடையும் இந்த உடல், இறந்த பின் அன்னாதாரமான மண்ணிலேயே ஒடுங்கி, சிதைந்து அழிந்துபட்டு அன்னமாகின்றது என்பது பொருள்.

நம் உடல், ஆறுவிதமான ரஸங்களால் உருவாகும் ஏழு வேறுபட்ட தாதுக்கள் அடங்கியது. நம் உடலில் திரவ வடிவில் இருக்கும் பஞ்சீகரணமான பஞ்சபூதங்கள், ஆறு வேறுபட்ட பரிமாண மாற்றங்களை அடைகின்றன.

ரஸ வடிவில் இருக்கும் அவற்றிலிருந்து இரத்தமும், இரத்தத்திலிருந்து மாமிசமும் (தசைகளும்), மாமிசத்திலிருந்து கொழுப்பும், கொழுப்பிலிருந்து நரம்புகளும், நரம்புகளிலிருந்து எலும்புகளும், எலும்புகளிலிருந்து ஊண் அல்லது மஜ்ஜையும், ஊணிலிருந்து சுக்கிலம்/சுரோணிதம் அல்லது விந்துவும் உண்டாகின்றன.

நம் பௌதிக உடல், இவ்வாறு மஜ்ஜையும், மஜ்ஜையைச் சுற்றி எலும்பும், எலும்பினிடையே நரம்புகளும், நரம்பைப் பற்றியவாறு தசைகளும், தசைகளினிடையே கொழுப்பும், யாவற்றையும் போர்த்துகின்ற தோலும், நாளங்கள் தோறும் இரத்தமும் ஆக விளங்குகின்றது. இதை நாம் ஸ்தூல உடல் என்று அழைக்கிறோம்.

உணவின் விகாரம்தான் இந்த ஸ்தூல உடல். அதாவது நாம் உண்ட உணவின் மாற்றம் இந்த பரு உடல் எனப்படும். இந்த ஸ்தூல உடல் உணவினால் உண்டாகி, உணவினால் வளர்ந்து, இறுதியில் மற்ற ஜீவர்களுக்கு உணவாகவே மாறி விடுகின்றது.

இந்த உடலை மண்ணில் புதைத்தால், புழு, பூச்சிக்கு உணவாகவும், எரித்து சாம்பல் ஆக்கி விட்டால், மரம், செடிகள் போன்ற தாவரங்களுக்கு சாம்பல் சத்தைக் கொடுக்கின்ற உரமாகவும் மாறி விடுகின்றது.

இப்படிப்பட்ட இந்த ஸ்தூல உடலே **"அன்னமய கோஷம்"** எனப்படும்.

***பிராணமய கோஷம் என்றால் என்ன?***

பிராணன் என்பது காற்றே. காற்று, உடலின் பல்வேறு இடங்களில் நிலைபெற்று, வேறு வேறு செயல்கள் நடக்க ஆதாரமாக இருக்கின்றது. இதுவரை நாம் கண்ட ஞான, கர்ம இந்திரியங்களும், இவை தவிர்த்து, உடல் முழுதும் உள்ள

பல்வேறு உப உறுப்புகளும் செயல்பட ஆதாரமாக இருப்பதும் காற்றின் இந்த இயக்கமே.

நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளிலும் பிராணன் எனப்படும் காற்று நிலை கொண்டுள்ளது. நம் உடலில் காற்றின் போக்கும் வரவும் இருப்பதாலேயே உடல் உறுப்புகள் செயல்படுகின்றன. எந்த உறுப்பை விட்டாவது, இந்த காற்று தத்துவம் நீங்கினால், அந்த உறுப்பு செயலற்றுப் போய் விடுகின்றது. அன்னமய கோசமான நம் ஸ்தூல உடலுக்கு, பிராணன் ஆதார சக்தியாகவும், கிரியா சக்தியாகவும் விளங்குகின்றது.

நாம் சுவாசமாக அறியும், நாசியின் வழியே உள்ளிழுத்து, வெளியே விடப்படும் இயக்கத்தில், காற்று '**பிராணன்**' என்று அழைக்கப்படுகின்றது.

இவைகள், ஐந்து வகைப்படுகின்றன.

அவைகள், பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்பனவாகும்.

இயக்கங்கள் சார்ந்து, பிராணனாகிய வாயு, பத்து விதமாக பகுக்கப்படுகின்றது. வாயுவின் மேல் நோக்கிய இயக்கம் **பிராணன்** என்றும், கீழ்நோக்கிய இயக்கம் **அபானன்** என்றும், எல்லாப் பக்கங்களிலும் இயங்கும் தன்மை **வியானன்** என்றும் அழைக்கப்படுகின்றன. மரணவேளையில் உயிர் வெளியேற உதவும் வாயு **உதானன்** ஆகும்.

உணவை ஜீரணிக்கவும், ரஸமாக மாற்றவும் உதவும் வாயு **சமானன்** ஆகும்.

தங்கம் ஒன்றே, அதுவே வளையாகவும், வங்கியாகவும், காதணியாகவும், சிலம்பாகவும், இடையணியாகவும், தான் எடுத்த உருவத்திற்கேற்ப அழைக்கப்படுகின்றது.

நீரானது, பொழியும் போது மழையாகவும், பொங்கிப் பிரவகிக்கும் போது நதியாகவும், தேங்குவதால் குளமாகவும், விழுந்தால் அருவியாகவும் அழைக்கப்படுகின்றது.

அவ்வாறே, காற்றாகிய பிராணன் என்பதும் ஒன்றே, தன் செயல் வேறுபாடுகளாலும், வடிவின் வேறுபாடுகளாலும், பிராணன், அபானன், வியானன், உதானன் மற்றும் சமானன் என்றவாறெல்லாம் அழைக்கப்படுகின்றது.

உடலுக்கு வெளியே பிராணனுக்கு இருப்பு இல்லாதது போல, வாக்கு, கண்கள், செவி, மனம் ஆகியனவற்றிற்கும் இருப்பு கிடையாது. எல்லா இந்திரியங்களின் செயல் பாட்டிற்கும், பிராணன் அடிப்படை சக்தியாக விளங்குகின்றது. எல்லா இந்திரியங்களுக்கும் ஆதாரமாக இருக்கும் சக்தியை, பிராணன் எனப்படுகின்றது. அன்னத்திலிருக்கும் சக்தியை கிரஹித்து, பிராணனே எல்லா இந்திரியங்களுக்கும் சக்தி அளிக்கின்றது.

மல நீக்கம் செய்யும் இயக்கத்தில், காற்று '**அபானன்**' என்று அழைக்கப்படுகின்றது.

இதை '**பாயூபஸ்தே அபானம்**' என்று *ப்ரச்ன உபநிஷத்து* குறிப்பிடுகின்றது. என்றாலும் கூட, நாசியால் உள்ளிழுக்கும் இயக்கத்தில், காற்றை '**பிராணன்**' என்றும், நாசியால் வெளிவிடப்படும் இயக்கத்தில், காற்றை '**அபானன்**' என்றும் அழைக்கப்படுவது வழக்கமாக உள்ளது.

இரத்த ஓட்டம் என்னும் இயக்கத்தில், காற்று '**வியானன்**' என்று அழைக்கப்படுகின்றது. கண்ணீர் சிந்துதல், வாந்தி எடுத்தல் போன்ற இயக்கங்களில், காற்று '**உதானன்**' என்று அழைக்கப்படுகின்றது. மரண வேளையில், உயிர் வெளியேற ஆதாரமாக இருப்பதும் இந்த உதானனே ஆகும்.

ஜீரணத்துக்கு ஆதாரமான காற்று, '**சமானன்**' என்று அழைக்கப்படுகின்றது. இது உணவை ஜீரணிப்பது, உணவு இரத்தத்துடன் சேரும்படி செய்ய, அதை ரஸமாக மாற்றுவது ஆகிய இயக்கங்களுக்கு ஆதாரமாய் இருக்கின்றது.

வாந்தி, ஏப்பம் போன்ற இயக்கங்களுக்கான வாயு **நாகன்** ஆகும். கண் இமைகளை இயக்கும் வாயு **கூர்மன்** ஆகும். பசி மற்றும் தாகம் **க்ருகலன்** என்ற வாயுவாலும், கொட்டாவி **தேவதத்தன்** என்ற வாயுவாலும் நிகழ்கின்றன.

நம் உடலின் ஆரோக்யம், **தனஞ்ஜயன்** என்ற வாயுவால் சீராகப் பராமரிக்கப்படுகின்றது.

எனினும், எளிமை கருதி, இவைகள் ஐந்தாக பகுக்கப்பட்டதையே கணக்கில் கொண்டு, ஐந்து வாயுக்களான

பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் ஆகிய **பஞ்ச வாயுக்களும்** வாய், கைகள், கால்கள், எருவாய், கருவாய் ஆகிய **ஐந்து கர்மேந்திரியங்களும்** சேர்ந்தது **"பிராணமய கோஷம்**" என்று அழைக்கப்படுகின்றது.

### *மனோமய கோஷம் என்றால் என்ன?*

நாம் ஏதேனும் ஒரு செயலிலோ, சிந்தனையிலோ ஆழ்ந்திருக்கும் போது, நம் புலன்கள் உள்வாங்கும் விசயங்களை கவனிக்காமல் தவற விடுகின்றோம். நம் 'மனம்' ஆதாரமாக இருந்து புலன்களின் வழி வரும் உள்ளீடுகளை கவனிக்காவிடில், அவை பதிவாவதை நாம் கவனிப்பதே இல்லை எனலாம்..

அதுப்போன்றே, ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டிருக்கும் போது, மனம், கேட்கும் சப்தத்தை தவற விடுகின்றது. காணும் காட்சிகளை, வீசும் நறுமணத்தை, உடலில் படும் ஸ்பரிசத்தை என எதையும் பதிவு செய்யத் தவறுகின்றோம். மனதை துக்கமோ, சுகமோ பாதித்திருக்கும்போது, உண்ணும் உணவின் ருசியும்கூட நமக்குத் தெரிவதில்லை.

மனதின் உதவியுடனேயே, நம்மால், புலன்கள் வழியாக உள்வாங்கப்படும் விசயங்களை, கிரஹித்து, உணர முடிகின்றது. ஆக, 'ஞான இந்திரியங்களுக்கு ஆதாரமாக இருப்பது' மனதின் பண்புகளில் ஒன்றாக இருக்கின்றது.

இந்த எண்ணங்கள், புலன்களிலிருந்து விளைவது கிடையாது என்பதை நாம் அனுபவத்தில் அறிகின்றோம். ஆக, புலன்களுக்கு, தானாகவே விசயங்களை அறிந்துக் கொள்ளும் திறனோ, உணரும் ஆற்றலோ, விசயங்களாலான அனுபவமோ இல்லை என அறிகிறோம்.

விசயானுபவங்கள், நம்முள் வேறு எங்கோதான் எண்ணங்களை விளைவிக்கின்றன. அந்த எண்ணங்களே விசயங்களை உணர, நமக்கு காரணமாக இருக்கின்றன. அந்த எண்ணங்கள் வேறெந்த விசயத்திலோ, உணர்விலோ ஒன்றி, அதையே பற்றி நிற்கும்போது, இந்திரியங்கள் முன்னிற்கும் விசயங்களை, (இந்திரியங்கள் உள்வாங்கிய வாறே இருந்தாலும்), நாம் அறிவதில்லை.

காதுகளும், அவற்றிற்கு ஆதாரமாக மனமும் ஒருங்கே இணைந்தே சப்தத்தை கிரஹிக்கின்றன. கண்களும், அவற்றிற்கு ஆதாரமாக மனமும் ஒருங்கே இணைந்தே காட்சியை கிரஹிக்கின்றன. தோல், நாக்கு, மூக்கு ஆகிய இந்திரியங்களும், இவ்வாறே மனதுடன் ஒருங்கிணைந்து விசயங்களை கிரஹிக்கின்றன.

மனம் ஒரு நிலையில் இல்லாமல், எப்பொழுதும் சஞ்சலப்படும் இயல்பை உடையது. புலன்கள் வழி உள் வாங்கப்படும் விசயத்தை பரிசீலித்து, விசாரித்து அதன் இயல்புகள் குறித்து சந்தேகம் கொள்வது மனதின் இயல்பு எனலாம்.

எழும் ஒவ்வொரு புதிய எண்ணங்களின் ஒவ்வொரு பரிமாணத்தையும்கூட இவ்வாறே, பரிசீலித்து, விசாரித்து, அதன் இயல்புகளை சந்தேகிப்பதும் மனமே.

இது கருப்பா பச்சையா, இது உண்மையா பொய்யா, இதைச் செய்யலாமா, செய்யக் கூடாதா, இது தர்மமா, அதர்மமா என, மனதின் சந்தேகங்களுக்கு எல்லையே இல்லை.

மனதின் இயல்பு சந்தேகம் என்றால், புத்தியின் இயல்பு நிச்சயம் அல்லது தீர்மானம் செய்வது ஆகும்.

இதையே '**நிஸ்சயாத்மிகா புத்தி**' எனப்படுகின்றது.

கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, தோல் ஐந்து ஞானேந்திரியங்களுடன் மனது சேர்வது **“மனோமய கோஷம்”** எனப்படும்.

## *விஞ்ஞானமய கோஷம் என்றால் என்ன?*

ஞானேந்திரியங்கள் வழியான மனதின் விருத்திகள், மனோமயகோசம் என்பதுப்போல ஞானேந்திரியங்கள் வழியான புத்தியின் விருத்திகள் **விஞ்ஞானமய கோசம்** என்று அழைக்கப்படுகின்றது.

அதாவது, ஐந்து ஞானேந்திரியங்களுடன் புத்தி சேர்வது **“விஞ்ஞானமய கோஷம்”** எனப்படும்.

## *ஆனந்தமய கோஷம் என்றால் என்ன?*

அறியாமையுடன் கூடிய அவித்யாரூபமான காரண சரீரமே **“ஆனந்தமய கோஷம்”** எனப்படும்.

அதாவது, மூன்று அவஸ்தைகளைக் கடந்து, மூன்று சரீரங்களுக்கும், ஐந்து பிராணன்களுக்கும், ஐந்து கோஷங் களுக்கும், ஐந்து இந்திரியங்களுக்கும் வேறுபட்டதாக இருப்பது எதுவோ, அதுவே **“ ஆத்மா”** எனப்படும்.

ஆனால், நாம் இந்த இருபத்தி ஒன்று தத்துவங் களையும் பிடித்துக்கொண்டு, **“நான்”** என்று இந்த உடலையும், மனதையும் அபிமானித்துக் கொண்டு அஹங்காரத்தினால் தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

அன்னமய கோஷம் என்பது **“ஸ்தூல உடல்”** ஆகும். பிராணமயகோஷம், மனோமயகோஷம், மற்றும் விஞ்ஞானமயகோஷம் ஆகிய மூன்று கோஷங்களும் சேர்ந்ததுதான் **“சூக்ஷும உடல்”** எனப்படுகின்றது.

ஆனந்தமயகோஷம் என்பது **“காரண உடல்”** என்றும் ஆகின்றன.

## 17. மூன்று அவஸ்தைகள்

அடுத்தது, மூன்று விதமான அவஸ்தைகள் அறிமுகப் படுத்தப்படுகின்றன. அவைகள் முறையே,

**ஜாக்கிரதா அவஸ்தை** – விழிப்பு நிலை – ஸ்தூல உடல்

**ஸ்வப்ன அவஸ்தை** – கனவு நிலை – சூக்ஷ்ம உடல்

**சுஷுப்தி அவஸ்தை** – ஆழ்ந்த உறக்க நிலை – காரண உடல் என்பனவாகும்.

இந்த **விழிப்பு, கனவு, உறக்கம்** என்ற மூன்று அவஸ்தைகளையும் அனுபவிக்காமல், சாட்சியாக எது இருக்கின்றதோ அதுவே, “ **ஆத்மா**” என்று சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

அதாவது, மூன்று உடல்கள், ஐந்து கோஷங்கள், மற்றும் மூன்று அவஸ்தைகள் என **பதினொன்று தத்துவங்கள்** முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு, அவைகள் முற்றிலும் ஆத்மா விடமிருந்து வேறானவைகள் என்று அறிவுறுத்தப்படுகின்றன.

***மூன்று அவஸ்தைகள் என்னென்ன?***

ஜாக்ரத், ஸ்வப்ன, சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளை விழிப்பு நிலை, கனவு நிலை, மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை என்ற மூன்று **'அவஸ்தைகள்'** அல்லது **'அவஸ்தாத்ரயம்'** என்கின்றோம்.

***விழிப்பு நிலை என்றால் என்ன?***

இந்த ஸ்தூல உடலின் மீது அபிமானம் வைத்து அனுபவப்படுவது **"ஜாக்ரத் அவஸ்தை"** அல்லது **"விழிப்பு நிலை"** எனப்படும்.

இங்கு ஸ்தூல உடல் அபிமானியான **"நான்"** என்ற இந்த ஆத்மா **"விஸ்வன்"** என்று அழைக்கப்படுகிறது.

***கனவு நிலை என்றால் என்ன?***

கனவு நிலை என்பது, விழிப்பு நிலையில் எதை யெல்லாம் நாம் பார்த்து அனுபவித்தோமோ, அவைகள் எல்லாம், சித்தத்தில் சம்ஸ்காரமாக சேகரிக்கப்பட்டுள்ளது.

அந்த சம்ஸ்காரங்கள் மேலெழுந்து, அவைகள் மூலமாக ஒரு உலகம் தோற்றுவிக்கப்பட்டு அந்த உலகத்தை நாம்

சூக்ஷுமம உடலில் அனுபவிப்பதுதான் **"கனவு நிலை"** அல்லது **"ஸ்வப்ன அவஸ்தை"** எனப்படும்.

சூக்ஷுமம உடல் அபிமானியான **"நான்"** என்ற இந்த ஆத்மா **"தைஜஸன்"** என்று அழைக்கப்படுகிறது.

***ஆழ்ந்த உறக்க நிலை என்றால் என்ன?***

ஆழ்ந்த உறக்கத்தில் இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒன்று அறியாமை, இனி ஒன்று ஆனந்தம் என உள்ளது.

உறங்கி விழித்தெழுந்தவுடன் நான் எதையும் அறியவில்லை என்றும், அதேசமயம் ஆனந்தமாக உறங்கினேன் என்றும் கூறுவதிலிருந்தே, இந்த இரண்டும் இருப்பது தெரிகின்றது.

எங்கு முழுமையான அறியாமையும், முழுமையான ஆனந்தமும் அனுபவிக்கப்படுகின்றதோ, அது ஆழ்ந்த உறக்கம் எனப்படும்.

நாம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தாலொழிய, நம் ஸ்தூல உடல் அல்லது நம் பௌதீக உடலோடு தொடர்பு படுத்திக் கொள்வதில்லை. கனவு வந்தாலொழிய, சூக்ஷம உடலுடனும் தொடர்புபடுத்திக் கொள்வதில்லை. கனவில்லாத ஆழ்ந்த உறக்கத்தில், நாம் தொடர்புபடுத்திக் கொண்டு விளங்கும் உடல் ஒன்று உண்டு. அது ஸ்தூல உடலுக்கும், சூக்ஷம உடலுக்கும் காரணமாக விளங்குவதால், **காரண**

**உடல்** எனப்படுகின்றது. ஸ்தூல உடலும், சூக்ஷும உடலும் செயல்கள் ஓய்ந்த போது வெளிப்படும் காரணஉடலே **ஆனந்தமய கோஷம்** என்றும் அழைக்கப்படுகின்றது.

இந்த ஆழ்ந்த உறக்கத்தில், காரண உடலில் மட்டுமே நம்முடைய அபிமானம் இருக்கும்.

காரண உடல் அபிமானியான **"நான்"** என்ற இந்த ஆத்மா, **"பிராஜ்ஞன்"** என்று அழைக்கப்படுகிறது.

இதுபோன்று, ஜீவனானவன் **விஸ்வன், தைஜஸன், பிராஜ்ஞன்** என மூன்று நிலைகளிலும் இருக்கின்றான்.

ஆனால், ஆத்மாவோ, இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாக (அவஸ்தா திரய சாட்சியாக) இருக்கின்றது.

# 18. ஆத்மா

### *ஆத்மா என்றால் என்ன?*

ஆத்மா என்றால், **“நான்”** என்று அறிந்து கொள்வது சிறப்பு.

இதற்கு உதாரணமாக, ஒருவர் என்னைப் பார்க்க காலையில் வருகின்றார். மற்றொருவர் மதியம் என்னைப் பார்க்க வருகின்றார். இனி ஒருவர் இரவில் என்னைப் பார்க்க வருகின்றார்.

இதில் ஒருவர் வந்து என்னைப் பார்த்துவிட்டுச் சென்றதை மற்றவர்கள் அறிய முடியாது. ஆனால், இந்த மூவரும் வந்து விட்டுப் போனதை ஒருவர் மட்டுமே அறிவார்.

அவர் யாரென்றால், அது **“நான்தான்”.**

இதுப்போலவே, நம் ஒவ்வொருவருக்கும், மூன்று அவஸ்தைகளும் மாறி, மாறி வருகின்றது.

இதில் விழிப்பு நிலையில் இருக்கின்ற நான், கனவு நிலையிலோ, ஆழ்ந்த உறக்க நிலையிலோ இப்பொழுது இல்லை, அதுவே, கனவு நிலையில் இருக்கின்ற நான், விழிப்பு நிலையிலோ, ஆழ்ந்த உறக்க நிலையிலோ இல்லை.

அதுப்போலவே, ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கின்ற **நான்** மேற்கண்ட இரண்டு நிலைகளிலும் இல்லை.

ஆனால். இந்த மூன்று நிலைகளையும் அறிகின்ற ஒருவன் எப்பொழுதும் இருக்கின்றான். அவன் மட்டுமே உண்மையில் இந்த மூன்று அவஸ்தைகளையும் அறிபவன் ஆவான்.

எவன் ஒருவன் இந்த மூன்று அவஸ்தைகளையும் அறிகின்றானோ, அவனே **“நான்”** அல்லது **“ஆத்மா”** ஆகும்.

என்னுடைய அபிமானம் ஸ்தூல உடல் வரைக்கும் எவ்வளவு முழுமையாகச் செல்கின்றதோ?, அப்படிப்பட்ட **“விஸ்வன்”** ஆகிய **“நான்”** ஸ்தூல உடல் வரை அபிமானம் வைத்து, விழிப்பு நிலையில் இந்த பிரபஞ்சத்தை அனுபவிக்கின்றேன்.

கனவு நிலையில் **“தைஜஸன்”** ஆகிய **“நான்”** ஸ்தூல உடலினுடைய அபிமானத்தை விட்டு விட்டு, சூக்ஷும உடலான மனதுடன் மட்டும் அபிமானம் வைத்து, கனவு நிலையில் ஒரு பிரபஞ்சத்தை படைத்துக் கொண்டு அனுபவிக்கின்றேன்.

ஆழ்ந்த உறக்க நிலையில் **“பிராஜ்ஞன்”** ஆகிய **“நான்”** ஸ்தூல உடல், சூக்ஷும மனம் ஆகிய இரண்டின் மீதும் உள்ள அபிமானம் இன்றி, சுஷுப்தி அவஸ்தையில் (காரண நிலையில்) ஒடுங்கி இருப்பதால், அங்கு அறியாமையும்,

ஆனந்தமும் உண்டாகி, என்னை மறந்த நிலையில் இந்த ஸ்தூல உடலையும், இந்த ஸ்தூல உலகத்தையும் விட்டு இருக்கின்றேன்.

இதிலிருந்து நாம் அறிய வேண்டிய உண்மை என்னவெனில், நாம் **ஸ்தூல, சூக்ஷும**, மற்றும் **காரண** உடல்களின் மீதுள்ள அபிமானத்தை விடவும், வைக்கவும் முடியும் என்றால், இது என்னுடைய **'உண்மை நிலை அல்ல'** என்பதை அறிய வேண்டும்.

எது எல்லாம் விடப்படுகின்றனவோ, அது என்னுடைய உண்மையான நிலை அல்ல. ஆகவே, எது என்னுடைய உண்மையான நிலையோ, அதை ஒரு பொழுதும் என்னால் விட முடியாது.*

உதாரணமாக, ஒருவனுடைய கை என்பது அவனது உடலுடன் சேர்ந்த ஓர் உறுப்பு ஆகும். ஆனால், அவனது கையில் கட்டியிருக்கும் கைக்கடிகாரம் அவனது உடலில் உள்ள ஒரு உறுப்பு அல்ல.

எனவே, அவன் கைக்கடிகாரத்தின் மீது அபிமானம் உண்டாகும் போது மட்டும் கையில் கட்டுவதும், அபிமானம் இல்லாத போது, அந்த கைக்கடிகாரத்தை கையில் கட்டாமல் கழற்றி விடவும் முடியும்.

ஆனால் அவனது கையின் மீது அபிமானம் இருந்தாலும், இல்லையென்றாலும் அந்த கையை அவனால் விட முடியாது.

இதுபோன்று, எது என்னுடைய உண்மை ஸ்வரூபமோ அதை என்னால் விட முடியாது. ஆனால், இந்த **ஸ்தூல, சூக்ஷ்ம,** மற்றும் **காரண** என்ற மூன்று சரீரங்களையும் வேண்டாம் என்ற பொழுது (மூன்று அவஸ்தைகள் மாறும் பொழுது) விட முடியும் என்றால், அது என்னுடைய உண்மை ஸ்வரூபம் அல்ல.

அப்படியானால், இந்த மூன்று உடலுக்கும் வேறாக நின்று, இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாக ஒன்று இருக்கின்றது என்றால், அதுவே **"நான்"** அல்லது **"ஆத்மா"**.

அதுவே என்னுடைய **உண்மை ஸ்வரூபம்** ஆகும்.

சரி! இந்த ஆத்மா என்பது **"நான்"** என்றோ, அல்லது **"நான் இந்த உடல் அல்ல!, ஆத்மா"** என்று தெரிந்து கொள்வதினால் என்ன பயன்?

இப்படி ஒரு கேள்வி எழும் பொழுது, நாம் இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் வேறாக, அதாவது விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்ற மூன்று நிலைகளுக்கும் வேறாக நம்மைப் பார்க்காமல், இந்த மூன்று அவஸ்தைகளையும் அனுபவிப் பவனாகவே (போக்தாவாக) நம்மை நாம் இந்த உடலின் மீது அபிமானம் கொண்டு பார்க்கின்றோம்.

ஆனால், இந்த மூன்று உடல்களுக்கும் **'சாட்சி'** என்பது சம்பவத்தில் தொடர்பு கொள்ளாமல், அதனால் எந்தவித பாதிப்புக்களையும் அடையாமல், அந்த சம்பவத்தை வேடிக்கை

மட்டும் பார்த்துக் கொண்டிருப்பது எதுவோ, அதுவே **“ஆத்மா”** எனப்படும்.

இதுவே, சம்பவத்தில் கலந்துக்கொண்டு, அதில் ஆர்வமுடன் ஈடுபட்டு, அதனால் அபிமானம் கொண்டு, பாதிப்புக்கு உள்ளாகுகின்றவனை **“கர்த்தா”** (அல்லது) **“போக்தா”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

அத்தகைய கர்த்தா என்று இங்கு குறிப்பிடப்படுவது கண்ணிற்குத் தெரியாத சூக்ஷ்ம மனமானது, இந்த கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடலினைக் கொண்டு, செயல்களைச் செய்து வருவதினால், செயலைச் செய்கின்ற **கர்த்தா** என்றும், செயலை அனுபவிக்கின்ற **போக்தா** என்றும் அறிய வேண்டும்.

ஆதாவது, மனம் ஆசைகளை அனுபவிக்கின்ற போக்தாவாக இருந்துக் கொண்டு, செயல்களைச் செய்கின்ற உடலின் வாயிலாக கர்த்தாவாகவும் இருக்கின்றது.

# 19. மனிதனின் மனம்

***மனம் என்பது என்ன? அது எங்குள்ளது?***

இந்த மனதின் விபரங்களை விசாரித்து அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அதை விடுத்து மனம் போன போக்கில் செல்கின்றவர்கள் இறுதியில் இந்த மனிதப் பிறவியின் மகத்துவம் அறியாமலேயே இந்த பரு உடலை விடுகின்றனர்.

மனம் என்பது கண்ணிற்குப் புலப்படாத ஒரு அதிசய சக்தி. இது, இந்த ஸ்தூல சரீரத்தின் வாயிலாகவே செயல் படுகின்றது.

ஒருவனது விருப்பம், வெறுப்பு, சங்கற்பம், சந்தேகம், நிச்சயத்தன்மை, மற்றும் அன்பு, பக்தி, கருணை, சந்தோசம் போன்ற அனைத்தும் இந்த மனதினாலேயே அவனுக்கு வெளிப்படுகின்றது.

மனம் என்பது சிலர் கருதுவது போன்று மூளை என்ற உடல் உறுப்பு அல்ல. காரணம், மனம் இந்த ஸ்தூல தேகத்தின் வாயிலாக செயல்படினும், அவனது ஆழ்ந்த உறக்கத்திலும், மூர்ச்சை அடைந்து விழுந்துள்ள போதிலும் மனம் செயல்படுவதில்லை. ஆனால், மூளை அப்பொழுதும் அவனது சரீரத்தில் இருக்கின்றது.

ஆகவே, மனம் செயல்படுகின்ற நிலை என்பது ஒருவனது விழிப்பு மற்றும் கனவு நிலைகளில் மட்டுமே ஆகும்.

இதிலிருந்து மனம் என்பது ஸ்தூல தேகத்துடன் தொடர்பு கொண்டிருந்தாலும், அது ஒரு குறிப்பிட்ட உறுப்பு களைப் போன்று செயல்படுவதில்லை.

உதாரணமாக, கனவு நிலையிலும் மூளை உடலில் இருந்தாலும், அது செயல்படுவதில்லை. இருப்பினும், மனம் கற்பனையாக பலவற்றை படைத்துக் கொண்டு அனுபவப் படுகின்றது.

இங்கு முளைக்கு வேலை இல்லை. ஆனால், மனம் வேலை செய்கின்றது. பொதுவாக, மனம் செயல்படுவது உணர்ச்சிகளின் அடிப்படையில், ஆனால், மூளை செயல் படுவது சிந்தனைகளின் அடிப்படையில் என்பதை அறிய வேண்டும்.

இத்தகைய மனம் கண்ணிற்குப் புலப்படாத வகையில் எங்கும் பரவியுள்ளதினால், அனைத்து இந்திரியங்களிலும் கலந்து செயல்படுகின்றது என்று கருதினால், அது தவறு.

காரணம், ஒருவர் ஆழ்ந்து ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது, யாராவது அவரை அழைத்தாலும் அவரது மனம் அதை கவனிப்பது இல்லை. அதாவது, கண்கள் ஒன்றை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, காதுகள் கேட்பதில்லை.

அவர் ஒரு காரியத்தில் கருத்தாக இருக்கும் பொழுது, மற்ற காரியங்களில் மனம் செல்வதில்லை என்பதிலிருந்து மனம் எங்கும் பரவிய நிலையில், அனைத்து இந்திரியங்களில் நிறைந்துள்ளது என்றும் கூற முடியாது. அப்படி இருந்தால், காதும் நிச்சயமாக கேட்டிருக்க வேண்டும்.

ஆகவே, மனம் மிகவும் நுண்ணியது, சூக்ஷூமமானது, அணுவுக்கு அணுவானது என்பதினால், அதை இந்திரியங்களின் வாயிலாக அறியலாமா? எனில், அதுவும் முடியாது.

உதாரணமாக, ஒருவன் திண்பண்டமான முறுக்கை விரும்பி சாப்பிடும் பொழுது, கண் அதைப் பார்த்தும், மூக்கு அதன் மணத்தை முகர்ந்தும், நாக்கு அதன் சுவையை அறிந்தும், காது கடிக்கும் சப்தத்தை கேட்டும் கொண்டிருந்தாலும், மனம் அவைகளை வைத்தே, அனைத்து இந்திரியங்களும் சமகாலத்தில் வேலை செய்வது போன்று சூக்ஷூமமாக அறிகின்றது.

ஆனால், உண்மை அப்படியல்ல.

உதாரணமாக, தாமரை இதழ்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு, அவைகளை ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கி வைத்து, ஒரு ஊசியை எடுத்து அந்த இதழ்களை துளைத்தால், ஒரு நொடிப் பொழுதில் அந்த ஊசி அனைத்து இதழ்களையும் துளைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து விடுவது போன்று காணப்படும்.

இருப்பினும், உண்மை அப்படி அல்ல.

அதாவது, ஒவ்வொரு இதழோடும் ஊசி சம்பந்தம் கொண்ட நேரம் க்ஷண நேரத்திலும் மிகக் குறைவாக மாறுபட்டு இருந்ததை நம்மால் அறிய முடியவில்லையே தவிர, ஒரே நேரத்தில் ஊசி உள்ளே நுழைந்தது போன்று ஒரு பிரம்மையை நமக்கு உண்டாக்கியது. இதுதான் மனதின் மாயா விளையாட்டு.

இதுப்போன்றே, முன்பு கூறிய முறுக்கு சாப்பிடும் விசயத்திலும், அனைத்து இந்திரியங்களும் சம காலத்தில் அறிந்தது போன்று காணப்படினும், மனதின் நுட்பம் நமக்கு பிடிபடுவதில்லை.

இதிலிருந்து உடல் உறுப்புகளில் மனம் இல்லை. மேலும், அந்த உறுப்புகளான இந்திரியங்களின் வாயிலாக மனதை அறிய முடியாது என்பதும் உறுதி செய்யப்படுகின்றது.

உண்மையில் மனம் என்பது **“ஜீவன்”** ஆகும்.

ஆம்! ஜீவன் ஆன்ம சொரூபத்தில் பிரதிபிம்பிக்கின்ற **ஓர் அதிசயசக்தி** என்பதை அறியாததினால், மனிதன் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களினால் எழுந்த அஹங்காரத்தின் உச்சத்தில் தன்னை **“நான்”** என்று சதா பிரகடனப்படுத்திக் கொண்டு இருக்கின்றான்.

இப்படிப்பட்ட ஜீவனின் சூக்ஷும சரீரம்தான் இந்த கண்ணுக்குத் தெரியாத **மனம்**.

(மலம் உருட்டும் வண்டு மலத்தை சிறிய மண் உருண்டை போன்று உருட்ட ஆரம்பித்து, அந்த உருண்டை மண்ணில் உருண்டு வர, வர பெரிய மண் உருண்டையாக மாறி, இறுதியில் அந்த மண் உருண்டை வண்டுவை விட மிகப் பெரியதாக மாறி, வண்டினால் உருட்ட முடியாத அளவிற்கு பெரிதாகி விடுகின்றது. அதுபோன்று, சிறு, சிறு எண்ணங்கள் உண்டாகி, இறுதியில், அந்த எண்ணங்கள் பல்கிப் பெருகி மிகப் பெரிய மனமாக மனிதனால் மாற்ற முடியாதவாறு மாறிவிடுகின்றது.)

எண்ணங்களாகத் தோன்றுகின்ற நினைவுகளை எல்லாம் நீக்கிப் பார்க்கின்ற பொழுது தனியாக மனம் (ஜீவன்) என்ற ஒன்று இல்லவே இல்லை.

சம்ஸ்காரங்களாக (காரண தேகத்தில்) பதித்துக் கொண்ட மொத்த நினைவுகளின் தொகுப்பே மனம்.

விசாரித்துப் பார்த்து தன் உண்மை சொரூபத்தை (ஆத்மாவை) அறிகின்ற பொழுது, அது இந்த உடல் அல்ல, பிராணன் அல்ல, மனம் அல்ல, என்பதும், பல பேதமைகளுடன் கூடிய நிலையற்ற தன்மை கொண்ட இவைகள் நிச்சயமாக அறிவாக (ஆத்மாவாக) இருக்க முடியாது என்பது விளங்கும்.

அந்த அறிவை மனம் என்ற கரணத்தின் (கருவியின்) வாயிலாக வெளி எண்ணங்களை தவிர்த்து, அதே மனதினை கொண்டு, உள்முகமாக திரும்பி பார்த்தால் அந்த **அறிவு** (ஆத்மா) பிரகாசிக்கும்.

அவ்வாறு பார்க்க வேண்டியது, நம்முடைய புறக்கண்களான இந்த ஊனக்கண்களை கொண்டு அல்ல. சற்றே திரும்பி, உள்ளே கனவுக் காட்சிகளைப் பார்க்கின்ற அகக்கண்ணை *(மனம்) கொண்டு பார்க்க வேண்டும்.

எவ்வாறு, அகக் கண்ணை (மனம்) கொண்டு, உள்ளே திரும்பிப் பார்ப்பது எனில், ஒரு பொருளைப் பார்க்க வேண்டுமென்றால், அதற்கு முன்பு பார்த்துக் கொண்டிருந்த பொருளிலிருந்து மனதைத் திருப்புவதுடன் மட்டும் நிற்காமல், இனி பார்க்கப் போகின்ற பொருளுடன் மனதை கொண்டு சென்று, அதனுடன் ஒன்றினால்தான் அந்த பொருள் பார்க்கின்றவனுக்கு **'இன்னது'** என்று புலப்படும்.

மனம் அந்தப் பொருளுடன் ஒன்று சேராமல் அங்கு காட்சி தோன்றாது. இதுபோன்றே மனம் கலவாத போது, காதும் கேட்பதில்லை. உடலும் உணர்வதில்லை.

அதாவது, மனம் இன்றி எந்தப் புலன்களும் எதையும் அறிய முடியாது.

மேலும், மனதிடத்தில் உண்டாகும் சுகமும், துக்கமும் மனதின் கலப்பாலேயே உண்டாகின்றது. மனம் எதைப்

பற்றிக்கொண்டுள்ளதோ, அதிலிருந்து விடுபட்டு திரும்பாமல், மற்ற எந்த ஒன்றையும் புத்தியால் அறிய முடியாது.

உதாரணமாக, இந்த உலகம் பார்ப்பதற்கு பரவசமாகவும், அனுபவத்திற்கு ஆனந்தமாகவும், அறிவதற்கு ஆச்சரியமாகவும் சிலருக்கு இருக்கின்றது, அதுவே, இதே உலகம் மேலும் சிலருக்கு, பார்ப்பதற்கு துயரம் நிறைந்ததாகவும், அனுபவத்திற்கு மிகவும் துக்கமாகவும் தோன்றுகின்றது.

இந்த இரண்டு விதமான தோற்றங்களும், அனுபவங்களும் அவரவர்களின் மனதின், புத்தியின் வெளிப்பாடே ஆகும்.

மனதினைக் கொண்டே இந்த உலகம் விரிகின்றது. அவரவர்களுக்கு கிடைக்கின்ற அனுபவத்திற்கு ஏற்றவாறு, புத்தியினால் இந்த உலகம் காட்சியளிக்கின்றது.

காண்பவன், காட்சி, காணப்படும் பொருள் அனைத்தும் காண்பவனைப் பொருத்தே இருக்கின்றது.

உதாரணமாக, நீர் பாதி அளவே ஊற்றப்பட்ட ஒரு கண்ணாடி டம்பளரை ஒருவன் பார்க்கின்றான். அவனது பார்வையில் நீரின் அளவு குறைவாக உள்ளதை கவனித்து, அதை ஒரு குறையாக நினைக்கின்றது அவனது மனம்.

மற்றொருவன் பார்வையில் நீரின் அளவு கண்ணாடி டம்பளரில், பாதி நிறைந்துள்ளதை நினைத்து அதை நிறைவாக நினைக்கின்றது அவனது மனம்.

இந்த இரண்டுக்கும் உள்ள முரண்பாடு அவரவர்கள் மனதைச் சார்ந்தது.

அதுப்போலவே, மனம் ஒரு பொருளைப் பார்க்க விரும்பினால், அப்பொருளிடம் ஆசை உண்டாக வேண்டும்.

அப்பொழுதுதான், ஏற்கனவே பற்றிக் கொண்டிருக்கின்ற ஒன்றை விட்டு விட்டு, புதிய பொருளை விரும்பி பற்றுவதினாலேயே, மனம் திரும்ப முயற்சிக்கின்றது.

அந்த பொருளிடமிருந்து, மனதை இந்த பொருளுக்கு திருப்பவும் முடிகின்றது.

மனம் இரண்டு காட்சிகளை ஒரே சமயத்தில் பற்றிக் கொள்ளாது. உதாரணமாக, ஒரே காட்சியில் ஒரு பறவையையும், ஒரு மரத்தையும் ஒன்றாகக் கண்டாலும், மனம் உடனே ஆராய்ந்து, அது ஒரு காகம் என்றும், அந்த மரம் ஒரு தென்னை மரம் என்றும் பிரித்தே அறிந்து கொள்ளும்.

காரணம், மனதின் முற்பதிவுகளைப் பொருத்தே, அவைகளை இவ்வாறு பிரித்து அறிந்து கொள்ளும்.

இந்த நினைவுகளாலேயே இந்த உலகை படைத்துக் கொண்டு, இதனுடன் ஒன்றி, நான் படித்தவன், நான் பணக்காரன், நான் சிவ பக்தன், சக்தி உபாசகன், சேவை செய்கின்றவன், பொறுக்கி, அப்பாவி, பகுத்தறிவுவாதி, அரசியல்வாதி, மந்திரி, பக்தன், ஞானி, யோகி என்று பலவாறாக தன்னை கற்பனை செய்து கொண்டு, அதிலேயே சிக்கிக்கொண்டு நினைவுகளின் பதிவுகளிலிருந்து வெளியே வர மறுக்கின்றது.

இந்த மனம் ஆத்ம சொரூபத்திலிருந்து வெளியே வந்ததினால், இந்த உலகத்தை உண்மையாகக் கருதுகின்றது.

இதே மனம் மீண்டும் திரும்பி ஆத்மாவுடன் சென்று ஒன்றினால் இந்த உலகத்தை உண்மையாகக் கருதாது.

அதாவது, தன்னைப் பற்றிய தவறான பதிவுகள் நீங்கி **“ஆத்மா”** என்ற தன் உண்மை நிலைக்கு வந்து விடும்.

அதன்பிறகு, இருமைகள் அற்ற எந்த பேதங்களும் இன்றி தன்னில் தானாய் ஆத்ம சொரூபத்தில் சுத்த, புத்த, முக்த சுயம்பிரகாச அறிவாக அனைத்திலும், எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

அது, இதற்கு முன்பும் இருந்தது. இப்பொழுதும் இருக்கின்றது, இனியும் இருக்கும். ஆனால், அந்த ஆத்மாவை

(அறிவை) அறியும்வரை இந்த மனம் தன்னை உணராது இருக்கும்.

இந்த நிலையை அடையத்தான் பலரும், பாதை தெரியாமல் பல மதங்களை உருவாக்கிக் கொண்டு அலைகின்றார்கள்.

மதங்களின் பிடியில் சிக்கிக்கொண்ட மனிதன் (ஜீவன் அல்லது மனம்) தன்னை அறிய ஆர்வம் இல்லாமலும், தன்னை அறியும் ஆர்வம் வந்தாலும், எப்படி அதை அறிவது என்று தெரியாமல் இந்துவாக பல கோவில்களுக்கும், கிறிஸ்துவனாக பல சர்ச்சுகளுக்கும், முஸ்லீமாக பல தர்காக்களுக்கும் சென்று இறைவ(தன்)னைத் தேடுகின்றனர்.

இவர்களது தேவைகளை பூர்த்தி செய்து வைக்கின்ற ஒரு கண்ணுக்குத் தெரியாத கருவியாக மட்டுமே கடவுளை காண்கின்றனர்.

மேலும், பலவிதமான சாதனைகளைப் பிடித்துக் கொண்டு (பூஜை, ஜபம், பிராணாயாமம், யோகா, உபாசனை, கர்மங்கள்) மனதை சுத்தி செய்யாமல், அந்த சாதனைகளையே தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு அதிலேயே இது உயர்ந்தது, இது தாழ்ந்தது என்ற இருமைகளால் உண்டான எண்ணங்கள் இருக்கும்வரை, ஞானம் என்பது உண்டாகாது.

அதிலே, ஒருசிலர், தனக்கு பக்தி மட்டுமே போதும், யோகம் என்பது என்னவோ உடற்பயிற்சி சமபந்தமானது

என்றும், அதிலே, ஞானம் என்பதெல்லாம் நமக்கு ஏறவே ஏறாது என்ற பலவிதமான அறியாமைகளை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

இவர்கள் செய்யக்கூடிய பூசை, புணஸ்காரங்கள் போன்றவைகள் எல்லாம் தன் மனதின் சித்த சுத்திக்காக மட்டுமே உண்டான சாதனைகள் என்பதைக்கூட ஏற்றுக் கொள்ள மனமின்றி, தங்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து மறைந்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பொதுவாக, இப்படிப்பட்ட மனதின் வெளிமுகப் பார்வையில் மனமானது இரண்டு நிலைகளில் செயல்படுகின்றது.

அவைகளில் ஒன்று 'பார்த்து அறிதல்', மற்றொன்று, 'திரும்பி அறிதல்' என்ற இரு நிலைகளாகும்.

மனதின் இந்த இருமைத் தன்மையே பொருளைக் காட்சிப்படுத்துகின்றது.

ஆனால், ஆத்மாவை அறிய வேண்டுமானால், மற்ற வெளிப் பொருள்களை பற்றியுள்ள மனதை, அதிலிருந்து விடுவித்து உள்முகமாக திருப்புதல் மட்டுமே செய்தால் போதுமானது.

அவ்வாறு திருப்பி விடப்பட்ட மனம், உள்முகமாக திரும்பியவுடன், அங்கே பற்றிக் கொள்ள ஏகவஸ்துவான

ஆத்மாவைத் தவிர, பேதமை கொண்ட இருமைகள் இல்லாத காரணத்தினால், இத்தனை காலம் அறியாமல் இருந்த தன் மூலத்தை உணர்ந்து, அந்த ஆத்மாவுடன் தன்னை கரைத்துக் கொள்கின்றது.

இனி, மனம் என்ற ஒன்று தனியாக இல்லை.

இருப்பது அந்த அறிவு (ஆத்மா) மட்டுமே என்பதினால், இவ்வளவு காலமும் வெளிப் பொருட்களைப் பார்த்து மயங்கி இருந்த மனம், அதிலிருந்து விடுபட்டு உள்முகமாகி விட்டதால், அந்த அறிவின் முன்னால், மனம் என்ற தன் சுயத்தை இழந்து, ஆத்மா என்ற தன் உண்மையான சுய சொரூபத்தில் பிரகாசிக்கின்றது.

இதைச் செய்யாமல் சதா வெளி விவகாரங்களில் அலைபாய்கின்ற மனமானது, உள்ளே திரும்பி பார்க்காதவரை, ஆத்மாவை (அறிவை) அறிய முடிவதில்லை.

அதுவே, அறிவை அறிந்த மனம், அறிவுடன் கலந்த நிலையில், வெளியே பார்க்கின்ற பார்வையே முழுவதுமாக மாறி விடும்.

அது எவ்வாறு எனில், கண்ணாடி முன்னால் நின்று பிரதி பிம்பத்தை மட்டும் பார்த்து பழகி வந்தவன், பிம்பத்தைக் காட்டும் கண்ணாடியை அடையாளம் கண்டு கொண்டவுடன், கண்ணாடியில், இதுநாள் வரை பார்த்த அனைத்துமே பொய்யான பிரதி பிம்பங்கள் என்பதை அறிவது போன்று,

அறிவை அறிந்துக் கொண்ட மனதிற்கு, இதுநாள் வரை உலகைப் பார்த்த பார்வை பொய்யானது என்ற உண்மை தெளிவாகத் தெரியும்.

இவ்வாறு, தன்னை அறிந்த அறிவு வெளி விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், அதைக் கண்டு மயங்கவோ, ஆசைப்படவோ செய்யாமல், தன் சுய சொரூபத்தில் (ஆத்மாவில்) எப்பொழுதும் உள்ளே ஆனந்தமாக இருக்கும்.

புறக்கண்களால் வெளி விசயங்களைக் கண்டு மயங்கிய மனம், அகக் கண்ணால் அறிவை அறிந்து அமைதி அடையும்.

இந்த விசயத்தில் அற்ப மனம் ஆத்மாவாகிய அறிவை அறிய முடியுமா? இது சாத்தியம்தானா? என்ற சந்தேகம் வரலாம்.

ஒரு கண்ணாடியில் பிம்பம் மாத்திரமல்ல, ஆகாசமும் (வெளி) அங்கு காணப்படுகின்றது என்பதை அனைவரும் அறிந்ததே.

பிரதிபிம்பிக்கின்ற பிம்பத்தை மட்டும் கவனிப்பவனுக்கு, ஆகாசத்தில் (space) கண்ணாடி இருப்பதைக் கண்டு கொள்ள முடிவதில்லை.

ஆகாசம் (வெளி) கண்ணாடி முழுவதும் வியாபித்துள்ளது. ஆகாசத்தை அறிய பிம்பங்களிடமிருந்து பார்வையை மட்டும் திருப்பினால் போதுமானது.

இதுவரை ஆகாசத்தை அறிய விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது பிம்பங்களே என்பதினால், பிம்பங்களிடமிருந்து பார்வையை திருப்புதல் மட்டுமே ஆகாசத்தைக் காட்டிக் கொடுக்கின்றது.

அதுப்போலவே, அறிவானது (ஆத்மாவானது) ஆகாசத்தைப் போன்று, எங்கும், எதிலும், எல்லாக் காலத்திலும், பரந்து, விரிந்து வியாபித்து இருக்கின்றது.

அது இல்லாத இடமே இல்லை. அந்த ஆத்மாவே **“வெளி”** ஆக மனதிலும் நிரம்பியுள்ளது. எனவே, வெளிப் பொருட்களிடமிருந்து மனதை உள்முகமாகத் திருப்புதல் மட்டுமே ஆத்மாவைக் காட்டிக் கொடுக்கின்றது.

ஒரு பானையில் நிரப்பி வைக்கப்பட்ட தானியங்களை வெளியே எடுத்து விட்டால், அந்த பானையில் எப்பொழுதும் இருக்கின்ற ஆகாசம் அகப்படும்.

அதுப்போன்று, மனதில் நிரப்பி வைக்கப்பட்ட விசயங்களை வெளியே எடுத்து விட்டால், எப்பொழுதும் இருக்கின்ற **‘ஆத்மா’** அகப்படும்.

ஆத்மாவை அறிந்த மனமானது தன் உண்மை நிலையும் அதுதான் என்று அமைதியடைந்து விடுகின்றது.

எல்லா ஆன்மீக சாதனங்கள் அனைத்தும், அதன் செயற் பலன்களும் முடிவில் சித்த சுத்தியை உண்டாக்கி ஆத்மாவை அறிவதற்காகவே ஆகும்.

இருப்பினும், **சித்த சுத்தி** என்று கூறப்படுவது, மனம் வெளி விசயங்களில் இருந்து விடுபட்டு, உள்ளே ஆத்மாவை நோக்கித் திரும்புவது மட்டும்தான்.

இதுதான் ஆத்மாவை அனுபவமாக அறிவதற்கான மிக முக்கியமான ஆன்மீக சாதன மென்று அறிய வேண்டும்.

இதை விடுத்து, எண்ணங்களுடன் எப்பொழுதும் **"நான்", "நான்"** என்று வெளிப்படுகின்றதோ அது "சுத்தியாகாத மனம்" எனப்படுகின்றது. அதன் சேமிப்புக் கலனாக **'சித்தம்'** இருக்கின்றது.

பொதுவாக, **'சித்தம்'** சுத்தியாகும் பொழுது, அங்கே **'சித்'** (அறிவு) மட்டும் பிரகாசிக்கின்றது.

மனதில் தோன்றுகின்ற பலவிதமான எண்ணங்கள் என்ற நினைவுகளுக்கு எல்லாம் தலையாய முதல் நினைவு இந்த **"நான்"** என்ற நினைவே ஆகும்.

இதற்குப் பிறகுதான், மற்ற நினைவுகள் எல்லாம் தோன்றுகின்றன.

இந்த **“நான்”** என்ற நினைவை மனதினால் நீக்க முடியாது. காரணம், அதன் மூலமான ஆத்மாவிலிருந்து இந்த **“நான்”** வெளிப்படுவதால், இது தன்னையே (மனம் அல்லது ஜீவன்) **“நான்”** என்று நினைத்துக் கொண்டு விடுகின்றது.

அதனால், வெளிமுகமாக தன்னை **“நான்”** என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற, மனதை உள்முகமாக திருப்பி விட்டு, அந்த மூலத்தை (ஆத்மாவாகிய தன்னை) கவனிக்க ஆரம்பித்தால், அங்கு சுத்த ஆத்மாவை மட்டுமே கண்டு, அதில் ஒடுங்குகின்ற மனமானது **“நான்”** என்ற தன் அஹங்காரத்தை இழந்து, அந்த அறிவை (ஆத்மாவை) மட்டுமே குறிப்பிடுகின்ற **“நான்”** ஆக மாறிவிடுகின்றது. இறுதியில் ‘அதுவே நான்’ என்றும் அறிகின்றது.

இவ்வாறு மனம் மாற, மனதில் தோன்றுகின்ற எண்ணங்களை இது யாருக்கு உண்டானது? என்று உள் முகமாக விசாரித்து அறிய முற்படும் போது, 'எனக்கு' என்று முதன் முதலில் தோன்றும், இதில் என்னையே **“நான் யார்?”** என்று மேலும் விசாரிக்கும் போது, அந்த **"நான்"** என்பது **“ஜீவன்”** என்று அடுத்தது புரியவரும். மீண்டும், அந்த ஜீவன் என்பவன் யார்? என்று மேலும், மேலும் விசாரித்து அறிய முற்படும்போது, அதுவும் **“நானே”** என்று மீண்டும் தன்னை வெளிப்படுத்தும்.

இவ்வாறு **“நான்”, “நான்”** என்று கூறுகின்றவன் யார்? என்று மேலும் ஆராயும் போது, அதுவே தன் **சுய சொரூபம்** (ஆத்மா) என்பது தெரியவரும்.

இவ்வாறு மேலும், மேலும் தீர விசாரிக்கும் போது, தன்னைத் தவிர ஒன்றுமில்லை என்ற உண்மை புரிய வரும்.

ஆக, ஜீவனாகிய தானே ஆத்மாவாகவும், ஆத்மாவிலிருந்து பிரதிபிம்பிக்கின்ற ஜீவனும் ஒன்றே என்பதை அறிய முடியும். இதுவே, *ஆத்ம ஞானம்.*

இதை அனுபவிப்பதே ஆத்மானுபவம்.

இதுவே, இறைவன் தரிசனம்!

அதன்பிறகு, இங்கு இருப்பதெல்லாம் இறைவனே! இறைவனைத்தவிர வேறு ஒன்றும் இல்லை! என்ற உண்மை வெளிப்படும்.

தன்னை அறியாமல் அந்த ஆத்மாவை அறிய முடியாது. ஆத்மா எது? என்று தெரியாமல் இறைவனை அறிய முடியாது.

இறைவனை அறியாமல் செய்கின்ற பூஜை, புனஸ்காரங்கள், ஜப, தபங்கள் போன்ற கர்மங்கள், உபாசனைகள், போன்ற சாதனைகள் அனைத்தும் பயன் கொடுக்காது.

இந்த ஆத்மாவின் **"பிரதிபிம்பம்தான் நான்"** என்ற அறிவு மனதிடம் வெளிப்பட்டு விட்டால், அதன்பிறகு அந்த மனம் (ஜீவன்) தன்னை **"நான்"** என்று ஒருபொழுதும் கூறமுடியாது.

அது ஆத்மாவிற்கே உண்டான சுயம்பிரகாச **"நான்"** என்று அறிந்து அமைதியாகி விடும்.

இவ்வாறு தன் பிறப்பிடத்திற்கே திரும்பிய மனம், அதன் பிறகு வெளியே எதைச் செய்தாலும், அது ஈஸ்வர காரியம் (அதாவது ஆத்மாவின் பிரதி பிம்பிக்கின்ற செயல்) என்பதில் தெளிவாக இருக்கும்.

அதன் பிறகு ஆத்ம நிஷ்டனாக மனம் உலக விவகாரங்களில் ஈடுபட்டாலும், உண்டாலும், உறங்கினாலும், பேசினாலும், தொழில் செய்தாலும், பாடங்களை எடுத்தாலும், பாடிக்கொண்டிருந்தாலும், பல காரியங்களை செய்து பலரால் பாராட்டப்பட்டாலும், தூற்றப்பட்டாலும் அவைகளால் அந்த மனம் சிறிதும் பாதிப்படையாது.

அவனே **ஜீவன் முக்தன்**. அவனே **யோகி**, அவனே **ஞானி.**

இவ்வாறு மனம் ஆத்மாவிடம் ஐக்கியப்பட்டு ஆற்றுகின்ற காரியங்களால் ஜீவனுக்கு (மனதிற்கு) ஆகாமிய கர்மம் உண்டாகாமல் தடுக்கப்பட்டு, பிராரப்த கர்மாவின் படி உடல் (மனதின் ஸ்தூல உடல்) இருக்கின்றவரை, இந்த உலகத்தில் பல காரியங்களை செய்து கொண்டு, எப்பொழுதும்

ஆத்ம நிஷ்டையில் ஜீவன் முக்தனாக இருந்துக் கொண்டு இந்த ஸ்தூல உடலை விட்டு விடும்.

இந்த ஸ்தூல உடலை விட்டு **விதேக முக்தி** அடைந்த மனம் அந்த பரப்பிரம்மத்துடன் இரண்டறக் கலந்து விடுகின்றது.

அதனுடைய பிறப்பிற்கு உடல் கிடைக்க காரணமாக இருந்த கண்ணிற்குத் தெரியாத காரண தேகத்தில் சேர்த்து வைத்துள்ள பல பிறவிகளின் பதிவுகளான (சம்ஸ்காரங்கள்) சஞ்சித கர்மா – வும் மனம் (ஜீவன்) இல்லாததால் பயனற்று விடுகின்றது.

இவ்வாறு, மனம் (ஜீவன்) தன் மூலத்தில் (சித்தில்) இணைந்து விட்டதால், அது தன் தனித்துவத்தை இழந்து விட்டது. இனி அதுவும் ஆத்மாவும் ஒன்றே.

இது போன்று மூன்று கர்மாக்களையும் கடந்த மனம் (ஜீவன்) காலதேசத்தை கடந்த நித்திய, நிர்மல சித்தாகவே (ஆத்மாவாகவே) எங்கும், எப்பொழுதும், எல்லாக் காலங்களிலும் இருக்கும். அது பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை.

இதுவே, **பிறவாமை** என்று பெரு நிலையை அடைகின்ற வழி முறையாகும்.

வெளி விசயங்களை நினைவுகளாகப் பிடித்துக் கொண்டிருந்த மனம், எண்ணங்களற்று திரும்பி அகமுகமாக உள்ளே பார்த்து, அந்த ஆத்மாவுடன் ஐக்கியமடைவதை ஜீவ – பிரம்ம ஐக்கியம் என்று அழைக்கப்படுகின்றது.

ஆதியான அந்த ஆத்மாவிலிருந்து பிரதிபிம்பித்த மனம் (ஜீவன்) மீண்டும் திரும்பி உள்முகமாக அந்த ஆதியுடன் சமமாக ஒன்றுவதை **"சமாதி"** என்று அழைக்கப்படுகின்றது.

ஆகவே, இந்த உலகம் உண்மையாகத் தோன்றுவதற்கு மனதின் பல்வேறு நினைவுகளே காரணம் ஆகும். இந்த நினைவுகளை நீக்கிப் பார்க்கின்ற பொழுது, தனியாக மனம் என்ற ஒன்று இல்லை.

மனம் ஆன்ம சொரூபத்திலிருந்து விடுபட்டு வெளிப்படும் போது இந்த உலகம் தோன்றுகின்றது. எனவே, இந்த உலகம் உண்மையாகத் தோன்றும் வரை, ஆத்ம சொரூபம் தோன்றாது. ஆத்ம சொரூபம் தோன்றும் போது, இந்த உலகம் தோன்றாது.

அடுத்து, மனம், கனவு, ஆழ்ந்த உறக்கம், மற்றும் விழிப்பு நிலையில் ஏன் அறிவை (ஆத்மாவை) அறிய முடிவதில்லை?

உள்முகமாக திரும்பிய மனம் ஆத்மாவின் சொரூபத்தை எவ்வாறு அறிய முடியும்?

அதாவது ஆழ்ந்த உறக்கத்தின் காரணமாக, மனமானது செயல் இழந்து ஜடம் போன்று மாறி, அறிவை அறியக்கூடிய தகுதியை இழந்து விடுகின்றது.

ஜடம் அறிவை அறிய முடியும் என்றால், ஜடமான மரக்கட்டையும் அறிவாக ஆராய்ச்சியில் ஈடுபடுமே?

ஆனால், விழிப்பு நிலையில் உள்ள மனதிற்கு மட்டுமே எதையவது அடையவேண்டும் என்ற ஆசை இருப்பதினால், தற்பொழுது பற்றிக்கொண்டிருக்கும் ஒன்றை விட, சிறப்பானது என்று மற்றொன்றை நினைத்தவுடன் இதை விட்டு, விட்டு, அதை பற்றிக் கொள்ளும் திறன் கொண்டது.

அதனால், மனதை, மற்றொன்றின் மீது ஆசையை திருப்பி விட்டால், விரைவில் அதை அடைய முயற்சிக்கும்.

இவ்வாறு வெளிப்புறத்தில் பல எண்ணங்களை விருத்தி செய்கின்ற மனம் உள்ளே திரும்புவது என்பது அன்றாடம் ஆழ்ந்த உறக்கத்தில் நடைப்பெற்றாலும், அது உள்ளே திரும்பியவுடன் உறக்கத்தின் காரணமாக அங்கு தமோ குணம் ஓங்கியிருக்கும் நிலையில் இருள் சூழ்ந்துள்ளதால், அதனால், அறிவை அறிய முடிவதில்லை.

இதனால்தான், விழிப்பு நிலையில் எண்ணங்கள் அற்ற சுத்தமான மனம் உள்ளே கவனித்தவுடன், அங்கு அறிவின் சுயப்பிரகாச **“நான்”** தன் சுய சொரூபத்தை விளக்குவதால்,

அந்த **“உண்மையான நான்”** உடன், இந்த பொய்யான “அஹங்கார நான்” தன்னை இழந்து விடுகின்றது.

எண்ணங்கள் அற்ற சுத்தமான மனதினில்தான் அறிவு பிரகாசிக்கின்றது. எண்ணங்கள் அதிகம் கொண்ட மனம் அறிவை விளங்கிக்கொள்ளும் தகுதியை இழப்பதற்குக் காரணம், ஏற்கனவே நிரப்பப்பட்ட எண்ணப்பதிவுகளின் அடர்த்தியே, அறிவை அறிய இடம் கொடுப்பதில்லை.

அதாவது, காலியான பானையில் நீரை நிரப்புவதற்கும், ஏற்கனவே நீர் நிரம்பிய பானையில் நீரை நிரப்புவதற்கும் உள்ள வித்தியாசமே, சுத்தமான மனதிற்கும், பல எண்ணங்களை பதித்து வைத்துக் கொண்டுள்ள மனதிற்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.

இது போன்றே, மனதில் எண்ணங்கள் ஏதுமற்ற பிறந்த குழந்தைக்கும், சுத்தமான மனம் இருந்தும், தமோ குணம் கூடிய மந்த நிலையில் மனம் இருப்பதால், அறிவு பிரகாசிக்காது.

அதனால்தான் பிறந்த குழந்தைக்கும் ஒன்றும் விளங்குவதில்லை.

தன் முன்னே காட்சியாகும் எதையும், பிரதிபிம்பித்து காட்டும் குணமுடைய கண்ணாடியானது, தன் மீது பூசப்பட்ட பாதரசத்தினை பிரதிபிம்பித்து காட்டுவதில்லை. ஏன் காட்டவில்லை என்றால், கண்ணாடியும், பாதரசமும் ஒன்றுபட்டு

இருக்கின்றக் காரணத்தினால், கண்ணாடியிடம் பிரதிபிம்பம் உண்டாகவில்லை.

ஆனால், கண்ணாடியின் குணம் பிம்பங்களை பிரதிபிம்பித்து காட்டும் தன்மை கொண்டது என்றாலும், தன்மீதே பூசப்பட்ட பாதரசத்தின் பிம்பத்தை அதனால் பிரதிபிம்பிக்க முடியாது.

இதுபோன்றே, ஆழ்ந்த உறக்கத்தில், மனம் உறக்கத்துடன் ஒன்றுபட்டு இருக்கின்றக் காரணத்தினால், அது அந்நிய விசயங்களை காணாது இருந்தும், திரும்புதலுக்கு இடமின்றி, ஆத்மாவை (அறிவை) அறிய முடிவதில்லை. ஆனால், அங்கு ஒரு அமைதியையும், ஆனந்தத்தையும் அனுபவித்தது.

அதனால்தான் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்தவுடன் நான் நன்றாக, சுகமாகத் தூங்கினேன் என்று கூற முடிகின்றது. அதே சமயம், அங்கு அறிவு இல்லாத காரணத்தினால், ஆழ்ந்த உறக்கத்தில் அனுபவிக்கப்பட்ட ஒன்றுமில்லாத சூன்யமும், ஆனந்தமும் ஞாபகத்திற்கு மட்டுமே வருகின்றது.

இதை அறியாத பலரும் ஆத்மாவை அறிய விரும்பி, தியானம் செய்ய ஆரம்பித்து, ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்று ஆனந்தமாகத் தூங்கிவிட்டு, விழிப்பு வந்தவுடன் நான் ஆனந்தமாக தியானத்தில் இருந்தேன் என்று தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கின்றனர்.

இங்கு மனதின் தமோ குண நிலையான அமைதியை ஆத்மாவின் (அறிவின்) அனுபவமாக தவறாக நினைக் கின்றனர்.

இவர்களது மனம் உறக்கத்தில் அமைதிக்குப் போகாமல், தமோ குணத்திற்குப் போகின்றது. இது தெரியாமல் ஆனந்தமான உறக்கத்தை, ஆனந்தமான தியானம் என்று கருதுகின்றனர்.

விழிப்பு நிலையில், பிராணாயாமம், வாசியோகம் போன்றவற்றினால் மனதை அடக்கி ஆத்மாவை அறிய முடியாதா?

மனதிற்கும், பிராணனுக்கும் பிறப்பிடம் ஒன்றே.

பல எண்ணங்களுடன் கூடிய நினைவே மனதின் சொரூபம். இதில் **“நான்”** என்ற நினைவே முதல் நினைவு என்றும், அதுவே **‘அஹங்காரம்’** என்றும் அறியப்பட்டது.

அஹங்காரம் எங்கிருந்து உற்பத்தியாகின்றதோ அங்கிருந்துதான் மூச்சும் வெளிப்படுகின்றது.

இதில், மனம் அடங்கும் போது பிராணனும் அடங்கும். பிராணன் அடங்கும் போது மனமும் அடங்கும். அதுவே, உறக்கத்தில் மனம் தமோ நிலையில் அடங்கி இருந்தாலும் அங்கு பிராணன் அடங்கவில்லை.

காரணம் உடலின் பாதுகாப்பு கருதி, உறக்கத்தில் உடல் மடிந்து விட்டது என்ற சந்தேகம் தோன்றாமல் மூச்சு மட்டும் செயல்படுமாறு ஈஸ்வர நியதி ஏற்பட்டிருக்கின்றது.

விழிப்பு நிலையில் மூச்சை அடக்கினால், மனம் அடங்கும். ஆனால், மூச்சை அடக்கி மனதை அடக்க முயற்சிப்பது ரஜோ குணத்தில் நடைப்பெறுவதால், ஆத்மா அங்கும் அனுபவப்படுவதில்லை.

இந்த பிராணயாம், வாசியோகம் போன்ற பயிற்சிகளெல்லாம் மனதை அடக்க மட்டுமே உதவியாக இருக்கும். இதனால் மனம் சுத்தியாகாது.

ஏனெனில், பிராணன் அடங்கி இருக்கின்ற வரையில் மனமும் அடங்கியிருக்கும். பிராணன் வெளிப்படும் போது, மனமும் வெளிப்பட்டு வாசனைகளின் வசத்தால் மீண்டும் அங்கும், இங்கும் அலையும்.

இந்த பிராணாயாமம், வாசியோகம் போலவே மூர்த்தி தியானம், மந்திர ஜபம், ஆகார நியமம் போன்ற அனைத்து சாதனைகளும் மனதை அடக்கும் பயிற்சி முறைகளே ஆகும். இந்த சாதனைகளை விட்டுவிட்டால் மனம் மீண்டும் அலைபாயும்.

இருப்பினும், விழிப்பு நிலையில் எண்ணங்கள் அற்ற நிர்விகற்ப சமாதி நிலையில் மனம் ஆத்மாவில் அடங்கும் அனுபவமே **“ஆத்மானுபவம்”** ஆகும்.

# 20. எல்லாம் பரமா(ஆ)த்மா

சாஸ்திரம் நமக்கு என்ன அறிவுரை வழங்குகின்றது என்று கவனித்தோமானால், எவன் ஒருவன் இந்த உலகத்தில் செயல்களைச் செய்து கொண்டு வாழும் நிகழ் காலத்திலேயே, அந்த செயல்களுக்கும், சம்பவங்களுக்கும் என்னுடைய இந்த மனமும், உடலும் மட்டுமே காரணம் என்று அறிய வேண்டும்.

இந்த மனம், உடல் என்ற கருவிகளுக்கு சாட்சியாக ஒருவன் உள்ளேயும், வெளியேயும் இருந்து, அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருக்கின்றான் என்றும், அவன் தான் உண்மையில் ஆ(பரமா)த்மா அல்லது **"நான்"** என்று அறிகின்றானோ, அவனே **"ஞானி"** ஆகின்றான். இவனே **"ஜீவன் முக்தன்"** என்று போற்றப்படுகின்றான்.

அதைவிடுத்து, எவன் ஒருவன் இந்த செயல்களை யெல்லாம் **"நான் செய்கின்றேன்"** என்று இந்த உடலின் மீதும், மனதின் மீதும் அதிகமான அபிமானம் (பற்று) கொண்டு செயல்படுகின்றானோ, அவனை **சம்சாரி, போக்தா,** அல்லது **கர்த்தா** என்று சாஸ்திரத்தின் வாயிலாக அறியப்படுகின்றான்.

அப்படிப்பட்டவனே தன் உடலை **"நான்"** என்று அபிமானித்து, பல்வேறு துயரங்களுக்கு ஆளாகின்றான். அவனே தன் அறியாமையினால் **'அஞ்ஞானி'** ஆகின்றான்.

இங்கு இன்னொரு விஷயத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். செயல் செய்வது மனமும், இந்த உடலும் என்பதை அறிந்து கொண்டவன், அந்த செயல்களை செய்வதினால் வருகின்ற பலன்களின் மீது பற்று வைக்காமல் இருக்க வேண்டும்.

மேலும், ஒருவன் தான் செய்கின்ற காரியங்களினால் உண்டாகும் அனைத்து பலன்களையும் ஈஸ்வரார்பண புத்தியுடன், அந்தர்யாமிக்கே அர்பணித்து விடவேண்டும்.

இதனால், இவன் செய்யும் செயல்கள் **"நிஷ்காமிய கர்மம்"** ஆக (ஆசைகளற்ற செயல்களாக) மாறி விடுகின்றது. இதையே **'கர்ம யோகம்'** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

இதனால், நிஷ்காமிய கர்மத்தில் அவனுக்கு எந்த விதமான பாவ, புண்ணியங்களும் உண்டாகாமல் தடுக்கப் படுகின்றது.

இங்கு ஈஸ்வரார்ப்பண புத்தி என்பது, தன்னுடைய செயல் எதுவுமில்லை, **"எல்லாம் அவன் செயல்"** என்ற பற்று இல்லாத, உயர்ந்த மனோ நிலை ஆகும். இதுவே, **'சரணாகதி'** என்றும் அழைக்கப்படுகின்றது.

இந்த உயர்ந்த மனோ நிலையின் முதிர்ச்சிதான் அவனுக்கு சாஸ்திரத்தின் **"அஹம் பிரமாஸ்மி"** என்ற மஹா வாக்கியத்தின் பொருளை உணர்த்துகின்றது.

அதுவே, ஒருவன் தன்னுடைய செயல்களை இந்த உடலும், மனமும் செய்கின்றதாக நினைத்து, **"நான்"** என்ற அஹங்காரத்தில் அபிமானம் வைத்து செயல்படும் பொழுது, அவன், செய்கின்ற அனைத்து செயல்களினால், உண்டாகின்ற பலன்கள் **"காமிய கர்மம்"** (ஆசைகளுடன் கூடிய செயல்கள்) ஆக மாறுவதால், அந்த செயல்களுக்கு உண்டான பலன்களாக, அவனுக்கு பாவ, புண்ணியங்கள் உண்டாகின்றது.

இந்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப, அவைகளை அனுபவித்துத் தீர்க்க வேண்டிய உடல் கிடைத்து, அந்த உடலுக்கு மீண்டும், மீண்டும் பிறப்பு, இறப்பு உண்டாகின்றது.

இதுபோல, ஒருவன் எண்ணற்ற பலப் பிறவிகளில் பல விதமான உடல்களை அடைந்து, சுக, துக்கங்களை அனுபவிக்கும் காலத்தில், அதிக புண்ணிய வசத்தினால் மீண்டும் அவனுக்கு மனிதப் பிறவி கிடைத்து, அந்தப் பிறவியில் அவனுக்கு, வேதாந்த சாஸ்திரத்தை கேட்கவும், கற்கவும் வாய்ப்பாக, தக்க சத்குருவும் கிடைத்து விட்டால், அவனைவிட பாக்கியசாலி ஒருவருமில்லை.

அவன் தக்க சத்குருவின் துணையுடன் மஹா வாக்கியத்தின் பொருளை உணர்ந்து, **"ஆத்ம ஞானம்"** பெற்று, **"மோட்சம்"** என்ற நிலையான ஆனந்தத்தை அடைந்து, பிறவாப் பெரு நிலையை அடைகின்றான்.

# 21. ஞானத்தின் சிறப்பு

விசாரம் என்பது, **நான் யார்?** என்று தன் மனதை வெளியே விருத்திகளில் ஈடுபடுவதைக் கவனித்து, அந்த விருத்திகளின் பின்னே செல்லாமல், மனதை உள்முகமாக திருப்பி, உள்ளத்தில் குடிகொண்டுள்ள அந்தர்யாமியை நோக்கி கவனத்தை செலுத்தி, சாக்ஷியாக எண்ணங்களை கவனித்து, புத்தியினால் விழிப்படைந்து, ஆத்ம ஞானத்தை அறிதல் வேண்டும்.

பொதுவாக, ஞானம் என்பது இரண்டு வகைகளில் உண்டாகின்றது. அவைகள் ஒன்று **'பரோக்ஷ ஞானம்'**, மற்றொன்று **'அபரோக்ஷ ஞானம்'** எனப்படுகின்றது.

**'அக்ஷம்'** என்ற சொல்லுக்குப் 'புலன்கள்' என்று பொருள்.

**பரோக்ஷம்** என்பதற்குப் புலன்கள் தாண்டி இருப்பது என்றும், **ப்ரத்யக்ஷம்** என்பதற்குப் புலன்களின் எல்லைக்குள் இருப்பது என்றும் பொருள்.

ஆனால், **அபரோக்ஷம்** என்னும் சொல்லுக்கு புலன்களின் தேவை இன்றி சுயமாக விளங்கும் ஒரு பொருளைக் குறிக்கிறது.

பார்க்கப்படுவதும் அல்லாத, பார்க்க இயலாததும் அல்லாத பிரம்மத்தையே **‘அபரோக்ஷம்’** என்ற சொல் குறிக்கிறது. அதுவே **பிரம்மம்** என்றும், இரண்டற்றது என்றும், **அத்வைதம்** என்றும் குறிக்கப்படுகிறது.

பிருஹதாரண்யக உபநிஷத்தில் அபரோக்ஷம் என்ற சொல்லுக்கு **‘ஆத்மா’** என்று பொருள் கூறப்படுகின்றது.

பரோக்ஷம், அபரோக்ஷம் என்ற இரண்டு விஷயங்களில், பரோக்ஷம் என்றால் தூரத்தில் புகை வருவதை வைத்து அங்கு நெருப்பு இருக்கின்றது என்று அறிந்து கொள்வது ஆகும்.

அபரோக்ஷம் என்பது, அந்த நெருப்பை கண்களால் பார்த்து நிச்சயம் செய்வது ஆகும்.

இந்த வகையில் ஞானத்தில் நிச்சயத்தன்மையை அனுபவமாக அடைந்த, ஞானியை **“ஜீவன் முக்தன்”** என்கின்றோம்.

சிலர் ஞானத்தை புத்தகத்தின் வாயிலாக அறிந்து கொண்டாலும், அனுபவத்திற்கு வராமல், தெளிவில்லாத நடை முறையில் இருப்பவர்கள் **‘பரோக்ஷ ஞானம்’** உடையவர்கள் என்று அறியலாம்.

இதுபோல பிரம்மம் இருக்கின்றது என்று அறிவது **‘பரோக்ஷ ஞானம்’** என்றும், அந்த பிரம்மமாக நானே

இருக்கின்றேன் என்று, அனுபவித்து அறிவது **'அபரோக்ஷ ஞானம்'** என்றும் அறிதல் வேண்டும்.

பொதுவாக அறியாமையில் இருந்த பொழுது, அதாவது சாஸ்திரத்தின் வாயிலாக ஞானத்தை பெறாத போது, நாம் இந்த உடலை **"நான்", "நான்"** என்று எந்த அளவிற்கு உண்மை என்று நம்பியிருந்தோம்.

மேலும், நான் ஆண், அல்லது நான் பெண், என்ற எண்ணம். பிறகு சாதி அபிமானத்தினால் நான் பிராமணன், நான் சூத்திரன் என்று ஒரு எண்ணம். தொழில்களை வைத்து நான் வணிகன், நான் அமைச்சர் என்று ஒரு எண்ணம்.

இதுப்போன்ற பல்வேறு இருமைகளுடன், அவைகளை திடமான நிச்சயத்துடன் எப்படி நம்பி இருந்தோமோ, அதுப்போன்றே, சாஸ்திரத்தை அறிந்து கொண்ட பிறகு, **"அஹம் பிரம்மாஸ்மி"** என்ற ஆன்ம ஞானத்தை அடைந்த பிறகு, அதில் திடமான நிச்சயத் தன்மையுடன் நிலைத்திருக்க வேண்டும்.

மேலும், சாதி, மத பேதங்களை விடுத்து, ஆண் – பெண், உயர்ந்தவன் – தாழ்ந்தவன், சரி – தவறு போன்ற இருமைகளை கலைந்து, இப்பொழுது **"நான் பிரம்மம்"** என்ற சொரூப நிலையில், எந்தவிதமான அனாத்மாவுடனும் சேராமல், திடமான உறுதியுடன் இயல்பாக இருத்தல் வேண்டும்.

உண்மையில் சத் சித் ஆனந்த ஸ்வரூபமே **நான்** என்ற திட நிச்சயத்துடன் எப்பொழுதும் இருத்தல் வேண்டும்.

நான் **சித்** என்ற அறிவு ஸ்வரூபமானவன் என்றும், பூர்ணமான ஆனந்த ஸ்வரூபனாக, என்றும் பிரகாசமாக சர்வ அந்தர்யாமியாக (பரமாத்மாவாக) எல்லா ஜீவராசிகளிடத்திலும் நான் இருக்கின்றேன் என்றும் அறிதல் வேண்டும்.

இப்படிப்பட்ட திட நிச்சயமான, முழுமையான திருப்தியுடன் அபரோக்ஷ ஞானம் யாரிடம் இருக்கின்றதோ? அவனே **'ஜீவன் முக்தன்'** எனப்படுகின்றான்.

இனியும், ஒரு உதாரணத்தின் மூலம் இதை தெளிவாக அறியலாம்.

திருப்பதி லட்டு என்ற வார்த்தையை எத்தனை விதமாக, எத்தனை நபர்களின் வார்த்தைகளின் வர்ணனை யினால் கூறக்கேட்டாலும், அந்த லட்டை சுவைக்காமல் அதன் சுவை இன்பம் அனுபவமாகாது.

இப்படி நேரடியாக அனுபவத்தை அடையாமல் கேள்விப்படுகின்ற அனைத்துமே **"பரோக்ஷ ஞானம்"** எனலாம்.

அதுவே, அந்த லட்டை தின்று, அதன் சுவையை ஆனந்தமாக, உணர்வு பூர்வமாக இரசித்து உண்ணும் போது, அது அனுபவமாகின்றது.

இந்த அனுபவத்தை அடைவதே **"அபரோக்ஷ ஞானம்"** என்று அறியவும்.

அதாவது, கேள்வியறிவு **பரோக்ஷ ஞானம்.**

அனுபவ அறிவு **அபரோக்ஷ ஞானம்**.

அதாவது, அனுபவத்துக்கு வராதவரையில் ஒன்றைப் பற்றிய அறிவு, அதன் பிரயோஜனமான ஆனந்தத்தை நமக்குக் காட்டாமல் ரஹஸ்யமாக வைத்துக் கொண்டு இருக்கிறது என்று அர்த்தம்.

ஆத்மாவைப் பற்றிய விசயங்களை எவ்வளவுதான் புத்தகத்தில் படித்துப் பார்த்தாலும், பலர் கூறக் கேட்டு இருந்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை.

குருவே உபதேசம் செய்து, அது காது வழியாக மூளைக்குள்ளே போனாலும்கூட பயனில்லை.

அதுவரை, அது **பரோக்ஷ ஞானம்தான்**.

ஆத்மாவிலேயே அது அனுபவமாக மாற வேண்டும். அப்போதுதான் அபரோக்ஷம் எனப்படுகின்றது.

இதிலே வேடிக்கை என்னவென்றால், குரு உபதேசம் மூளையில் ஏறியவுடன் நமக்கு ரஹஸ்யமாக இருப்பது போன்று தோன்றவில்லை. மூளைக்கு நன்றாக விஷயம் புரிகின்றது.

ஆனாலும், அது உள்ளே உணர்வுப் பூர்வ அனுபவமாக இல்லாததால், அதை **‘பரோக்ஷ ஞானம்’** என்றே கருத வேண்டும்.

எப்போது, இந்த ஸ்தூல உடலையும், உடலைச் சார்ந்த புறப்புலன்களையும், சூக்ஷ்ம மனதையும், புத்தியையும் கடந்து, உணர்வுக்குள் ஒன்றிய உன்னத அனுபவத்தை அடைவதுதான் **“ஆத்ம அனுபவம்”** எனப்படுகின்றது.

அதுவே பிரம்மம் என்றும், இரண்டற்றது என்ற அத்வைதம் என்றும் சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது. ஆகவே, **‘ஆத்ம அனுபவம்’** என்றால், பிரம்மத்தின் நேரடி அனுபவம் என்றும் கூறலாம்.

## 22. அறியாமையும், ஆனந்தமும்

இனி காரண சரீரத்தில் உள்ள **'அறியாமை'** மற்றும் **'ஆனந்தம்'** என்ற இரண்டு நிலைகளை ஒவ்வொன்றாக அறியலாம்.

முதலில் அறியாமையைப் பற்றிப்பார்க்கலாம். சாஸ்திரம் மாயையைப் பற்றிக் கூறும் பொழுது, மூன்று குணங்களைப் பற்றியும் கூறுகின்றது. இவைகள் சத்துவ குணம், ரஜோ குணம், மற்றும் தமோ குணம் (சத், ரஜஸ், தமஸ்) என்று மூன்று குணங்கள் உள்ளன.

இந்த மூன்று குணங்களையும் கொண்ட மாயையிலிருந்து இந்த உலகம் வந்ததால், இந்த உலகத்தில் உள்ள அனைத்து ஜீவ ராசிகளுக்கும் இந்த மூன்று குணங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**தமோ குணம்** என்றால் **ஜட ஸ்வரூபம்** எனப்படும். அதாவது அறிவற்ற தன்மை எனலாம்.

எங்கெல்லாம் செயல்கள் உள்ளதோ, அவை ரஜோ குணம் என்றும், பிறகு அறியும் அறிவு வெளிப்படும் சக்திக்கு சத்துவகுணம் என்றும் சாஸ்திரம் கூறுகின்றது.

இந்த மூன்று குணங்களும் மாயையின் மகத்தான சக்தி எனப்படுகின்றது. இந்த உலகத்தில் உள்ள ஜடப்பொருட்கள் முதற்கொண்டு உயிர் பொருட்கள் வரை அனைத்துமே இந்த மூன்று குணங்களின் சேர்க்கையும், இவைகளில் ஏற்றத் தாழ்வுகள் என்ற மாற்றத்தையும் கொண்டதாக இருக்கின்றது.

அதனால், ஜீவர்கள் இந்த மூன்று குணங்களிலும் மாறி, மாறி இருந்துக் கொண்டு இருப்பர். இந்த மூன்று குணங்களில் எந்த குணம் அதிகமாக ஒருவனிடத்தில் மேலோங்கியுள்ளதோ, அந்த குணத்தைப் பொருத்து அவன் சுபாவம் காணப்படும்.

ஒருவனுக்கு தமோகுணம் அதிகம் ஆகின்ற பொழுது, அந்த குணம் அவனிடத்தில் உள்ள ரஜோ குணத்தையும், சத்துவ குணத்தையும் அடக்கி மேலே வரும். அது போலவே, சத்துவகுணம் ஒருவனுக்கு அதிகம் ஆகின்ற பொழுது, மற்ற இரண்டு குணங்களையும் அடக்கி, இந்த சத்துவகுணம் மட்டும் மேலோங்குகின்றது.

ஒருவனுக்கு ஆழ்ந்த உறக்கத்தில் தமோ குணமானது மேலே வந்து ரஜோ குணமும், சத்துவ குணமும் அடங்கி விடுகின்றது. இதனால்தான் அவன் நன்றாக ஆழ்ந்து உறங்க முடிகின்றது. இதிலிருந்து நன்றாக ஆழ்ந்து உறங்குவதற்கு தமோ குணமும் அவசியம் என்பது தெரிகின்றது.

ஆழந்த உறக்கத்தில் நாம் அனுபவிக்கின்ற இந்த அறியாமையும், ஆனந்தமும் தமோ குணத்தினாலேயே

உண்டாகின்றது. காரணம் ஆழ்ந்த உறக்கத்தில் இந்த தமோ குணமானது, ரஜோ குணத்தையும், சத்துவ குணத்தையும் அடக்கி விடுவதினால், அங்கு நமக்கு எதைப்பற்றியும் ஞானம் (அறிவு) கிடையாது.

அதனால், ஆழ்ந்த உறக்கத்தில் அறியாமை உள்ளது. மேலும், இத்துடன் ரஜோ குணமும், காரண சரீரத்தில் ஒடுங்கியுள்ளதால் அங்கு ஆனந்தமும் உண்டாகின்றது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் பொழுதோ, காரண சரீரத்தில் இருக்கும் பொழுதோ, அல்லது ஆனந்தமய கோஷத்தில் இருக்கும் பொழுதோ நாம் தமோ குணத்தில் மட்டுமே இருக்கின்றோம்.

இங்கு ஆழ்ந்த உறக்கத்தில் சத்துவ குணம் தன்னுடைய சக்தியை இழந்து விடுவதினால், நாம் தமோ குணத்தின் ஆதிகத்தில், காரண சரீரத்தில் ஆனந்தமாக ஒடுங்கி இருக்கின்றோம்.

அதே சமயம், இங்கு காரண சரீரத்தில் எப்பொழுதும் இருக்கின்ற அவித்யா என்ற அறியாமை இருப்பதினால், நம்மை நாம் யார் என்று அறிய முடிவதில்லை.

# 23. நான் யார்?

இனி இதுவரை மூன்று அவஸ்தைகளைக் கடந்து, மூன்று சரீரங்களுக்கும், ஐந்து பிராணன்களுக்கும், ஐந்து கோஷங்களுக்கும், ஐந்து இந்திரியங்களும் ஆகிய இந்த தத்துவங்கள் எவையும் "**நான்**" அல்ல என்றும், இந்த தத்துவங்களை நீக்கிப் பார்த்தால் "**நான்**" என்பது "**ஆத்மா**" என்றும் அறிந்தோம்.

இந்த "**நான்**" என்பதை எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும். எந்த இடத்தில் பயன்படுத்தக் கூடாது என்பதில் சாஸ்திரத்தில் "**திருக், திருஷ்ய விவேகம்**" என்ற விசாரத்தின் மூலம் அறியப்படுகின்றது.

"**திருக் திருஷ்ய விவேகம்**" என்றால் பார்ப்பவன் பார்க்கப்படும் பொருளைப் பற்றி விசாரம் என்று பொருள்.

இங்கு அறிபவன் வேறு, அறியப்படும் பொருள் வேறு என்று ஒரு விசாரம் செய்யப்படும். இதில் யார் அறிவது?, அறியப்படும் பொருள் எது? என்று விசாரித்து அறிவது ஆகும்.

இதுபோன்றே இங்கு நாம் இதுவரை விசாரம் செய்து வந்தோம். அதாவது, ஆத்மா என்பது அறிவது, அனாத்மா என்பது அறியப்படும் பொருள் என்ற விதத்தில் இதுவரை நாம் விசாரம் செய்தோம்.

இதனால், இந்த ஸ்தூல உடலைக் கொண்டு நம்மிடமிருந்து வேறாகப் பார்க்கப்படுகின்ற பொருள்களான காதுகளில் போடுகின்ற தோடு, வசிக்கின்ற வீடு, போன்றவைகள் அனைத்தும் நாம் அனுபவிக்கப்படுகின்ற பொருள்கள் என்று நாம் அறிவோம். எனவே, அவைகள் **“நான்”** அல்ல என்று மிகத் தெளிவாக அறிந்துள்ளோம்.

ஆனால், இங்கு சாஸ்திரம் இன்னும் ஒரு படி மேலே போய் **“நான்”** என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற இந்த உடல், மனம், புத்தி, மற்றும் கோஷங்கள் போன்றவைகளும் **“நான் அல்ல”** என்றும், அவைகளும், மற்ற பொருள்களைப் போன்றே, அனுபவிக்கப்படுகின்ற பொருள்கள்தான் என்று அழகாக விளக்கம் அளிக்கின்றது.

இது என்னுடைய உடல், இது என்னுடைய மூச்சு, இது என்னுடைய மனம், இது என்னுடைய புத்தி, இது என்னுடைய அறியாமை என்றும், இத்துடன் ஐந்து கோஷங்களும் என்னுடையது என்று அனைத்தையும் அறிகின்ற **“அறிவு”** ஒன்று உண்டு என்றால், அதுதான் அறிபவன் **(திருக்)** என்றும், இதனால், அறியப்படுகின்ற, அல்லது அனுபவிக்கப்படுகின்ற அனைத்து பொருள்களும் **(திருஷ்யம்)** என்றும் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்படியானால், அறிகின்ற அறிவு எது?, அல்லது அனுபவிப்பவன் யார்? என்ற கேள்வி உண்டாகின்றது.

இங்கு இதுவரை **"நான்"** என்பது **"இந்த உடல்"** என்று அறியாமையில் நினைத்துக் கொண்டிருந்த நிலையில், அதுவும் அனுபவிக்கப்படுகின்ற ஒரு பொருள்தான் என்று சாஸ்திரம் கூறுவதிலிருந்து, அந்த உடலை அறிகின்றவனாகிய அல்லது அனுபவிப்பவனாகிய **"நான்"** என்பது **"யார்?"** என்ற சந்தேகம் உண்டாவது இயல்பே.

பொதுவாக, என்னுடையது என்று எதையெல்லாம் கூறுகின்றோமோ, அது நிச்சயமாக **"நான்"** இல்லை.

உதாரணமாக, இது என்னுடைய வீடு, இது என்னுடைய கடிகாரம், இது என்னுடைய சட்டை என்று எதையெல்லாம் என்னுடையது என்று கூறுகின்றோமோ, அது **"நான்"** இல்லை என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

அதுப்போன்றே, இது என்னுடைய உடல், என்னுடைய மனது, என்னுடைய புத்தி, என்னுடைய பிராணன், மற்றும் என்னுடைய இந்திரியங்கள் என்று, எதையெல்லாம் என்னுடையது என்று கூறுகின்றோமோ, அதுவும் நிச்சயமாக **"நானாக"** இருக்க முடியாது.

எனவே, இவைகளெல்லாம், என்னுடையது என்றால் அப்பொழுது **"நான் யார்?"** என்ற சந்தேகம் உண்டாகின்றது.

இந்த சந்தேகம் யாருக்கெல்லாம் வருகின்றதோ அவன் மட்டுமே **"நான் யார்?"** என்று விசாரித்து அறியக்கூடிய ஆர்வம் உடையவன் எனலாம்.

இவ்வாறு, விசாரித்து அறியலாம் என்று விரும்பி, பக்கத்து வீட்டுக்காரனிடம் சென்று கேட்டால், அவன் என்ன கூறுவான் என்றால், நீ இன்னாருடைய மகன், மகள், கணவன், மனைவி என்றோ, அல்லது, தொழிலை வைத்து நீ மருத்துவர், வணிகர், காவலர் அல்லது வழக்கறிஞர் என்றோ, சாதியை வைத்து நீ பிராமணன், செட்டியார், கவுண்டர் என்றோ அல்லது மதங்களை வைத்து இந்து, கிருஸ்துவன், முஸ்லீம் என்று உங்களை அடையாளம் காட்டுவார்.

இதைத்தான் சாஸ்திரம் அறியாமை (அஞ்ஞானம்) என்று ஆணித்தரமாகக் கூறி, எவன் ஒருவன் சாஸ்திரத்தை நாடி **“நான் யார்?”** என்று விசாரித்து அறிய முற்படுகின்றானோ, அவனுக்கே, இந்த வேதாந்த சாஸ்திரம் “நான் யார்?” என்ற கேள்விக்கு சரியான அறிவைக் கொடுக்கின்றது.

இதுவரை **‘நான்’, ‘நான்’** என்று நீ கூறிக் கொண்டிருக்கின்றாயே, அது எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்த, சாக்ஷாத் அந்த **“பரமாத்மா”** என்று கூறுகின்றது.

எங்கும் பரவியுள்ள அந்த பரம்பொருள் உடலுக்குள்ளே இருதயக் குகைக்குள் இருந்து இயங்குவதினாலேயே நீ இயங்க முடிகின்றது. நீ, காண்பதும், கேட்பதும், உணவை ருசிப்பதும், உடலில் எறும்பு ஊறுவதை உணர்வதும் ஆக அனைத்துமே அவன் இன்றி ஒரு அணுவும் அசையாது என்கின்றது.

அந்த அவன் இல்லையென்றால், எந்த உடலிலும் கண் இருந்தும் காணாது, காது இருந்தும் கேட்காது, நாக்கிருந்தும் ருசிக்காது, எறும்பு ஊறுவதையும் உணராது, ஆக, அது இறந்த பிணம் (சடம் – சடலம்) என்பதை அறிந்து கொள்.

இதிலிருந்து 'என்னுடையது என்பது எதுவும் நானல்ல! எது நானோ?, அது என்னுடையது இல்லை'.

இதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

ஆக, மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள், ஐந்து கோஷங்கள், ஐந்து பிராணன்கள் மற்றும் ஐந்து இந்திரியங்கள் என இந்த 21 தத்துவங்களும் நான் அல்ல.

நான் என்பது ஒன்றேயான அந்த பரமா(ஆ)த்மா மட்டுமே என்றும், இந்த அனாத்மாக்களை அறிந்துக் கொண்டு இவைகளை நீ நீக்கி விட்டால் முடிவில் அந்த ஆத்மா (அறி)வைத் தவிர எதுவும் இல்லை, அந்த ஆத்மாதான் நீ என்றும் நமக்கு சாஸ்திரம் தெளிவு படுத்துகின்றது.

## 24. தன்னை அறியும் அறிவு

அடுத்து, மிக முக்கியமாக அறிய வேண்டியது மனிதனின் அறிவு.

***அறிவு என்றால் என்ன?***

தன்னிடம் உள்ள அறியாமையை அறிவதே உண்மையில் "**அறிவு**" எனப்படுகின்றது.

அறிவு, மனிதனின் வாழ்க்கையை இயக்கும் ஒரு சிறந்த சாதனம்.

இன்று பலர் கருதுவது போல அறிவு என்பது சேகரிக்கப்பட்ட தகவல்கள் அல்ல.

மனிதன் தன்னிடம் உள்ள புலன்களின் வாயிலாக அடைகின்ற அனுபவங்களை வைத்து, அவற்றில் உள்ள நன்மை, தீமைகளை ஆய்வு செய்வதே அறிவு.

இந்த உலகில் உள்ள அனைத்திலும் அனுபவங்களைப் பெற்று வாழ்வதே மனித வாழ்க்கை.

இதில் சில நல்ல அனுபவங்களாக இருக்கும், சில தீய அனுபவங்களாக இருக்கும். சில அனுபவங்கள் நல்லன போலத் தோன்றும்! ஆயினும் தீமையே பயக்கும்!

சில கானல் நீரைப் போன்று பார்பதற்கு உண்மை போன்று தெரியும், ஆனால், அனுபவத்தில் அது பொய்யாகும்.

அனுபவங்களின் வாயிலாக இது உண்மை, இது பொய், இது நன்மை, இது தீமை என்று பிரித்து அறிவது அறிவு.

காட்சியில் வேறாகவும், அனுபவத்தில் வேறாகவும் உள்ள தன்மையை ஆராய்ந்து எடுத்துக் கொள்ளுதலே அறிவுடைமை ஆகும்.

இதில் நன்மை – தீமை, உண்மை – பொய் என இருமைகளை பகுத்து அறியும் அறிவை **'பகுத்தறிவு'** என்கின்றோம்.

பகுத்தறிவு மனிதனுக்கு மட்டுமே உரித்தானது. மற்ற மிருகங்களுக்கோ, பறவைகளுக்கோ இவ்வாறு பகுத்தறியும் தன்மை கிடையாது.

அறிவை அறிவதே இங்கு **"ஞானம்"** எனப்படுகின்றது.

ஒழுக்கம் சார்ந்த வாழ்க்கைக்கு அறிவே மூலதனம். இந்த உலகில் பெறக்கூடிய பேறுகள் யாவற்றிலும் சிறந்தது அறிவுடமையே ஆகும்.

**அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர் –** திருக்குறள்.

அறிவுடையவர்கள் எல்லாச் செல்வங்களையும் உடையவர்கள், அதுவே, அறிவில்லாதவர்கள் எதை வைத்திருந்தாலும் அதனால் அவர்களுக்கு ஒரு பயனும் இல்லை.

பொதுவாக, கல்வி கற்பதினால் மட்டுமே வருகின்ற அறிவானது, சிறந்த அறிவாக இருக்கக் கூடுமானால், கல்வி கற்க பள்ளிக்கே போகாத எத்தனையோ அறிஞர்களையும், ஞானிகளையும் இந்த உலகம் எப்படி கண்டிருக்க முடியும்?

அப்படியானால், ஒரு மனிதன் தனக்குள் தன்னை அறிய, தன்னிடம் உள்ள அறிவைக் கொண்டு, உள் நோக்கிய நிலையில் மட்டுமே மெய்யறிவை (ஆத்மாவை) பிரகாசமாக அறிந்து கொள்ள முடியும் எனில், அவனுக்கு வெளியே கிடைக்கின்ற சாஸ்திரங்கள் உபதேசிக்கின்ற மெய்ஞானத்தை போதிக்கின்ற கல்வி அறிவு அவசியம் இல்லையா? என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம்.

அப்படியில்லை.

மெய்ஞானிகளால் மனிதனுக்காக உபதேசம் செய்யப்பட்ட மெய்யறிவை (ஆத்மாவை), வேதாந்த சாஸ்திரங்களான உபநிஷதங்கள்கூட, உண்மையில் பிரகாசப் படுத்துவதில்லை.

ஏனெனில், ஏற்கனவே ஆத்மா (சித் என்ற பேரறிவு) மனிதனுள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒரு தத்துவம் என்பதினால், அந்த ஆத்மாவினால்தான் உபநிஷத்துக்களே பிரகாசம் அடைகின்றது எனலாம்.

பிறகு எதற்கு இந்த வேதாந்த சாஸ்திரங்கள் என்றால், ஆத்மாவுடன், அனான்மாவையும் சேர்த்து மனிதன் தவறாக இணைத்துக் கொண்டுள்ளான்.

அதாவது அறிவுடன், அறியாமையையும் இணைத்துக் கொண்டுள்ளான்.

அதனால், இந்த சாஸ்திரங்கள் மெய்யறிவை (ஆத்மாவை) காட்டுவதற்காக அல்ல. தவறாக புரிந்து வைத்துக் கொண்டுள்ள அறியாமையை (அனாத்மாவை) நீக்குவதற்காக மட்டுமே ஆகும்.

ஒரு தீபத்தைக் கொண்டு, எத்தனை தீபங்கள் ஏற்றப்பட்டாலும், ஏற்றிய தீபத்தின் ஒளி சிறிதும் மங்காது, குறையாது.

அதுப்போன்று, தன்னுள்ளே சுடர் விடுகின்ற மெய்யறிவு கொண்டு, எத்தனை மனிதர்களுக்கு அறிவு ஏற்றப்பட்டாலும், கொடுத்தவரின் மெய்யறிவு சிறிதும் குன்றாது.

"அறிவாளி என்பவனை அவனிடம் உள்ள அறிவின் அளவை வைத்து மதிப்பிடுவதைக் காட்டிலும், அவன் எந்த

அளவிற்குத் தன் அறியாமையைக் குறித்த அறிதலுடன் இருக்கின்றான் என்பதை வைத்தே அவனை மதிப்பிட முடியும்".

எதையும் தீர விசாரணை செய்யாமல், அப்படியே ஏற்பது என்பது அறிவுடையவர்கள் செய்யும் செயல் ஆகாது.

அதற்குக் காரணம், ஒரு பொருளை படைப்பவன், அந்த படைக்கப்பட்ட பொருளை பற்றிய முழு விபரங்களையும் அறிந்தவனாக இருப்பதினால், அவனால் மட்டுமே அந்தப் பொருளைக் கையாளும் விபரங்கள் அடங்கிய கையேட்டை வெளியிட முடியும்.

மற்றவர்கள் அந்த பொருளைப் பற்றி என்னதான் எடுத்துக் கூறினாலும், அதன் இரகசியங்கள் அந்தப் பொருளைப் படைத்தவனால் மட்டுமே மிகத் தெளிவாக வெளியிட முடியும்.

அதுப்போன்று, இந்த உலகைப் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும், அவன் ஒருவன் மட்டுமே இந்த உலகத்தை எப்படி கையாள்வது என்பதைப் பற்றிய அறிவை உடையவனாக இருக்கின்றான் என்பதையும், அவனால் மட்டுமே இந்த உலகத்தைப் பற்றிய அறிவை **“ஸ்ருதி”** என்ற கையேட்டுப் புத்தகமாக வழங்க முடியும் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

மறுப்பவன் மனிதனாக இருக்க முடியாது!

அந்த ஸ்ருதி என்ற வேதாந்த புத்தகம் கூறும் உண்மை என்னவெனில், ஒரு மனிதன் தான் காணும் கனவில் ஒரு உலகத்தைப் படைத்து, அதில் பல பொருட்களையும், உயிர்களையும் படைத்துக் கொண்டு, அதில் தான் ஒருவனே காண்கின்றவனாகவும், காட்சியாகவும், காணப்படுபவைகள் ஆகவும் என மூன்றுமாகவும் இருக்கிறான்.

அதாவது, திரிபுடியில் தன்னையே மாற்றிக் கற்பித்துக் கொண்டு அபிமானம் க்கின்றான்.

அதுப்போலவே, இந்த உலகத்தைப் படைத்தவனாகிய ஈஸ்வரனும் தன்னால் கற்பிக்கப்பட்ட இந்த பிரபஞ்சத்தை தன்னில் தானாக அபிமானிக்கின்றான்.

கனவிலிருந்து கனவு காண்பவன் வேறாக இருப்பது போன்று, இந்த உலகிலிருந்து உலகைப் படைத்தவன் வேறாக இருக்கின்றான்.

மேலும், விழிப்பு நிலையில் ஒருவன் மற்றவர்களின் உடல்களிலிருந்து தான் வேறாக இருப்பதினால், தன்னை மட்டும் **“நான்”** என்று அபிமானித்துக் கொள்வதைப் போன்று, இந்த உலகத்தைப் படைத்தவனும், இந்த உலகத்திலிருந்து தான் வேறாக இருப்பதினால், தன்னை மட்டும் அழிவில்லாத “அறிவு” என்று அபிமானித்துக் கொள்கின்றான்.

ஒருவன் கண்ணாடி முன்பு நின்று தன்னுடைய பிரதி பிம்பத்தை நான்தான் அது என்று ஏற்பதற்கு, அங்கு அவனும்,

அவனைக் காட்டிக் கொடுக்கின்ற வெளிச்சமும் இருக்க வேண்டும்.

சமுத்திரம் இன்றி அலைகள் இல்லாதது போன்று, மனதின் பரிமாணமான புத்தி இன்றி இந்த உலகம் இல்லை.

ஆதலால், இந்த உலகத்தைப் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான். அவனே சுத்த சைதன்யமாக (அறிவாக) படைப்பதற்கு முன்பும் இருந்தான். படைக்கப்பட்ட பின்பும் இருக்கின்றான். அவன் பூரணமானவன். நினைத்துக் கூட பார்க்கக் முடியாத இந்த பிரபஞ்சத்தைப் படைத்தவன் அறிவான ஒருவனே!

இதையே சிருஷ்டி (படைப்பு), ஸ்திதி (இயக்கம்), லயம் (மறைப்பு) என்ற முத்தொழிலை செய்வதற்கு மூன்று சக்திகளில் அவன் வெளிப்படுவதாகவும் கருதப்படுகின்றன.

இவ்வாறு படைக்கப்பட்ட இந்த உலகம் மனதின் மானசீகமான சிருஷ்டியாகும்.

படைப்பு மனோமயமாகவே இருந்தும், அதனிடம் அனேக விதமான படைப்புக்களும், படைப்பாளிகளும் தோன்றி, பல வேற்றுமைகளால் வித்தியாசப்பட்டு இருந்தாலும், அவைகள் ஒரு பொழுதும் மனித மனதிற்கு அந்நியமாகாது.

மனதிலே உற்பத்தியாகி, மனதிலேயிருந்து செயல்பட்டு, பிறகு மனதிலேயே மறைந்து போகக் கூடிய இவைகள்

அனைத்தும் மனதின் தோற்றமாகவே இருப்பதுப் போல, படைத்தவனிடமிருந்து, இந்த படைப்பு உற்பத்தியாகி, படைத்த வனாலேயே செயல்பட்டு, இறுதியில் படைத்தவனிடத்திலேயே மறைந்தும் போகின்றது.

இதிலிருந்து, அந்த படைத்தவனிடத்தில் உள்ள சுத்த அறிவின் சுயப் பிரகாசத்தாலேயே அனைத்தும் பிரகாசிக் கின்றது. அறிவற்ற ஜடப் பொருட்களுக்கு பிரகாசிக்கக்கூடிய சுயமான அறிவு ஒளி கிடையாது.

“காணப்படுகின்ற அனைத்தையும் இது, இது இன்னது என்று, அறிவினாலேயே அறியப்படுவதால், அந்த **‘அறிவு’** அறியாதது ஒன்றுமே இல்லை.”

ஆகவே, அறிவு (ஆத்மா) இல்லையென்றால், இந்த உலகமும், பொருள்களும் இல்லாததாக ஆகிவிடும்.

ஜடப்பொருட்களுக்கு உருவாக்கும் தன்மையோ, சுயப்பிரகாசமோ இல்லை. ஆனால், இந்த உலகமும், உலகப் பொருட்களும் கண்களுக்குத் தெரிவது என்பது அந்த அறிவின் (ஆத்மாவின்) சுயப்பிரகாசத்தினால் மட்டுமே ஆகும்.

பிரதி பிம்பங்களுக்கு இருப்பைக் கொடுப்பது கண்ணாடி, அதுப்போல, உலகத்திற்கு இருப்பைக் கொடுப்பது அந்த ஆத்மப்பிரகாசமே.

சூரியன் தன் ஒளியால் பொருட்களைக் காட்சிப்படுத்தும் போது, அதன் பிரகாசத்தில் பொருட்களைக் கண்டு, சூரியன் இருப்பதை நாம் அறிகின்றோம்.

அதுப்போல, ஆத்ம ஒளியாலேயே இந்த உலகமும், உலகப்பொருட்களும் காட்சியாவதால், அதன் பிரகாசத்தினால் ஆத்மாவின் இருப்பை, நாம் கண்டு அறிய முடிகின்றது.

ஜடமான கண்ணாடிக்கு சுயமான ஒளி இல்லாததால், அது பிம்பத்தை பிரதிபலிக்க, அதற்கு வெளிச்சமும், பொருளும் தேவை.

ஆனால், சேதனமான, சுத்த சுயம் பிரகாசமான அறிவிற்கு (ஆத்மாவிற்கு) ஒன்றும் தேவையில்லை.

தோன்றும் பொருட்களுக்கு எல்லாமே ஒளியாக ஆத்மா மட்டுமே இருப்பதினால், அந்த பொருட்களின் ஜடத்தன்மை ஆத்மாவை பாதிக்காது.

இந்த உலகம் ஜடம், இதனுடன் ஆத்ம அறிவு அல்லது சேதனம் சேர்வதினாலேயே பிரகாசிக்கின்றது.

இந்த அறிவு அல்லது சேதனம் இல்லாத ஜடமான பிணத்திற்கு இந்த உலகமும் பிரகாசிக்காது.

ஜடம் ஜடத்தை அறிய முடியாது!

அறிவு ஒன்றே அனைத்தையும் அறியும்! அறிவின்றி இந்த உலகம் இல்லை.

பிம்பம் பிரதிபிம்பிக்க எப்படி கண்ணாடி அவசியமோ! அதுப்போன்று, இந்த உலகம் தோன்றுவதற்கு **"அறிவு"** அவசியம் ஆகின்றது.

ஆத்மா சுயப்பிரகாசம் என்பதால், அதற்கு கண்ணாடி போன்ற உபாதி அவசியமில்லை.

*"உபாதி என்றால் இருக்கின்ற ஒன்றை இல்லாத ஒன்றின் மீது ஏற்றி வைத்தல் என்று பொருள்."*

குயவனால் ஒரு பானை உருவாக்குவதற்கு மண் அவசியமாகின்றது. மண் பானையாக மாறியதும் அதற்கு உருவமும், பெயரும் கொடுக்கப்படுகின்றது.

பானை தோன்றும் போதும் மண் மட்டுமே இருந்தது. பானை உடைந்து மறையும் போதும் மண் மட்டுமே இருக்கின்றது.

இதற்கு இடையில் நாம் கற்பித்துக் கொண்ட **"பானை"** என்ற பெயரும், அதற்கான உருவமும் அழிந்து விடுகின்றன.

மனதிடம் இந்த உலகம் உருவாக்குவதற்கு ஆன்ம அறிவு அவசியமாகின்றது. ஆன்ம அறிவு உலகமாக மாறியதும் அதற்கு உருவமும், பெயரும் கொடுக்கப்படுகின்றது.

உலகம் தோன்றும் போதும் அறிவு (பரமான்மா) மட்டுமே இருந்தது. உலகம் மறையும் போதும் அறிவு மட்டுமே இருக்கின்றது. இதற்கு இடையில் மனம் கற்பித்துக் கொண்ட **“உலகம்”** என்ற பெயரும், அதற்கான உருவங்களும் அழிந்து விடுகின்றன.

மனம் கனவில் எந்த மூலப்பொருட்களும் இன்றி, பலப் பல உருவங்களை படைத்தும், செயல்கள் பல நடைப்பெறுவது போன்றும், கனவு காண முடிகின்றது.

அதுப்போன்று, அதே மனமானது நினைவிலும் இந்த உலகமும், உலகப் பொருட்களும் பலப் பல உருவங்களாகப் படைக்கப்பட்டு, செயல்கள் பல நடைப்பெறுவதைப் போன்றும் காண முடிகின்றது.

இதிலிருந்து, மனதிற்கு உறக்க நிலையில் காணுகின்ற கனவுகள் எப்படி உண்மையாகத் தோன்றுகின்றதோ, அதுப்போலவே விழிப்பு நிலையிலும், மனதிற்கு காணும் காட்சிகளும் உண்மையாகத் தோன்றுகின்றது.

அதாவது, படைக்கப்பட்ட இந்த உலகம் மனித மனதிற்கு உண்மையாகத் தோன்றினாலும், அதை படைத்தவனின் கனவு நிலை என்பதினால், இந்த உலகம் **‘மித்யா’** எனப்படும்.

(மித்யா என்றால் பார்வைக்கு இருப்பது போன்றுத் தெரியும். ஆனால், உண்மையில் இல்லை.)

சூரியனின் சுயப்பிரகாச ஒளி கண்ணாடியில் நுழைந்தவுடன், கண்ணாடி சூரியனின் வெளிச்சத்தை பிரதிபிம்பிக்கச் செய்தாலும், அது கண்ணாடியின் சுயம்பிரகாச வெளிச்சம் அல்ல. அது சூரியனிடம் இருந்து பெறப்பட்ட ஒளி.

சுயம்பிரகாசமான அறிவு, மனம் என்ற ஸ்தூல உடலில் (மனிதன், மிருகம், பறவை, மரம் போன்ற எதில்) நுழைந்தவுடன், அறிவின் ஆத்ம பிரகாசம் மனதிடம் பிரதிபிம்பிக்கச் செய்தாலும், அது மனதின் சுயம்பிரகாச அறிவு அல்ல. அது மனதில் பிரதிபிம்பிக்கின்ற ஆத்ம அறிவின் பிரகாசமே ஆகும்.

இவ்வாறு உடல் எடுத்த மனங்கள் தங்களுக்கு கிடைத்த உபாதியான மனதின் தகுதிக்கு ஏற்றவாறு ஆன்ம அறிவை வெளிப்படுத்துகின்றனர்.

உதாரணமாக, ஓர் அறிவு முதற்கொண்டு ஆறறிவு வரை கொண்ட ஜீவர்கள் தங்கள் உடல் என்ற மனதிற்கு ஏற்ற ஆத்ம அறிவை வெளிப்படுத்துவதை காணமுடிகின்றது.

ஒரு இந்திரஜால வித்தைக்காரன் எந்த ஒரு மூலப்பொருட்களும் இன்றி தன் மனதின் சங்கற் பத்தினாலேயே யானை, குதிரை மற்றும் புறா போன்ற உயிரினங்களை விசித்திரமாக படைக்கும் பொழுது, அதைக் காண்கின்றவர்கள் தங்கள் கண்களையே நம்ப முடியாமல், உண்மை போன்று உள்ள அவைகளைக் கண்டு மனம்

மயங்கினாலும், இறுதியில் அதை ஏற்றுக்கொள்ளாமல், அது பொய்த்தோற்றம் என்று அறிவினால் அறிகின்றனர்.

அதுப்போல, இந்த உலகம் படைக்கப்பட்டவனின் சங்கற் பத்தினால், இவ்வாறு பலவாகப் படைக்கப்பட்டு காட்சிக்குத் தெரிகின்றது. இதை கண்டு மனம் மயங்கினாலும், மனதை தீர விசாரத்து அறியும் பொழுது, இறுதியில் இது பொய்த் தோற்றம் என்று அறிவதே **“அறிவு”** எனப்படுகின்றது.

படைக்கப்பட்டவைகளை அந்த இந்திர ஜால வித்தைக் காரன் மீண்டும் மறைய வைப்பதுப் போன்று, படைத்தவனும் தன்னால் படைக்கப்பட்ட இந்த உலகத்தை மீண்டும் மறைய வைக்கின்றான்.

கண்ணாடி அசைவற்று இருக்கும். ஆனால், அதில் தெரிகின்ற பிம்பங்கள் அசையும். அதுப்போல, இந்த உலகம் அசைவற்று இருக்கின்றது. ஆனால், உலகப் பொருட்கள் அசைவதை அனைவராலும் உணரப்படுகின்றது.

இதுப்போல, அறிவு (சிவம்) அசைவற்று இருக்கும். ஆனால், அதில் பிரதிபிம்பிக்கின்ற மனம் (சக்தி) இந்த உலகமாக அசைகின்றது.

இதை இன்னும் சிலரால் புரிந்துகொள்ள முடியாததற்குக் காரணம், சூரியன் பொருட்களை பிரகாசமான வெளிச்சம் போட்டு காட்டும் தன்மை கொண்டதாக இருந்தாலும், பகலில்

இருட்டைக் காணும் ஆந்தை போன்ற ஜீவர்களுக்கு அது இருளாகவே தெரிகின்றது.*

கண்ணாடியில் தூரத்தில் தெரிகின்ற ஒன்றைப் பார்க்கின்ற பொழுது, அது எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று விசாரித்து அறிய முற்படும்பொழுது, அங்கு தூரம் தெரியாமல் கண்ணாடி மட்டுமே காணப்படுவது போன்று, அறிவிடம் காணப்படுகின்ற விசாரணையில், மனதின் ஒளியும், இருளும் ஒன்றுமில்லாமல் போய், அங்கு ஆத்ம அறிவு மட்டுமே விளங்குகின்றது.

ஆதலால், மனதின் பிரதிபிம்பத்திற்கு ஆதாரமான ஆத்மா (அறிவு) இன்றி ஒன்றுமே இல்லை. உலகமாக மனம் எதைக்காண்கின்றதோ, அந்த காட்சியின் பிரகாசம், அந்தர்யாமியாக இருக்கின்ற ஆத்மாவின் சுயப்பிரகாசமே!

தூக்கத்தில் தோன்றுகின்ற உலகம் உண்மையில் இருப்பற்றதாகவே இருக்கின்றது. இதிலிருந்து, கனவில் பார்ப்பதற்கும், விழித்துக் கொண்டு பார்ப்பதற்கும் தோன்றுகின்ற இருப்பில் எந்த வேறுபாடும் இல்லை.

தூக்கத்தில் ஒடுங்கியிருந்த உலகம் மனம் விழித்தவுடன் மீண்டும் தோன்றுகின்றது. ஆனால், கனவில் முதல் நாள் பார்த்த அதே கனவு, மீண்டும் அடுத்த நாள் விடுபட்ட இடத்திலிருந்து தோன்றுவதில்லையே என்ற சந்தேகம் மனதிற்கு உண்டானாலும், மறு நாள் விழித்தவுடன் மீண்டும் தோன்றும் உலகம், முதல் நாள் இரவு தூங்கச்

செல்லும் முன்பு பார்த்து விட்டு தூங்கிய அதே உலகம் இல்லை என்பதுவும் உண்மை.

இந்த உலகம் நொடிக்கு நொடி மாறிக் கொண்டே இருக்கின்றது. காணும் மரம், செடி, கொடி, நீர், நதி எல்லாம் மாறிக் கொண்டே இருக்கின்றது. நதியில் நாம் மூழ்கும் போது இருந்த நீர், நாம் எழும்போது இருப்பதில்லை. முன்னது கடந்து, பின்னது புதிதாக வந்த நீராகவே இருக்கின்றது. அதுப் போலவே, மலைகளும், கடல்களும் கணத்திற்கு கணம் மாறிக் கொண்டே இருக்கின்றது. அடுத்த நொடிக்கு, தொடர்ச்சியாக உள்ளது இதுதான் என்று கூறும் நிலையில், எந்தப் பொருளும் நனவிலும், கனவிலும் உண்மையாகவே இல்லை.

எனவே, நுண்ணிய அறிவினால் தீர விசாரித்துப் பார்த்தால், கனவிலும், நனவிலும் தொடர்ச்சியில் ஏற்படும் துண்டிப்பு இரண்டிலும் சமமாகவே உள்ளது.

காரண, காரிய நிலையில் தொடர்ச்சி இருப்பதாகத் தோன்றலாம்.

உதாரணமாக, காரியமான பானை உருவாவதற்கு காரணமாக மண் இருந்தது. பானை உண்டான பின்பும், அதே மண் இருக்கின்றது. இதில் தொடர்ச்சி பாதிக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டலாம்.

உண்மையில், கனவில் தோன்றிய அனைத்தும் விழிப்பு வந்தவுடன், போதிய ஆதாரம் இன்மையினால் அது பொய் என்று அறியப்படுகின்றது.

ஆனால், விழிப்பு நிலையில் தோன்றுகின்ற அனைத்தும் நிலையானதாகவே இருக்கின்றன. அவைகளை பொய் என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

ஆதாரம் இருந்தால், அவைகள் கனவு போன்று மறைய வேண்டும், ஆனால், விழிப்பு நிலையில் அப்படி இல்லையே என்று சிலர் கருதலாம்.

இதை எப்படி புரிந்து கொள்வது என்றால், கனவில் கண்டது பொய் என்று எப்பொழுது அறியப்பட்டது?

அதாவது, விழித்து எழுந்தவுடன்தானே!

மேலும், கனவு காணுகின்ற வரை கனவுக் காட்சிகள் உண்மையாகவே உள்ளது போன்று, நினைவில் காணுகின்ற நினைவுக் காட்சிகள் உண்மையாகவே தோன்றுவதை, ஆழ்ந்த உறக்கத்தில் ஒன்றுமில்லாமல் போனதையும் அறிய முடிகின்றது அல்லவா?

அதாவது, விழிப்பு நிலையில் காணுகின்ற உலகம், கனவிலும், ஆழ்ந்த உறக்கத்திலும் ஒன்றுமில்லாமல் போனது?

அவைகளின் இருப்பை அப்பொழுது அறிய முடிய வில்லை.

சில குறிப்பிட்ட காலம் அந்த உலகம் இல்லை அல்லவா?

இதிலிருந்து, “கனவிலிருந்து விழிப்படைந்த ஒருவன் அதைப் பொய் என்று கருதுவது போன்று, அறியாமையிலிருந்து விழிப்படைந்த ஒருவன் நினைவைப் பொய் என்று கருதுவான்.”

அதாவது, விழிப்பு நிலையில் எவ்வாறு உணரப் பட்டதோ, அவ்வாறே கனவு நிலையில் உணரப்பட்டது. கனவை கனவு இருக்கின்றவரை உண்மை என்று கருதுவது போன்றே, நினைவை நினைவு இருக்கின்றவரை உண்மை என்று கருத முடிகின்றது.

ஆனால், கனவு, நினைவு ஆகிய இரண்டும் ஒன்று போலவே உள்ளன. எனவே, நனவுலகம், கனவுலகம் என்ற இந்த இரண்டுமே நம் அனுபவத்திற்கு வேறுபட்டதல்ல.

கனவு உலகத்தில் ஏற்படுகின்ற இழப்புகளைக் கண்டு, நினைவு உலகத்தில் யாரும் வருந்துவதில்லை. அதுப்போலவே, நினைவு உலகத்தில் ஏற்படுகின்ற இழப்பு களைக்கண்டு, ஆழ்ந்த உறக்கத்தில் யாரும் வருந்து வதில்லை.

இதிலிருந்து மூன்று அவஸ்தைகளான **கனவு, விழிப்பு, உறக்கம்** என்ற இவைகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்ச்சி

இருப்பதில்லை என்பதிலிருந்து, இவைகள் மூன்றுமே மனதின் பாவனை என்பது மட்டுமே உண்மை.

இதில், **கால, தேசம்** மாறுபாடுகள் இருப்பினும், காணும் காட்சியில் அவைகள் பொய் தோற்றம் என்பதை உண்மை.

அதாவது, கனவில் கனவு உலகம் சில நிமிடங்களும், நினைவில் நினைவு உலகம் சில மணி நேரங்களும் தோன்றினாலும், ஆழ்ந்த உறக்கத்தில் எத்தனை மணி நேரம் இந்த உலகம் அறிய முடியாமல் இருந்தது என்பதை யாராலும் கூற முடியாது.

ஆனால், இந்த மூன்று (விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம்) நிலைகளையும் அறியும் ஒரு சுத்த அறிவு இருப்பதினால் மட்டுமே, கண்ட கனவைப் பற்றியும், ஆழ்ந்த உறக்கத்தைப் பற்றியும், விழிப்பு நிலையில் உதிக்கும் எண்ணங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

அந்த சுத்த சிதாத்ம தத்துவத்தை ஒருவகையில் அறிவது சுலபமும், ஒரு வகையில் கஷ்டமும் ஆகும்.

அதாவது, உள்முகமாக விசாரம் செய்பவனுக்கு சுலபமும், வெளிமுகமாக விசாரம் செய்பவனுக்கு கஷ்டமும் ஆகும்.

எளிமையாக விசாரத்து அறிகின்ற அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கின்றவனுக்கு, அவன் காணும் காட்சியிலிருந்து காண்பவளை உறுதி செய்யலாம்.

("அறிபவன் இல்லை என்றால், அறியப்படும் பொருளும் இல்லை".)

அதாவது, காட்சியை எது காண்கின்றதோ அதுவே, அறிவு (பரமான்மா) என்பதை அறிய வேண்டும்.

கண்களின் பார்வைக்கு ஆதாரமான வெளிச்சம் எங்கிருந்து வெளிப்பட்டு இந்த உலகத்தைக் கண்கள் காண்கின்றது என்பதை அறிபவனுக்கு, அந்த ஒளி மட்டுமே காட்சிகள் (பொருள்களை) அனைத்தையும் விளக்குகின்ற வெளிச்சமாக இருப்பதினால், அந்த வெளிச்சத்தில் காட்சியாக (பொருள்களாக) விளங்குகின்ற அனைத்தையும் நீக்கிப் பார்த்தால், இத்தனை காட்சிகளுக்கும் ஆதாரமான அந்த வெளிச்சம் **"ஆத்மா"** என்ற சிதாகாசத்தின் வெளிப்பாடு என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு சுயப்பிரகாசமாக ஒளிரக்கூடிய ஒளியான ஆத்மா ஒன்றே, சுத்த சிதாத்ம தத்துவம் என்பதை அறிய வேண்டும்.

அறியப்படுகின்ற பொருள்கள் தாமாக விளங்கக்கூடிய சுயப்பிரகாச தன்மையற்றதால் அவைகள் அறிபவனாக இருக்க முடியாது.

ஆகவே, அறிபவன் அறியப்படுகிற பொருள்களிலிருந்து வேறாக இருப்பதால், சுயப்பிரகாச **சுத்த அறிவே** ( ஆத்மாவே) அறியப்படுகின்ற பொருள்களை அறிகின்றதேயன்றி வேறு எந்த வகையிலும் அறிந்து கொள்ள முடியாது.

பலவிதமான உருவங்களில் காட்சியாக அறியப் படுகின்ற பொருள்களை அறிபவனே அந்த அறிவு.

அறியப்படும் பொருள்களின் அந்தந்த பல உருவங் களுக்கு ஏற்றவாறு, ஆத்மா பலவாக ஒருபொழுதும் மாறு வதில்லை.

பேதங்கள் அனைத்துமே அறியப்படுபகிற பொருள்களில் (காணுகின்ற காட்சிகளில்) மட்டுமே உள்ளனவேயன்றி, **பரமா(ஆ)த்மா** இடத்தில் எந்த பேதமையும் கிடையாது.

பொருள்களின் (காட்சிகளின்) தன்மையைப் பொருத்து பேதங்கள் விளங்குகின்றன. உருவமற்ற பரமா(ஆ)த்மா ஒருபோதும் பேதங்கள் கொள்வதில்லை.

எப்படிக் கண்ணாடி ஒன்றே ஒன்று இருந்தாலும், அதில் காணப்படுகின்ற பொருள்களை, அதன் நிறம், வடிவம் போன்ற தன்மைக்கு ஏற்ப அவைகளை பலவிதமான பிரதிபிம்பங்களாக காட்டுகின்றன.

அவ்விதமே, ஆத்மா (அறிவு) ஒன்றே இருந்தாலும், அதில் அறியப்படுகின்ற பொருள்களின் தன்மைக்கு ஏற்ப அவைகளை பலவிதமான உருவங்களாக அறிகின்றது.

இவ்வாறு அறியப்படுகின்ற பொருள்களை இதுவல்ல! இதுவல்ல! என்று நீக்கி, உள் நோக்கிப் பார்த்தால், ஆத்மாவை மட்டுமே அறியலாமே தவிர, மற்ற பொருள்களை எளிதாக அறிவது போன்று இந்த ஆத்மாவை அறிய முடியாது.

ஏனென்றால், அந்த ஆத்ம அறிவு அறிகின்றவனுடைய உண்மையான சொரூபமாகவே இருப்பதினால், அறியப்பட அவனுக்கு வேறாக ஒன்றுமே இல்லை.

## 25. மோக்ஷம் வெளியே இல்லை

அறிபவனாகிய மனம், அறிபடு பொருளாகிய ஆத்மாவை அறிவதற்கு, சாதாரணமாக நம்மிடையே உள்ள திணிக்கப்பட்ட புற அறிவில் புத்தகங்களைப் படித்து அறிவது போன்று, அறிய முடியாது.

அதை மிக நுண்ணிய அறிவால் கூர்ந்து கவனித்து அறியப்படுகின்றது.

மற்ற எந்த வழிகளிலும் இதை அறிய முடியாது.

அதாவது, "அவனறிவாலே, அவனை அறிவது" மட்டுமே சாத்தியம் ஆகும்.

பொதுவாக, அறிபடு பொருள்கள் யாவும் மனதினா லேயே அறியப்படுகின்றன. மனதின் சொரூபத்தை அறிய மற்றொரு கரணம் இல்லாததால், மனதிற்கு அறிபடுபொருள் ஆகும் தன்மை இல்லை.

அதாவது அறிபவனாக மட்டுமே உள்ளது, அறியப்படுகின்ற பொருளாக மாறும் தன்மை இல்லை.

ஆகையால், அறிபடு பொருள்களுக்கு வேறாக அந்த மனம் இருந்து, மனமாகிய நான் இருக்கிறேன் என்று

தீர்மானிக்கின்றது. இவ்வாறு அறிபடுபொருளுடன் கலக்காத வேறாக உள்ள மனதை "புத்தி" என்று கூறப்படும்.

அதாவது, ஒரு பொருளைப் பார்க்கின்றோம். நான் இருப்பதினாலேயே அதைப் பார்க்க முடிகின்றது. நான் பார்த்த பொருளும் என்னால் அறியப்பட்டு, நான் இருப்பதை உறுதி செய்கின்றது. என்னிடம் உண்டாகும் கேள்விகளும், சந்தேகங்களும் நான் இருப்பதையும் உறுதி செய்கின்றது.

நான் இல்லையென்றால் கேள்விகளும், சந்தேகங்களும் இல்லை. காண்கின்ற காட்சிகளும் இல்லை. அறியப்படும் பொருட்களும் இல்லை அல்லவா?

அப்படியானால், அறியப்படும் பொருட்களை அறிபவனாகிய நான் (மனம் அல்லது ஜீவன்) அறிகின்றேன். நான் இல்லாமல் எனக்கு அறியவேண்டும் என்ற ஆசை உண்டாகாது.

நான் இல்லையென்றால், என்னால் என்னையே எனக்கு எப்படி அறிய வைக்க முடியும்?

அதாவது, எந்த உருவமும் இல்லாத அறிவாகவே உள்ள என்னை, சாதாரணமான உலகப்பொருட்களை அறிய வைப்பது போன்று அறிய வைக்க முடியாது.

“பிறபொருளைக் காட்டுகின்ற சூரியனது ஒளியே தன்னையும் காட்டுவதாகும். அதற்கு வேறு ஒரு ஒளி அதனைக்

காட்டிக் கொடுக்காது. ஆகையால், சூரியனது ஒளியைக் கொண்டே சூரியனைக் காணுதல் போல, அறிவின் அருளால் எல்லாப் பொருள்களையும் அறிவதுடன், அறிவாகிய அவனையும், அவன் கொடுத்த அறிவாலேதான் அறிதல் முடியும்."

அறிவான அந்த சித்து, தானே பல சொரூபமாக இருக்கின்ற படியால், எப்பொழுதும் அறியப்பட்டதாகவே இருக்கின்றது.

தனக்கு அந்நியமாக இல்லாத ஒன்றின் அனுபவத்தை அறிய விரும்புவதாலேயே ஒன்றும் நம்மால் உணர முடிவதில்லை.

எந்த ஒரு விசயத்தைப் பார்க்கும் பொழுதும் **'நான்'** விளங்காமல் இருக்கின்றதோ? அங்கு **"நான்"** இல்லை என்பதாகும்.

அப்படி இல்லாதவனிடம் இருந்து கேள்விகளும், சந்தேகங்களும் எவ்வாறு உண்டாகும்?

தன்னை அறியாத நிலை புத்தி இல்லாத சிறு கைக் குழந்தைகளுக்கும், புத்தி தடுமாறிய பைத்தியங்களுக்கும், புத்தி செயல் இழந்த கோமா நிலை நோயாளிகளுக்கு மட்டுமே காணப்படும்.

ஆகவே, உருவமும், குணங்களும் அற்ற அறிவே தனது உண்மை நிலை. அந்த அறிவாகவே **"நான்"** இருக்கின்றேன்.

தனக்கு வேறாக, அறியப்படுகின்ற பொருள்கள் என்று தனியாக எதுவுமே இல்லை. அவைகளும் என் அறிவாலேயே இருப்பதாக அறியப்படுகின்றது.

ஆகாயத்தில் உள்ள மேகம் போன்று இருப்பில்லாத ஒன்றை இருப்பதாக நினைப்பது ஏன்?

காட்சியால் அறியும் இந்த உடலையே **"நான்"** என்று கருதுவது ஏன்?

இதற்குக் காரணம், மனம் உடலைப் பற்றிக்கொண்டே உலக விவகாரங்களில் ஈடுபடுவதால், இந்த உடலே நான் என்ற எண்ணம் தனக்கு உண்டாகி விடுகின்றது. தொடர்ந்து உலக காரியங்களில் ஈடுபடும் பொழுது, **"உடலே நான்"** என்ற எண்ணம் உறுதியாகி விடுகின்றது.

மனம் உடலிலிருந்து விடுபட்டு மற்றொன்றைப் பற்றிக் கொண்டு செயல்பட்டால், அதுவே தன் உடலாக நான் நினைத்துக் கொள்கின்றேன்.

மனம் எதைப் பற்றுகின்றதோ, அதை நான் திடமாக கருதுவதால், அது தன் உடலாகத் தோன்றுகின்றது.

இதுப்போலவே, உண்மையான தன் சொரூபத்திற்கு வேறாக, பல இருப்பதாக நான் நினைப்பது அனைத்துமே உண்மையில்லை.

உதாரணமாக, உப்பின் தன்மை உப்பு கரிப்பது. அது எதனுடன் கலந்தாலும், அது உப்பு கரிக்கும். ஆனால், உப்பை உப்பு கரிக்கச் செய்ய, மற்றொரு உப்பு தேவை இல்லை.

இதுப்போன்று, *அறிவின் தன்மை அறியவைப்பது. அது எதனுடன் கலந்தாலும், அதை அறிய வைக்கும். ஆனால், அறிவை அறிய, மற்றொரு அறிவு தேவை இல்லை.*

ஆகவே, நான் அறிபடு பொருளாக எதையெல்லாம் அறிகின்றேனோ, அது அத்தனையும் என்னிடம் உள்ள அறிவின் வெளிப்பாடே.

உண்மையில் அறிவுக்கு வேறாக அறிவதற்கு ஒன்று மில்லை.

மனம் எதைப் பற்றுகின்றதோ, அதுவாகவே மாறி விடுகின்றது. அது அறிவைப் (ஆத்மாவை) பற்றினால் அறிவாகவே (ஆத்மாவாகவே) ஆகிவிடும். அதற்குப் பிறகு அறிவதற்கு (ஆத்மாவை தவிர) ஒன்றுமில்லை.

அறிவானது தேகம், தேசம், காலம் இவைகளில் பல பேதங்களை ஏற்படுத்தி, சுவரில் வரையப்பட்ட சித்திரம் போல, இவைகள் அனைத்தையும் தன்னுள்ளேயே விளங்கச் செய்கின்றது.

வரையப்பட்ட சித்திரம் சுவருக்கு அந்நியமாக வெளியில் இல்லை. அதுப்போல, அறியப்படுகின்ற பொருட்கள் அறிவுக்கு வேறாக வெளியில் இல்லை.

அறிவை அறிவதே ஆனந்தம்! அந்த ஆனந்த நிலையே மோக்ஷம்!

மோக்ஷம் என்பது வானுலகத்திலோ, பாதாள உலகத்திலோ, அல்லது நாம் வசிக்கும் இந்த உலகத்திலோ இல்லை.

எண்ணங்கள் அற்ற சங்கல்பம் ஒழித்த சுத்த மனதின் சொரூபமே **“மோக்ஷம்”** எனப்படும். அதை அடையவேண்டியது இல்லை. அறிந்து கொண்டாலே போதும்.

அதுவே தன் உண்மை சுய சொரூபம். நான் அதுவாகவே இருக்கின்றேன்! ஆனால், அறிய மறுக்கின்றேன்!

இதை அறிந்து கொண்ட ஞானிகள் இந்த உலகில் வாழும் பொழுதே, எந்த கவலைகளும் அற்று, ஆனந்தமாக **மகிழ்ச்சியுடன்** வாழ்கின்றார்கள்.

இவர்களே ஜீவன் முக்தர்கள். இவர்கள் வாழுகின்ற ஆனந்த வாழ்க்கையே **“மோக்ஷம்”** ஆகும்.

தன்னுடைய உண்மையான சொரூபம் பூரணமானதால், அதற்கு அந்நியமான மோக்ஷம் எங்கு

உண்டாகும்? இந்த உலகத்தைப் போன்று மோக்ஷமும் இருக்கின்றது என்ற மோகத்தை தவிர்ப்பதே மோக்ஷத்திற்கு வழி என்று அறிய வேண்டும்.

நானோ பூரணமானவன்! எனக்கு அந்நியமாக எதுவுமே இல்லை.

பிம்பங்கள் எப்படி கண்ணாடிக்கு அந்நியமல்லவோ?, அதுப்போல தோற்றங்கள் அனைத்தும் ஆத்மாவிற்கு அந்நியமல்ல.

அவைகள், ஆத்மாவின் பிரதிபலிப்பே என்ற ஞானம் அவசியம்.

“தனக்கு வேறாக மோக்ஷம் ஒன்று உண்டு என்று எண்ணுவது, முயல் கொம்பை தேடுவது போன்றதாகும்”.

கண்ணாடி பிம்பங்களை பிரதிபலிக்கின்றது.

கண்ணாடியில் தெரிகின்ற பிரதிபிம்பங்கள் கண்ணாடி யிலேயே உள்ளது. அவைகள் கண்ணாடிக்கு வேறானதல்ல. கண்ணாடிக்கு வெளியே அவைகள் இல்லை. கண்ணாடிக்கு உள்ளேயே அவைகள் அடங்குகின்றன.

கண்ணாடி இல்லை என்றால் பிம்பங்களே தெரியாது.

அதுப்போல, அறிவே அனைத்தையும் அறிகின்றது.

அறிவினால் அறியப்படுகின்ற பொருட்களும், அறிவிலேயே உள்ளது. அவைகள் அறிவுக்கு வேறானதல்ல. அறிவுக்கு வெளியே அவைகள் இல்லை. அறிவுக்கு உள்ளேயே அவைகள் அடங்குகின்றன.

அறிவு இல்லையென்றால், ஒன்றுமே தெரியாது.

பிம்பங்கள் பிரகாசமாக பிரதிபிம்பிக்க, பாதரசம் தடவப்பட்ட கண்ணாடி மட்டுமே தேவை. சாதாரண கண்ணாடிக்கு பிரதிபிம்பிக்கின்ற ஆற்றல் குறைவு என்பதினால், அதில் பிம்பம் தோன்றியும் பயன் இல்லை.

அறிவு பிரகாசமாக அறிய, ஆறறிவு கொண்ட மனிதனே தேவை. சாதாரண ஜீவர்களுக்கு அறியக்கூடிய ஆற்றல் குறைவு என்பதினால், அவைகளுக்கு அறிவு இருந்தும் பயன் இல்லை.

எனவே, சித்தின் (அறிவின்) பிரதிபலிப்பே இந்த உலகம்.

கண்ணாடிக்கு உட்பட்டே (கண்ணாடி உள்ளேயே) பிம்பங்கள் தெரிவது போன்று, அறிவுக்கு உட்பட்டே (அறிவின் உள்ளேயே) அனைத்தும் அறியப்படுகின்றன.

ஆகவே, மோக்ஷம், முக்தி, பக்தி, வீடுபேறு போன்ற அனைத்தும் அறிவுக்கு உட்பட்டே அறியப்படுகின்றன.

எனவே, விடுதலை என்பதும், வீடுபேறு என்பதும், மோக்ஷம் என்பதும் அறிபவனிடமே உள்ளது.

மோகத்தினால் அறியப்படுகின்ற பொருள்களை அறிவுக்கு வேறாக, அறிந்து கொள்வது அறியாமை ஆகும்.

இந்த அறியாமை அகன்று அறிவு மலர்கின்ற பொழுது **"பரமா(ஆ)த்மா"** பிரகாசிக்கின்றது.

அறியப்படுகின்ற பொருட்கள் என்பது காட்சியில் காணுகின்ற பொருட்கள் மட்டும் அல்ல, முன்னதாகவே, மனதின் பதித்து வைத்துக் கொண்டுள்ள தவறான மனப் பதிவுகளும் ஆகும்.

இந்த மனப்பதிவுகளும் அகல வேண்டும்.

அப்பொழுதுதான் **அறிவு** பிரகாசிக்கும்.

ஒரு பொருள் அழிந்து விடும்பொழுது, அது இல்லாமல் போய் விடுகின்றது. அதாவது, இருப்பற்றதாகின்றது. இல்லாத ஒன்றை அழிவுக்கு உட்படுத்த நினைப்பது முடியாத ஒன்று.

உதாரணமாக, ஆகாயத்தில் மேகம் சூழ்கின்றது. சிறிது நேரத்தில் அது இல்லாமல் போகின்றது.

தோன்றி, மறையும் மேகத்தை அழிவுக்கு உட்படுத்த நினைப்பது அறியாமை அல்லவா?

இதன் நுணுக்கம், புரிய வேண்டும்.

அதாவது, இருப்பது போலத் தோன்றி, இல்லாமல் போகின்ற ஒன்றுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

எனவே, ஒரு பொருளே இருப்பு உடையதாகவும், இருப்பு அற்றதாகவும் இருக்க முடியாது.

கனவில் காணும் பொருட்கள் கனவு உள்ளவரை உண்மையாகவும், கனவு கலைந்தவுடன் உண்மையற்றதாகவும் தோன்றுகின்றது.

அழியும் பொருளுக்கே இந்த இருமை தன்மைகள் இருக்கின்றது. இவைகள் காலத்திற்கு உட்பட்டவை.

இவ்வாறு, காலத்திற்கு கட்டுப்பட்ட ஒன்று எப்படி விடுதலையைக் (மோக்ஷத்தை) கொடுக்க முடியும்?

(*இருப்பது போலத் தோன்றி, இல்லாமல் போகின்ற உடலுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?*)

ஆக, மோக்ஷம் என்ற ஒன்றை இருப்பது போல தோன்றி, இல்லாமல் போகின்ற உடலுக்கு கொடுக்கவும் முடியாது. என்றும், எக்காலத்திலும் அழியாத ஆத்மாவுக்கு மோக்ஷம் தேவையும் இல்லை.

ஆக, மோக்ஷம் யாருக்கு?

ஜீவனுக்கா?

ஜீவனும், பிரம்மமும் ஒன்று என்று **"அறிவதே"** மோக்ஷம்.

அப்படியானால், அறிபவன் யார்?

{அறிபவனும், அறியப்படும் பொருளும் அறிவினால் ஒன்றாகிவிட்ட நிலையில், இருப்பதெல்லாம் இறைவ(னா)னே!}

எனவே, **மோக்ஷம்** என்பது அடையப்படுவதல்ல! அறியப்படுவது!

உண்மையில், மோக்ஷமும் இல்லை. பந்தமும் இல்லை. பற்றற்ற விடுதலையும் இல்லை. பற்றுகின்ற பந்தமும் இல்லை.

ஆக, சந்நியாசமும் இல்லை! சம்சாரமும் இல்லை!

## 26. ஆத்மாவின் நிலை

ஆன்ம சொரூபத்தை எண்ணங்கள் அற்ற மனதைக் கொண்டு, தெளிந்த புத்தியினால் விசாரித்துப் பார்த்தால், அந்த ஆத்மாவை அறிந்தவன் தன்னை அறிந்தவன் ஆகின்றான்.

சதாசிவ தத்துவம் முதற்கொண்டு, கண்ணிற்குத் தெரியாத கிருமிகள் வரையிலும் எல்லாவற்றிலும் ஆன்ம சொரூபம் விளங்குகின்றது.

மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியனின் பிரகாசம் தடைபட்டு காணப்படுவது போன்று, இந்த உலகத் தோற்றங்களால் மயங்கிய மந்த புத்தியினால் ஆத்மாவின் பிரகாசம் தடைபட்டு காணப்படுகின்றது.

மேகம் அகன்ற ஆகாயத்தில் எப்படி சூரியன் பிரகாசமாக காணப்படுமோ, அதுப்போல, புத்தியில் உள்ள மன அழுக்குகள் நீங்கினால், ஆத்மா எங்கும், எதிலும், எப்பொழுதும் பிரகாசமாக விளங்கும்.

சூரியனுடைய வெளிச்சம் எங்கும் பரவி இருந்தாலும் பாதரசம் பூசப்பட்ட கண்ணாடியில் பிரகாசமாகவும், தெளிவாகவும் தெரிவதைப் போன்று, விசாரம் என்ற இரசம் பூசப்பட்ட புத்தியில் ஆத்மா மிகத் தெளிவாக விளங்கும்.

ஆத்மாவைக் காண்பித்துக் கொடு என்று கேட்பது, என் கண்களை எனக்கு காட்டிக்கொடு என்று கேட்பதற்கு ஒப்பானது.

ஆச்சாரியர் எவ்வளவுதான் புத்திமானாக இருந்தாலும், இவனது கண்ணை இவனுக்கே எப்படிக் காட்டிக் கொடுக்க முடியாதோ, அதுபோல, ஆத்மாவையும் புறத்தில் காட்டிக் கொடுக்க முடியாது.

ஆதலால், ஆன்ம சொரூபத்தின் அருகில் ஒருவனைக் கொண்டு செல்வது மட்டும்தான் குருவின் செயல். இதற்கான வழியை மட்டுமே சத்குருவானவர் காண்பித்துக் கொடுக் கின்றார்.

ஆன்ம விசயத்தைப் பொருத்தவரை எதுவரையில் என்னுடையது என்ற மமகாரம் இருக்கின்றதோ, அதுவரையில் ஆன்ம சொரூபத்தை அறிய முடியாது.

என்னுடையதிலிருந்து விடுபட்டு, நான் என்று எது உள்ளதோ அதுவே, நிஜமான **ஆத்ம சொரூபம்** ஆகும்.

எதுவெல்லாம் என்னுடையது என விளங்குகின்றதோ?, அதுவெல்லாம் ஆத்மா அல்ல! என்று தள்ளிவிட்டு, எதனிடத்தில் என்னுடையது என்ற எதுவும் தோன்றவில்லையோ? அதுவே, **ஆத்மா** என்று அறிய வேண்டும்

மனை, மனைவி, மக்கள், தனம், தானியம், நாடு என்னும் இவைகளிடத்தில் **"நான்"** என்று தோன்றாமையால், இவைகள் எதுவும் தன்னுடைய உண்மை சொரூபம் ஆகாது. இவைகள் அனைத்தும் விசய சுகங்கள் ஆனபடியால், நான் இவைகளில் இருந்தும் வேறானவன் என்றவாறு விசாரம் தொடங்கப்பட வேண்டும்.

இரத்தம், எலும்பு, மஜ்ஜை போன்ற நிமிடத்திற்கு நிமிடம் மாறக்கூடிய, மாறிக்கொண்டிருக்கின்ற இந்த உடல் எப்படி என்னுடையது ஆகும்? ஆதலால், இது நான் அல்ல. ஆகவே இது எப்படி ஆத்மாவாகும்?

இந்த உடலில் இருந்து ஒரு கையை வெட்டி எடுத்து விட்டால், அந்த கை **"நான்"** என்று கூறுவதில்லை. மேலும் அது கட்டை, கல் போன்ற ஜடப்பொருட்களுக்கு இணையாக மாறிவிடுகின்றது.

அதுப்போலவே, கனவு காணும் போதும் இந்த உடல் இல்லை. வேறு ஒரு உடல் அந்த கனவில் காணப்படுகின்றது. அது அங்கு பல காரியங்களை செய்கின்றது. இதனைப் பார்க்கும் பொழுதும் நான் என்பது இந்த உடல் இல்லை. இதனிடமிருந்து வேறானவன் நான்.

மேலும், ஆழ்ந்த உறக்கத்தில் கனவும் இல்லாமல், நினைவும் இல்லாமல், ஒன்றும் இல்லாத சூனியத்தை அனுபவிப்பதால், விழிப்பு நிலைக்கு வந்த பிறகு, நான் நன்றாக,

ஆனந்தமாக தூங்கினேன் என்பதை, அறிந்தவன் ஒருவன் இருக்கின்றான்.

அத்தகைய ஒன்றுமில்லாத சூனியத்தை விழிப்பு நிலையில் அவனே விளக்குகின்றான். ஆகவே, சூனியமும் நான் அல்ல.

அதுப்போலவே, பிராணன், மனம், புத்தி போன்ற வைகள் அனைத்தும் என்னுடையது என்று வருகின்ற பொழுது, அதுவும் நான் ஆக இருக்க முடியாது.

காரணம், நான் அதிலிருந்து வேறானவனாக இருப்பதினாலேயே அதனை என்னுடைய மனம், என்னுடைய மூச்சுக்காற்று என்று கூறுகின்றேன்.

ஆகவே, அதுவும் **'நான்'** அன்று.

நான் இல்லையென்று சொல்வதற்கான நிலை எப்பொழுதும் வந்ததில்லை. காரணம், நான் எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கின்றேன்.

***நான் விளங்காதிருக்கக் காரணம் யாது?***

கண்ணினால் வெளிப்பொருட்களை நன்றாகப் பார்க்கின்றேன். காற்றாகிய பிராணன் உடலின் தோல் என்ற தொடு உணர்ச்சியினால் நன்கு உணரப்படுகின்றது. மனமும், புத்தியும் அறிவினால் நன்றாக சிந்தித்து அறியப்படுகின்றன.

ஆனால், இந்த **‘நான்’** மட்டும் விளங்குவது என்ன காரணத்தினால் தெரியாமலிருக்கின்றது?

இந்த ஆத்மாவிற்கு வேறான அனைத்து விசயங்களையும் நன்கு விளங்கும் போது, ஆத்மா மட்டும் எதனால் விளங்கவில்லை?

ஆகவே, இந்த தேவையற்ற அனாத்ம விசயங்களை நினையாமல் விட்டு விடலாமா? அப்பொழுதாவது இந்த உண்மையான **“நான்”** விளங்குமா?

வெளி விசயங்களில் மனதை செலுத்தாமல் தவிர்த்து வருவது ஒரு வகையில் நல்லது. காரணம் முதலில் வெளிப் பொருட்களில் உள்ள நாட்டம் இதனால் குறையும்.

அதாவது, இருட்டில் உள்ள பொருட்களைக் காணமுடியாமல் இருக்கின்ற பொழுது, அங்கு ஒளி வந்தவுடன், இருள் அகன்று அனைத்து பொருள்களும் தெளிவாகத் தெரியும். இருளை அகற்றியது மட்டுமே ஒளியின் செயல், ஆனால், ஒளியால் அந்த பொருள் அடையப்படவில்லை. அந்தப் பொருள் ஏற்கனவே அங்கேயே இருந்ததுதான். அதாவது இருளிலும், ஒளியிலும் அந்த பொருட்கள் அங்கேயே இருந்தன.

இதை அறியாமல் ஒளியால் பொருளை அடைந்தேன் என்பது எவ்வளவு அறியாமையோ, அதுப்போல, வெளி விசயங்களில் ஈடுபட்டு ஆத்மாவை அடைய முடியும் என்று கருதுவதும் அறியாமையே ஆகும்.

இருப்பினும், மனதை அடக்கினால் மட்டும் அடையக் கூடிய விசயமாக அது இருக்குமானால், அது ஆத்மாவன்று.

தானாகவே இருக்கின்ற ஒன்றை தேடியோ, அடக்கியோ அடைவது எவ்வாறு? அதை தேடி அடைய முயற்சிப்பதினால், அதை அடையவே முடியாது.

உதாரணமாக, தன் கழுத்தில் அணிந்துக் கொண்டு இருந்த முத்து மாலையை, மறந்துவிட்டு, அனைத்து இடங்களிலும் தேடி அடைய முயற்சித்தால், அதை எப்படி அடைய முடியாதோ?, அதுப்போல, தானாக இருக்கின்ற ஆத்மாவை மனதினால் தேடி அடைவது எவ்வாறு முடியும்?

அடைய முடியாத ஒன்றை, அடைய முயற்சி செய்வது என்பது ஒன்று கிடையாது.

"முயற்சி எல்லாமே அறியாமையை அகற்றுவதற்காக மட்டுமே, ஆத்மாவை அடைவதற்கல்ல."

தன் கழுத்தில் அணிந்துள்ள முத்து மாலையை அறியாமல் அதைத் தேடிக் கொண்டிருப்பவனுக்கு, அது தன்னுடைய கழுத்திலேயே இருக்கின்றதே என்று காட்டிக் கொடுக்க வேறு ஒருவர் எப்படி அவசியமோ! அதுப்போலவே, அறியாமையை அகற்றி, அந்த ஆத்மாவே நான்தான் என்று தன்னைக் காட்டிக் கொடுக்க சத்குருநாதர் என்பவர் அவசியம்.

பெரும்பாலாக சாஸ்திரம் கற்றவர்களும் வெளியில் பார்த்தே பழகி விட்டதினால், இந்தப் பாவனையை அறியாமல் ஆத்மாவைத் தேடி இரவும், பகலும் என இங்கும், அங்கும் அலைந்துக் கொண்டிருக்கின்றனர்.

அதாவது விசாரணை செய்து அடைந்த புத்தியை மட்டும் கொண்டு, அதை மனனம் செய்வதினால் மட்டும் இந்நிலையானது அகப்படாது.

அனைத்து உபநிஷதங்களையும், பகவத் கீதையையும், பிரம்ம சூத்திரத்தையும் என ஒன்று விடாமல் வேதாந்த பாடங்களை கற்றுக் கொண்ட பண்டிதன், எதுவரையில் கேட்டலும், விசாரித்தலும் மட்டுமே செய்கின்றானோ, அதுவரையில் அது அவனுக்கு பிடிபடாது.

காரணம் அவனது புத்தியில் சேர்த்து வைக்கப்பட்ட எனக்கு எல்லாம் தெரியும் என்ற மாசுக்கள் நீங்காமல், அதை அவன் அறிய முடியாது. அது இருந்த இடத்திலேயே சும்மா இருந்துக் கொண்டு அறியக் கூடியது.

உலக விசயங்களைப் போல விசாரத்தின் வாயிலாக அறியக்கூடியது அல்ல. உண்மையாகவே அது விசாரம் அடங்குமிடத்தில், தானாகவே விளங்குகின்றது.

ஒருவன் நடந்து செல்லும் பாதையில் தன் முன்னால், தன் தலையின் நிழலை கண்டு, அதை தாவித், தாவி மிதிக்க முயற்சிக்கும் பொழுது, அது தள்ளித் தள்ளிப்போவதைப் போல,

ஏதாவது செயல்களைச் செய்து ஆத்மாவை அடைய முயற்சிக்கும் செயலும் இதுபோன்றே வீணானது ஆகும்.

இந்த உலகம் **அறிவு, அறிபடுபொருள்** என இரண்டு விதமாக இருக்கின்றது. உலகை நேரடியாகக் காணுவதால் அதற்கு நிரூபணம் தேவையில்லை.

அறிவு இல்லையென்றால், அறிபடு பொருளையும் அறியப்பட முடியாது.

அறிவே எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ளது. இது சித்ரூபமாக எப்பொழுதும் விளங்குவதால், சூரியனது வெளிச்சத்திற்குத் தீபம் தேவையில்லாதது போலச் சித்ரூபத்தை சாதிக்க சாதனமான வேறு ஒரு பிரமாணம் தேவையில்லை.

(ஆதாவது நான் இருக்கின்றேன் என்பதை அறிய வேறு ஏதாவது ஆதாரம் தேவையா? அல்லது வேறு யாராவது வந்து கூற வேண்டுமா?)

இதற்கு ஞானம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அந்த **'நான்'** இருக்கும். அது அழியாத நிலைக் கண்ணாடி, கண்ணாடியில் பிம்பம் போல, யாவும் அதனுள் அடக்கம்.

ஸ்தூலமான கண்ணிற்குத் தெரிகின்ற பானைக்குள்ளே சூக்ஷுமமான கண்ணிற்குத் தெரியாத மண் இருப்பதுப் போல, ஒவ்வொரு ஜீவனின் கண்ணிற்குத்

தெரிகின்ற உடலுக்குள்ளே, கண்ணிற்குத் தெரியாத அந்த சைதன்யம் ( ஆத்மா) இருக்கின்றது.

அந்த சைதன்யமே அனைவருக்குள்ளும் உண்மை சொரூபமாகவும் இருக்கின்றது. அதையே, நாமும் **"நான்"** என புரிந்து கொண்டு, அந்த சைதன்யத்திடம் ஒன்றி, பேதமற்று எவ்வித முயற்சியும் செய்யாது அந்நிலையில் நிலைத்திருப்பதே **'தன்மயம் ஆதல்'** எனப்படும்.

உலக விவகரங்கள் ஏதுமற்ற அமைதியான சூழலில் சிதான்மா (ஜீவன்) பிரகாசிப்பதுதான் சைதன்யத்தின் உண்மை சொரூபம் ஆகும். இதற்கு அன்னியமாக இந்த உலகில் எதுவும் இல்லை. எல்லா வடிவங்களில் அது இருந்தாலும், அதன் உண்மை சொரூபம் ஒன்றே ஒன்றுதான். அதுவே **பிரம்மா, விஷ்ணு, சிவன்** எல்லாமே.

உதாரணமாக, ஒருவன் பொருட்காட்சியில் உள்ள கண்ணாடி மாளிகைக்குள் சென்றான் என்றால், அங்கு பலவிதமாக பாதரசம் தடவப்பட்ட கண்ணாடிகளைக் காணலாம்.

அந்த கண்ணாடிகளில் இவனது உருவம் பிரதி பிம்பிக்கின்ற பொழுது, சில கண்ணாடி இவனை குள்ளமாகவும், சில கண்ணாடி இவனது முகம் நீண்டு இருப்பதுப் போலவும், சிலவற்றில் உயரமாகவும், சிலவற்றில் பருமனாகவும், சிலவற்றில் ஒல்லியாகவும், சிலவற்றில் முகம்

விகாரமாகவும் காண முடிகின்றது அல்லவா?. ஆனால், உண்மையில் இருப்பது இவன் ஒருவன் மட்டுமே.

உபாதியான கண்ணாடியின் தகுதிக்கு ஏற்ப இவனது உருவ தோற்றம் எப்படி மாறுபட்டு காணப்படுகின்றதோ அதுப்போல, ஒரே வடிவான அந்த சைதன்யம் பல உடல்களின் வாயிலாக இந்த பிரபஞ்சத்தில் பிரதி பிம்பிக்கின்ற பொழுது, பலவிதமான உருவ தோற்றத்திலும், பல்வேறு குணங்களுடன் கூடியதாகவும் காண முடிகின்றது.

ஆனால், உண்மையில் அந்த ஆத்மாவின் பிரதி பிம்பங்களே இந்த உலகமும், உலகப்பொருட்கள் அனைத்துமே என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

எப்படி கண்ணாடி இல்லையென்றால், பிம்பங்கள் இல்லையோ, அதுப்போல, சைதன்யம் இல்லை என்றால், இந்த உலகில் எதுவும் இல்லை. அது எங்கும், எதிலும், எப்பொழுதும் இருப்பதினாலேயே சர்வேஸ்வரத் தன்மை கொண்டது.

மனம் வெளியே செல்வதை சற்று நிறுத்தி, உள்முகமாக மன விகாரங்களிலிருந்து விடுபட்டு, தானே தன் ஆன்ம சொரூபத்தைப் பார்க்க வேண்டும். அதாவது, பார்க்கின்றேன் என்ற எண்ணம் உண்டாகாமல், எப்படி பிறந்த குழந்தையின் மனதில் எந்த எண்ணங்களும் உண்டாகாத, அந்த சுத்த நிலையில் எந்த உருவத்தையும் கற்பனை செய்யாமல் எதுவாக இருக்கின்றோமோ?, அதுவே, நம் உண்மை சொரூபம்.

## 27. மோகம் என்ற முடிச்சுக்கள்

தத்துவத்தின் சாரமாக, அழியக்கூடிய இந்த உடல் ஜடம். ஆத்மா அழிக்க முடியாத அறிவு. உடலுக்கும், ஆத்மாவுக்கும் இடையில், உடலின் எல்லைக்குள் உதிப்பது **“நான்”** என்ற அகந்தை.

இதை, **‘சித் ஜடக்கிரந்தி’** எனவும், பந்தம் எனவும், சூக்ஷ்ம உடல் எனவும், மனம் என்றும் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

இந்த கிரந்தியானது (முடிச்சு) எதுவரையில் அவிழாமல் இருக்கின்றதோ, அதுவரையிலும் ஒருவனுக்கு சுகம் உண்டாகாது.

மோகம் என்ற கயிற்றினால் உண்டான அனேக முடிச்சுக்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றன. ஆனால், இங்கே சொரூபத்தை அறியாமல் இருப்பதே **‘மோகம்’** என்ற கயிறாகும்.

இந்த கயிற்றினிலே விபரீத புத்திகள் என்ற அனேக முடிச்சுக்கள் அவிழ்க்க முடியாமல் இருக்கின்றன. இதில் முதலாவதாக இந்த உடலை உண்மையென்று கருதி, புலன்களின் வாயிலாக இறைவனை காண முயற்சிப்பது,

அவனுக்கு மேலும், மேலும் தேகாத்ம புத்தியை கொடுக்கின்ற மிகப்பெரிய முடிச்சாகும்.

அத்துடன் கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்ற தோற்ற மாத்திரமான இந்த உலகத்தை உண்மை என்று நம்புகின்ற புத்தி உண்டாவது மற்றொரு முடிச்சாகும்.

இவ்விதமே ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் பேதமுண்டு என்ற கொள்கை முதலியவைகளும் முடிச்சுக்களே.

இவைகள் அநாதி காலமாக ஏற்பட்டு மீண்டும், மீண்டும் நடந்து வருவதினால், ஒரே கயிற்றில் பல முடிச்சுக்கள் போடப்பட்டுள்ளது. இதனால், அந்த கயிறே முடிச்சுக்கள் போல மாறிவிட்டது.

அந்த ஒரே கயிறு தோற்றத்தில் பல முடிச்சுக்களாகத் தோன்றுவது எப்படியோ, அதுபோன்று தேகத்திற்கு ஆதாரமான ஜீவனிடத்தில் இந்த உலகம் உண்மை போன்று தோற்றங்களாக காணப்படுகின்றது.

இந்த முடிச்சுக்களால் ஜீவன் கட்டப்படுகின்றான். இந்த முடிச்சுக்கள் அழியும் போதுதான் பந்தத்திலிருந்து விடுபட்டு முக்தனாகின்றான். அதாவது, துக்கத்திலிருந்து விடு படுகின்றான்.

கண்ணாடி இல்லையென்றால், பிரதி பிம்பம் இல்லை. அதுப்போல, மெய்யறிவு இல்லையென்றால், சிற்றறிவு இல்லை.

ஆதலால், சைதன்யத்தை ( ஆத்மாவை) தள்ளிவிட்டு, மற்றொன்றை அறிய முடியாது. எதுவரையில் "பார்க்கின்றேன்", "அறிகின்றேன்" என்ற முடிச்சுக்கள் திடமாக இருக்கின்றதோ அதுவரையில் அந்நிலை அடையப்படவில்லை.

ஏதாவது அடையப்பட்டிருக்குமானால், அது அந்த நிலையுமன்று.

மேலும், சிலர் பயிற்சியின் வாயிலாகக் கண்களை மூடிக்கொள்வதும், திறந்து கொண்டு மேலே பார்ப்பதும் கிரியையினால் (செயல்களினால்) உண்டாகின்றபடியால், அது பூரண நிலையல்ல.

காரணம் கால தேசங்களுக்கு அப்பாற்பட்ட அந்த பரிபூரண வஸ்து எங்குதான் இல்லை. அது சுயம்பிரகாசம் அல்லவா! அப்படிப்பட்ட பரம பதத்தை அறிந்த பிறகு செய்ய வேண்டியது ஒன்றுமில்லை.

கண்களை மூடித் தடைப்படுத்தி அதை பார்க்க முயற்சிக்கின்றேன் என்பதையும், கண்களைத் திறந்துக் கொண்டு மேலே பார்த்து, அதை நிலை நிறுத்த முயற்சிக்கின்றேன் என்பதையும், கண்ணுக்குள்ளே அதைக் கருமணியாகக் காண்கின்றேன் என்பதையும் விட்டு விடவேண்டும். இவைகளினால் ஆத்மாவை அறிய முடியாது.

இந்த முயற்சிகள் அனைத்துமே முக்குணங்களின் வெளிப்பாடு மட்டுமே ஆகும். அவைகள் அனைத்துமே

அறியாமையின் முடிச்சுக்கள் ஆகும். அதைவிடுத்து, முக்குணங்கள் அற்ற முழுமையான **“குணாதீதன்”** என்ற நிலைக்கு உயர வேண்டும்.

மேலும் இது நானல்ல என்ற உடலின் மீது இருக்கின்ற வன்மை பொருந்திய முடிச்சையும் அவிழ்த்து விட வேண்டும். எங்கும், எதிலும் அந்த அகண்ட சத்சிதானந்த சொரூபமே இருப்பதாக பார்க்கப் பழக வேண்டும். அகில பிரபஞ்சத்தையும், கண்ணாடியில் தெரிகின்ற பிரதிபிம்பம் போலத் தனக்குள்ளேயே பார்க்க வேண்டும். அதன்பிறகு எங்கும் எதிலும் இருக்கின்ற அந்த சின்மாத்திர சொரூபமே **“நான்”** என்று தன் சொரூபத்திலேயே தன்னிலையில் அமர்ந்திருப்பது சிறப்பு.

## 28. ஞானமே எல்லை

சில பொருட்கள் அனுபவத்தில் இருந்தாலும், அதைப் பற்றிய அறிவு இல்லையென்றால் அதை அறிய முடியாது.

உதாரணமாக, பத்தாவது மனிதனை தேடும் ஒருவன், தன்னை விட்டு விட்டு மற்ற ஒன்பது பேர்களை எண்ணி, பத்தாவது மனிதன் தொலைந்து விட்டான் என்று கவலைப்படும் போது, வேறொருவன் அவனை பார்த்து நீதான் அந்த பத்தாவது மனிதன் என்று கூறியவுடன் அவன் தன்னை உணர்ந்து கொண்டதுப் போல எனலாம்.

ஒவ்வொருவரும் விழிப்பு நிலையில் இருந்து கொண்டுதான் ஞானத்தை அடைய வேண்டும். இந்த ஞானம் என்பது, நிர்விகல்ப ஸ்வரூபம் (சாத்தியம்) இதை நிச்சயம் செய்பவர்தான் முமுக்ஷு.

இவ்வாறு ஆன்ம ஞானத்தை அறிய விரும்பி, அதன் வாயிலாக என்றும் நிலையான மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய மோக்ஷத்தை அடைய வேண்டி, தக்க சத்குருவை நாடி நேரில் வருகின்ற அதிகாரிகளில் (தகுதியுடையவர்களில்) அதிமந்தர், மந்தர், மத்திமர், உத்தமர், உத்தமோ உத்தமர் என ஐந்து வகைகளில் இருக்கின்றனர்.

இவர்களில் ஒருவரை ஒருவர் மோக்ஷம் அடைவதில் உள்ள ஆர்வத்தில் வேறுபட்டவர்கள்.

இவர்களில் அதிமந்தமான அதிகாரியாக இருப்பவர்கள் வருவது சும்மா இருந்தாலும் வரும், வராதது எந்த முயற்சி செய்தாலும் வராது என்ற மன நிலையில் இருப்பார்கள்.

ஒருவன் சாலையில் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, எந்த முயற்சியும் செய்யாமல், கீழே மாணிக்ககல் கிடைத்து எடுத்ததுப் போன்று, தானாகவே நமக்கும் மோக்ஷமானது கிடைத்தால் கிடைக்கட்டும், முயற்சி எதுவும் தேவையில்லை என்ற மூடபுத்தி கொண்டவனாக இருப்பான்.

இவன் பல யுகங்கள் ஜென்மங்கள் எடுத்தாலும், முக்தி அடையாதவனாக, பலவிதமான துக்கங்களை துக்கம் என்று அறியாமலேயே அதை பல உடல்களில் (புழு, பூச்சி, மிருகம், பறவை, என) அனுபவித்து காலங்களை கழித்துக் கொண்டிருப்பான். இவன் மனிதப் பிறவியின் மகத்துவம் அறியாத மூடனாகவே இருப்பான்.

மந்த அதிகாரியாக இருப்பவர்கள் மோக்ஷம் அடைவதற்கு காலம் இன்னும் இருக்கின்றது, இப்போது ஏன் அவசரப்பட வேண்டும்? அனுபவிக்க வேண்டியவைகளை நன்றாக அனுபவித்து, செய்ய வேண்டிய கடமைகளை செய்து விட்டு, அதற்குப் பிறகு மோக்ஷம் அடைய முயற்சி மேற் கொள்ளலாம் என்று இருப்பவன். இவன் சில யுகங்களில், பல

பிறவிகளில் வந்து, அதன் பிறகு மனிதப் பிறவியின் மகத்துவம் அறிந்து முக்தி அடைவான் என்று அறியவும்.

அடுத்து மத்திம அதிகாரியாக இருப்பவன் ஆசைகளே துன்பத்திற்குக் காரணம், ஆன்ம ஞானமே மோக்ஷத்திற்குச் சாதனம் என்பதை சாஸ்திரங்களினாலும், குரு உபதேசங்க ளினாலும், இவர்களது விழிப்புற்ற புத்தியினாலும் நன்றாக அறிந்திருப்பார்கள்.

இருப்பினும், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், சொத்து, சுகம் என பந்த, பாசங்களுக்கு அடிமையானவர்களாக, அதிலிருந்து விடுபட முடியாதவர்களாக இருப்பார்கள். இவர்கள் மூன்று ஜென்மத்திற்குப் பிறகு ஜீவன் முக்தர்களாகும் தகுதியை அடைவார்கள்.

உத்தம அதிகாரிகள் மன சஞ்சலமின்றி, குரு முகமாக கேட்கப்பட்ட விசயங்களில் தெளிவும், சர்வ ஆதாரமான சச்சிதாந்த பரிபூரண பரமாத்மாவே எங்கும், எதிலும் நிறைந்துள்ளது என்பதை பரோக்ஷ ஞானமாக (கேள்விப்பட்ட ஞானமாக) அறிந்து, பின்னர் அதனை அபரோக்ஷ ஞானமாக (அனுபவ அறிவாக), தன்னை விசாரித்து அடையும் பொருட்டு, சித் சொரூபமான பரமாத்மாவையும், ஜட சொரூபமான அநாத்ம வஸ்துக்களையும் பிரித்துக் கொண்டு, நித்ய அநித்ய வஸ்து விவேகம் உடையவர்களாக எப்பொழுதும் ஆன்ம நிஷ்டையில் நிலைத்திருக்க முயற்சிப்பார்கள்.

உத்தமோ உத்தம அதிகாரியானவன், தலையில் நெருப்பு பிடித்துக் கொண்டவன், நல்ல நீர் நிலைகள் எங்கே உள்ளன என தேடி ஓடாமல், அருகே சாக்கடை நீர் நிறைந்த குட்டையாக இருந்தாலும், யோசிக்காமல், அதில் குதித்து தன் தலையில் பிடித்திருக்கும் நெருப்பை அணைப்பதை மட்டுமே நோக்கமாக கொண்டு இருப்பான்.

இவனைப் போன்று, உத்தமோ உத்தம அதிகாரி யானவன் தெளிந்த அறிவுடன், குரு உபதேச காலத்திலேயே, அனைத்து கர்மங்களையும் விட்டு, விட்டு மோக்ஷத்தை மட்டுமே இலட்சியமாக்கிக் கொண்டு எப்பொழுதும் ஆன்ம நிஷ்டை உடையவனாக, தன் சொரூபத்தில் நின்று, சாக்ஷாத் அந்த பரமாத்மாவே **“நான்”** என்ற திடமாக நிச்சயித்த புத்தியுடன், நிர்விகல்ப நிஷ்டையில் நின்று, அந்த பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து விடுவான்.

இவன் யாருக்காகவும், எதற்காகவும் காத்திருக்க மாட்டான். இவனுக்கு இந்த நிலையை அடைவதில் கஷ்டம் ஒன்றுமே இல்லை. ஆனால், மற்றவர்களால் இவன் நிலையை அடைவதற்கு இன்னும் சில பிறவிகள் காத்திருக்க வேண்டும்.

இந்த நிலையை அறிந்தவர்களே உத்தமோ உத்தம அதிகாரிகள். மற்றவர்கள் மந்தர், மத்திமர், போன்ற அதிகாரிகள் படிப்படியாகச் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் (கேட்டல், தெளிதல், அதன்படி நிற்றல்) முதலியவற்றை முறையாகக் கடைப்பிடித்து, விவேக, வைராக்கியத்தினால் ஞானத்தை அடைகின்றனர்.

அதிமந்த அதிகாரிகள் பல ஜென்மங்களுக்குப் பிறகு ஞானம் பெற்று, அதன் பிறகு **மோக்ஷம்** என்ற பலனை அடைவார்கள்.

சிலர் ஒரு பக்கம் உலகப் பொருளையும், மறுபக்கம் இறை அருளையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும், இரண்டும் இரண்டு பக்கங்கள் என்றும், ஒன்றில் இருந்துக் கொண்டே மற்றொரு பரிமாணத்தை உணர்வதே ஞானம் என்று அறியாமையினால் பிதற்றிக் கொண்டு, பிளவு படாத பரிபூரணத்தை, பிளவு பட்ட மனதினால் அறிய முடியாமல் அல்லல் படுகின்றார்கள்.

ஆனால், உண்மையில், ஆத்மாவை அறிய விரும்புபவனது செயல்கள், ஆன்ம ஞானத்திற்காக மட்டுமே நடந்து இருந்தால், அந்த செயல்களினால் அவனது அஹங்காரம், உடற்பற்று மற்றும் உலகப்பற்று நீங்குமே ஒழிய உலகியல் ஆசை ஒருபொழுதும் உண்டாகாது.

ஆத்மாவுடன் லயமடைந்தவனுக்கு, அவனுக்கு என்று சொந்தமாக தேவைகள் ஒன்றும் இருக்காது. தன்னில் தானாய் சொரூபத்தில் கரைந்திருக்கின்றவனுக்கு, கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற கற்பக விருட்சமே அவனிடம் இருக்கின்றது.

ஆனால், கேட்பதற்கு அவனிடத்தில் **“மனம்”** இருக்காது. இதுவே, உத்தம ஞானிகளின் உண்மை நிலை.

எனவே, அனுபவ ஞானத்தால் புரிதல் ஏற்பட்டு, எப்பொழுதும் மனதை அந்த ஈஸ்வர சிந்தனையிலேயே வைத்து, அவனிடம் பூரண சரணாகதி அடைந்து, அதனால் வந்தமைகின்ற சமாதியே அனைத்திலும் மேலானது. இதுவே **‘ஆத்ம அனுபவம்’** எனப்படுகின்றது.

மற்றபடி, சில நொடிகள் தோன்றி மறைகின்ற எந்த சமாதியினாலும், ஆத்ம ஞானத்தைக் கேள்விப்பட்ட கேள்வி அறிவினாலும் எந்தப் பயனும் இல்லை.

இது எப்படியென்றால், ஒருவன் சாலையில் செல்லும் பொழுது, இரு புறங்களிலும் தோன்றி மறைகின்ற மரம் செடிகளை கவனியாது, கவனம் முழுவதும் செல்லும் சாலையிலேயே இருப்பதைப் போன்று, கவனம் சிதறாமல் எப்பொழுதும் நிர்விகல்ப சமாதியில் நிலையாக இருப்பவனுக்கு இடையில் தோன்றி மறைகின்ற சில நொடிகள் சமாதியினால் ஒரு பயனும் இல்லை.

எண்ணங்களை உருவாக்கும் கட்டமைப்பை அழிக்கும் பொழுதுதான் எண்ணங்கள் முற்றுமாக அழிந்து, மறைப்பு நீங்கி, எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற அறிவு ( ஆத்மா) விளங்குகின்றது.

எண்ணங்களுக்கு ஆதாரமாக இருப்பது விசயங்களே. விசய ஆகாரங்கள் இல்லாத பொழுது, எண்ணங்கள் அற்ற நிர்விகல்ப நிலை உருவாகின்றது.

இந்த நிர்விகல்ப நிலை உருவாவதற்கு முன்பும், அறிவு (ஆத்மா) விளங்கிக் கொண்டுதான் இருந்தது.

அதுப்போலவே, நிர்விகல்ப நிலையிலிருந்து வெளியே எண்ணங்களுக்குத் திரும்பினாலும் **"ஆத்மா"** எப்பொழுதும் விளங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

ஆகவே, நிர்விகல்ப நிலை இருந்தாலும், இல்லா விட்டாலும் **"அது"** எப்பொழுதும் ஒளிர்ந்துக் கொண்டே இருக்கின்றது.

எண்ணங்களால் சூழப்பட்ட நிலையில் அது அறியப்படாமல் இருந்தது. அறியப்படாமல் இருந்த காரணத்தினால், அதை அறியப்பட முடியாதது என்று கூறப்பட்டது. எண்ணங்களான மறைப்பை நீக்கும் பொழுது, நிர்விகல்ப நிலையில் அது புதிதாக விளங்குவது போல தோன்றுகின்றது.

அதாவது, அது எப்பொழுதும், எங்கும் உள்ள பொருள் ஆதலால், அறிபவன் தன்னை அறியும் பொழுது, அறிபடு பொருளாக, அந்த **"ஆத்மா"** அவனுக்கு வேறாகத் தோன்றுகின்றது.

ஆனால், உண்மையில், தன்னை அறியும் பொழுது, தானே அறிபடு பொருளாகிய ஆத்மாவாக இருப்பதினால், தன்னைத்தவிர வேறு ஒன்று இல்லை என்ற திட நிச்சயத்தால்

பேதமைகள் (இருமைகள்) நீக்கப்பட்டு, துவைதம் ஒழிந்து, அத்வைதம் மலருகின்றது.

இவ்வாறு தன்னை அறிந்தவன் இனி பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை.

உலக விவகாரங்கள் அனைத்தும் ஞான விழிப்பை அடிப்படையாகக் கொண்டே நடைப்பெறுகின்றது. எதனிடம் இருந்து இந்த உலகம் தோன்றியதோ அதுவே **"ஞானம்"** எனப்படும்.

"மனதின் சங்கற்பங்களினாலேயே உலக விவகாரங்கள் நடைபெறுகின்றது. ஞானத்தினால் யாவும் விளங்குகின்றன. இந்த சங்கற்பங்களை ஒழித்துச் சொரூபத்தை புத்தியினால் அறிந்தவன் பந்தத்திலிருந்து விடுபட்டு முக்தனாகின்றான்".

இதை இன்னும் சற்று புரியும்படி விளக்கலாம்.

ஒருவன் ஒரு கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்க்கின்றான். அந்தக் கண்ணாடியிலேயே அவன் உருவம் அடங்கியுள்ளதை அவனால் அறிய முடிகின்றது அல்லவா?

அதுப்போல, ஆத்மாவின் (அறிவின்) வாயிலாக இந்த உலகத்தைப் பார்க்கின்றீர்கள். அதே ஆத்மாவினால் (அறிவில்) இந்த உலகம் அடங்கியுள்ளது.

இதை அறிந்து கொள்வதே **ஞானம்.**

## 29. அவனே ஜீவன் முக்தன்

மனதில் பதிந்துள்ள சங்கற்பத்தினாலே உலக விவகாரங்கள் நடைபெறுகின்றன. எண்ணத்தை முற்றிலும் அழித்தவனிடம் சங்கற்பங்கள் இருப்பதில்லை. அவனே உள்ளதை உள்ளவாறு அறிகின்றான்.

இவனுக்கு மட்டுமே கண்ணாடியும் உண்மையில்லை. அந்த பிம்பமும் உண்மையில்லை. இருப்பது இவன் மட்டுமே உண்மை என்பது தெரியும்.

உள்ளதை உள்ளவாறு உணர்ந்தவன் இருமைகளில் இருந்து விடுபடுகின்றான். இருமைகளிடம் இருந்து விடுபட்டவன் அனைத்தையும் ஒன்றாகவே காண்பான்.

அப்படிப்பட்டவனுக்கு தனித் தனியாக இருளும், ஒளியும் எங்கே உண்டாகும். தனித் தனியாக இருந்தால்தானே இரண்டையும் சேர்க்க வேண்டும். இருப்பது ஒன்றே! அதில் இருந்து எதையும் பிரிக்கவோ, சேர்க்கவோ முடியாது. அவ்வாறு பிரித்தாலோ, சேர்த்தாலோ அது ஒன்று என்று அழைக்கின்ற தகுதியை இழந்து விடும். இவ்வாறு சேர்ந்தது, பிரிந்தது என்று கூறினாலே அங்கு முழுமை இல்லை எனப்படும்.

இருமைகளிடம் இருந்து விடுபட்டவனுக்கு பற்றுதல் இருப்பதில்லை. பற்றுதலே பந்தத்தை ஏற்படுத்தி இது என்னுடையது என்ற எண்ணத்தைக் கொடுக்கின்றது.

பற்றுதல் அற்றவன் செய்கின்ற செயல்கள் அவனது அந்தக்கரணங்களில் எந்த பதிவையும் உண்டாக்கு வதில்லை. அதனால் அவன் எதனிடத்திலும் பந்தம் கொள்வதில்லை. பந்தம் இல்லாதவன் பாமரனாகவும் இருக்கலாம், பண்டிதனாகவும் இருக்கலாம். அவனுக்கு எல்லாம் ஒன்றே.

இவ்வாறு தன்னை உணந்தவன் தன்னில் தானாய் சுயமாக தன் சொரூபத்தில், ஏகத்தில் ஏகாந்தமாக இருக்கின்றான்.

இவன் புறத்தே இருக்கின்ற தன் தகுதியைப் பார்ப்பதில்லை. அகத்தே இருக்கின்ற ( ஆத்மாவை) அந்தர்யாமியைப் பார்க்கின்றான்.

அப்படிப்பட்டவனுக்கு, இந்த உலகம் காட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இவனுக்கு மட்டும் தெரியும். இருப்பது இவன் மட்டுமே என்று.

நிறமற்ற ஆகாயம் நீல நிறமாகவே எல்லோருக்கும் தோன்றுகின்றது. அதுப்போலவே, கயிற்றில் பாம்பைப் பார்ப்பவன் பயந்து ஓடுவான். இது ஒன்றை மற்றொன்றாக பாவிப்பதினால் உண்டான அறியாமை நிலை ஆகும்.

அதுவே, தன்னை அறிந்த ஞானிகளுக்கு, விசாரித்து அதன் உண்மைத் தன்மையை அறிந்துக் கொண்டதால், அவர்கள் இதை **தோற்றப்பிழை** என்று தெளிவாகத் தெரிந்திருப்பதால் குழப்பம் அடைவதில்லை.

இதுவே, அறியாமையில் உள்ளவனுக்கும், அறிந்தவனுக்கும் உள்ள வேறுபாடு.

ஞானி தன் சுயத்தில் தெளிவாக இருப்பதால், இந்த உலகத்தை கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்ற பிம்பம் போல கருதுவார். அதனால், அவரது எந்தச் செயலும் அவரது சமநிலையைப் பாதிப்பதில்லை. அறியாமை அனைத்துமே அறிவு வெளிப்பட்டவுடன் மறைந்துவிடும்.

அதேசமயம், ஞானம் வருவதற்கு முன்பு கடந்தகாலத் தவறுகளினால் வந்த பதிவுகள் அழிவதில்லை. கண்ணில் புரை விழுந்தவனுக்கு எழுத்துக்கள் அனைத்தும் ஒன்றாக இருந்தாலும், இவனுக்கு மட்டும் எல்லாம் இரண்டு இரண்டாக தெரிவது போன்று, ஞானி எல்லாம் ஒன்று என்று அறிந்து இருந்தாலும், பழைய கர்மப் பதிவுகளினால் உள்ள இருமைகளில் இவரும் விவகாரம் செய்து வருவார்.

அது அவரது பிராரப்த கர்மம் இருக்கின்றவரை ஞானிக்கும் உலகம் இருக்கும். ஆனால், அவர்களைப் பொருத்தவரை இந்த உலகம் உண்மையில்லை.

உத்தம ஞானிகள் எப்பொழுதும் தன் சுயத்திலேயே இருப்பதால், மற்றவர்கள் பார்வைக்கு அவர்கள் உலக விவகாரங்களில் ஈடுபடுவது போன்று தோன்றினாலும், அவர்களைப் பொருத்தவரை அவற்றை முயல் கொம்பு போன்று உண்மையற்றது என்று ஒதுக்கி விடுவார்கள்.

ஒரு நாடக மேடையில் நடிக்கும் நடிகன் பல கதா பாத்திரங்களில், நடிப்பவர்களின் மத்தியில் தனக்கு கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தை ஏற்று, அந்தப் பாத்திரமாகவே தன்னை மாற்றிக் கொண்டு நடிப்பார். அது மேடையோடு முடிந்து விடும். அனால், அவரது உண்மை நிலை அவருக்கு நன்றாகத் தெரியும்.

அதுப்போல, ஆத்மானுபவத்தில் எப்பொழுதும் நிலைத்துள்ள உத்தம ஞானிகள் செயலும் ஒரு நடிகர் போன்றதே.

அவரும் இந்த உலக விவகாரங்களில் நடிக்க வந்தாலும், அதை உண்மையென்று அவரைப் பொருத்தவரையில் ஏற்றுக் கொள்ளாமல், நாம் நடிக்கவே வந்துள்ளோம் என்று தெரிந்து கொண்டு செயல்களை செய்வதால், அதனால் அவர் பந்தப்பட மாட்டார்.

தன் உண்மை சொரூபத்தில் எப்பொழுதும் இருப்பார். உலக விவகாரங்கள் அவர்களை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை.

இந்த உண்மையை உணர்ந்த இவர்களது பிராரப்தம், இவர்களது ஞானாக்கினியால் எரிந்த துணியின் சாம்பல் போன்று ஆகிவிடுவதால், பார்ப்பதற்கு காட்சியில் துணி இருந்தாலும், அது பயனற்றது போன்று, இவர்கள் பிராரப்தமும் பலனைக் கொடுப்பதில்லை. பலன் இல்லாத எந்த கர்மப் பதிவும் இவர்களுக்கு சேராது.

இவர்கள் மறைப்பொருளை மறைக்காமல் மற்றவர்களுக்கு உரைப்பதிலும், உற்சாகத்துடன் சத் சங்கங்களில் ஈடுபடுவதும் இவர்களது இயல்பாக இருக்கும். இவர்கள் எத்தகைய ஆபத்தான சூழ்நிலையிலும் தங்கள் அமைதியை இழக்க மாட்டார்கள். இவர்கள் எப்பொழுதும் ஆனந்தமாக இருப்பார்கள்.

இவ்வாறு உத்தம ஞானிகள் போன்று, ஒவ்வொரு சாதகனும் தன்னிடத்திலேயே இந்த தகுதியைத் தேட வேண்டும்.

இதில், எந்த தகுதி குறைவாக இருக்கின்றதோ, அதை அனுபவத்தில் அறிந்து, அதனை நிறைவு செய்ய தீவிரமாக முயற்சிக்க வேண்டும். உத்தம ஞானியைப் போன்று உயர அனைவரும் ஊக்கமுடன் முயற்சிக்க வேண்டும்.

இதை விடுத்து, மற்றவர்களை அவர் உண்மை ஞானியா, பொய் ஞானியா என்று பரிசோதித்து அவர்களின் உண்மைத் தன்மையை அறிவதினால், இவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

தன்னிடமே தன்னை சுயமாக விசாரித்து, தன்னுள்ளே தன்னை பரிசோதித்து, தன் உண்மை நிலையை உணர்ந்து கொண்டவர்களே, மற்றவர்களின் உண்மை நிலையை அறியக் கூடியத் தகுதி உடையவர்களாக ஆகின்றார்கள்.

மீண்டும், மீண்டும் தன்னை சுயப் பரிசோதனைக்கு உட்படுத்தும் போது மட்டுமே, தன்னை உண்மையில் அறிகின்றனர். இந்த சுயப் பரிசோதனையில் தன் உண்மை சொரூபத்தையும் தரிசிக்கின்றனர்.

இதுவே ஞானிகளாக தங்களை உயர்த்திக் கொள்ளக் கூடிய வழி முறையாகும்.

உத்தம ஞானிகள் தன்னை அறிந்து தன்னிடத்தில் தான் நிலை பெற்று, மனநிறைவு அடைந்த **'ஸ்திதப் பிரக்ஞன்'** ஆவான். வைராக்கியம், விவேகம், மனவடக்கம், புலனடக்கம், தியாகம், அமைதி, சமாதானம், பொறுமை, அகிம்சை போன்ற நற்குணங்கள் பெற்றவனையே ஞானியின் இலக்கணமாகக் கூறப்படுகிறது.

ஞானிக்கு பகலாக இருப்பது அஞ்ஞானிகளுக்கு இருளாகும். அஞ்ஞானிகளின் பகலாக இருப்பது ஞானிக்கு இருளாகும். எனவே, இந்த ஜீவன் உடலில் இருக்கும் காலத்திலேயே, இந்த ஞானத்தை ஒருவன் அடைந்து விட்டால் அவனே **"ஜீவன் முக்தன்"** எனப்படுகின்றான்.

அவனின் உடல் அழிந்த பின்பு பிரம்ம நிர்வாணம் எனும் **“விதேக முக்தி”** அடைகிறான். விதேக முக்தி அடைந்தவனுக்கு மறு பிறப்பு இல்லை.

வேதாந்த வழிமுறையான *நேதி, நேதி* கோட்பாடு மற்றும் *அஹம் பிரம்ம அஸ்மி* பாவனையுடன் கூடிய *அபேத பிரம்ம சிந்தனை,* உலகளாவிய (எல்லையற்ற) தன்மையையுடைய தூய உணர்வு, தன்னை (அறியாமையில்) வரையறைக்கு உட்படுத்திக் கொண்டு, மனம் – புத்தியோடு சேர்ந்து வெளிப்படும் போது, புலன்கள், உடல் துணைக் கொண்டு, உலகுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்கிறது.

அவ்வாறான மதிமயக்க நிலையிலுள்ள **ஜீவன்** தன்னை உடல், புலன்கள் மற்றும் மனமென்று கருதுகிறது.

பின்னர், குரு சன்னியாச தீக்ஷை கொடுத்து, மகா வாக்கிய உபதேசத்தை சீடனுக்குத் தந்து, அவனை **‘தத் துவம் அஸி’** என்று உபதேசிக்கின்றார். அப்போது, அவனது உணர்வானது தன் உண்மை இயல்பிற்கு விழித்தெழுகிறது. அந்நிலையில், அவனால் ஆத்ம தியான நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு, **“அஹம் பிரம்ம அஸ்மி”** என்று அவனால் கூற முடிகிறது.

இதுவரை, ஜீவன் தன்னை உடலாக நினைத்து, 'நான் இவ்வுடல்', 'என் பெயர் இது', 'என் பெயர் அது', 'நான் உயரமானவன்', என்றெல்லாம் கருதி வந்தது. இப்பொழுது,

இவ்வுடல் ஜடமானது என்றும், இந்த ஜடமான உடலிருந்து தான் வேறானவன் என்றும் தெளிவாக அறிகிறது.

பிறகு, "(நான்) இது (உடல்) அல்ல" ('*நேதி*') என்று நிச்சயமாக உணர்கிறது.

அதேசமயம், குரு உபதேசித்தபடி, "நான் பிரம்மன்" ('அஹம் பிரம்ம அஸ்மி') என்று தன் உண்மை சொரூபத்தில் நிலை பெற உறுதியாய் செயல்படுகிறது.

அதேபோல, '(நான்) இது அல்ல', '(நான்) இது அல்ல' என்ற 'நேதி' 'நேதி' முறைக்கோட்பாட்டை உபயோகித்து, புலன்கள், மனம், புத்தி, அகங்காரம் மற்றும் அறியாமைகள் ஆகிய ஒவ்வொன்றில் இருந்தும் தன்னைப் படிப்படியே விலக்கிக் கொள்கிறது.

உதாரணமாக, கிருஷ்ணன் என்பவரைப் பார்த்து 'நீங்கள் யார்?' என்று கேட்டால், 'நான் கிருஷ்ணன்' என்று அவர் சொல்வார்.

ஆனால், அவர் தனக்குத் தானே 'நான் கிருஷ்ணன்' என்று சொல்லிக்கொள்ள மாட்டார். பதிலாக, 'நான்' (அ) 'நான் இருக்கிறேன்' என்று மட்டும்தான் நினைப்பார்.

அதுப்போல, குரு சீடனுக்கு தீக்ஷை கொடுத்து, "*தத் த்வம் அஸி*" ('நீ அது') என்று உபதேசத்தை தரும்போது, சீடன் 'அஹம் பிரம்ம அஸ்மி' ('நான் பிரம்மம்') என்று சொல்கிறான்.

பின்னரும், அவ்வாறே தன் தியானத்திலும் நான் பிரம்மம்' என்று அறிவுறுத்திக் கொண்டு, உடல், மனம், புத்தி, போன்ற ஒவ்வொரு உறுப்புகளையும், 'நேதி நேதி' கோட்பாட்டை கடைப் பிடித்து, அது நானல்ல, நானல்ல என்று கூறி ஒதுக்கித் தள்ளுகிறான்.

இறுதியில், தீவிரமாக நெடுங்காலம் அனுசரிக்கப்பட்ட தியானத்தின் விளைவு மற்றும் இறை–கிருபையால் இருமைகளற்ற நிர்விகல்ப சமாதிநிலை அடையப்படுகிறது.

அந்நிலையில், சுய விழிப்புணர்வு அதில் நிலை பெறுகிறது. ஜீவன் [மனம்] **ஆத்ம விடுதலை** எனப்படும் முக்தி நிலையை அடைகிறது. அவ்வாறு விடுதலை அடைந்த ஜீவன் தன்னிலேயே நிலை பெற்று, 'அஹமஸ்மி' ("நான் இருக்கிறேன்") என்று தன்னை அறிகிறது.

முக்தி (இறையனுபூதி) என்பது ஒருவன் இறந்த பின்னர்தான் அடையவேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை. இவ்வுடலில் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பொழுதே கூட அடையக்கூடிய ஒரு அநுபவம் (உணர்வின் நிலை) அது.

இத்தகைய நிலையையே **"ஜீவன் முக்தி"** என்று அழைக்கின்றனர். இந்நிலையை மகான்கள் அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், அருணகிரிநாதர், தாயுமானவர் போன்ற பல அருட்செல்வர்கள் அடைந்து ஜீவன் முக்தர்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர்.

**ஆக, இங்கேயே முக்தி பெற முடியும்.**

ஏனெனில் இறைவன் சர்வ வியாபி, எங்குமுள்ளவர். எங்கோ ஏழாவது சொர்க்கத்தில் (அல்லது ஏதோவொரு குறிப்பிட்ட இடத்தில்) மட்டும் இருப்பவரல்ல. அவ்வாறு இருந்தால்? ஒருவன் இறந்த பின்னரே அங்கு சென்று அவரை அடைந்திட இயலும்.

இறைவன் உலகளாவிய உண்மை, எங்கும் நிறைந்திருப்பவர் (சர்வ வியாபி), எல்லாம் அறிந்தவர். அவர் எங்குமிருப்பதால் அவரை இங்கும் அடைய இயலும்தானே. அத்தகைய, இறைவனை 'இங்கு' அடைய முடியாதென்றால், 'அங்கும்' அடைய முடியாதுதானே.

இறைவன் வேறொரு இடத்தில் இருக்கிறாரென்றால், இங்கும் இருந்துதானே ஆக வேண்டும். அவ்வாறு இல்லை என்றால், அவர் இறைவனாக, நித்தியமானவராக, மற்றும் எங்கும் நிறைந்தவராக இருக்க முடியாது அல்லவா?

ஆகவே, மற்ற எல்லா பொருட்களையும் போல அவரும் ஒரு **பொருளாகி** விடுவார். அந்த இறைவன் எவ்வளவுதான் பெரியவராக, மேன்மை உடையவராக, புகழ் கொண்டவராக இருந்தாலும் சரி, அவரும் மற்ற அனைத்துப் பொருட்களையும் போல வரம்புக்கு உட்பட்டவராகி விடுவார். எனவே, நாம் அனைவரும் முக்தியை **இங்கேயே, இப்பொழுதே** அடையலாம்.

இதுவே, ஜீவன்முக்தி என்று அழைக்கப்படுகிறது.

# 30. உள்ளுணர்வும், பேருணர்வும்

புலன்களால் உணரப்படும் இவ்வுலகில், நாம் பெற்றிடும் அனுபவங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று எதிர்மாறான ஜோடிகளால் நிர்வகிக்கப் படுகின்றன.

அனைத்துமே ஜோடிகளாய் உள்ளன.

நல்லது – கெட்டது,

வெளிச்சம் – இருட்டு,

அறியாமை எனும் அக்ஞானம் – அறிவு எனும் ஞானம்.

பிறப்பு – இறப்பு,

விருப்பு – வெறுப்பு,

பகல் – இரவு,

நல்லொழுக்கம் – தீய ஒழுக்கம்,

எண்ணுதல் – மறத்தல் என்று இத்தகைய பட்டியலை மேன்மேலும் அடுக்கிக்கொண்டே போகலாம். அதற்கோர் முடிவென்பதில்லை.

ஏன்?

இவ்வுலகமோ, நம்மால் வெறுமனே ஐம்புலன்களால் உணரப்படுவது (அ) சார்புடையது.

நாமோ கால – தேசம். அதாவது, நேரம் – இடம் ஆகிய வரையறைகளுக்குட்பட்ட உயிரினமாக இருக்கிறோம்.

பொதுவாக, சாதரணமான நமக்கு **வரையறையற்ற நிலை** என்றால், என்னவென்றே தெரியாது.

ஆனால், நாம் தேடும் இறைவன், முக்தி, ஆன்ம விடுதலை, அறுதியுண்மை, சித் எனப்படும் **தூய உணர்வு**.

இவைகளெல்லாம் எவ்விதமான வரையறைகளுக்கும் உட்பட்ட நிலைகள் அல்ல. ஆகவே, **துவந்தங்கள்** எனப்படும் இருமைகள் இவைகளில் கிடையாது.

அந்த ஆத்மாவை (அறிவை) அவைகள் நெருங்கவும் முடியாது.

இதிலே, நாம் **அறிவு பெறுதல்** இருவகைகளில் நிகழ்கின்றது.

செயல்முறை மூலம் பெறும் அறிவு – இது புலனறிவு.

புலணறிவு என்பது, புலன்களின் மூலம் பெறப்படும் அறிவு.

இது தொடர்புள்ள அல்லது தனக்கு நேரடியில்லாத அறிவு.

அடுத்து, “அதுவாயிருந்து அறியும் அறிவு”.

இது 'சுய உணர்வு' அல்லது உள்ளுணர்வு.

இது, உடனடி அல்லது தனக்கு நேரடியான **அறிவு.**

அதிலே, **புலனறிவு** என்பது புலன்கள், மனது மற்றும் புத்தியின் மூலம் பெறப்பெற்ற அறிவு. இத்தகைய அறிவு ஒரு செயல்முறை மூலம் பெறப்படுகிறது.

இதில், சாதகனின் அறியும் தத்துவமான **மனம்** அல்லது **ஜீவாத்மா** அல்லது **விழிப்புணர்வு**, புலன்கள், மனம், புத்தி ஆகியவைகளைக் கருவிகளாக்கி, அறிவைப் பெறுகிறது.

அதுவே, அந்த வரையறையற்ற பேருணர்வு (மொத்த உணர்வு) இந்தக் கருவிகளுடன் தொடர்பு வைக்கும்போது, அவைகளோடு ஈடுபட்டு, ஒரு வரையறைக்குள் சிக்கிக் கொண்டதுப் போன்று காணப்படுகின்றது.

அதன்பின், அது தன்னை (சொரூபத்தை) மறந்து, வெளிப் பொருள்களை அறியத் தொடங்குகிறது.

அவ்வாறு அது அறிவது ஒரு செயல்முறை மூலம்.

இப்படியாகத் தன்னை ஒரு வரையறைக்கு உட்படுத்திக் கொண்ட **உணர்வு (ஜீவாத்மா),** மனதின் மூலம் வெளிச்செல்லத் தொடங்கும்போது, மனம் செயல்பட்டு, எண்ணத்தொடங்குகிறது. அதாவது சிந்திப்பதென்பது நடைபெறுகிறது.

அது மேலும் வெளிச் செல்லும்போது, உலகுடன் தொடர்பு கொள்ள உதவும் புலன்கள் மற்றும், மற்ற அவயவங்களை செயல்படுத்தி, பேச்சு மற்றும் செயல்கள் மூலம் உலகுடன் தொடர்பு கொள்கிறது.

இவ்வாறாக, உணர்வு வெளிப்பட்டு, மனது, புலன்கள் மற்றும் உடல் மூலம் வெளி உலகுடன் தொடர்புகொண்டு, உலகத்தைப்பற்றிய அறிவைப் பெருகிறது.

இப்படிப்பட்ட அறிவுதான் நமக்குத் தெரியும், **இது புலன்சார்ந்த அறிவு.**

இவ்வகை அறிவில் மிக, மிக உயர்ந்தது **புத்தி** என்பதாகும்.

அதாவது அறிவார்ந்த அறிவு.

புலன்கள் வெளி உலகைப் பற்றி நமக்கு அளித்த அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்ட அறிவு.

இத்தகைய, அறிவு **புத்தி அல்லது தொடர்பு அறிவு** எனப்படுகின்றது.

ஆனால், இதனின்றும் வேறுபட்ட, முற்றிலும் வியப்பளிக்கிற, புதுவகையான **ஒரு அறிவு** உண்டு.

அது சுயஉணர்வு, தன்னுணர்வு அல்லது உள்ளுணர்வு (Intuition) என்று அழைக்கப்படுகிறது.

அது ஆத்மானுபூதியில், நிர்விகல்ப நிலையான இருமைகள் தோன்றாத சமாதி நிலையில் தானே நிகழ்கிறது.

(அது, உள்ளுணர்வாக பரிமளிக்கிறது).

இதுதான், புறத்தொடற்பற்ற அறிவு.

அதாவது, சிந்திக்காமல் சிந்தித்தல், தூங்காமல் தூங்குதல் போன்றவைகள் அந்த **தூய உணர்வு நிலையில்** உண்டாகக் கூடியவைகள்.

இவைகள் மிகவும் மர்மமானவை.

இந்த சுயஉணர்வு அல்லது தன்னுணர்வு (Self–Consciousness) வார்த்தைகளால் விவரிப்பதென்பது ஓர் இயலாத காரியமே!

ஏனெனில், அது ஓர் (புலனறிவுக் கெட்டாத அறிவுசார்) *அநுபவம்*.

(அதை ஒவ்வொருவரும் தன்னில் தானே அநுபவிப்பதன் மூலம் மட்டுமே உணரக் கூடிய ஒன்று).

இருந்தபோதிலும், நாள்தோறும் நாம் பெறும் ஒரு அநுபவத்தின் மூலம், இதை அறிவது மிகவும் சுலபமாயிருக்கும்.

எப்படி?

ஒரு பொருள் இருக்கிறது என்பதை அறிவதற்கும், நான் இருக்கிறேன் ('**நான்**' உடல் என்ற பொருளில்) என்று தெரிந்து கொள்வதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறதென்பதை நாம் அறிவோம்.

ஒரு பொருள் உள்ளது என்பதை நாம் எப்படி அறிகிறோம்?

காணும் மற்றும் சிந்திக்கும் செயல் முறையை உபயோகித்துத்தான் ஒரு பொருள் உள்ளதை அறிகிறோம்.

அதாவது, **அறியப்படும் பொருள்** மற்றும் **அறியும் நான்** (அறிபவன்) இரண்டும் ஒன்றல்ல, இரண்டும் தனித் தனியானவை, வேறுவேறானவைகள்.

இதை, இன்னொரு விதத்தில் கூறினால், **ஒரு பொருளின் இருப்பு** அதை அறியும் உணர்விலிருந்து, அதாவது அறிபவனிலிருந்து வேறுபட்டதாய் உள்ளது.

ஆனால், **நான் இருக்கிறேன்** என்பதை நாம் எப்படி அறிந்து கொள்கிறோம்?

அதாவது, நம்மை நாம் அறிவது **காண்பதன் மூலமும்** அல்ல!. **சிந்திப்பதன் மூலமும்** அல்ல!.

அதாவது, **நான் இருக்கிறேன்** என்பதை அறிய, நாம் நம்மைப் பார்க்க வேண்டிய அவசியமோ? அல்லது **நான் இருக்கிறேனா?** என்று சிந்திக்க வேண்டிய அவசியமோ இல்லை.

அதாவது, நாம் நம்மைப் பற்றி சிந்திக்கவோ, பகுத்தறிவைப் பயன்படுத்தவோ? வேண்டிய அவசியம் தேவை இல்லை.

நம்மிடம் உள்ள உள்ளுணர்வு (அ) சுய உணர்வு கொண்டே, நாம் இருப்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

அப்படி என்றால் என்ன?

உள்ளுணர்வு எனப்படும் நமக்குள் உள்ள அறிபவனாகிய மனம் தன்னைத் தன் உடலிலிருந்து தனித்துப்

பார்க்காமல், தன்னையே உடலாகக் கருதிக் கொண்டு, **‘நான் இருக்கிறேன்’** என்று உணர்கிறது.

அதாவது, **‘நான் இந்த உடல்’** என்று அர்த்தத்தில் தன்னை உணர்கின்றது.

அதாவது, அனைத்து நடைமுறை நோக்கிலும், **‘நான்’** என்றால், 'உடல்' அல்லது 'மனம்' என்றே பொருள் கொள்கின்றது.

அதாவது, புலனறிவு விஷயத்தில், மனம் தன்னைத் தவறுதலாக உடலாகக் கருதுவதோடு மட்டுமின்றி (அறியும் 'நான்') தன் உடலிலிருந்து வெளியே சென்று, உலகப் பொருள்களையும் அறிகிறது.

ஆனால், நாம் நம்மை (உடலாக) அறிவதற்கு, பொருள்களை நாடி, உடலிலிருந்து வெளியே சென்ற மனம் ('நான்') தனக்கே (அதாவது, தன் உடலுக்கே) திரும்பி வருவதைத்தவிர, வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை.

அதாவது தனக்கே (தன் உடலுக்கே) திரும்பிவந்து, தானாகவே இருந்து, **“நான் இருக்கிறேன்”** என்று அறிகிறது.

இதற்கு, பார்வையோ, சிந்தனையோ மனதிற்கு அவசியமில்லை.

அவ்வாறு, தன்னைத் தான் அறிவதற்கு அது புலன்கள், மனம், புத்தி என்ற எதையும் உபயோகிப்பதில்லை.

இவ்வாறாக (மன) உணர்வானது தன்னிடமே திரும்புதல், தானாகவே இருத்தல், தன்னையே தானாக அறிதல் என்கின்ற, இதுவே 'உள்ளுணர்வு', 'சுய–உணர்வு'.

இதுவே, **'சிந்திக்காமல் சிந்தித்து'** அறிதலாகும். அதாவது, அதுவாகவே இருந்து அறிவதாகும். இந்நிலையில், **இருப்பும், அறிவும்** ஒன்றே. ஆக, இருத்தலும், அறிதலும் ஒன்றே!

அதாவது, **இருப்பே அறிதல்**.

(சத் என்பதே இங்கு சித் ஆகின்றது.) இதை **நன்கு கவனத்தில் கொள்ளுங்கள்!**

இது உள்ளுணர்வு (intuition) அல்லது சுய உணர்வின் (self–consciousness) ஸ்தூல நிலை மட்டுமே. அதாவது, இதை மனம் **பக்குவப்படாத நிலை** என்று கூறலாம்.

ஏனெனில் இந்நிலையில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

அதாவது, ஒன்று **ஜட உடல்**. மற்றொன்று **அறிகின்ற உணர்வு** ஆகிய இரண்டு அம்சங்கள் உள்ளது.

இவையிரண்டும் ஒன்றின்மேல், மற்றொன்று ஏற்றி வைக்கப்பட்டுள்ளன.

மன–உணர்வு தன்னை உடலாகக் கருதுவது **சுய உணர்வின்** கீழ்ப்படி (கடைநிலை) நிலையாகும்.

அதற்கு மேலே இன்னும் சில **சுய உணர்வு** நிலைகள் உள்ளன.

அதாவது, **சுய உணர்வு** தன்னை மனதாக ('நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்', 'நான் மனத்தளர்வோடு இருக்கிறேன்'), தன்னைப் புத்தியாக ('நான் அறிந்திருக்கிறேன்' 'நான் குழப்பத்திலிருக்கிறேன்'), தன்னை அகங்காரமாகக் ("நான்") கருதுவது.

அண்ட இருப்பான ஈஸ்வரனிலிருந்து தனி இருப்பு தனக்கு உள்ளது என்ற பாவத்துடன், அந்த ஜீவ உணர்வு அல்லது சுய உணர்வு கருதும் போது, 'நான் இருக்கிறேன்' (I Am ness) என்பதே **ஜீவாத்மா** எனப்படும் **தூய ஜீவ உணர்வின்** அல்லது சுய உணர்வின் அதி மேலான நிலை.

இந்த நிலையில்தான் இந்த வேதந்த பாடங்களைப் படித்து முடித்தவர்கள் பெரும்பாலும் உள்ளனர். அதாவது, தன்னைத்தான் அறிகின்றேன் என்று, தன் உள்ளுணர்வை தொட்டவர்கள் இவர்கள்.

இருப்பினும், இவர்களிடமும் உள்ள பிரபஞ்ச (பரமாத்ம) உணர்வானது அவித்யையில் (அறியாமையில்) தனித் தன்மையாகப் பிரதிபலித்துக்கொண்டு, தன் தூய பரமாத்ம சொரூபத்தை மறந்து, எல்லைக்குட்பட்ட பிரதிபலிப்பாக தன் தனித்தன்மையை **'நான்'** என்று வலியுறுத்துகிறது.

எனவே, **'நான் உடல்', 'நான் மனம்'** போன்ற எண்ணங்கள் மனதின் சுய உணர்வின் வெவ்வேறு நிலைகள்.

இதையும் கடந்த **ஒரு நிலை** உள்ளது.

அது, இந்த மொத்த பிரபஞ்ச உணர்வாகத் தன்னை அறிவது. அது மட்டும்தான் இந்த தனித்த ஜீவ உணர்வைக் கடந்து, அந்த **பேருணர்வு நிலைக்கு** சென்ற நிலை.

அது எப்படி என்றால்?, அதற்கான முக்கியமான கட்டத்திற்கு இந்த மனம் மேலும் முன்னேற வேண்டிய கட்டாயம் உள்ளது.

அதாவது, அது, எண்ணங்களைக் கடந்த, நிர்விகல்ப நிலைக்கு உயர வேண்டு. நிர்விகல்ப நிலை என்பது, மனதில் இருமைகள் இல்லாத நிலை.

அதாவது, சுய உணர்வு எனப்படும் உள்ளுணர்வின் ஒன்று மற்ற **தூய நிலையில்**, இருமைகள் இல்லாத அத்வைத நிலையான சூன்யத்தில் மனம் பிரதிபலித்து, தன்னை

தனிமைப்படுத்திக் கொண்ட இந்த ஜீவ உணர்வு, தனது ஆரம்ப புள்ளியான தன் சுயத்தை தானே பார்க்கின்றது.

அதாவது, எண்ணங்களால் சூழப்பட்ட மனம், எண்ணங்கள் ஏதுமற்ற நிர்குண சொரூபமாகிய தன் உற்பத்தி ஸ்தானத்தை அடைகின்றது.

இதை எப்படி புரிந்துக் கொள்ளலாம் என்றால், மனதில் எந்த எண்ணங்களும் உண்டாகாத நிவிகல்ப நிலையிலே, அங்கு மனம் என்பதே இல்லை. அங்கு அந்த **பேரறிவு** என்ற அந்த **பேருணர்வு** மட்டுமே பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

இதுவே, உள்ளுணர்வும், பேருணர்வும் இரண்டற்ற ஒன்றாக உறவாடும் அத்வைத நிலை ஆகும்.

இந்நிலையில், உணர்வு, மனம், புத்தி போன்ற தொடர்புகள் அற்று இருப்பதால், அது **தூய உணர்வாக இருந்து**, தன்னை அவ்வாறே (தூய உணர்வாக) அறிகிறது.

இந்நிலையில், எது எதை அறிகிறது?; எது அறிவது?, எது அறியப்படுவது?, என்றெல்லாம் கூறுவது மிகவும் கடினம்.

ஏனென்றால், தூய சுய–உணர்வு (பேருணர்வு அல்லது அண்ட–உணர்வு) நிலையில் அறியும் பொருள், அறியப்படும் பொருள் **இரண்டும் அதுவே**.

அதாவது, அறிபவனும், அறியப்படும் பொருளும் ஒன்றே.

ஆக, **மொத்த உணர்வு** தன்னைத் தானே அறிவதாகும்.

அதாவது, ஏதோ ஒன்று இருக்கிறது.

அது "நான் இருக்கிறேன்", (அஹம் அஸ்மி) என்று தன்னைத் தானாக அறிகின்றது.

இதுவே, உலகளாவி இருக்கும் '**இருப்பின்'** சுய உணர்வு அல்லது **ஆத்ம உணர்வு** .

அதுவே, **இருப்பு உணர்வு**.

அற்ப உலகப்பொருள்களை நாடி, உடலைவிட்டு வெளியே சென்ற ஜீவ உணர்வு மீண்டும் தன் நிலைக்கே (உடலுக்கே) திரும்பிவந்து, தன்னை உணர்வது, ஒரு வகையில் (சீவித்த அர்த்தத்தில்), சுய உணர்வு.

இந்த (வெறும்) ஜீவ உணர்வு அல்லது சுய உணர்வு, ஈஸ்வரன் அல்லது **அண்ட உணர்வுக்கு** (பரமாத்மாவுக்கு) திரும்புவது, உண்மையான ஆத்ம உணர்வு.

இதைத்தான், **ஆத்மானுபூதி** அல்லது **இறையனுபூதி** எனப்படும்.

இந்த இடத்தில் தன்னை உணரத் துடிக்கின்ற உண்மையான சாதகனுக்கு ஒரு சந்தேகம் எழும்.

அது என்ன தெரியுமா?

இங்கு, "ஒன்று உண்மையில் மற்றொன்று ஆக முடியுமா?" என்று ஒரு கேள்வி எழலாம். அல்லது எழுப்பப்படலாம். உண்மையில், ஒன்று மற்றொன்றாக ஆகிவிட முடியாது தான். ஆனால், ஒன்று தன்னைத் தவறாக வேறொன்றாக கற்பனைசெய்து கொண்டு, அறியாமையினால் அதுவாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அது அந்தத் தவறான கற்பனையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம் அல்லவா?...

அதாவது, தன்னிடம் ஏற்றிவைக்கப்பட்ட தவறான கற்பனையைத் துறந்து, அது உண்மையில் எதுவாக இருந்ததோ? அதுவாகவே திரும்பவும் ஆகி, அதுவாக இருக்கிறது.

இதைத்தான் **ஆத்மானுபூதி** என்கிறோம்.

**பேருணர்வு நிலை** என்கிறோம். **பேரறிவு நிலை** என்கிறோம்.

இதைத்தான், **"அஹம் பிரம்மாஸ்மி"** என்று கூறப் படுகின்றது.

இந்த நிலையிலே மனம் இனி திரும்ப வரவே வராதா? என்ற சந்தேகம் சிலருக்கு எழலாம்.

இதை, எப்படி புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால், தன்னுடைய தனித்த இந்த உடல், மனம் என்ற இருமைகளைக் கடந்த, அந்த ஈஸ்வர நிலையிலே எல்லாமாக தன்னை அறிகின்ற மனம் பிரபஞ்ச மனமாக மாறி விடுகின்றது.

அப்போது, அங்கு இயக்கம் என்பது இந்த தனித்த எனக்கு இல்லை. எல்லாம் ஒன்றேயாகிய அந்த ஈஸ்வர காரியமே என்று, மனம் தனித்து எதையும் சிந்திக்காமல், அனைத்தையும் ஈஸ்வர சித்தம் என்று சும்மா இருக்கும் சுகம் உண்டாகி விடும்.

எப்படி ஜீவன் ஈஸ்வரனாகி, ஈஸ்வரனை அறிகிறான்? என்றால், ஒவ்வொரு ஜீவனிலும் (மனதிலும் அல்லது மனிதனிலும்) ஈஸ்வர அம்சம் உள்ளது.

எப்போது, மனிதன் தன் உடல்மீதும், தன்னுடைய திறன்கள் என்ற செயல்கள் மீதும் உள்ள அபிமானத்தை துறக்கிறானோ? அப்போது, மட்டும்தான் எல்லாமாக இருக்கும் அந்த இறை அம்சம், தன்னில் தானாய் தனித்து நிற்கும் அவனை உள்ளுணர்வு நிலையிலிருந்து, பேருணர்வு நிலையை உணர வைக்கின்றது.

ஓம் தத் சத்!

@@@@ **நிறைவு** @@@@

# வேதாந்தம்

## (வேதத்தின் இறுதிப்பகுதி)




வேதங்களின் இறுதிபகுதியை வேத + அந்தம் = 'வேதாந்தம்' என்று குறிப்பிடுவதுண்டு.

ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் நான்கிலும் வேதாந்தப்பகுதிகள் உள்ளன. இவைகள் உபநிஷதங்கள் என்று கூறப்படுகின்றன.

மொத்தமாக, 108 உபநிஷதங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதில், 14 உபநிஷதங்களுக்கு ஸ்ரீஆதிசங்கரர் அவர்களால் சமஸ்கிருத மொழியில் (பாஸ்யம்) விளக்கஉரை எழுதப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வேதத்திலும் அமைந்துள்ள முக்கிய மான உபநிஷதங்கள் பின்வருமாறு:

ரிக் வேதம்: ஐதரேயா, கௌசீதகி

யஜுர் வேதம்: ஈச, கட, தைத்திரீய, பிருஹதாரண்யக, சுவேதாஸ்வதர, மைத்ரேய, மகாநாராயண.

சாம வேதம்: கேன, சாந்தோக்ய

அதர்வண வேதம்: ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய.